# பாரதி தமிழ் வசனத் திரட்டு

தொகுப்பாசிரியர் :

பெ. தூரன்

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

புது டில்லி

1978 (1900)

விலை ரூ. 7-50

BHARATI'S PROSE WRITINGS (Tamil)

விநியோகிப்பாளர் :

பாரி நிலையம்

59, பிராட்வே

சென்னை-600 001

PUBLISHED BY THE DIRECTOR, NATIONAL BOOK TRUST, INDIA,
A-5, GREEN PARK, NEW DELHI-110 016 AND PRINTED BY
TAX AND COMPANY LAW PRESS, GUINDY, MADRAS-600 032.

முன்னுரை

# தமிழ் உரைநடையின் வளர்ச்சி

ஒரு மொழி தோன்றிய காலத்தில் உரைநடையே பேச்சு வழக்கில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அச்சுப்பொறி உரு வாகாத பழங்காலத்தில் மக்கள் எடுத்துக் கூறிய அனுபவங்களை யும், கதைகளையும், கூறியவாறே உரைநடையில் எழுதி வைக்கக் கூடிய வசதி இருக்கவில்லை. ஓலைச் சுவடிகளில் எழுத்தாணி கொண்டு எழுதக் கற்றுக் கொண்ட நாளிலும் கவிதைகளைப் போல உரைநடையை எழுதி வைப்பதென்பது எளிதன்று. கருத்துச் செறிவு கொண்ட கவிதைகளை எழுதுவதும், அவற்றை மனப்பாடம் செய்வதும், உரைநடையோடு ஒப்பு நோக்கும்போது, எளிதாகவே தோன்றியிருக்கும். ஆகவேதான் கவிதை முதலில் உருவாகி நிலைபெற்றது. மிகப் பழங்காலத்திலேயே மொழி நன்கு வளர்ச்சியுற்றுத் திட்டவட்டமான இலக்கணம் பெற்ற தமிழ் மொழிக்கும் இது பொருந்தும்.

எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற இறையனார் களவியல் உரையே நமக்குக் கிடைத்துள்ள முற்காலத் தமிழ் உரை நடைக்கு முதல் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இரண் டொரு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் தொல்காப்பியத்திற்கும் பத்துப்பாட்டிற்கும் உரை எழுதப் பலர் முன்வந்தனர்.

இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் போன்ற பல அறிஞர்கள் சிறந்த நூல்களுக்கு உரை எழுதியுள்ளார்கள். இவர்கள் 12-ஆம் நூற்றாண்டிற்கும் 16-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வாழ்ந்தவர்கள்.

உரையாசிரியர்கள் விளக்க உரை அவர்கள் எழுதியவாறே நமக்குக் கிடைத்துள்ளன என்றும் கூற இயலாது. செவி வழி யாகப் பலர் கேட்டுப் பிறகு ஓலைச்சுவடிகளில் எழுதியுள்ளனர் என்று கொள்வதே பொருத்தமாகப் படுகிறது.

உரைநடையை விரிவாக எழுத முடியாத நிலையில் இவ்வுரை யாசிரியர்கள் கவிதையைப் போலவே செறிவுள்ள ஓர் உரைநடை

யைக் கையாண்டார்கள். அடியார்க்கு நல்லார் தாம் எழுதிய சிலப்பதிகார உரையில், பதிகத்தின் முதல் இரண்டு வரிகளுக்கு மிக விரிவாக உரை எழுதிவிட்டு, இவ்வாறு விரிவாக எழுதுவது இயலாதாகையால் மற்றப் பகுதிக்குச் சுருக்கமாகவே எழுதுவதாகக் கூறியுள்ளதும் இங்கு நோக்கத்தக்கது.

சிலப்பதிகாரத்தில் செய்யுள்களுக்கிடையிலேயே உரைநடை விரவி வருதலையும் காணலாம். சங்கப் புலவரில் ஒருவரான பாரதம் பாடிய பெருந்தேவனுர் தமது நூலைப் பெரும்பாலும் வெண்பாவிலும் ஆங்காங்கு அகவற்பாவிலும் பாடிவிட்டு இடையிடையே உரைநடையையும் கையாண்டிருக்கிறுர். ஆனுல் இவற்றையெல்லாம் தமிழ் உரைநடைக்கு எடுத்துக்காட்டுகளாக கொள்வது சரியல்ல. அக்காலத்தில் உருவான உரைநடை நமக்கு எந்த நிலையில் கிடைத்திருக்கிறது என்பதை மட்டும் இவை காட்டுகின்றன எனக் கொள்ளலாம்.

இடைக்காலத்தில் சமணப் பெரியார்கள் சிலர் வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில் எழுதினர் என்று ஸ்ரீபுராணம், சத்திய சிந்தாமணி முதலான நூல்களிலிருந்து அறிய முடிகின்றது. வைணவ உரையாசிரியர்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தத்திற்கு மணிப்பிரவாள நடையில் அமைந்த விரிவான உரைநடை விளக்கம் தந்துள்ளார்கள். சைவ சமயப் புலவர்களும் சைவ சித்தாந்த நூல்களுக்கு உரைநடை கண்டிருக்கிறுர்கள். பொதுவாகக் கூறுமிடத்து இவற்றையெல்லாம் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ள முடியாது. அச்சு எந்திரம் உருவாகி இந்தியாவில் அது பயன்படுத்தப்பட்டதிலிருந்துதான் உரைநடை வளர்ச்சியுற்றதென்று கூறலாம். தனித்த உரைநடை நூல்கள் அதன் பின்னரே மலரத் தொடங்கின. கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்கான விவிலிய நூல் தமிழ் உரை நடையில் மொழி பெயர்க்கப்பட்டது.

12-ஆம் நூற்றுண்டிற்கும் 16–ஆம் நூற்றுண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே கல்வெட்டுகளின் மூலம் தமிழ் உரைநடை மற்ஞெரு வகையில் வளர்ச்சியுற்றது என்ருலும் கல் தச்சர்கள் தமிழறிவு பெரிதும் வாய்க்கப் பெருதவர்களாக இருந்தமை காரணமாக அவர்கள் கல்லில் பொறித்த உரைநடை பெரும்பாலும்

பிழை நிறைந்ததாக உள்ளது. ஆதலால் அதையும் உரைநடை வளர்ச்சிக்கு அளவு கோலாகக் கொள்ள இயலாது.

பெஷி என்ற இத்தாலிய நாட்டுப் பாதிரியார் தமிழ்நாட்டிற்குப் பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வந்து தமிழை நன்கு கற்று வீரமாமுனிவர் என்ற பெயரும் பூண்டு தமிழில் காவியம் இயற்றியதோடு, அவிவேக பூரணகுரு கதை, வேதியர் ஒழுக்கம் ஆகிய உரைநடை நூல்களையும் எழுதினார். இவருக்கு முன்பே பதினேழாம் நூற்றாண்டின் மத்தியில் இந்தியாவிற்கு வந்து வாழ்ந்து மறைந்த தத்துவ போதக சுவாமி என்ற கிறிஸ்துவர் வடமொழி பெரிதும் கலந்த ஒரு சில உரைநடை நூல்கள் எழுதியுள்ளார். வீரமாமுனிவர் எழுதிய அவிவேக பூரண குரு கதை என்பது நகைச் சுவையோடு கூடியது. இவர் எழுதிய உரைநடை நூல்கள் எளிய நடையில் இருந்தமையால் பலரும் விரும்பிப் படித்தனர். இவருக்குப் பின் வந்த உரைநடை யாசிரியரான சிவஞான முனிவர் சிவஞான போதத்தை விளக்கி திராவிட மகாபாடியம் என்ற பொருட் செறிவு கொண்ட நூலை இயற்றினார்.

தாண்டவராய முதலியார் 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் உரைநடையில் ஒரு புதிய வழியைத் தோற்றுவித்தார். இவர் எழுதிய பஞ்சதந்திரக் கதை அன்றைய தமிழ் உரைநடைக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக அமைந்தது. அது தெளிவானது ; தடையற்றது. கதா மஞ்சரி என்ற உரைநடை நூலையும் இவர் தொகுத்துள்ளார்.

இவருக்குப் பின் எழுதிய உரைநடையாசிரியர்களில் ஒரு தனி இடத்தைப் பெற்றிருப்பவர் யாழ்ப்பாணத்துப் பெரியாரான ஆறுமுக நாவலர் ஆவார் (பிறப்பு கி. பி. 1823). பெரிய புராண வசனம், திருவிளையாடல் புராண வசனம், கந்தபுராண வசனம் முதலான பல நல்ல உரைநடை நூல்களை இவர் தமிழில் எழுதியுள்ளார். மாணவர்களுக்கான பாட நூல்களும் எழுதினார். மிகத் தெளிவான உரைநடைக்கு இவரே முதலில் வழிகாட்டியவர். திருவருட்பிரகாச வள்ளலார் என்னும் இராமலிங்க சுவாமிகளும் மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்யம் முதலான உரைநடை நூல்களை எழுதியிருக்கிறார். இவர்களுக்குப் பின் வந்தவர் வினோ

தரச மஞ்சரி என்ற உரைநடை நூலை எழுதிய வீராசாமி செட்டியார் ஆவார்.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் பிரதாப முதலியார் சரித்திரம் (1876) என்ற நகைச்சுவைமிக்க நூலை இயற்றினார். இதுவே தமிழில் வந்த முதல் புதினம் என்று பாராட்டப் பெறுகிறது. இவர் சுகுணசுந்தரி (1887) என்ற மற்றொரு நூலையும் இயற்றியுள்ளார். வேதநாயகம் பிள்ளையின் உரைநடை நேருக்கு நேர் பேசுவது போன்ற தன்மையைக் கொண்டது.

ராஜம் ஐயர் (1872–1898) கமலாம்பாள் சரித்திரம் என்ற சிறந்த புதினத்தை எழுதியிருக்கிறார். இவரைத் தொடர்ந்து மாதவையா பத்மாவதி சரித்திரம் (1898) என்ற புதினத்தையும் வேறு இரண்டு புதினங்களையும், குசிகர் குட்டிக் கதைகள் என்ற பல சிறு கதைகளையும், சிறந்த முறையில் எழுதினார்.

தாமோதரம் பிள்ளை அவர்கள் சூளாமணி வசனம் என்ற நூலை அருஞ் சொற்களைக் கொண்ட நடையில் எழுதியிருக்கிறார். சூரிய நாராயண சாஸ்திரியாரும் தமது மதிவாணன் கதை என்ற நூலை உயர் நடையில் எழுதினார். வேறு சில நூல்களும், நாடகங்களும் இவர் படைப்பாகும்.

இல்லாண்மை என்ற நூலும் தமிழ் நாவலர் சரிதை என்ற நூலும் இயற்றிய திரு. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்தில் பிறந்தவராவார்.

20-ஆம் நூற்றாண்டு தொடங்கிய பின்னரே தமிழில் உரை நடை நூல்கள் மிகப் பரவலாகப் பல துறைகளையும் தழுவி வெளி வரலாயின. மறைமலையடிகள் அழகான தனித் தமிழில் உரை நடை நூல்களை எழுதலானார். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் ஒரு நல்ல தமிழ் உரைநடையைத் தமது பேச்சிலும் எழுத்திலும் கையாண்டு தமிழ் உரைநடைக்கு ஒரு புதிய அழகு தந்தார். இவர் எழுதிய தமிழ் உரைநடை நூல்கள், கட்டுரைகளின் தொகுப்புகள், மிகப் பலவாகும். இவர் நடத்தி வந்த நவசக்தி என்ற வார இதழும் தமிழ் உரைநடை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிற்று என்று கூறலாம்.

பண்டிதமணி கதிரேசச் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், வேங்கடசாமி நாட்டார் முதலியவர்கள் தமிழில் உயர்

நடையைக் கையாண்டனர். ஆனால் தமிழ்த் தாத்தா என்று வழங்கப்பெறும் டாக்டர் உ.வே. சாமிநாதய்யர், மீனாட்சிசுந்தரம்பிள்ளை சரித்திரம், என் சரித்திரம், நான் கண்டதும் கேட்டதும், முதலிய பல உரைநடை நூல்களை மிக எளிய இனிய நடையில் இயற்றினார். இந்த எளிய நடையைப் பின்பற்றிப் பல சிறந்த தமிழறிஞர்கள் எழுதலானார்கள். கா. சுப்பிரமணிய பிள்ளை தமிழ் இலக்கிய வரலாறு எழுதினார். டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை உரைநடையின் அழகை எடுத்துக் காட்டவல்ல ஒரு நடையைக் கையாண்டார்.

பன்மொழிப் புலவர்களான தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், கா. அப்பாதுரையாரும், செறிவுள்ள உரைநடை நூல்கள் இயற்றி இருக்கிறார்கள். பேராசிரியர் கல்கி கிருஷ்ணமூர்த்தி தமிழ் உரை நடை வளர்ச்சிக்குச் செய்த தொண்டு மிகப் பெரிது. இவர் ஆனந்தவிகடன், கல்கி முதலிய இதழ்களுக்கு ஆசிரியராக இருந்த போது பல நகைச்சுவைக் கட்டுரைகளும், சிறந்த சிறுகதைகளும், வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட புகழ்பெற்ற நவீனங்களையும் எழுதியிருக்கிறார். பொருளாதாரம், அரசியல் முதலான துறைகளைத் தெளிவாக விளக்கிப் பொது மக்களுக்கு புரியும்படி செய்வதில் கல்கி இணையற்றவர்.

ராஜாஜி அவர்கள் பல உரைநடை நூல்களையும் சிறுகதைகளையும் விஞ்ஞான நூல்களையும் தமக்கே உரித்தான எளிய உரைநடையில் எழுதியிருக்கிறார்.

தமிழ் நாவல் உலகத்தில் ஒரு புதிய திருப்பத்தை உண்டாக்கியவர் டாக்டர் மு. வரதராசனார் ஆவார். இவர் செம்மையான எளிய நடையைக் கையாண்டு, பல நாவல்கள் எழுதியிருக்கிறார். தமது எண்ணங்கள் படிப்போருக்கு தெளிவாகப் புரியும்படி செய்வதில் இவர் மிக வல்லவர். இவருடைய பரந்த தமிழறிவு இதற்குத் துணையாக நின்றது. உரைநடையில் இவர் எழுதிய நூல்கள் மிகப் பலவாகும். இவரைப் பின்பற்றி கு. ராஜவேலு அவர்களும் பல நவீன நாவல்களை எழுதியிருக்கிறார்.

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் பல சிறு கதைகளும், கட்டுரைகளும் வேறு பல நூல்களையும், எளிய இனிய நடையில் இயற்றியுள்ளார். நா. பார்த்தசாரதி, மீ. ப. சோமசுந்தரம் முதலிய தமிழ் அறிஞர்களும், நவீனங்களும் சிறுகதைகளும்

எழுதித் தமிழ் உரைநடைக்கு நல்ல தொண்டாற்றி இருக்கிறார்கள். இத்துறைகளிலே அகிலன் ஒரு தனி இடத்தைப் பெற்றுள்ளார். இவர் எழுதிய நவீனங்களும் சிறு கதைகளும் மிகப் பலவாகும்.

பி. எஸ். ராமையா சிறந்த சிறுகதைகளும், தேரோட்டி மகன் முதலான பல நல்ல நாடகங்களும் எழுதியுள்ளார். எஸ். டீ. சுந்தரம் எழுதிய கவியின் கனவு உணர்ச்சி மிக்க தேசிய நாடகமாகும். இவர்கள் எழுதிய திரைப்படக் கதைகளும் குறிப்பிடத்தக்கவை. பம்மல் சம்பந்த முதலியார் பல உரைநடை நாடகங்கள் எழுதி நாடகத் தந்தை என்று புகழ் பெற்றார்.

ஜெகசிற்பியன், கோ. வி. மணிசேகரன், சாண்டில்யன், ரா.கி. ரங்கராஜன், கவிஞர் கண்ணதாசன் ஆகியோரும் தனிப்படை கையாண்டு நவீனங்கள் எழுதியுள்ளனர். லக்ஷ்மி, அனுத்தமா, ராஜம் கிருஷ்ணன், கோமகள், ஆர். சூடாமணி முதலிய பெண் எழுத்தாளர்களும் தங்கள் படைப்புகளால் உரைநடை வளர்ச்சிக்குத் தம் பங்கைச் செய்துள்ளனர்.

ரசிகமணி, டி. கே. சி., எஸ். மகராஜன் ஆகியோரின் கட்டுரைகள் தனி அழகு பொருந்தியவை. மு. அருணாசலம் 10 முதல் 15-ஆம் நூற்றாண்டு வரை தனித்தனி தொகுதிகளாக எழுதியுள்ள விரிவான இலக்கிய ஆராய்ச்சி நூல்களைத் தெளிவான நடையில் எழுதி உரைநடை வளர்ச்சிக்கு உதவியுள்ளார். இவையல்லாமல் வேறு நூல்களும் இயற்றியிருக்கிறார்.

மயிலை சீனி வேங்கடசாமி ஆராய்ச்சித் துறையில் பல நூல்களை எழுதியிருக்கிறார். மேலே குறிப்பிட்டவர்களெல்லாம் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு உதவி இருக்கிறார்கள் என்று பொதுவாகக் கூறலாம்.

பேச்சு வழக்கில் உள்ள தமிழ் உரைநடையைப் பின்பற்றி இக்காலத்திலே பல எழுத்தாளர்கள் உரைநடையை வளர்த்து வருகிறார்கள். புதுமைப்பித்தன், கு.ப.ரா., முதலியோர் இவ்வாறு எழுதிய சிறுகதை முன்னோடிகள். இன்று சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் முதலிய பலர் இதில் சிறப்புற்றிருக்கின்றனர். இவர்கள் இயற்றிய புதினங்களும் குறிப்பிடத்தக்கவை. தி. ஜானகிராமன், சிதம்பர ரகுநாதன், க. திரவியம், சிலம்புச் செல்வர் ம. பொ. சி., நெ. து. சுந்தரவடிவேலு, லா. ச. ராமாமிருதம்,

சிவபாதசுந்தரம் ஆகியோரும் தங்கள் படைப்புக்களில் உரை நடையை தனிப்பட்ட வழிகளில், வளமாக்கியுள்ளனர். வாசவனுடைய நடையில் அழுத்தமும், உணர்ச்சிகளின் செறிவும் நன்கு மிளிர்கின்றன.

அறிஞர் அண்ணுவின் பேச்சிலும் உரைநடையிலும் மோனைகள், அடுக்கு மொழிகள் கொஞ்சி விளையாடும். இவருடைய வழியைப் பின்பற்றி இதே பாணியிலும் நடையிலும் வேறு பலர் உரைநடையை வளர்த்து வருகிறுர்கள்.

செந்தமிழ், தமிழ்ப் பொழில், செந்தமிழ்ச் செல்வி போன்ற மாசிகைகளில் தொடங்கிய அருஞ் சொற்களைக் கொண்ட கடினமான உரைநடை இன்று எளிமையும், புதிய வனப்பும், தெளிவும் வாய்ந்த உரைநடையாக மலர்ந்து வருகின்றது. கலைமகள், கல்கி போன்ற இதழ்களும், தமிழ்நாடு, தினமணி போன்ற நாளிதழ்களும் இந்த உரைநடை வளர்ச்சியில் பெரிதும் பங்கு பெற்றிருக்கின்றன. தாமரை பேச்சு நடைத் தமிழில் நல்ல கதைகளை வெளியிட்டு வருகின்றது. ஆராய்ச்சி என்ற இதழை வானமாமலை நல்ல முறையில் நடத்தி வருகிறுர்.

வ.வே.சு. ஐயருடைய பாலபாரதம், மாதவையாவின் பஞ்சாமிர்தம், பாரதியாரின் இந்தியா முதலிய இதழ்கள் தமிழ் உரைநடை வளர்ச்சியில் சீரிய பணியாற்றின.

குழந்தைகளுக்குப் புரியும்படியான உரைநடையில் பலர் எழுதியுள்ளனர். தி. ஜ. ர., அழ. வள்ளியப்பா, பூவண்ணன், பெ. தூரன் முதலியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இன்று விஞ்ஞான நூல்களும், கட்டுரைகளும் எளிய தமிழில் வெளிவரத் தொடங்கி இருக்கின்றன. இத்துறையில் பல ஆண்டுகளாக உழைத்தவர் பி. என். அப்புசாமி ஐயர் ஆவர்.

வளமான உரைநடையில் தெளிவும் எளிமையையும் கலந்து விஞ்ஞான நூல்களை எழுதுவதற்கு வேண்டிய புதிய முயற்சிகளையும் காண்கிறேம். இம்முயற்சியில் தமிழ் கலைக்களஞ்சியமும், குழந்தைகள் கலைக்களஞ்சியமும் நன்கு உதவியுள்ளன என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

மிகச் சுருக்கமான இக்கட்டுரையில் தமிழ் உரைநடையின் வளர்ச்சியின் பல பகுதிகளையும், விரிவாகக் கூறுதல் இயலாது.

குறிப்பாகச் சிலவற்றையே காட்ட இயலும். பொதுவாக ஓர் உண்மையை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கூடுமான வரையில் பிற மொழிச் சொற்கள் கலவாத ஓர் உயிரோட்ட முள்ளதும் எளிமையானதுமான உரைநடையை வளர்ப்பதில் அனைவரும் இன்று ஆர்வம் காட்டுகின்றார்கள். நாளிதழ்களும், மற்ற இதழ்களும் இம்முயற்சியை மேற்கொண்டிருப்பது குறிப் பிடத்தக்கது.

நிமிர்ந்த பார்வையும், நேர் கொண்ட நன் நடையும் நம் பெண் களுக்கு வேண்டும் என்று வற்புறுத்தியவர் பாரதியார். அவருடைய கவிதைகளும், உரைநடைப் படைப்புகளும் இவ் வுணர்ச்சியை எதிரொலிப்பனபோல் எளிமையும் உள்ளத்தை நேராகத் தாக்கும்படியான வலிமையும், சிந்தனைத் தெளிவும் கொண்டிருக்கின்றன. அவருடைய கவிதைகளை ஆராய்வது போல உரைநடையை ஆராய்ச்சி செய்யப் பெரியதோர் முயற்சி நடைபெறவில்லை என்றுதான் கூறவேண்டும். வட மொழிச் சொற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது ஒரு காரண மாக இருக்கலாம். ஆனால் அவர் எழுதிய காலத்தை எண்ணத்திற் கொண்டு பார்த்தால் ஏன் அவ்வாறு எழுதினார் என்பது புலனாகும். அன்று அவர் நோக்கமெல்லாம் மக்களுக்குத் தெளிவாகவும், அழுத்தமாகவும், உள்ளத்தை கவ்வும்படியாகவும் எழுதவேண்டும் என்பதுதான். அந்த முயற்சியில் அவர் மிகச் சிறந்த வெற்றி பெற்றிருக்கிறார். அவருடைய உரைநடைப் படைப்புகளை ஆராய்ந்தால், நேர் கொண்ட நன் நடையும், நிமிர்ந்து பார்க்கும் தெளிவும் அவற்றில் ஊடுருவி இருப்பதையும், வலிமையான உயிரோட்டம் இருப்பதையும் காணலாம். இந்தத் தொகுப்பிலே சேர்க்கப்பட்டுள்ள அவருடைய உரைநடைக் கட்டுரைகள், கதைகள், முதலியவற்றைப் படிக்கும்போது சுற்றி வளைக்காமல் தெளிவாகக் கருத்துக்களைச் சொல்லுவதில் பாரதியாரின் தனித் திறமையை அறிந்து மகிழ முடியும். அத்துடன் அவருடைய நகைச்சுவையும் வெட்டொன்று துண்டிரண்டு என்ற உள்ளப் பான்மையும் வெளியாவதையும் காணலாம். அவருடைய ஞானரதம் உரைநடையில் மிகச் சிறந்த படைப்பாகும்.

உரைநடை வளர்ச்சிக்கு உதவிய வேறு பலருடைய பெயர்கள் விட்டுப் போயிருப்பதை நான் உணர்கிறேன். இக்கட்டுரையில் இடம் பெற்றவர்களைப் பொறுத்தவரையில்கூட அவர்கள் எவ்வாறு உரைநடையை வளர்த்தனர் என்று விளக்கமாகக் கூற முடியவில்லை.

இந்தக் குறுகிய கட்டுரையில் இலங்கைத் தமிழர்களும், மலேசியா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களும் தமிழ் உரைநடைக்குச் செய்த நல்ல சேவையைக் குறிப்பிட வேண்டுமானால் இது மேலும் வரம்பு கடந்து விடுமாதலால் அவற்றை இங்கு கூறாமல் விடுகிறேன். அவர்கள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு நல்ல தொண்டு செய்துள்ளனர் என்று கூறிக்கொண்டு இதை முடிக்கிறேன்.

**—பெ. தூரன்**

# சி. சுப்பிரமணிய பாரதியார்
## (1882–1921)
### (சுருக்கமான வாழ்க்கை வரலாறு)

தமிழிலே ஒரு பெரிய மறுமலர்ச்சியையும் தமிழருக்கு ஒரு புதிய விழிப்பையும் உண்டாக்கியவர் பாரதியார். இவருடைய தந்தையான சின்னசாமி ஐயருக்கு எட்டையபுரம் சமஸ்தானத்தில் செல்வாக்கு நிறைய இருந்தது. அதனால் பாரதியார் இளமையிலேயே சமஸ்தானத்து வித்வான்களுடன் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். இளமையிலேயே கவிபாடி பாரதி என்ற பட்டமும் பெற்றார்.

பாரதியார் முதலில் திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் கல்வி கற்றார். இவருக்குத் தம் 14-ஆம் வயதிலேயே திருமணம் நடந்தது. ஆனால் அந்தக் காலத்திலேயே சின்னசாமி ஐயருடைய செல்வநிலை சீர்குலைந்தது. பாரதியாருக்குத் திருமணமான ஓராண்டிற்குள் தந்தையும் காலமானார். அதனால் இவர் குடும்பம் வாடியது. இந்நிலையில் இவர் காசிக்குச் சென்று தம் அத்தை வீட்டில் இரண்டு ஆண்டுகள் தங்கினார். ஆங்கிலத்தோடு ஹிந்தியும் சமஸ்கிருதமும் படிக்க இவருக்கு அங்கே வாய்ப்புக் கிடைத்தது. கல்கத்தா பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சைக்கும் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். தேசிய கவியாக மாறுவதற்கு வேண்டிய உணர்ச்சிகளைப் பெறக் காசி வாழ்க்கையே பாரதியாருக்கு முக்கியமாக உதவிற்று என்று கூறலாம். வங்காளத்தில் ஓங்கி வளர்ந்த விடுதலை உணர்ச்சி இவருடைய உள்ளத்தில் பெரிதும் பதிந்து விட்டது.

1902-ல் இவர் எட்டயபுரம் திரும்பி ஜமீந்தாரிடம் சிறிது காலம் வேலை பார்த்தார். ஆனால் சுதந்திர உணர்ச்சி மிக்க இவருக்கு அவ்வாழ்க்கை பிடிக்கவில்லை. 1904–ல் மதுரைக்குச் சென்று ஒரு பள்ளியில் மூன்று மாதம் தமிழாசிரியராக இருந்தார். அந்தப் பணியும் அவருக்கு உகந்ததாக இருக்கவில்லை.

அதே ஆண்டில் பாரதியார் சென்னை சென்று, சுதேசமித்திரன் செய்தித்தாளுக்குத் துணையாசிரியரானார். அந்த வேலையில் இருந்து கொண்டே சக்கரவர்த்தினி என்ற ஒரு திங்கள் இதழை நடத்தினார். அத்துடன் திருவல்லிக்கேணியில் இருந்த மண்டையம் திருமலாச்சாரியார் தொடங்கிய இந்தியா என்ற வார இதழுக்கு ஆசிரியராகவும் ஆனார். தமது உள்ளத்திலே குமுறிக் கொண்டிருந்த தேசபக்தி உணர்ச்சியை தமிழ் நாட்டில் பரவச் செய்ய இந்தியா வார இதழ் இவருக்கு நல்ல கருவியாக அமைந்தது.

சூரத்தில் 1907 டிசம்பரில் நடைபெற்ற காங்கிரசில் பாரதியார் தீவிரவாதிகளை ஆதரித்தார். திலகரின் கொள்கைகளில் பாரதியாருக்குப் பற்று மிகுந்தது. திலகரைப் போற்றியும், நிதானக் கட்சியாரை எள்ளி நகையாடியும் பாரதியார் பாடல்கள் எழுதலானார்.

சென்னை திரும்பியதும் இந்தியா இதழில் சட்ட வரம்புகளைப் பொருட்படுத்தாது பாரதியார் எழுதத் தொடங்கி விட்டார். அதனால் அதை வெளியிட்டவர்களின் மீது பிரிட்டிஷ் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தொடங்கிற்று. பாரதியார் இரகசியமாகப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தார். அவர் அங்குச் சேர்ந்த ஒரு மாதத்திற்குள் இந்தியா வாரஇதழ் புதுச்சேரியிலிருந்து மீண்டும் வெளியாகத் தொடங்கிற்று. ஆனால் அது பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் வரக்கூடாது என்று தடை விதிக்கப்பட்ட பிறகு அதை நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

1908 முதல் 1918 வரை பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்தார். அப்பொழுது இவருக்குத் தம் குடும்பத்தை நடத்தவே பல சமயங்களில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. என்றாலும் அந்தக் காலத்தில் தான் இவருடைய இலக்கியப்பணி மிகவும் உன்னத நிலையை அடைந்தது. பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு என்பவை அங்கே எழுதப்பெற்ற மிகச்சிறந்த நூல்களாகும். பாரதியாருடைய கவிதையும், உரைநடையும் புதுச்சேரியில் மெருகேறி முழு வளர்ச்சியடைந்தன என்று பொதுவாகக் கூறலாம்.

பாரதியாருடைய புதுச்சேரி வாழ்க்கை எல்லா வகைகளிலும் துன்பம் மிகுந்து இருந்ததாக யாரும் நினைக்கக்கூடாது. அவருக்கு இரண்டு பெரிய மகான்களின் தொடர்பும் நட்பும்

அங்கே கிடைத்தன. 1910 ஏப்ரல் மாதத்தில் ஸ்ரீ அரவிந்த கோஷ் புதுச்சேரி வந்தடைந்தார். அவருக்குச் சற்று முன்பே ஸ்ரீ. வ. வே. சு. ஐயர் அவர்களும் அங்கு வந்து சேர்ந்திருந்தார். லண்டன் நகரத்தில் இந்திய விடுதியிலிருந்த ஓர் இளைஞர் 1909 ஜூலை 1-ம் தேதி கர்சான் வில்லி என்ற ஆங்கிலேயனைச் சுட்டு வீழ்த்தினன்; தானும் சுட்டுக்கொண்டு உயிர் துறந்தான். உடனே இந்திய விடுதியிலிருந்த சவர்க்கார், வ. வே. சு. ஐயர் முதலியோரைக் கைது செய்ய முயன்றார்கள். சவர்க்கார் பிடிபட்டார். ஆனால் ஐயர் மாறுவேடம் பூண்டு தந்திரமாகப் புதுச்சேரி வந்தடைந்தார்.

ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ ஐயர் இவர்களுடைய கூட்டுறவு பாரதியாருக்குக் கிடைத்தது. பாரதியாருக்கு இளமையிலிருந்தே பராசக்தியிடம் நிறைந்த பக்தி உண்டு. பராசக்தியின்மேல் பல அற்புதமான பாடல்கள் பாடினர். கண்ணனும் முருகனும் இவர் உள்ளத்தைக் கவர்ந்த இரண்டு முக்கிய தெய்வங்களாகும். கண்ணன் பாட்டு, தமிழ் இலக்கியத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது. முருகனைப்பற்றி இவர் எழுதிய பாடல்களும் மிகச் சிறப்பு வாய்ந்தவை. "சுற்றி நில்லாதே போ—பகையே ; துள்ளி வருகுது வேல்" என்ற வரிகளை அட்சர லட்சம் பெறும் என்று வ. வே. சு. ஐயர் புகழ்ந்துள்ளார்.

முதல் உலக யுத்தம் 1918 நவம்பரில் முடிவுற்றது. பாரதியார் புதுச்சேரியை விட்டுப் புறப்பட்டு பிரிட்டிஷ்-இந்தியாவிற்குள் நுழைந்தார். உடனே இவரைக் கைது செய்து சிறையிலிட்டனர். ஆனால் நண்பர்களின் உதவியால் விரைவில் இவர் விடுதலை செய்யப்பட்டார். பிறகு இவர் கடையத்திற்குச் சென்று சில காலம் வாழ்ந்தார். பிறகு அங்கிருந்து சென்னைக்கு வந்து மீண்டும் சுதேசமித்திரனில் பணியாற்றத் தொடங்கினர். அதற்கு முன்பே பாரதியாரின் உடல்நிலை மிகவும் சீர்குலைந்து விட்டது. அவர் ஒரு புது மனிதராகக் காணப்பட்டார்.

சுதேசமித்திரனில் 1920 நவம்பர் 15-ம் தேதியிலிருந்து தொடர்ந்து அநேகமாக நாள்தோறும் குறிப்பு, ரசத்திரட்டு, விநோதத்திரட்டு என்பவை போன்ற தலைப்புக்களுள்ள கட்டுரைகளை பாரதியார் எழுதத் தொடங்கினர். அந்தக் கட்டுரைகள் தாய்நாட்டு விடுதலைக்கு ஆர்வம் ஊட்டக் கூடியனவாகப் பெரும்பாலும் இருந்தன.

பாரதியார் திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு வீட்டில் குடியிருந்தார். அப்போது இவர் அடிக்கடி பார்த்தசாரதி சுவாமி கோவிலுக்குச் செல்வார். கோயில் யானைக்குப் பழம் தேங்காய் அன்போடு கொடுப்பார். அந்த யானைக்கு மதம் பிடித்திருந்த ஒரு நாளிலே அது பாரதியாரை இழுத்துத் தள்ளிவிட்டது. பாரதியாருக்கு மண்டையிலும் உடம்பிலும் காயங்கள் ஏற்பட்டன.

அந்தக் காயங்களெல்லாம் ஆறிவிட்ட போதிலும் இந்த சம்பவத்திற்கு பிறகு பாரதியார் நெடுநாள் உலகில் வாழவில்லை. இவருடைய உடல் நலம் மிகவும் குன்றிப் போயிற்று. அதனால் 1921 செப்டம்பர் 11-ம் தேதி பாரதியார் காலமானார். தமது எழுத்து வன்மையினாலே நாட்டிலே விழிப்பையும் மொழியிலே புதிய மலர்ச்சியையும் உண்டாக்கிய பாரதியார் தமது 38-வது வயதிலேயே மறைந்துவிட்டார். இவரது உள்ளத்தில் பொங்கிய உணர்ச்சிக் கனலை இவருடைய உடம்பு அதற்குமேல் தாங்க முடியவில்லை.

பாரதியார் மறைந்த பிறகுதான் அவருடைய கவிதைகளின் பெருமை நன்கு வெளிப்பட்டது. விடுதலைப்போராட்டத்திற்காக அக்காலத்திலே நடைபெற்ற எந்தக் கூட்டத்திலும் அவருடைய தேசியப் பாடல்கள் முழங்கின. மக்கள் அதனாலே புத்துணர்ச்சி பெற்றார்கள். அவருடைய உரைநடை நேருக்கு நேரே சொல்லுவதுபோல உணர்ச்சி வேகமும், கருத்துத் தெளிவும் கொண்டதாக அமைந்திருந்தது. உரைநடையிலும் இவர் புதுமையை உண்டாக்கினார்.

பெண் விடுதலையிலும், சமூக சீர்திருத்தங்களிலும் அரசியல் கொள்கைகளிலும் பாரதியார் மிக முற்போக்கான எண்ணங்களைக் கொண்டிருந்தார். இவைகளெல்லாம் இவர் எழுதிய பாடல்களிலும், கதை, கட்டுரைகளிலும் தெளிவாக வெளிப்பட்டன. ‘உள்ளத்தில் ஒளியுண்டானால் வாக்கினிலே ஒளியுண்டாகும்’ என்று இவரே பாடியுள்ளது போல பாரதியாருடைய உள்ளத்தில் தோன்றிய ஒளி இவருடைய இலக்கியப் படைப்புக்கள் அனைத்திலும் ஒளி வீசுவதை நாம் காண்கிறோம். அதனால் இவரை இன்று மகாகவி என்று நாம் போற்றுகிறோம்.

# பொருளடக்கம்


முன்னுரை V

பாரதியார் வாழ்க்கை வரலாறு XV

**கதைகள்**

1. ஆறில் ஒரு பங்கு 1
2. சும்மா 27
3. இருள் 36
4. புதிய கோணங்கி 39
5. அர்ஜுன சந்தேகம் 43
6. வேப்பமரம் 45
7. காந்தாமணி 51
8. உஜ்ஜயினீ 59
9. கடல் 61
10. கத்திச் சண்டை 65

**மாதர்**

1. பெண் 75
2. தமிழ்நாட்டின் விழிப்பு 82
3. பதிவிரதை 85
4. பெண் விடுதலை 88
5. தமிழ் நாட்டு நாகரிகம் 97

**சமூகம்**

1. ஜாதிக் குழப்பம் 109
2. பழைய உலகம் 114

3. மிருகங்களும் பட்சிகளும் 117
4. ஆனந்த சக்தி 121
5. தமிழ் 124
6. விடுதலை 126
7. நாகரிகத்தின் ஊற்று 129

**தத்துவம்**

1. இனி 135
2. மூட பக்தி 138
3. வாசக ஞானம் 142
4. அமிர்தம் தேடுதல் 146
5. புனர் ஜன்மம் 149
6. உலக வாழ்க்கையின் பயன் 156
7. கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம் 159
8. ஞான ரதம் (ஒரு பகுதி) 166
9. பகவத்கீதை முன்னுரை (ஒரு பகுதி) 173
10. சந்திரிகையின் கதை (முதல் அத்தியாயம்) 180
11. வேதரிஷிகளின் கவிதை (முன்னுரை) 186
12. தராசு (ஒரு பகுதி) 189

# 1. ஆறில் ஒரு பங்கு

## முகவுரை

ஒரு ஜாதி ஓர் உயிர்; பாரத நாட்டிலுள்ள முப்பது கோடி ஜனங்களும் ஒரு ஜாதி. வகுப்புக்கள் இருக்கலாம்; பிரிவுகள் இருக்கலாகாது. வெவ்வேறு தொழில் புரியலாம்; பிறவி மாத்திரத்தாலே உயர்வு தாழ்வு என்ற எண்ணம் கூடாது. மத பேதங்கள் இருக்கலாம்; மத விரோதங்கள் இருக்கலாகாது.

இவ் வுணர்வே நமக்கு ஸ்வதந்திரமும், அமரத் தன்மையும் கொடுக்கும். 'நாந்ய: பந்தா வர்த்ததே அயநாய'—வேறு வழியில்லை.

இந்நூலை, பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரக்ஷிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத்தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

ஆசிரியன்

## அத்தியாயம் 1

மீனாம்பாள் வீணை வாசிப்பதிலே ஸரஸ்வதிக்கு நிகரானவள். புரசைபாக்கத்திலுள்ள எங்கள் வீட்டிற்கு அவள் வரும் சமயங்களிலெல்லாம் மேல் மாடத்து அறையை அவளுடைய உபயோகத்துக்காகக் காலி செய்து விட்டு விடுவது வழக்கம். நிலாக் காலங்களில் இரவு எட்டு மணிக்கெல்லாம் போஜனம் முடிந்துவிடும். ஒன்பது மணி முதல் நடுநிசி வரையில் அவள் தனது அறையில் இருந்து வீணை வாசித்துக் கொண்டிருப்பாள். அறைக்கு அடுத்த வெளிப்புறத்திலே பந்தலில், அவளுடைய தகப்பனார் ராவ்பகதூர்

சுந்தரராஜுலு நாயுடு கட்டிலின் மீது படுத்துக் கொண்டு, சிறிது நேரம் வீணையைக் கேட்டுக்கொண்டிருந்து, சீக்கிரத்தில் குறட்டை விட்டு நித்திரை செய்யத் தொடங்கி விடுவார். ஆனால், மகாராஜன் குறட்டைச் சத்தத்தால் வீணைச் சத்தம் கேளாதபடி செய்து விடமாட்டார்; இலேசான குறட்டைதான். வெளி முற்றத்தின் ஓர் ஓரத்திலே, நான் மட்டும் எனது 'பிரம்மசாரி'ப் படுக்கையைப் போட்டுக் கொண்டு படுத்திருப்பேன். வீணை நாதம் முடிவுறும் வரை, என் கண்ணிமைகளைப் புளியம் பசைபோட்டு ஒட்டினாலும் ஒட்டமாட்டா. மீனம்பாளுடன் அறையிலே படுத்துக் கொள்ளும் வழக்கமுடைய எனது தங்கை இரத்தினமும் சீக்கிரம் தூங்கிப் போய்விடுவாள். கீழே, எனது தாயார், தமையனார், அவரது மனைவி முதலிய அனைவரும் தூங்கி விடுவார்கள். எனது தமையனார் மனைவி, வயிற்றிலே சோற்றைப் போட்டுக் கை கழுவிக் கொண்டிருக்கும்போதே குறட்டைவிட்டுக் கொண்டிருப்பாள். இடையிடையே குழந்தைகளின் அழுகைச் சத்தம் மட்டிலும் கேட்கும். தமையனாருக்குக் கோட்டையில் ரெவின்யூ போர்டு ஆபிஸிலே உத்தியோகம். அவருக்கு நான்கு வருடங்களுக்கொரு முறை ஆபீஸில் பத்து ரூபாயும், வீட்டில் இரண்டு குழந்தைகளும் 'ப்ரமோஷன்.'

வஸந்த காலம், நிலாப்பொழுது; நள்ளிரவு நேரம். புரசைபாக்கம் முழுவதும் நித்திரையிலிருந்தது, இரண்டு ஜீவன்கள் தான் விழித்து இருந்தன. நான் ஒன்று, மற்றொன்று அவள்.

கந்தர்வ ஸ்த்ரீகள் வீணை வாசிப்பதுபோல மீனம்பாள் வாசிப்பாள். பார்ப்பதற்கும் கந்தர்வ ஸ்த்ரீயைப் போலவே இருப்பாள். அவளுக்கு வயது பதினாறு இருக்கும். கதையை வளர்த்துக் கொண்டு ஏன் போகவேண்டும்? மன்மதன் தனது அம்பொன்றின் முனையிலே என் பிராணனைக் குத்தி எடுத்துக் கொண்டு போய் அவள் வசம் ஒப்புவித்து விட்டான். அடடா! அவளது இசை, எவ்வளவு நேரம் கேட்டபோதிலும், தெவிட்டாது. தினந்தோறும் புதுமை தோன்றும், அவள் முகத்தில் தோன்றுவதுபோல. அவளுடைய தந்தையாகிய ராவ்பகதூர் சுந்தரராஜுலு நாயுடு எனது தாயாருக்கு ஒன்றுவிட்ட அண்ணன். தஞ்சாவூர் முதலிய பல ஜில்லாக்களில் நெடுங்காலம் போலீஸ்

இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து ஸர்க்காருக்கு நன்றாக உழைத்ததினால் 'ராவ்பகதூர்' என்ற பட்டம் பெற்றவர். சுதேசீயம் தொடங்கும் முன்பாகவே இவர் வேலையிலிருந்து விலகிவிட்டார். இதை எதன் பொருட்டாகச் சொல்லுகிறேன் என்றால், அவருக்குக் கிடைத்த பட்டம் வெறுமே சில சுதேசீயத் தலைவர்கள் மீது 'ரிப்போர்ட்' எழுதிக் கொடுத்துச் சுலபமாக சம்பாதித்த பட்டமன்று. யதார்த்தத்திலேயே திறமையுடன் உழைத்ததினால் கிடைத்த பட்டம். குழந்தை முதலாகவே மீனாம்பாளை எனக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. அந்தக் கருத்து நிறைவேறுவதற்கு நேர்ந்த விக்கினங்கள் பல. அவ்விக்கினங்களில் பெரும்பான்மையானவை என்னாலேயே உண்டாயின.

நான் சுமார் பதினாறு பிராயம் வரை சென்னை கிறிஸ்தியன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தேன். 'வேத கால முதலாக இன்றுவரை பாரத தேசத்திலுள்ள ரிஷிகளெல்லோரும் ஒன்றும் தெரியாத மூடர்கள். அர்ஜுனனும், காளிதாஸனும், சங்கராசாரியாரும், சிவாஜியும், ராமதாஸரும், கபீர்தாஸரும் அதற்கு முன்னும் பின்னும் நேற்றுவரையிருந்த பாரத தேசத்தார் அனைவரும் நெஞ்சில் வளர்த்து வந்த பக்திகளெல்லாம் இழிந்த அநாகரிகமான மூடபக்திகள்' என்பது முதலான ஆங்கிலேய 'சத்தியங்கள்' எல்லாம் என் உள்ளத்திலே குடிபுகுந்து விட்டன. ஆனால், கிறிஸ்துவப் பாதிரி ஓர் விநோதமான ஜந்து, ஹிந்து மார்கத்திலும், ஹிந்து நாகரீகத்திலும் பக்தி செலுத்துவது பேதைமை என்று ருஜுப்படுத்திக்கொண்டு வரும்போதே, அவர் கொண்டாடும் கிறிஸ்து மார்க்கமும் மூடபக்தி என்று வாலிபர் மனதில் படும்படி ஏற்பாடு செய்துவிடுகிறார். மத விஷயங்களைப் பற்றி விஸ்தாரமான விவகாரங்கள் எழுதி, படிப்பவர்களுக்கு நான் தலைநோவு உண்டாக்கப் போவதில்லை. சுருக்கம் நான் எனது பூர்வ மதாசாரங்களில் பற்று நீங்கி, 'ஞான ஸ்னானம்' பெறவில்லை; **பிரம்ம ஸமாஜத்திலே** சேர்ந்து கொண்டேன்.

சிறிது காலத்திற்கு அப்பால், பட்டணத்தில் படிப்பை நிறுத்துவிட்டு, வீட்டில் யாரிடமும் சொல்லாமல் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப்போய், அங்கே பிரம்ம ஸமாஜத்தாரின் மார்க்க போதனை

கற்பிக்கும் பாடசாலையொன்றிலே சேர்ந்து, சில மாதங்கள் படித்தேன். பிரம்ம ஸமாஜத்தாரின் 'உபதேசி'களில் ஒருவனாக வெளியேற வேண்டும் என்பது என்னுடைய நோக்கம். அப்பால் அங்கிருந்து பஞ்சாப், ஹிந்துஸ்தானம் முதலிய பல பிரதேசங்களில் யாத்திரை செய்து கொண்டு, கடைசியாகச் சென்னப் பட்டணம் வந்து சேர்ந்தேன். நான் ஹிந்து மார்க்கத்தை விட்டு நீங்கியதாக எண்ணி எனது ஜாதியார் என்னைப் பல விதங்களில் இம்சை செய்தார்கள். இந்த இம்சைகளினால் எனது சித்தவுறுதி நாளுக்கு நாள் பலம் அடைந்ததேயல்லாமல், எனக்கு மனச் சோர்வு உண்டாகவில்லை. எனது தகப்பனார்—இவர் பெயர் துபாஷ் ராமச்சந்திர நாயுடு-வெளிவேஷ மாத்திரத்தில் சாதாரண ஜனங்களின் ஆசார விவகாரங்களை வைத்துக் கொண்டிருந்தார்; எனினும், உள்ளத்தில் பிரம்மஸமாஜப் பற்று உடையவர். ஆதலால், நான் வாஸ்தவமான பரமாத்ம பக்தியும், ஆத்ம விசுவாஸமும், எப்போதும் உபநிஷத்துக்கள் படிப்பதில் சிரத்தையும் கொண்டிருப்பது கண்டு, அவருக்கு அந்தரங்கத்தில் மிகுந்த உவகையுண்டாயிற்று. வெளி நடப்பில் என் மீது கோபம் பாராட்டுவது போலிருந்தாரே யன்றி, எனது பந்துக்கள் சொற்படி கேட்டு என்னைத் தொல்லைப்படுத்தவில்லை. ஸகல ஸௌகரியங்களும் எனக்கு முன்னைக் காட்டிலும் அதிகமாக நடக்கும்படி வீட்டில் ஏற்பாடு செய்து வைத்திருந்தார். ஆனால் எனது தமையன் மாத்திரம் என்னிடம், எக்காரணம் பற்றியோ மிகுந்த வெறுப்புப் பாராட்டினான். நான் தலையிலே பஞ்சாபிகளைப் போலப் பாகை கட்டிக் கொள்வது வழக்கம். '15 ரூபாய்'க் குமாஸ்தாக்களுக்கென்று பிரத்தியேகமாக அழகு, அந்தம், ஆண்மை எதுவுமின்றி ஏற்பட்டிருக்கும் கும்பகோணத்துப் பாகை நான் கட்டிக் கொள்ளுவதில்லை. இது கூடத் தமையனுக்கு கோபம் உண்டாக்கும். 'ராஜபுத்ருடு வீடு, தொங்க விதவா; தலலோ மகா ஆடம்பரமுக பக்டி வீடிகி!' என்று ஏதெல்லாமோ சொல்லி ஓயாமல் திட்டிக் கொண்டிருப்பான். இப்படியிருக்க, ஒருநாள் எனது தகப்பனார் திடீரென்று வாயுக் குத்தி இறந்து போய்விட்டார். அவருக்கு பிரம்மஸமாஜ விதிப் படி கிரியைகள் நடத்த வேண்டும் என்று நான் சொன்னேன்.

எனது தமையன் சாதாரண ஆசாரங்களின்படிதான் நடத்த வேண்டும் என்றான். பிரமாத கலகங்கள் விளைந்து, நானூறு மத்தியஸ்தங்கள் நடந்த பிறகு, சமசானத்தில் அவன் தனதிஷ்டிப் படி கிரியைகள் முடித்த பின்பு நான் எனது கொள்கைப்படி பிரம்மஸமாஜ குரு ஒருவரை வைத்துக் கொண்டு கிரியைகள் செய்தேன். இதுவெல்லாம் எனது மாமா, ராவ் பகதூர் சுந்தர ராஜுலு நாயுடுவுக்கு என்மீது மிகுந்த கெட்ட எண்ணம் உண்டாகும்படி செய்துவிட்டது. ஆதலால், விவாகம் தடைப் பட்டுக் கொண்டே வந்தது. ஆனால், இறுதிவரை, என்னையெப் படியேனும் சீர்திருத்தி, எனக்கே தனது மகளைப் பாணிக் கிரஹணம் செய்து கொடுக்க வேண்டும் என்பது அவருடைய இச்சை.

வஸந்தகாலம், நிலாப்பொழுது, நள்ளிரவு நேரம். புரசை பாக்கம் முழுமையும் நித்திரையிலிருந்தது. விழித்திருந்த ஜீவன்கள் இரண்டே. ஒன்று நான், மற்றொன்று அவள். இன்பமான காற்று வீசிக் கொண்டிருந்தது. மேல் மாடத்தில் மீனும்பாளுடைய அறையிலிருந்து, முறைப்படி வீணைத்தொனி கேட்டது. ஆனால், வழக்கப்படி குறட்டை கேட்கவில்லை. ராவ்பகதூர் குறட்டை மாமா ஊரிலில்லை. வெளியே ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார். நான் நிலா முற்றத்தில் எனது கட்டிலின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் உள்ளத் திலோ, இரண்டு எரிமலைகள் ஒன்றையொன்று சீறியெதிர்த்துப் போர் செய்து கொண்டிருந்தன. இவற்றுள்ளே ஒன்று காதல்; மற்றொன்று—பின்பு தெரியவரும். வீணைத்தொனி திடீரென்று நின்றது. சிறிது நேரத்தில், எனது பின்புறத்தில் ஓர் ஆள் வந்து நிற்பது உணர்ந்து, திரும்பிப் பார்த்தேன், மீனும்பாள்!

இப்பொழுதுதான் நாங்கள் புதிதாகத் தனியிடத்திலே சந்தித்திருக்கிறோமென்றும், அதனால் இங்கு நீண்டதோர் காதல் வர்ணனை எழுதப்படுமென்றும் படிப்பவர்கள் எதிர்பார்க்க வேண்டாம். இவ்விதமாக நாங்களிருவரும் பலமுறை சந்தித் திருக்கிறோம். மீனும்பாள் மஞ்சத்தின்மீது உட்கார்ந்தாள்.

'மீனு! இன்று உன்னிடத்தில் ஒரு விசேஷம் சொல்லப் போகிறேன்' என்றேன். 'எனக்கு அது இன்னதென்று

ஏற்கனவே தெரியும்' என்றாள்.

'என்னது சொல்லு.'

'நீ பிரம்மச்சரிய சங்கற்பம் செய்துகொள்ளப் போகிறாய் என்ற விசேஷம்.'

'ஏன்? எதற்கு? எப்படி? உனக்கு யார் சொன்னார்கள்?' என்று கேட்டேன்.

'வந்தே மாதரம்' என்றாள்.

மீனாம்பாளுடைய அறிவுக்கூர்மை எனக்கு முன்னமே தெரியுமாதலால், அவள் சொல்லியதிலிருந்து அதிக வியப்புண்டாகவில்லை.

அதன்பின், நான் அவளிடம் பின்வருமாறு கூறலாயினேன்: 'ஆம். பாரததேசத்தை இப்பொழுது பிரம்மசாரிகளே ரக்ஷிக்க வேண்டும். மிக உயர்ந்திருந்த நாடு மிகவும் இழிந்துபோய் விட்டது. இமயமலையிருந்த இடத்தில் முட்செடிகளும் விஷப்பூச்சிகளும் நிறைந்த ஒரு பாழுங்காடு இருப்பதுபோல் ஆய்விட்டது. அர்ஜுனன் வாழ்ந்த மாளிகையில் வௌவால்கள் தொங்குவது போலிருக்கிறது. இதை பிரம்மச்சாரிகளே காப்பாற்ற வேண்டும். பொப்பிலி ராஜாவின் மகனாகவேனும், ராஜா ஸர் ஸவலை ராமசாமி முதலியார் மகனாகவேனும் பிறவாமல், நம் போன்ற சாதாரண குடும்பங்களிலே பிறந்தவர்கள் விவாகம் செய்து கொண்டால், இந்தப் பஞ்சநாட்டில் அவர்களுக்கு மூச்சு முட்டிப் போகிறது. குருவியின் தலையிலே பனங்காயை வைப்பதுபோல, இந்த நரிக்கூட்டத்திலுள்ள ஒரு வாலிபன் தலையிலே ஒரு குடும்ப பாரத்தைச் சுமத்தும்போது, அவனுக்குக் கண் பிதுங்கிப்போய் விடுகிறது. அவனவனுடைய அற்ப காரியங்கள் முடிவு பெறுவதே பகீரதப்ரயத்தனம் ஆகிவிடுகிறது. தேச காரியங்களை இவர்கள் எப்படிக் கருதுவார்கள்? பிரம்மச்சாரிகள் வேண்டும்; ஆத்ம ஞானிகள் வேண்டும்; தம் பொருட்டு உலக சுகங்களை விரும்பாத தீரர்கள் வேண்டும். இந்தச் சுதேசீயம் கேவலம் ஒரு லௌகிக காரியமன்று. இது ஒரு தர்மம். இதில் பிரவேசிப்பவர்களுக்கு வீரியம், தேஜஸ், கர்மயோகித் தன்மை முதலிய அரிய குணங்கள் வேண்டும். நான் பிரம்மச்சரிய விரதத்தைக் கைக்கொள்ளலாமென்று நினைத்திருக்கிறேன். ஆனால்—'

மீனு: 'ஆனால், நான் அதற்கு ஒரு சனியாக வந்து குறுக்கிட்டிருக்கிறேன் என்று சொல்லுகிறாய்!'

'பார்த்தாயா, பார்த்தாயா! என்ன வார்த்தை பேசுகிறாய்? நான் சொல்ல வந்ததைக் கேள். எனது புதிய சங்கற்பம் ஏற்படு முன்னதாகவே, என் உயிரை உனக்கு அர்ப்பணம் செய்து விட்டேன். இப்போது எனது உயிருக்கு வேறொரு கடமை ஏற்பட்டிருக்கிறது. அவ்விஷயத்தில் உனது கட்டளையை எதிர் பார்த்திருக்கிறேன்' என்றேன். அவள் ஏதோ மறுமொழி சொல்லப்போனாள். அதற்குள் வாயிற்புறத்தில் ஒரு வண்டி வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

'நாயனா வந்துவிட்டார், நான் போகிறேன்' என்று சொல்லி ஒரு முத்தத்துடன் பிரிந்தாள்.

குறட்டை நாயுடு கதவை உடைத்து, உள்ளிருக்கும் குறட்டைகளையெல்லாம் எழுப்பி, மேலே வந்து படுத்து அரை நாழிகைக்கெல்லாம் தமது தொழிலை ஆரம்பித்து விட்டார். இரண்டு ஜீவன்கள் அன்றிரவு முழுதும் விழித்திருந்தன. ஒன்று நான்; அவள் மற்றொன்று.

## அத்தியாயம் 2

மேல் அத்தியாயத்தின் இறுதியில் குறிக்கப்பட்ட செய்தி நிகழ்ந்ததற்கு அப்பால், சில மாதங்கள் கழிந்துபோயின. இதற்கிடையே, எங்களுடைய விவகாரத்தில் பல மாறுபாடுகள் உண்டாயிருந்தன. 'வந்தே மாதரம்' மார்க்கத்தில் நான் பற்று உடையவன் என்பதை அறிந்த ராவ்பகதூர் எனக்குத் தமது கன்னிகையை மணஞ் செய்து கொடுப்பது என்ற சிந்தனையை அறவே ஒழித்து விட்டார். சில மாதங்களாக, அவர் தமது சாச்வத வாஸஸ்தானமாகிய தஞ்சாவூரிலிருந்து புரசைபாக்கத்துக்கு வருவதை முழுவதும் நிறுத்திவிட்டார். இதனிடையே, மீனாம்பாளுக்கு வேறு வரன்கள் தேடிக்கொண்டிருந்ததாகவும்

பிரஸ்தாபம் ஏற்பட்டது. அவளிடமிருந்தும் யாதொரு கடிதமும் வரவில்லை. ஒருவேளை முழுதும் மறந்துபோய் விட்டாளா? பெண்களே வஞ்சனையின் வடிவம் என்று சொல்லுகிறார்களே, அது மெய்தானா? 'பெண்ணெனப்படுவ கேண்மோ.... உள் நிறைவுடையவல்ல, ஓராயிர மனத்தவாகும்' என்று நான் சீவகசிந்தாமணியிலே படித்தபோது, அதை எழுதியவர் மீனாம் பாளைப் போன்ற ஸ்த்ரீயைக் கண்டு அவளுடைய காதலுக்குப் பாத்திரமாகும் பாக்கியம் பெறவில்லை போலும் என்று நினைத்தேனே. இப்போது அந்த ஆசிரியருடைய கொள்கைதான் மெய்யாகி விட்டதா? நான் இளமைக்குரிய அறிவின்மையால் அத்தனை பெருமை வாய்ந்த ஆசிரியரது கொள்கையைப் பிழை யென்று கருதினேன் போலும்!

'அடா மூடா! உனக்கு ஏன் இதில் இவ்வளவு வருத்தம்? நீயோ பிரம்மசரிய விரதத்திலே ஆயுளைக் கழிக்க வேண்டும் என்ற எண்ணத்தை நாள்தோறும் மேன்மேலும் வளர்த்து வருகின்றாய். மீனா மற்றொருவனை மணஞ்செய்துகொண்டால் உனக்கு எளிது தானே? நீயோ வேறொரு பெண் மீது இவ்வாழ்க்கையில் மையல் கொள்ளப் போவதில்லை. இவளொருத்திதான் உனது விரதத் திற்கு இடையூறாக இருந்தாள். இவளும் வேறொருவனை மணஞ் செய்துகொண்டு அவன் மனைவியாய் விடுவாளாயின், உனது விரதம் நிர்விக்கினமாக நிறைவேறும். ஈசனன்றோ உனக்கு இங்ஙனம் நன்மையைக் கொண்டு விடுகிறான்? இதில் நீ ஏன் வருத்தமடைய வேண்டும்?' என்று சில சமயங்களில் எனதுள்ளம் தனக்குத்தானே நன்மதி புகட்டும்.

மீண்டும், வேறொரு விதமான சிந்தை தோன்றும்: 'அவள் நம்மை மறந்திருக்கவே மாட்டாள். மாமா சொற்படி கேட்டு அவள் வேறொருவனை மணஞ் செய்துகொள்ளவே மாட்டாள். எனது பிராணனோடு ஒன்றுபட்டவளாதலால், எனது நெஞ்சத் திலே ஜொலிக்கும் தர்மத்தில் தானும் ஈடுபட்டவளாகி, அந்த தர்மத்திற்கு இடையூறு உண்டாகும் என்று அஞ்சி எனக்கு ஒன்றும் எழுதாமலிருக்கிறாள். ஆமடி, மீனா! உன்னை நான் அறியேனா? எதுவரினும் நீ என்னை மறப்பாயா? அந்தக் கண்கள் 'உன்னை மறக்கவே மாட்டேன்' என்று எத்தனை முறை

என்னிடம் பிரமாணம் செய்து கொடுத்திருக்கின்றன! அந்தக் கண்கள்! அந்தக் கண்கள்! ஐயோ, இப்பொழுதுகூட என் முன்னே நிற்கின்றனவே! அவை பொய் சொல்லுமா?'

அப்பால் ஒரு உள்ளம்: 'அடா! நல்ல துறவடா உன் துறவு! நல்ல பக்தியடா உன் பக்தி! நல்ல தர்மம்! நல்ல சிரத்தை! ஆரிய நாட்டை உத்தாரணம் செய்வதற்கு இப்படியன்றோ பிள்ளைகள் வேண்டும்? பீஷ்மர் வாழ்ந்திருந்த தேசமல்லவா? இப்பொழுது அதற்கு உன்னைப் போன்றவர்கள் இருந்து ஒளி கொடுக்கிறார்கள்! சீச்சி! நாய் மனமே! அமிருத வெள்ளத்தை விட்டு வெறும் எலும்பைத் தேடிப் போகிறாயா? லோகோத் தாரணம் பெரிதா, உனது புலனின்பம் பெரிதா? தர்ம சேவை பெரிதா, ஸ்த்ரீ சேவை பெரிதா? எதனைக் கைக்கொள்ளப் போகிறாய் சொல்லடா சொல்!'

பிறகு வேறொரு சிந்தை: 'எப்படியும் அவளிடமிருந்து ஓர் உறுதி கிடைத்தால், அதுவே நமக்குப் பெரியதோர் பலமாயிருக் கும். 'நீ தர்ம பரிபாலனம் செய், என் பொருட்டாக தர்மத்தைக் கைவிடாதே. நான் மரணம்வரை உன்னையே மானஸிகத் தலை வனாகக் கொண்டு நோன்புகள் இழைத்துக் காலம் கழிப்பேன். ஸ்வர்க்கத்திலே நாம் இருவரும் சேர்ந்து வாழலாம் என்று அவள் உறுதி தருவாளானால், இந்த ஜன்மத்தில் ஜீவ்யம் வெகு சுலபமாய் இருக்கும்.'

அப்பால்: 'ஒரேயடியாக, அவளுக்கு இன்னொருவனுடன் விவாகம் நடந்து முடிந்துவிட்டது என்று செய்தி வருமானால், கவலை விட்டிருக்கும். பிறகு, இகத் தொடர் ஒன்றுமேயில்லாமல் தர்மசேவையே தொழிலாக நின்று விடலாம்.'

பின் மற்றொரு சிந்தை: 'ஆ! அப்படி ஒரு செய்தி வரு மானால், பின்பு உயிர் தரித்திருப்பதே அரிதாய் விடும். அவளு டைய அன்பு மாறிவிட்டது என்று தெரிந்தபின் இவ் வுலக வாழ்க்கையுண்டா?'

அப்பால் பிறிதொரு சிந்தை: 'அவள் அன்பு! மாதர்களுக்கு அன்பு என்பதோர் நிலையும் உண்டா? வஞ்சனை லோபம் இரண் டையும் திரட்டிப் பிரம்மன் ஸ்த்ரீகளைப் படைத்தார்.'

இப்படி ஆயிர விதமான சிந்தனைகள் மாறி மாறித் தோன்றி

எனது அறிவைக் கலக்கின. ஆன்மவுறுதி யில்லாதவனுடைய உள்ளம் குழம்பியதோர் கடலுக்கு ஒப்பாகும். இதனைப் படிக்கின்றவர், ஒரு கணம் சாக்ஷி போல் நின்று, தமது உள்ளத்தினடையே நிகழும் புரட்சிகளையும், கலக்கங்களையும் பார்ப்பராயின் மிகுந்த வியப்பு உண்டாகும். மனித வாழ்க்கையிலே இத்தனை திகைப்புக்கள் ஏன் உண்டாகின்றன?

'மறப்பும் நினைப்புமாய் நின்ற வஞ்ச மாய மனத்தால் வளர்ந்தது தோழி.'

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் திடீரென்று எனது கையில் மீனாம்பாளின் கடிதமொன்று கிடைத்தது. அதனை இங்குத் தருகின்றேன். அதைப் படித்துப் பார்த்தபொழுது என்னுள்ளம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை நீங்களே யோசித்துக் கொள்ளுங்கள்.

ஓம்

தஞ்சாவூர்.

உடையாய்,

இக்கடிதம் எழுதத் தொடங்கும்போதே எனது நெஞ்சு பதறுகிறது. எனக்கு எப்படி எழுதுகிறது என்று தெரியவில்லை. ஐயோ, இது என்னுடைய கடைசிக் கடிதம்! உன் முகத்தை நான் இனி இவ்வுலகத்திலே பார்க்கப் போவதில்லை.

'நாயன்' வருகிற தை மாதம் என்னை இவ்வூரில் புதிய இன்ஸ்பெக்டராக வந்திருக்கும் மன்னார் என்பவனுக்குப் பலியிட வேண்டுமென்று நிச்சயம் செய்துவிட்டார். கல்யாணத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் தயாராகின்றன. உனது பெயரைக் கேட்டால், வேட்டை நாய் விழுவது போல் விழுந்து, காதால் கேட்க முடியாத கெட்ட வார்த்தைகள் சொல்லி நிந்திக்கிறார். நான் தப்பியோடி விடுவேன் என்று நினைத்து என்னை வெளியேறாதபடி காவல் செய்து வைத்திருக்கிறார். நீ ஒரு வேளை இச்செய்தி கேட்டு இங்கு வருவாய் என்று கருதி, நீ வந்தால் வீட்டுக்கு வரமுடியாமல் செய்ய, இவரும் மன்னாரென்பவனும் சேர்ந்து நீசத்தனமான ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறார்கள். அவன் 'நாயன்' வின் பணத்தின் மீது கண் வைத்து, இந்த விவாகத்தில் ஆசை மூண்டிருக்கிறான். என்னுள்ளத்திலே

அவனிடம் மிகுந்த பகைமையும், அருவருப்பும் உள்ளனவென்றும், இப்படிபட்ட பெண்ணை பலவந்தமாகத் தாலி கட்டினால் அவனுக்கு வாழ்நாள் முழுதும் துக்கமிருக்குமேயல்லாது சுகமிருக்காது என்றும் சொல்லியனுப்பினேன். அதற்கு, அந்த மிருகம், 'எனக்கு அவளுடைய உள்ளத்தைப் பற்றி லக்ஷ்யமில்லை. அதைப் பின்னிட்டுச் சரிப்படுத்திக் கொள்வேன். முதலாவது, பணம் என் கையில் வந்து சேர்ந்தால், பிறகு அவள் ஓடிப்போய் அந்த ஜெயிலுக்குப் போகிற பயலுடன் சேர்ந்து கெட்டுத் திரிந்துவிட்டுப் பிறகு சமுத்திரத்தில் விழுந்து சாகட்டும்' என்று மறுமொழி கொடுத்தனுப்பி விட்டது.

அநேக தினங்களாக எனக்கு இரவில் நித்திரை என்பதே கிடையாது. நேற்றிரவு படுக்கையின் மீது கண் மூடாமல் படுத்துப் புரண்டு கொண்டிருந்தேன். அப்போது கனவு போன்ற ஒரு தோற்றமுண்டாயிற்று. தூக்கமில்லாதபோது, கனவு எப்படி வரும்? அஃது கனவுமில்லை, நினைவுமில்லை; ஏதோ ஒரு வகையான காட்சி. அதில் அப்பயங்கரமான ரூபத்துடன், இரத்தம் போன்ற சிவந்த விழிகளும், கரிய மேகம் போன்ற மேனியும், வெட்டுண்ட தலைகளின் மாலையும், கையில் சூலமுமாகக் காளிதேவி வந்து தோன்றினள். நான் நடுங்கிப்போய், 'மாதா என்னைக் காத்தருள் செய்யவேண்டும்' என்று கூறி வணங்கினேன். உடனே, திடீரென்று அவளுடைய உருவம் மிக அழகியதாக மாறுபட்டது. அந்த ஸௌந்தர்யத்தை என்னால் வருணிக்க முடியாது. அவளுடைய திருமுடியைச் சூழ்ந்து கோடி சூரியப் பிரகாசம் போன்ற தேஜோமண்டலம் காணப்பட்டது. கண்கள் அருள் மழை பொழிந்தன. அப்பொழுது தேவி எனக்கு அபயப் பிரதானம் புரிந்து பின்வருமாறு சொல்லாயினள்: 'குழந்தாய் உனது அத்தான் கோவிந்தராஜனை எனது சேவையின் பொருட்டாக எடுத்துக் கொள்ளப் போகிறேன். உனக்கு இம்மையில் அவனைப் பெற முடியாது. நீ பிறனுக்கு மனைவியாகவும் மாட்டாய். உனக்கு இவ்வுலகத்தில் இனி எவ்வித வாழ்வுமில்லை. உங்கள் வீட்டுக் கொல்லையில், வடமேற்கு மூலையில், தனியாக ஓர் பச்சிலை படர்ந்திருக்கக் காண்பாய். நாளைக்காலை ஸ்நானம் செய்து பூஜை முடிந்தவுடனே அதில் இரண்டு இலைகளை

எடுத்துத் தின்றுவிடு. தவருதே!' மேற்கண்டவாறு கட்டளை கொடுத்து விட்டுப் பராசக்தி மறைந்து போயினள்.

காலையில் எழுந்து அந்தப் பச்சிலையைப் பார்க்கப் போனேன். வானத்திலிருந்து ஒரு காகம் இறங்கிற்று. அது அந்தப் பச்சிலையைக் கொத்தி உடனே தரையில் மாண்டு விழக் கண்டேன். தேவியின் கருத்தை அறிந்து கொண்டேன். இன்று பகல் பத்து நாழிகைக்கு, அந்த இலைகளை நான் தின்று பரலோகம் சென்று விடுவேன். நின் வரவை எதிர்பார்த்து அங்கும் கன்னிகையாகவே யிருப்பேன். நீ உனது தர்மங்களை நேரே நிறைவேற்றி மாதாவுக்குத் திருப்தி செய்வித்து, பிறகு அவள் உன்னை நான் இருக்குமிடம் கொண்டு சேர்ப்பாள். போய் வருகிறேன். ராஜா! ராஜா! என்னை மறக்காதே. வந்தே மாதரம்!

* * *

இக்கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

## அத்தியாயம் 3

மீனும்பாளுடைய 'மரணவோலை' கிடைத்ததின் பிறகு இரண்டு வருஷங்கள் கழிந்துவிட்டன. இதனிடையே எனக்கு நிகழ்ந்த அனுபவங்களையெல்லாம் விஸ்தாரப்படுத்திக் கொண்டு போனுல் பெரிய புராணமாக வளரும். சுருக்கமாகச் சொல்லுகிறேன். அந்த ஆற்ருமையால் வெளியேறிய நான் அப்படியே காஷாயம் தரித்துக்கொண்டு துறவியாக வடநாட்டிலே ஸஞ்சாரம் செய்து வந்தேன். 'வந்தே மாதர' தர்மத்தை மட்டிலும் மறக்கவில்லை. ஆனுல், என்னைச் சர்க்கார் அதிகாரிகள் பிடித்துச் சிறையிடும்படியான முயற்சிகளிலே நான் கலக்கவுமில்லை. ஜனங்களுக்குள் ஒற்றுமையும், பலமும் ஏற்படுத்திஞல் ஸ்வதிந்திரம் தானே சித்தியாகும் என்பது என்னுடைய கொள்கை. காரணத்தை விட்டுப் பயனைச் சீறுவதில் என் மனம்

குவியவில்லை. அங்கங்கே சில சில பிரச்சாரங்கள் செய்ததுண்டு. இதுபற்றி, சில இடங்களில் என்னைப் போலீஸார் தொடரத் தலைப்பட்டார்கள். இதனால், நான் ஜனங்களிடையே நன்றாகக் கலந்து நன்மைகள் செய்துகொண்டு போகமுடியாதபடி பல தடைகள் ஏற்பட்டன. ஆகவே, எனது பிரசங்கங்களிலிருந்து எனது நோக்கத்திற்கு அனுகூலத்தினும் பிரதிகூலமே அதிகமாக விளையலாயிற்று. இதையும் தவிர, எனது பிரசங்கங்களைக் கேட்டு ஜனங்கள் மிகவும் வியப்படைவதையும், மற்றவர்களைக் காட்டிலும் எனக்கு அதிக உபசாரங்கள் செய்வதையும் கண்டு, உள்ளத்திலே கர்வம் உண்டாகத் தலைப்பட்டது.

"இயற்கையின் குணங்களிலிருந்து செய்கைகள் பிறக்கின்றன. மூடன் 'நான் செய்கின்றேன்' என்று கருதுகின்றான்" என்ற பகவத் கீதை வாக்கியத்தை அடிக்கடி மனனஞ் செய்து கொண்டேன். இந்த வீண்கர்வம், நாளுக்கு நாள்மிகுதி யடைந்து என்னை விழுங்கி, யாதொரு காரியத்திற்கும் பயன்படாமற் செய்துவிடுமோ என்ற அச்சம் உண்டாயிற்று. வெளிக்குத் தெரியாமல் எவருடைய மதிப்பையும், ஸம்மானத் தையும் எதிர்பார்க்காமல் ஸாதாரணத் தொண்டு இழைப்பதற்கு என்னை மாதா வைத்திருக்கிறாள் என்பதை அறிந்துகொண்டேன். எனவே, பிரசங்க கூட்டங்களில் சேர்வதை நிறுத்திவிட்டேன். சில தினங்களுக்கு அப்பால், எனக்குப் போலீஸ் சேவகர்கள் செய்யும் உபசாரங்களும் நின்றுபோய் விட்டன. பாதசாரி யாகப் பல இடங்களில் சுற்றிவிட்டு, பலப்பல தொழில்கள் செய்து கொண்டு லாஹுர் நகரத்திற்குப் போய்ச்சேர்ந்தேன்.

அங்கே லாலா லஜபதிராய் போன்ற பலரைப் பார்க்க வேண்டு மென்ற இச்சை ஜனித்தது. அவரைப் போய்க் கண்டதில், அவர் என்னிடம் நம்பிக்கை கொண்டவராகி, கோசல நாட்டுப் பிரதேசங்களில் கொடிய பஞ்சம் பரவியிருக்கிறதென்றும், பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்குச் சோறு துணி கொடுக்க வேண்டுமென்ற கருத்துடன் தாம் நிதிகள் சேர்த்து வருவதாக வும், பல வாலிபர்கள் தம்மிடமிருந்து திரவியங் கொண்டுபோய்ப் பஞ்சமுள்ள ஸ்தலங்களில் இருந்து உழைத்து வருவதாகவும் தெரிவித்துவிட்டு, 'நீரும் போய் இவ்விஷயத்தில் வேலை

செய்யக்கூடாதா?' என்று கேட்டார்.

ஆ! ராமசந்திரன் அரசு செலுத்திய நாடு! வால்மீகி முனிவர் புகழ்ந்து போற்றிய நாடு! அங்கு, ஜனங்கள் துணியும் சோறுமில்லாமல், பதினாயிரக்கணக்காகத் தவிக்கிறார்கள்! அவர்களுக்கு உதவி செய்யப் போவாயா என்று என்னைக் கேட்கவும் வேண்டுமா? அவர்களெல்லோரும் எனக்குத் தெய்வங்களல்லவா? அவர்களுக்கு வேண்டியன செய்ய முடியாவிட்டால், இந்தச் சதையுடம்பை எதன் பொருட்டாகச் சுமக்கிறேன்? லாலாவிடம் அனுமதி பெற்றுக் கொண்டு போய்ச் சிறிது காலம், அந்தக் கடமையைச் செய்து கொண்டு வந்தேன். அங்கு கண்ட காட்சிகளைப் பற்றி எழுத வேண்டுமா? எழுதுகிறேன், கவனி. தேவலோகத்தைப் பற்றிக் கேள்வியுற்றிருக்கிறாயா? சரி, தேவலோகம் நரகலோகமாக மாறியிருந்தால் எப்படித் தோன்றுமோ, அப்படித் தோன்றியது பகவான் ராமச்சந்திரன் ஆண்ட பூமி. நான் அங்கிருந்த கோரங்களையெல்லாம் உங்களிடம் எதற்காக விரித்துச் சொல்ல வேண்டும்? புண்ணிய பூமியைப் பற்றி இழிவுகள் சொல்வதினால் ஒருவேளை சிறிது பாவம் உண்டாகக்கூடும். அந்தப் பாவத்தைத் தவிர வேறென்ன பயன் கிடைக்கப்போகிறது? எழுந்திருந்து வா, பார்ப்போம். எத்தனை நாள் உறங்கி இப்படி அழியப் போகிறீர்களோ? அட பாப ஜாதியே, பாப ஜாதியே! இது நிற்க, ஒரிரண்டு மாதங்களுக்கு அப்பால், லாலா லஜபதிராய் எங்களுக்குக் கடிதம் எழுதி, இனி அந்த வேலை போதும் என்று கட்டளை பிறப்பித்து விட்டார்.

கோசல நாட்டுப் பிரதேசங்களில் பஞ்சத்தின் சம்பந்தமாக நான் வேலைசெய்த சில மாதங்களில், ஏற்கெனவே என் மனதில் நெடுங்காலமாக வேரூன்றியிருந்த ஒரு சிந்தனை பலங்கொண்டு வளரலாயிற்று. தணிந்த வகுப்பினரின் நன்மை தீமைகளிலே நமது நாட்டில் உயர்ந்த வகுப்பினரென்று கூறப்படுவோர் எவ்வளவு தூரம் அசிரத்தையும், அன்னியத் தன்மையும் பாராட்டுகிறார்கள் என்பதை நோக்குமிடத்து எனது உள்ளத்தில் மிகுந்த தளர்ச்சி உண்டாயிற்று. தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும், கடைசி வகுப்பினர் என்பதாக சிலர் கருதப் படுகின்றனர். தென்னாட்டைப் போலவே வடநாட்டிலும், இந்த

வகுப்பினர் பெரும்பாலும் விவசாயத் தொழிலேயே கைக்கொண்டிருக்கிருர்கள். உழவுத் தொழில் உடைய இவர்கள் சாஸ்திரப்படி வைசியர்கள் ஆகவேண்டும். ஆனல், இவர்களிலே பலர் மாட்டிறைச்சி தின்பது முதலிய அனுசாரங்கள் வைத்துக் கொண்டிருப்பதால், ஹிந்துஜாதி இவர்களைத் தாழ்வாகக் கருதுகின்றது. ஹிந்து நாகரிகத்திலே, பசுமாடு மிகப் பிரதானமான வஸ்துக்களிலே ஒன்று. ஹிந்துக்களின் நாகரிகம் விவசாயத் தொழிலைப் பொறுத்து நிற்கின்றது. விவசாயத் தொழிலுக்குப் பசுவே ஜீவன். ஆதலால், ஹிந்துக்கள் புராதனகால முதலாகவே கோ மாம்சத்தை வர்ஜனம் செய்து விட்டார்கள். ஒரு சிறு பகுதி மட்டும் வர்ஜனம் செய்யாதிருப்பது கண்டு ஜாதிப் பொதுமை அப்பகுதியைத் தாழ்வாகக் கருதுகின்றது. இது முற்றிலும் நியாயம். ஆனல், பஞ்சம் நோய் முதலிய பொதுப்பகைவருக்கு முன்பு, நமது உயர்வு தாழ்வுகளை விரித்துக் கொண்டு நிற்பது மடமை. தாழ்ந்த ஜாதியாரை நாம் மிதமிஞ்சித் தாழ்த்தி விட்டோம். அதன் பயன்களை நாம் அனுபவிக்கிருேம். ‘ஹிருதயமறிந்திடச் செய்திடுங் கர்மங்கள் இகழ்ந்து பிரிந்து போமோ?’

‘முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.’ நாம் பள்ளர் பறையருக்குச் செய்ததையெல்லாம், நமக்கு அன்னிய நாடுகளில் பிறர் செய்கிருர்கள். நமது சிருங்ககிரி சங்கராச்சாரியாரும் வானமாமலை ஜீயர்ஸ்வாமிகளும், நெட்டால் திரான்ஸ்வால், தேசங்களுக்குப் போவார்களாஞல், ஊருக்கு வெளியே சேரிகளில் வாசம் செய்ய வேண்டும். ஸாதாரண மனிதர்கள் நடக்கும் ரஸ்தாக்களில் நடக்கக்கூடாது. பிரத்யேகமாக விலகி நடக்க வேண்டும். பல்லக்குகள், வண்டிகள், இவற்றைப் பற்றி யோசனையே வேண்டியதில்லை. சுருக்கம்: நாம் நமக்குள்ளேயே ஒரு பகுதியாரை நீசர்களென்று பாவித்தோம்; இப்போது, நம்மெல்லோரையுமே உலகத்தார் மற்றெல்லா நாட்டினரைக் காட்டிலும் இழிந்த நீசர்களாகக் கருதுகின்ருர்கள். நம்முள் ஒரு வகுப்பினரை நாம் தீண்டாதவகுப்பினர் என்று விலக்கினேம். இப்போது, வேத மார்க்கஸ்தர், மகம்மதியர் என்ற இரு பகுதி கொண்ட நமது ஹிந்துஜாதி முழுவதையுமே உலகம் தீண்டாத

ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புக்கள் உண்டு. ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்பலப்படுத்தி விடுமானால், அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது. 'ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.'

1200 வருஷங்களுக்கு முன்பு, வடநாட்டிலிருந்து மகம்மதியர்கள் பஞ்சாப் நாட்டில் பிரவேசித்தபோது நம்மவர்களின் இமிசை பொறுக்க முடியாமல் வருந்திக் கொண்டிருந்த பள்ளர் பறையர் பேரிகை கொட்டி, மணிகள் அடித்துக் கொண்டுபோய் எதிரிகளுக்கு நல்வரவு கூறி அவர்களுடன் கலந்து கொண்டதாக இதிஹாஸம் சொல்லுகின்றது. அப்போது நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. பஞ்சத்தில் பெரும்பாலும் பள் பறை வகுப்பினரே மடிந்து போகிறார்கள். இதைப் பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமலிருக்கின்றனர். எங்கிருந்தோ வந்த ஆங்கிலேயப் பாதிரிகள் பஞ்சம் பற்றிய ஜனங்களுக்குப் பலவித உதவிகள் செய்து. நூற்றுக்கணக்கான மனிதர்களையும், முக்கியமாக திக்கற்ற குழந்தைகளையும் கிறிஸ்து மதத்திலே சேர்த்துக்கொள்ளுகிறார்கள். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், ஸந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்த மடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம், நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்—ஹிந்து ஸ்தானத்து ஜனங்கள்—ஏனென்று கேட்பாரில்லாமல் பசிப்பிணியால் மாய்ந்து போகின்றனர்.

கோ மாமிசம் உண்ணுதபடி அவர்களைப் பரிசுத்தப் படுத்தி, அவர்களை நமது ஸமூகத்திலே சேர்த்து அவர்களுக்குக் கல்வியும் தர்மமும் தெய்வமும் கொடுத்து நாமே ஆதரிக்க வேண்டும். இல்லாவிட்டால், அவர்களெல்லோரும் நமக்குப் பரிபூரண விரோதிகளாக மாறி விடுவார்கள். இந்த விஷயத்திலே எனது சிறிய சக்திக்கு இயன்றவரை முயற்சிகள் செய்ய வேண்டும் என்ற அவா எனது உள்ளத்தில் வளரலாயிற்று. வங்க நாட்டில் அசுவினி குமார தத்தர் என்ற தேச பக்தர் ஒருவர் இருப்பதாக

வும், அவர் அந்த பிரதேசங்களில் 'நாமசூத்திரர்' (பெயர் மட்டும் சூத்திரர்) என்று கூறப்படும் பள்ளர்களை ஸமூக வரம்பினுள்ளே சேர்த்து உயர்வு படுத்த முயற்சிகள் செய்வதாகவும் கேள்விப் பட்டேன். அவரைப்பார்க்க ஆசை உண்டாயிற்று.

## அத்தியாயம் 4

கல்கத்தாவுக்கு வந்து சில தினங்கள் இருந்துவிட்டு பாரிஸாலுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கு போய், வழி விசாரணை செய்து கொண்டு அசுவினிகுமார தத்தருடைய வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். வீட்டு வாயிலில் ஒரு வங்காளி பாபு நின்று கொண்டிருந்தார். அவரிடம் "அசுவினி பாபு இருக்கிறாரா?" என்று கேட்டேன். "இல்லை, நேற்றுத் தான் புறப்பட்டுக் காசிக்குப் போயிருக்கிறார்" என்றார். "அடடா?" என்று சொல்லி திகைத்து நின்றேன். காஷாய உடையைக் கண்ட அந்த பாபு உபசார மொழிகள் கூறி உள்ளே அழைத்துப் போய், தாகசாந்தி செய்வித்து விட்டு, 'யார்' 'எவ்விடம்' என்பதை யெல்லாம் விசாரணை செய்தார். நான் எனது விருத்தாந்த மெல்லாம் தெரிவித்துவிட்டு, என் மனதிலிருந்த நோக்கத்தையும் சொன்னேன். "பாரும், பாபு, நம்மில் ஆறில் ஒரு பங்கு ஜனங்களை நாம் தீண்டாத ஜாதியாக வைத்திருப்போமானால் நமக்கீசன் நல்ல கதி கொடுப்பாரா?" என்று என் வாயிலிருந்து வாக்கியம் கேட்டவுடனே அவர் முகத்தில் மிகுந்த வருத்தம் புலப்பட்டது. முகத்தைப் பார்த்தால் கண்ணீர் ததும்பிவிடும் போலிருந்தது. தீண்டாத வகுப்பினரின் நிலையைக் கருதித் தான் இவ்வளவு பரிதாப மடைகிறார் போலும் என்று நான் நினைத்து, "ஐயா, உம்முடைய நெஞ்சு போல் இன்னும் நூறு பேருடைய நெஞ்சு இருக்குமானால் நமது நாடு செம்மைப் பட்டுவிடும்" என்றேன்.

"ஸ்வாமி, தாங்கள் நினைக்கிறபடி அத்தனை கருணையுடைய நெஞ்சம் எனக்கு இன்னும் மாதா அருள்புரியவில்லை. ஹீன ஜாதி

யாரைக் காக்கவேண்டும் என்ற விஷயத்தில் எனக்கு கொஞ்சம் சிரத்தையுண்டு என்பது மெய்யே. அசுவின் பாபுவுடன் நானும் மேற்படி வகுப்பினருக்கு நன்மை செய்வதில் சிறிது உழைத்திருக்கிறேன். ஆயினும் என் முகத்தில் தாங்கள் கவனித்த துக்கக்குறி நம்மில் ஆறிலொரு பங்கு ஜனங்கள் இப்படி அவலமாய் விட்டார்களே என்பதைக் கருதி ஏற்பட்டதன்று. தாங்கள் சொன்ன வாக்கியம் சில தினங்களுக்கு முன்பு இங்கு வந்திருந்த ஒரு மந்திராஜியம்மாளின்* வாயிலிருந்து அடிக்கடி வெளிவரக் கேட்டிருக்கிறேன். தாம் அது சொன்னவுடனே எனக்கு அந்த அம்மாளின் நிலை ஞாபகம் வந்தது. அவளுடைய தற்கால ஸ்திதியை நினைந்து வருத்தமுண்டாயிற்று. அடடா! என்ன குணம்! என்ன வடிவம்! இவ்வளவு பாலியத்திலே நமது தேசத்தினிடம் என்ன அபரிமிதமான பக்தி!'' என்று சொல்லி திடுக்கென்று பேச்சை நிறுத்திவிட்டார். அப்பால் என் முகத்தை ஓரிரண்டு தடவை நன்ருக உற்று நோக்கினுர். அவருடைய பெயர் ஸதீச சந்திரபாபு என்பதாக ஏற்கனவே சொல்லியிருக்கிருர்.

'' ஸதீச பாபு, ஏன் இப்படிப் பார்க்கிறீர்? '' என்று கேட்டேன்.

''ஸ்வாமீஜி, க்ஷமித்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஸந்யாஸி. எந்த தேசத்தில் பிறந்தவரென்பதைக்கூட நான் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஆயினும், உங்கள் முகத்தைப் பார்க்கும் பொழுது, அதில் எனக்கு அந்த யுவதியின் உருவம் கலந்திருப்பது போலத் தோன்றுகிறது. உங்களிருவருடைய முகமும் ஒன்று போலிருப்பதாக நான் சொல்லவில்லை. உங்கள் முகத்தில் எப்படியோ அவளுடைய சாயல் ஏறியிருப்பதுபோலத் தோன்றுகிறது'' என்ருர்.

மதராஸ் பக்கத்து யுவதியென்று அவர் சொன்னவுடனேயே என் மனதில் ஏதோ ஒருவிதமான பதைபதைப்பு உண்டாயிற்று. அதன் பின்னிட்டு, அவர் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டவுடன், அந்த பதைபதைப்பு மிகுதியுற்றது. ஸந்யாசி உடை தரித்து இருந்தேன். நெடுநாளாகத் துறவையே ஆதரித்து வந்தி

* ' மந்திராஜியம்மாள் ' என்பது ' மதராஸ் பிரதேசத்து ஸ்திரீ ' என்று பொருள்படும். ' மதராஸ் ' என்பதற்கு வடநாட்டார் மந்த்ராஜ் என்பார்கள்.

ருக்கிறேன். வேஷத்திலென்னடா இருக்கிறது, கோவிந்தா, வேஷத்திலென்ன இருக்கிறது?

"மீனும்பா? - அட, போ! மீனும்பாள் இறந்துபோய் இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறதே? ...... ஐயோ, எனது கண்மணி என்ன கஷ்டத்துடன் இறந்தாள்?......" என்பதாக ஒரு க்ஷணத்திலே மனப்பேய் ஆயிரம் விதமாகக் கூத்தாடிற்று.

"ஸதீச பாபு, நானும் மதராஸ் பக்கத்திலே ஜனித்தவன் தான். நீர் சொல்லிய யுவதியைப் பற்றிக் கேட்கும்போது, எனக்குத் தெரிந்த மற்ருெரு பந்துவைப் பற்றி ஞாபகம் வருகிறது. நீர் சொல்லிய பெண் யார்? அவள் பெயரென்ன? அவள் இப்போது எங்கே இருக்கிருள்? அவள் இங்கே என்ன நோக்கத்துடன் வந்திருந்தாள்? அவளுடைய தற்கால ஸ்திதியைக் குறித்து உமக்கு வருத்தமுண்டாவதேன்? அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? எனக்கு எல்லாவற்றையும் விவர மாகத் தெரிவிக்க வேண்டும்" என்றேன்.

கதையை விவரிக்கத் தொடங்கினுர் ஸதீச சந்திர பாபு. ஒவ்வொரு வாக்கியமும் என் உள்ளத்திலே செந்தீக் கனலுள் இரும்புத் துண்டுகளை எறிவது போல விழுந்தது. அவர் சொல்லிய கதையினிடையே என்னுள்ளத்தில் நிகழ்ந்தனவற்றையெல்லாம் இடையிட்டுக் கொண்டு போனுல் படிப்பவர்களுக்கு விரஸமா யிருக்கும் என்று அஞ்சி, இங்கு அவர் சொல்லிய விஷயங்களை மட்டிலும் குறிப்பிடுகிறேன். என் மனத் ததும்புதல்களை படிப்பவர்கள் தாமே ஊகத்தாற் கண்டு கொள்ளவேண்டும். ஸதீச பாபு சொல்லலாயினர்: "அந்த யுவதிக்குத் 'தாஞ்சோர்.' அவள் பெயர் எனக்குத் தெரியாது. நாங்கள் எல்லோரும் அவளை 'தீன மாதா' என்ற பெயர் சொல்லி அழைப்போம். அவளுடைய உண்மைப் பெயர் அசுவினி பாபுவுக்கு மாத்திரந்தான் தெரியும். ஆனுல், அந்த தேவியின் சரித்திரத்தை எங்களுக்கு அசுவினி பாபு அடிக்கடி சொல்லியிருக்கிருர். அதை உம்மிடம் சொல்லுகிறேன், கேளும்: அவள் ஒரு போலீஸ் பென்ஷன் உத்தியோகஸ்தருடைய குமாரியாம், அவளது அத்தை மகனுகிய ஒரு மந்த்ராஜ் நகரத்து வாலிபனுக்கு அவளை விவாகம் செய்து கொடுக்க வேண்டுமென்று

தீர்மானம் செய்யப்பட்டிருந்ததாம். அவ்வாலிபன் 'வந்தே மாதரம்' கூட்டத்திலே சேர்ந்து விட்டான். அதிலிருந்து, அவள் தகப்பன் அவளை வேறொரு போலீஸ் உத்தியோகஸ்தனுக்கு மணம் புரிவிக்க ஏற்பாடு செய்தான். கடைசித் தருணத்தில், அவள் கனவில் ஏதோ தெய்வத்தின் கட்டளை பெற்று ஒரு பச்சிலையைத் தின்றுவிடவே, அவளுக்கு பயங்கரமான ஜ்வர நோய் கண்டு விவாகம் தடைப்பட்டுப் போய்விட்டது. அப்பால், தகப்பனும் இறந்து போய்விட்டார். இதனிடையே அவளுடைய காதலனாகிய மந்த்ராஜ் வாலிபன், என்ன காரணத்தாலோ, அவள் இறந்து விட்டதாக எண்ணி, ஸந்யாஸம் வாங்கிக் கொண்டு வெளியேறி விட்டானாம்."

"ஏழை மனமே, வெடித்துப் போய் விடாதே. சற்றுப் பொறு" என்று என்னால் கூடிய வரை, அடக்கிப் பார்த்தேன். பொறுக்க முடியவில்லை. "ஐயோ மீனா! மீனா!" என்று கூவினேன். பிறகு "ஸதீச பாபு, அவளுக்கு இப்போது என்ன கஷ்டம் நேரிட்டிருக்கிறது? சொல்லும், சொல்லும்" என்று நெரித்தேன்.

ஸதீச சந்திரருக்கு உளவு ஒருவாறு துலங்கிவிட்டது. "இப்போது ஒன்றுமில்லை. சௌக்கியமாகத்தானிருக்கிறாள்" என்றார்.

"இல்லை இல்லை. என்னிடம் நீர் உண்மை பேசத் தயங்குகிறீர். உண்மை தெரிந்தால் நான் மிகத் துன்பப்படுவேன் என்று எண்ணி நீர் மறைக்கிறீர். இதுவே என்னை நரக வேதனைக்கு உட்படுத்துகிறது. சொல்லிவிடும் சொல்லிவிடும்" என்று வற்புறுத்தினேன்.

மறுபடியும் ஸதீச பாபு ஏதோ பொருளற்ற வார்த்தைகளைப் போட்டுக் குழப்பி எனக்கு ஸமாதான வசனம் சொல்லத் தலைப் பட்டார்.

"பாரத தேவியின் ஹிருதயத்தின் மீதும், பகவத்கீதையின் மீதும் ஆணையிட்டிருக்கிறேன். என்னிடம் உண்மையை ஒளியாமற் சொல்லும்" என்றேன். இந்த ஸத்தியம் நவீன வங்காளத்தின்ரை எவ்வளவு தூரம் கட்டுப்படுத்தும் என்பது எனக்குத் தெரியும். இங்ஙனம் நான் ஆணையிட்டதிலிருந்து,

அவருக்கு கொஞ்சம் கோபம் உண்டாயிற்று.

"போமையா, மூட ஸந்யாஸி, என்ன வார்த்தை சொல்லி விட்டீர்: இதோ, உண்மை தெரிவிக்கிறேன்; கேட்டுக் கொள்ளும். அந்தப் பெண், இங்கு நாமசூத்திரர்களைப் பஞ்சத்திலிருந்து மீட்கப் பாடுபட்டதில், தீராத குளிர் ஜ்வரங் கண்டு வைத்தியர்கள் சமீபத்தில் இறந்துவிடுவாள் என்று சொல்லி விட்டனர். அதற்குமேல், அவள் காசியில் போய் இறக்க விரும்பியது பற்றி, அசுவின் பாபு அவளைக் காசிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். உண்மை சொல்லிவிட்டேன், போம்" என்றார்.

"காசிக்கா?"

"ஆம்."

"காசியில் எங்கே?"

"அஸீ கட்டத்தில்"

"அஸீ கட்டத்தில் எந்த இடம்?"

அஸீக்கு தெற்கே 'நர்வா' என்ற இடமிருக்கிறது. அதில் பல தோட்டங்களும் பங்களாக்களும் உண்டு. அதில் தைப்பூர் மஹாராஜா பங்களாவில் அசுவின் பாபு இறங்கியிருக்கிறார்."

"ரயில் செலவுக்கு பணம் கொடும்" என்றேன் ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து வீசியெறிந்தார். மானத்தைக் கண்டதார், மரியாதையைக் கண்டதார்? அங்கிருந்து அந்த க்ஷணமே வெளியேறிவிட்டேன். வழியெல்லாம் தின்பதற்கு நெஞ்சத்தையும் அருந்துவதற்குக் கண்ணீரையுமே கொண்டவனாய்க் காசிக்குப் போய்ச் சேர்ந்தேன்.

## அத்தியாயம் 5

காசியில் ஹனுமந்த் கட்டத்திலே எனக்குத் தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். எனது நண்பர் ஒருவருடைய பந்துக்கள் அங்கு வாசஞ் செய்கின்றனர். இதைப் படிக்கும் தமிழர்கள் காசிக்குப் போயிருப்பதுண்டானால், நான் சொல்லப்போகிற இடம் அவர்

களுக்குத் தெளிவாகத் தெரியும். தமிழர்களெல்லோரும் பெரும்பாலும் ஹனுமந்த கட்டத்திற்கே போய் இறங்குவதுண்டு. அங்கு கீழ்மேற் சந்து ஒன்றிருக்கிறதல்லவா? அதில் கீழ்மேற்கு மூலையிலிருந்து மூன்ரும் வீடு. அந்த வீட்டிற்கு சிவமடம் என்று பெயர். யாத்திரைக்காரர்கள் போய் இறங்கக்கூடிய வீடுகளைக் காசியிலே மடங்கள் என்கிருர்கள். சிவமடத்தில் போய் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு, மடத்தார் கொடுத்த ஆகாரத்தை உண்ட பிறகு, அப்பொழுதே அந்த மடத்துப் பிள்ளைகளில் ஒருவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு நர்வா கட்டத்திற்கு போனேன். அங்கே, ஜெய்ப்பூர் ராஜா பங்களா எது என்று விசாரித்து, பங்களாவிற்குப் போய்ச் சேரும்போது இரவு ஏழு மணியாகி விட்டது. வாயிலில் ஒரு குதிரைவண்டி வந்து நின்றது. அந்த வண்டி புறப்படுந் தருவாயில் இருந்தது. வண்டியின்மேல் ஆங்கிலேய உடைதரித்த ஒரு வங்காளி உட்கார்ந்து கொண்டிருந்தார். வண்டிப் பக்கத்திலே ஒரு கிழவரும் வேறு சிலரும் நின்று கொண்டிருந்தார்கள். அசுவினி குமாரதத்தரின் படத்தை நான் பல இடங்களில் பார்த்திருக்கிறபடியால், அந்தக் கிழவர்தான் அசுவினி பாபு என்று தெரிந்துகொண்டேன். நான் போனவுடனே, அசுவினி பாபு பக்கத்திலிருந்த மனிதனை நோக்கி, "யாரோ ஒரு ஸந்யாசி வந்திருக்கிருர்." அவரைத் தாழ்வாரத்தில் வரச்சொல். நான் இதோ வருகிறேன் என்ருர்" தாழ்வாரத்தில் போட்டிருந்த இரண்டு நாற்காலிகளில் நானும் என்னுடன் வந்திருந்த வாலிபனும் போய் உட்கார்ந்தோம். அசுவினி பாபுவும் வண்டிக் குள்ளிருந்தவரும் பேசியது என் செவியில் நன்ருக விழுந்தது.

அசுவினி பாபு: "டாக்டர் ஸாஹப்! நேற்றைக் காட்டிலும் இன்று சிறிது குணப்பட்டிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது, தமது கருத்தென்ன?"

டாக்டர்: "மிகவும் துர்ப்பல நிலையிலேதான் இருக்கிருள். இன்னும் இருபத்துநான்கு மணி நேரம் இருப்பது கஷ்டம். அந்த நேரம் தப்பினுல், பிறகு விபத்தில்லை."

காதில் விஷந்தடவிய தீயம்புபோல இந்த வார்த்தை கேட்டது; "மீனு! மீனு!" என்று அலறினேன். வண்டி புறப்பட்டு

விட்டது. அதற்குள், நான் என்னை மீறி அலறிய சத்தம் கேட்டு, அசுவினி பாபுவும் அவரைச் சேர்ந்தவர்களும் நான் இருந்த பாரிசமாக விரைந்து வந்தார்கள். அவர் வருதல் கண்டு நான் மனதை ஒருவாறு தேற்றிக் கொண்டு எழுந்து நின்று வணங்கினேன். அவர், "ஸ்வாமிக்கு எவ்விடம்? இங்கு வந்த கருத்தென்ன? ஏன் சத்தம் போட்டீர்கள்?" என்று ஹிந்துஸ்தான் பாஷையிலே கேட்டார்.

"பாபு, நான் ஸந்யாஸியல்ல. நான் திருடன், நான் மஹா நிர்பாக்கியமுடைய பாவி. மீனம்பாள் தம்மிடம் கோவிந்த ராஜன் என்ற பெயர் சொல்லியிருப்பாளல்லவா? அந்தப் பாவி நான்தான்" என்றேன்.

உடனே அவர் என்னை மேன்மாடத்திலுள்ள ஒரு அறைக்குத் தனியாக அழைத்துச் சென்றார். அங்கு என்னை நோக்கி, "நேற்றெல்லாம் நான் உம்மை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்தேன். நீர் இங்கு வரக்கூடும் என்ற சிந்தனை எனக்கு அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது" என்றார்.

பிறகு என்னிடம் "கிழக்கு முகமாகத் திரும்பி உட்காரும்" என்றார். அப்படியே உட்கார்ந்தேன். "கண்ணை மூடிக்கொள்ளும்" என்றார். இரண்டு கண்களையும் மூடிக்கொண்டேன். பிறகு எனது நெற்றியை கையாலே தடவி ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார். எனக்கு உறக்கம் வருவது போலிருந்தது. 'அடடா! இன்னும் மீனம்பாளைப் பார்க்கவில்லை. எனது உயிரினுமினியாள் மரணவஸ்தையிலிருக்கிறாள். அவளைப் பார்க்கும் முன்பாக உறக்கம் வருகிறதே. இவர் என்னை ஏதோ மாயமந்திரத்துக்கு உட்படுத்துகிறார். எனது பிராணரத்தினத்தைப் பார்க்காதபடி கெடுத்துவிட முயலுகிறார். இந்த மாயைக்கு உட்படலாகாது. கண் விழித்து எழுந்து நின்றுவிட வேண்டும்' என்று சங்கற்பம் செய்துகொண்டு, எழுந்து நிற்க முயன்றேன். "ஹூம்" என்றொரு சத்தம் கேட்டது! விழித்து விழித்துப் பார்க்கிறேன்; கண்ணைத் திறக்க முடியவில்லை. மயக்கம் மேன்மேலும் அதிகப்பட்டது. அப்படியே உறங்கி விழுந்துவிட்டேன்.

விழித்த பிறகு, நான் இரண்டு நாள் உறங்கிக் கிடந்ததாகத்

தெரிந்தது ; பக்கத்திலிருந்த ஒரு சேவகன் சொன்னான். "மீனு எங்கே? மீனு சௌக்கியமாயிருக்கிறாளா?" என்று அந்த சேவகனிடம் கேட்டேன். "எனக்கு ஒன்றுமே தெரியாது" என்று மறுமொழி கூறினான். சாதாரணமாக எப்போதும் போல இருந்தேனாயின், அந்த சேவகனை உதைத்துத் தள்ளி, இடையே வந்தவர்களை யெல்லாம் வீழ்த்தி விட்டு, மீனுளிருக்குமிடம் ஓடிப் போய்ப் பார்த்திருப்பேன். ஆனால், இந்த நேரம் என்னுடலில் மிகுந்த அயர்வும், உள்ளத்தில் மிகுந்த தெளிவும், அமைதியும் ஏற்பட்டிருந்தன. மனதிலிருந்த ஜ்வரமும் நீங்கிப் போயிருந்தது. 'பாரிஸால் கிழவன்' செய்த சூது என்று தெரிந்துகொண்டேன். அரை நாழிகைக்கெல்லாம், அசுவினி பாபு, தாமே நானிருந்த அறைக்குள் வந்து, என் எதிரே ஒரு நாற்காலியின் மீது வீற்றிருந்தார். என்னை அறியாமல் எனது இரண்டு கைகளும் அவருக்கு அஞ்சலி புரிந்தன.

"ஓம்" என்று கூறி ஆசீர்வாதம் செய்தார். "பால ஸந்யாஸி, கபட ஸந்யாஸி, அர்ஜுன ஸந்யாசி, உன் பக்கம் சீட்டு விழுந்தது" என்றார். மீனு பிழைத்து விட்டாள் என்று தெரிந்து கொண்டேன்.

"முற்றிலும் சௌக்கியமாய் விட்டதா?" என்று கேட்டேன்.

"பூரணமாக சௌக்கியமாய் விட்டது. இன்னும் ஓரைம்பது வருஷத்திற்கு சமுத்திரத்திலே தள்ளினாலும் அவளுக்கு எவ்வித மான தீங்கும் வரமாட்டாது" என்றார்.

"அப்படியானால் நான் போகிறேன், அவள் இறந்து போகப் போகிறாள் என்ற எண்ணத்தினாலேதான் என் விரதத்தைக் கூட மறந்து,அவளை பார்ப்பதற்காகப் பறந்தோடி வந்தேன். இனி, அவளைப் பார்த்து அவளுடனிருக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. நான் போய் வருகிறேன்" என்று சொன்னேன்.

அசுவினி பாபு கடகடவென்று சிரித்துவிட்டு, பக்கத்திலிருந்த சேவகனை நோக்கி, "இவருக்குக் கொஞ்சம் பால் கொணர்ந்து கொடு" என்று ஏவினார். அவன் முகம் கழுவ நீரும் அருந்துவதற்கு பாலும் கொணர்ந்து கொடுத்தான். அசுவினி குமாரர் அந்தப் பாலை விரலால் தீண்டி என்னிடம் கொடுத்தார். அந்தப் பாலை உட்கொண்டவுடனே, திருக்குற்றாலத்து அருவியில் ஸ்நானம் செய்து முடிந்ததுபோல், எனது உடலிருந்த அயர்வெல்

லாம் நீங்கிப்போய் மிகுந்த தெளிவும் சௌக்கியமும் அமைந்திருக்கக் கண்டேன்.

"இப்பொழுது என்ன சொல்லுகிறாய்? புறப்பட்டுப் போகிறாயா" என்று அசுவினி பாபு புன்னகையுடன் கேட்டார்.

"அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, அவளிடம் விடை பெற்றுக் கொண்டு செல்லுகிறேன்" என்றேன்.

திடீரென்று அசுவினி பாபுவின் முகத்தில் இருந்த புன்னகை மாறி சிரத்தா ரூபம் தோன்றியது. அப்பால் என்னிடம், "மகனே, நீ மீனாம்பாளை மணஞ் செய்து கொள்வாய். நீங்களிருவரும் சேர்ந்து வாழ்ந்து, முற்காலத்தில் ரிஷியும் ரிஷிபத்தினியுமாக வேத யக்ஞம் செய்ததுபோல, உங்கள் வாழ்நாள் முழுதும் மாதாவின் ப்ரீத்யர்த்தமாக ஜீவயக்ஞம் புரியக்கடவீர்கள்" என்றார்.

"காளி தேவியின் கட்டளை என்னாகிறது?"; என்று கேட்டேன். இந்த ஜன்மத்தில் 'நீ கோவிந்தராஜனை மணஞ் செய்து கொள்ளலாகாது' என்று காளிதேவி மீனாளுக்குக் கூறி, அவளை விஷம் தின்னும்படியாகக் கட்டளையிட்ட செய்தியை அவருக்கு நினைப்புறுத்தினேன்.

அதற்கு அவர், 'அந்தச் செய்தியை யெல்லாம் நான் அறிவேன். மஹாசக்தியின் கட்டளையை மீனாம்பாள் நன்கு தெரிந்து கொள்ளாமல் உனக்குக் கடிதம் எழுதிவிட்டாள். மீனாம்பாளுடைய ஜன்மம் மாறுபட வேண்டுமென்று அம்மை சொல்லியதன் பொருள் வேறு. அவள் பச்சிலை தின்னும்படி கட்டளையிட்டது மீனாம்பாளுக்கு ஜ்வரமுண்டாகி தந்தை எண்ணிய விவாகம் தடைப்படும் பொருட்டாகவே. அதற்கு முன்பு அவளுடைய ஜன்மம் வேறு; அதற்கப்பால் அவளுடைய ஜன்மம் வேறு. மாதா தெளிவாகத்தான் சொல்லினள். ஆனால், மீனாம்பாள் தனக்கு வேண்டாத ஒருவனுடன் விவாகம் நடக்கப் போகிறது என்ற தாபத்தால் படபடப்புண்டாகி, உனக்கு ஏதெல்லாமோ எழுதிவிட்டாள். நீயும் அவசரப்பட்டு, காஷாயம் தரித்துக் கொண்டு விட்டாய். உனக்கு ஸந்யாசம் குருவினால் கொடுக்கப் படவில்லை. ஆயினும் இது வெல்லாம் உங்களிருவருடைய நலத்தின் பொருட்டாகவே ஏற்பட்டது. உங்களிருவருக்கும், பரிபூரணமான ஹிருதய சுத்தி உண்டாவதற்கு இப்பிரிவு

அவசியமாயிருந்தது. இப்பொழுது நான் போகிறேன். இன்று மாலை நான்கு மணிக்கு, பூஞ்சோலையிலுள்ள லதா மண்டபத்தில் மீனும்பாள் இருப்பாள். உன் வரவிற்குக் காத்திருப்பாள்." என்று சொல்லிப் போய்விட்டார்.

மாலைப் பொழுதாயிற்று. நான் ஸந்யாசி வேஷத்தை மாற்றி. எனது தகுதிக்கு உரிய ஆடை தரித்துக் கொண்டிருந்தேன், பூஞ்சோலையிலே லதா மண்டபத்தில் தனியாக நானும் எனது உயிர் ஸ்திரீ ரூபங்கொண்டு பக்கத்தில் வந்து வீற்றிருப்பது போலத் தோன்றியவளுமாக இருந்தோம். நான்கு இதழ்கள் கூடின. இரண்டு ஜீவன்கள் மாதாவின் ஸேவைக்காக லயப்பட்டன. பிரகிருதி வடிவமாகத் தோன்றிய மாதாவின் முகத்திலே புன்னகை காணப்பட்டது.

வந்தே மாதரம்

# 2. சும்மா

## 1

நேற்று சாயங்காலம் நான் தனியாக மூன்றாவது மெத்தையில் ஏறி உட்கார்ந்தேன். நான் இருக்கும் வீட்டில் இரண்டாவது மெத்தையிலிருந்து மூன்றாம் மெத்தைக்கு ஏணி கிடையாது. குடக்கூலி வீடு. அந்த வீட்டுச் செட்டியாரிடம் படி (ஏணி) கட்டும்படி எத்தனையோ தரம் சொன்னேன். அவர் இன்றைக் காகட்டும், நாளைக்காகட்டும் என்று நாளைக் கடத்திக்கொண்டு வருகிறார். ஆதலால் மூன்றாம் மெத்தைக்கு ஏறிப்போவது மிகவும் சிரமம். சிறிய கைச்சுவர் மேல் ஏறிக்கொண்டு அங்கிருந்து ஓர் ஆள் உயரம் உந்தவேண்டும். மூன்றாங் கட்டின் சுவரோரத்தைக் கையால் பிடித்துக்கொண்டு கைச்சுவர் மேலிருந்து உந்தும்போது கொஞ்சம் கை வழுக்கி விட்டால் ஒன்றரை ஆள் உயரம் கீழே விழுந்து மேலே காயம்படும். நான் தனிமையை விரும்புவோன். ஆதலால், சிரமப்பட்டேறி அடிக்கடி மூன்றாங் கட்டிலே போய் உட்கார்ந்திருப்பது வழக்கம். இந்த மார்கழி மாதத்தில் குளிர் அதிகமானபடியால் வெயில் காய்வதற்கும் அது ஹிதமாம். இங்ஙனம் நேற்று மாலை நான் வெயில் காய்ந்து கொண்டிருக்கை யிலே குள்ளச் சாமியாரும் வேணு முதலியும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இரண்டாங்கட்டு வெளி முற்றத்தில் வந்து நின்று கொண்டு என்னைக் கைதட்டிக் கூப்பிட்டார்கள். நான் இறங்கி வரும் பொருட்டாக வேஷ்டியை இடுப்பில் வரிந்து கட்டினேன். அதற்குள் குள்ளச் சாமியார் என்னை நோக்கி "நீ அங்கேயே இரு, நாங்கள் வருகிறோம்" என்று சொன்னார்.

இந்தக் குள்ளச் சாமியாரைப் பற்றி முன்னொரு முறை எழுதி யிருப்பது ஞாபகமிருக்கலாம். இவர் கலியுக ஜடபரதர், மஹா ஞானி, ஸர்வஜீவ தயாபரன். ராஜயோகத்தால் மூச்சைக்கட்டி ஞஆகிற மஹான். இவர் பார்ப்பதற்கு பிச்சைக்காரன் போல

கந்தையை உடுத்திக்கொண்டு தெருக்களில் உலாவுவார். இவருடைய மஹிமை ஸ்திரீகளுக்கும் குழந்தைகளுக்கும் மாத்திரம் எப்படியோ தெரிந்திருக்கிறது. தெருவில் இவர் நடந்து செல்லுகையில் ஸ்திரீகள் பார்த்து இவரைக் கையெடுத்துக் கும்பிடுவார்கள். குழந்தைகளெல்லாம் இவரைக் கண்டவுடன் தாயை நோக்கி ஓடுவதுபோல் ஓடி இவருடைய முழங்காலை மோர்ந்து பார்க்கும். இவர் பேதைச் சிரிப்புச் சிரித்துக் குழந்தைகளை உச்சி மோர்ந்து பார்ப்பார். ஆனால் ஸாமானிய ஜனங்களுக்கு அவருடைய உண்மையான மஹிமை தெரியமாட்டாது. கண் மூடித் திறக்கு முன்னதாகவே கைச்சுவர் மேல் ஒரு பாய்ச்சல் பாய்ந்து அங்கிருந்து மேல் மெத்தைக்கு இரண்டாம் பாய்ச்சலில் வந்துவிட்டார். இவரைப் பார்த்து இவர் போலே தானும் செய்ய வேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய் வேணு முதலி ஜாக்கிரதையாக ஏறாமல் தானும் பாய்ந்தான். கைபிடிச் சுவர் மேல் சரியாகப் பாய்ந்து விட்டான். அங்கிருந்து மேல் மெத்தைக்குப் பாய்கையில் எப்படியோ இடறித் தொப்பென்று கீழே விழுந்தான். இடுப்பிலேயும் முழங்காலிலேயும் பலமான அடி. ஊமைக் காயம். என் போன்றவர்களுக்கு அப்படி அடிபட்டால் எட்டு நாள் எழுந்திருக்க முடியாது. ஆனால் வேணு முதலி நல்ல தடியன். "கொட்டாப்புளி ஆஸாமி." ஆதலால் சில நிமிஷங்களுக்குள்ளே ஒருவாறு நோவைப் பொறுத்துக் கொண்டு மறுபடி ஏறத் தொடங்கினான்.

குள்ளச் சாமியார் அப்போது என்னை நோக்கி: நாமும் கீழே இறங்கிப் போகலாம் என்று சொன்னார். சரியென்று நாங்கள் வேணு முதலியை ஏற வேண்டாமென்று தடுத்து விட்டுக் கீழே இறங்கி வந்தோம். இரண்டாங் கட்டு வெளி முற்றத்திலேயே மூன்று நாற்காலிகள் கொண்டு போட்டு உட்கார்ந்து கொண்டோம்.

அப்போது வேணு முதலி என்னை நோக்கி "அங்கே தனியாக ஹனுமாரைப் போலப் போய்த் தொத்திக் கொண்டு என்ன செய்தீர் ?" என்று கேட்டான்.

"சும்மா தான் இருந்தேன்" என்றேன்.

வந்து விட்டதையா வேணு முதலிக்குப் பெரிய கோபம். பெரிய கூச்சல் தொடங்கி விட்டான்.

"சும்மா, சும்மா, சும்மா, சும்மா இருந்து சும்மா இருந்துதான் ஹிந்து தேசம் பாழாய்க் குட்டி சுவராய்ப் போய் விட்டதே? இன்னம் என்ன சும்மா? எவனைப் பார்த்தாலும் இந்த நாட்டில் சும்மாதான் இருக்கிறான். லக்ஷ லக்ஷ லக்ஷமாகப் பரதேசி, பண்டாரம், ஸந்யாஸி, சாமியார் என்று கூட்டம் கூட்டமாகச் சோம்பேறிப் பயல்கள். கஞ்சா அடிக்கிறதும், பிச்சை வாங்கித் தின்கிறதும், சும்மா உலாவுகிறதும் தான் அந்தப் பயல்களுக்கு வேலை. இரண்டு வேளை ஆஹாரம் ஒருவனுக்கு இருந்தால், அவன் தொழில் செய்யும் வழக்கம் இந்த தேசத்திலே கிடையாது. ஜமீந்தார், மிட்டாதார், பண்ணையார், மிராசுதார், இனும்தார், ஜாகீர்தாரி, மடாதிபதிகள், ராஜாக்கள் எல்லாருக்கும் சும்மா இருப்பதுதான் வேலை. சோம்பேறிப் பயல்களுடைய தேசம்" என்று பலவிதமாக வேணு முதலி ஜமாய்க்கிற சமயத்தில் குள்ளச்சாமி மேற்கு முகமாக ஸூரியனை நோக்கித் திரும்பிக் கொண்டு: "சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணம் என்றெம்மால் அறிதற்கெளிதோ பராபரமே" என்ற தாயுமானவர் கண்ணியைப் பாடினார். வேணு முதலி அவரை நோக்கி: "சாமியாரே, நீர் ஏதோ ராஜயோகி என்று காளிதாஸர் சொல்லக் கேள்விப் பட்டேன். உம்முடன் நான் பேசவில்லை, காளிதாஸரிடம் நான் சொல்லுகிறேன். நீர் ஸந்யாஸி யென்று சொல்லி ஜன்மத்தையே மரத்தின் ஜன்மம் போலே யாதொரு பயனுமில்லாமல் வீணாகச் செலவிடும் கூட்டத்தைச் சேர்ந்தவர். மரமாவது பிறருக்குப் பழங்கள் கொடுக்கும், இலை கொடுக்கும், விறகு கொடுக்கும். உங்களை மரத்துக் கொப்பாகச் சொல்லியது பிழை. உங்களாலே பிறருக்கு நஷ்டம்; மரத்தால் பிறருக்கு எத்தனையோ லாபம்" என்றான். இங்ஙனம் வேணு முதலி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, குள்ளச் சாமியார்:

"சும்மா இருக்கச் சுகம் சுகமென்று சுருதியெல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவுங் கேட்டு அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியையுந் தப்பி என் பேதமையால்
வெம்மாயக் காட்டில் அலைந்தேன் அந்தோ என் விதி
(வசமே!"

என்று தாயுமானவருடைய பாடலொன்றைச் சொன்னார்.

வேணு முதலிக்குக் கீழே விழுந்த நோவு பொறுக்க முடியவில்லை. அந்தக் கோபம் மனதில் பொங்குகிறது. அத்துடன் சாமியார் சிரித்துச் சிரித்துப் பாட்டுச் சொல்வதைக் கேட்டு அதிகக் கோபம் பொங்கிவிட்டது. வேணு முதலி சொல்லுகிறான் :— "ஓய் சாமியாரே, நீர் பழைய காலத்து மனுஷ்யன், உம்முடன் நான் தர்க்கம் செய்ய விரும்பவில்லை. என்னுடைய ஸாமர்த்தியம் உமக்குத் தெரியாது. நான் பன்னிரண்டு பாஷைகளிலே தேர்ச்சியுடையவன். உமக்குத் தமிழ் மாத்திரம் தெரியும். நான் இந்த யுத்தம் முடிந்தவுடன் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் போய் அங்கெல்லாம் இந்து மதத்தை ஸ்தாபனம் செய்யப் போகிறேன். நீர் தெருவிலே பிச்சை வாங்கித் தின்று திண்ணை தூங்குகிற பேர்வழி. உமக்கும் எனக்கும் பேச்சில்லை. தேசத்துக்காகப் பாடுபடுவதாக 'ஹம்பக்' பண்ணிக் கொண்டிருக்கிற காளிதாஸர் —இந்த விதமான சோம்பேறிச் சாமியார்களுடன் கூடிப்பொழுது கழிப்பது எனக்கு மிகுந்த ஆச்சர்யத்தை விளைவிக்கிறது. உங்களிடமிருந்து தான் அவர் இந்த சும்மா இருக்கும் தொழில் கற்றுக் கொண்டார் போலும்!" என்று வேணு முதலி இலக்கணப் பிரயோகங்களுடன் பேசத் தொடங்கினான்.

மறுபடி சாமியார் :—

"சும்மா இருக்கச் சுகம் உதய மாகுமே
இம்மாயா யோகம் இனி ஏனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ சொல்ல வேண்டாம் கர்ம
நிஷ்டா சிறு பிள்ளாய் நீ."

என்ற தாயுமானவருடைய வெண்பாவைப் பாடினார்.

அப்போது வேணு முதலி என்னை நோக்கி "ஏனையா! காளிதாஸரே, இந்தச் சாமியார் உமக்கு எத்தனை நாட் பழக்கம்?" என்று கேட்டான்.

நான் ஜவாப் சொல்லாமல் "சும்மா" இருந்து விட்டேன். அப்பொழுது குள்ளச் சாமியார் சொல்லத் தொடங்கினார் :

அத்துடன் இந்தக் கதையே வெகு நீளம். அது சுருக்கிச் சொன்னாலும் இரண்டு பாகங்களுக்குள்ளே தான் சொல்ல முடியும். நாலைந்து பாகம் ஆனாலும் ஆகக்கூடும்.

அவ்வளவு நீண்ட கதையை இத்தனை காயிதப் பஞ்சமான காலத்தில் ஏன் சொல்லப் புறப்பட்டீர் என்றாலோ அது போகப் போக ஆச்சர்யமான கதை. அற்புதமான கதை! இதைப் போலே கதை நான் இதுவரை எழுதினது கிடையாது. நான் வேறு புத்தகங்களிலே படித்ததும் கிடையாது. நீங்கள் கேட்டால் ஆச்சர்யப்படுவீர்கள். எழுந்துகூகூகூ என்று கூவி ஆடிப் பாடிக் குதிக்கத் தொடங்குவீர்கள். நான் கேட்கத் தகாத அற்புதத்தைக் கேட்டேன். காணத்தகாத அற்புதத்தைக் கண்டேன். ஆதலால் உலகத்திலே இதற்கு முன் எழுதப்பட்ட கதைகள் எல்லாவற்றிலும் அற்புதத்திலும் அற்புதமான கதையை உங்களுக்குச் சொல்லப் புறப்பட்டேன். ஆனால் இந்த வியாஸம் நீண்டு போய் விட்டது; அடுத்த பாகத்தில் தானே சொல்ல முடியும். நான் வாக்குத் தவறமாட்டேன். இரண்டாம் பாகம் சீக்கிரம் உங்களுக்குச் சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையுடன் இருங்கள்.

## 2

அப்போது குள்ளச் சாமியார் சொல்லுகிறார்:—"கேள் தம்பி, நான் சும்மா இருக்கும் கக்ஷியைச் சேர்ந்தவன். நீ சொல்லியபடி ஸந்யாஸிகள் சும்மா இருந்ததினால் இந்தத் தேசம் கெட்டுப் போகவில்லை. அதர்மம் செய்ததினால் நாடு சீர் கெட்டது, ஸந்யாஸிகள் மாத்திரம் அதர்மம் செய்யவில்லை. இல்லறத்தார் அதர்மம் தொடங்கியது துறவறத்தாரையும் சூழ்ந்தது. உண்மையான யோகிகள் இன்னும் இந்த தேசத்தில் இருக்கிறார்கள். அவர்களாலே தான் இந்த தேசம் ஸர்வ நாசமடைந்து போகாமல் இன்னும் தப்பிப் பிழைத்திருக்கிறது. இப்போது பூமண்டலம் குலுங்கிப் பல ராஜ்யங்களும் சரிந்து கொண்டிருக்கையிலே ஹிந்து தேசம் ஊர்த்வ முகமாக மேன்மை நிலையை நோக்கிச் செல்லுகிறது. தானும் பிழைத்தது. உலகத்தையும் உஜ்ஜீவிக்கும்படி செய்யலாம் என்ற தைரியம் ஹிந்து தேசத்தின் மனதில் உண்டாயிருக்கிறது. இதற்கு

முன் இப்படி எத்தனையோ ப்ரளயங்களில் இருந்து தப்பிற்று. சில தினங்களுக்கு முன்பு ஜகதீச சந்திரவஸு கல்கத்தாவில் தம்முடைய நவீன சாஸ்த்ராலயத்தை பிரதிஷ்டை செய்யும்போது என்ன சொன்னார்—. வாசித்துப் பார்த்தாயா? "பாபிலோனிலும், நீல நதிக்கரையிலும் இருந்த நாகரீகங்கள் செத்து மறு ஜன்ம மடைந்து விட்டன. ஹிந்துஸ்தானம் அன்று போலவே இன்னும் உயிரோடிருக்கிறது. ஏனென்றால் எல்லா தர்மங்களிலும் பெரிய தர்மமாகிய ஆத்ம பரித்யாகம் இந்த தேசத்தில் சாகாதபடி இன்னும் சிலரால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது" என்று ஜகதீச சந்திர வஸு சொன்னார்.

இங்ஙனம் குள்ளச் சாமியார் சொல்லி வருகையில் வேணு முதலி "சாமியாரே! உமக்கு இங்கிலீஷ் தெரியுமா? நீர் பத்திரிகை வேறே வாசிக்கிறீரா? ஜகதீச சந்திர வஸு பேசிய விஷயம் உமக்கெப்படித் தெரிந்தது?" என்று கேட்டான். அப்போது குள்ளச் சாமியார் சொல்லுகிறார்: "அநாவசியக் கேள்விகள் கேட்காதே. நான் சொல்வதைக் கவனி: ஹிந்து தேசத்தினுடைய ஜீவனை யுக யுகாந்தரங்களாக அழியாதபடி பாதுகாத்து வருவோர் அந்த யோகிகளே. கடூரமான கலியில் உலகம் தலை கீழாகக் கவிழ்ந்து போகும் சமயத்தில் கூட ஹிந்துஸ்தானம் அழியாமல் தானும் பிழைத்து மற்றவர்களையும் காக்கக் கூடிய ஜீவ சக்தி இந்நாட்டிற்கு இருப்பது அந்த யோகிகளின் தபோ பலத்தாலன்றி வேறில்லை. ஹா, ஹா, ஹா, ஹா! பல விதமான லேஹ்யங்களைத் தின்று தலைக்கு நூறு நூற்றைம்பது பெண்டாட்டிகளை வைத்துக் கொண்டு தடுமாறி, நாள் தவறாமல் ஒருவருக்கொருவர் நாய்களைப் போல அடித்துக் கொண்டு ஹிமய மலைக்கு வட புறத்திலிருந்து அன்னியர் வந்தவுடனே எல்லாரும் ஈரச் சுவர் போல இடிந்து விழுந்து ராஜ்யத்தை அன்னியர் வசமாகத் தந்த உங்கள் ராஜாக்களுடைய வலிமையினால் உங்கள் தேசம் பிழைத்திருக்கிறதென்று நினைக்கிறாயா? போது விடிந்தால் எவன் செத்துப் போவான், ஸபண்டீகரணம், பிராமணார்த்த போஜனங்கள் பண்ணலாம் என்று சுற்றிக் கொண்டு, வேத மந்திரங்களைப் பொருள் தெரியாமல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த உங்கள் பிராமணமார்களால் இந்த தேசம் சாகாத

வரம் பெற்று வாழ்கிறதென்று நினைக்கிறாயா? உங்கள் வைசியருடைய லோபத் தன்மையால் இந்த நாடு அமரத் தன்மை கொண்டதா? சூத்திரருடைய மௌட்யத்தாலா? பஞ்சமருடைய நிலைமையாலா? எதால் ஹிந்துஸ்தானத்துக்கு அமரத் தன்மை கிடைத்ததென்று நீ நினைக்கிறாய்?

"அடா, வேணு முதலி, கவனி, நீ யுத்தம் முடிந்த பிறகு அமெரிக்காவுக்கும், ஐரோப்பாவுக்கும் போய் ஹிந்து தர்மத்தை நிலை நாட்டப் போவதாகச் சொல்லுகிறாய். ஹிந்துஸ்தானத்து மஹா யோகிகளின் மஹிமை தெரியாமல் ஹிந்து மதத்தை எப்படி நிலை நிறுத்தப் போகிறாய்,—அதை நினைக்கும் போதே எனக்கு நகைப்புண்டாகிறது.

"அடா, வேணு முதலி, கேள். ஹிந்துஸ்தானத்து மஹா யோகிகளின் மஹிமையால் இந்த தேசம் இன்னும் பிழைத்திருக்கிறது. இனி இந்த மண்ணுலகம் உள்ள வரை பிழைத்திருக்கவும் செய்யும். அடா வேணுமுதலி, பார்! பார்! பார்!"

இங்ஙனம் குள்ளச்சாமி சொன்னவுடன் நானும் வேணு முதலியும் அவரை உற்றுப் பார்த்தோம்.

குள்ளச்சாமி நெடியசாமி ஆய்விட்டார்.

நாலே முக்கால் அடிபோல் தோன்றிய குள்ளச்சாமி ஏழே முக்கால் அடி உயரம் வளர்ந்து விட்டார்.

ஒரு கண்ணைப் பார்த்தால் சூரியனைப்போல் இருந்தது. மற்றொரு கண்ணைப் பார்த்தால் சந்திரனைப்போல் இருந்தது. முகத்தின் வலப்புறம் பார்த்தால் சிவன்போல் இருந்தது. இடப்புறம் பார்த்தால் பார்வதியைப் போல் இருந்தது. குனிந்தால் பிள்ளையார் போலிருந்தது. நிமிர்ந்து பார்க்கும்போது விஷ்ணுவின் முகத்தைப்போலவே தோன்றிற்று. அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார்:-

"அடா, வேணு முதலி, கேள். நான் ஹிந்துஸ்தானத்து யோகிகளுக்கெல்லாம் தலைவன். நான் ரிஷிகளுக்குள்ளே முதலாவது ரிஷி. நான் தேவர்களுக்கெல்லாம் அதிபதி. நானே பிரம்மா, நானே விஷ்ணு, நானே சிவன். நான் ஹிந்துஸ்தானத்தை அழியாமல் காப்பாற்றுவேன், நான் இந்த பூமண்டலத்தில் தர்மத்தை நிலைநிறுத்துவேன்.

"நான் கிருதயுகத்தை ஸ்தாபனம் செய்வேன். நானே பரம புருஷன். இதற்கு முன் ஆசார்யர்கள் உங்களிடம் என்ன சொன்னார்கள்? எல்லா உயிரும் ஒன்று. ஆதலால் காக்கை, புழு முதலிய ஜந்துக்களிடம் குரூரமில்லாமல் கருணை பாராட்டுங்கள் என்றனர்.

"அடா, வேணு முதலி, கவனி.

"சைவாசார்யர் வைஷ்ணவத்தை விலக்கினர். வைஷ்ணவா சார்யர் சைவத்தை விலக்கினர்.

"நான் ஒன்று செய்வேன்.

"காக்கையைக் கண்டால் இரக்கப்படாதே, கும்பிடு. கைகூப்பி நமஸ்காரம் பண்ணு! பூச்சியைக் கும்பிடு! மண்ணையும் காற்றை யும் விழுந்து கும்பிடு! என்று நான் சொல்லுகிறேன்.

"நான் வேதத்தில் முன் சொன்ன வாக்கை இப்போது அனு பவத்திலே செய்து காட்டப் போகிறேன். புராணங்களை யெல்லாம் விழுங்கி ஒன்றாக நாட்டப் போகிறேன். ஹிந்து தர்மத்தைக் கூட்டப் போகிறேன். அடா, வேணு முதலி கேள், மண்ணும் காற்றும், ஸூரியனும், சந்திரனும், உன்னையும் என்னை யும் சூழ்ந்து நிற்கும் உயிர்களும், நீயும் நானும் தெய்வமென்று வேதம் சொல்லிற்று. இவைதான் தெய்வம். இதைத் தவிர வேறு தெய்வமில்லை. நம்முன்னே காண்பது நாராயணன். இதை நம்முள்ளே நாட்டி இதை வணங்கி இதன் தொழுகைக் களியில் மூழ்கி, அங்கு மானுடன் தன்னை முழுதும் மறந்து விடுக.

"அப்போது தன்னிடத்து நாராயணன் நிற்பான். இந்த வழியை நான் தழுவியபடியால் மனுஷ்யத் தன்மை நீங்கி அமரத் தன்மை பெற்றேன். ஆதலால் நான் தேவனாய்விட்டேன். இவைதான் தெய்வம், இதைத் தவிர வேறு தெய்வமில்லை. தேவர்களுக்குள்ளே நான் அதிபதி, என் பெயர் விஷ்ணு; நானே சிவன் மகன் குமாரன், நானே கணபதி, நான் அல்லா, யேஹோவான், நானே பரிசுத்த ஆவி, நானே யேசுகிருஸ்து, நானே கந்தர்வன், நானே அஸுரன், நான் புருஷோத்தமன், நானே ஸமஸ்த ஜீவராசிகளும்.

"நானே பஞ்ச பூதம்! அஹம் ஸத்! நான் கிருத யுகத்தை ஆக்ஞாபிக்கிறேன்! ஆதலால் கிருதயுகம் வருகிறது. எந்த

ஜந்துவும், வேறு எந்த ஜந்துவையும் ஹிம்சை பண்ணமலும் எல்லா ஜந்துக்களும் மற்றெல்லா ஜந்துக்களையும் தேவதா ரூபமாகக் கண்டு வணங்கும்படிக்கும் விதியுண்டானல் அதுதான் கிருதயுகம். அதை நான் செய்வேன். அடா வேணு முதலி! நான் உன் முன்னே நிற்கிறேன், என்னை அறி'' என்று குள்ளச் சாமி சொன்னர். நான் அத்தனைக்குள்ளே மூர்ச்சை போட்டு விழுந்து விட்டேன்.

சுமார் அரைமணி நேரத்துக்குப் பின்பு எனக்கு மறுபடி பிரக்கினை ஏற்பட்டது. அப்போது பார்க்கிறேன். வேணு முதலி என் பக்கத்தில் மூர்ச்சை போட்டுக் கிடக்கிருன். பிறகு அவனுக்குச் சிகிச்சை செய்து நான் எழுப்பினேன்.

குள்ளச் சாமியார் எங்கே யென்று வேணு முதலி என் பத்தினியிடம் கேட்டான்.

அவள் சொன்னுள் :—'' குள்ளச்சாமி இப்படித்தான் கீழே இறங்கிவந்தார். கொஞ்சம் பாயசமும் ஒரு வாழைப்பழமும் கொடுத்தேன். வாங்கித் தின்ருர். குழந்தைகளுக்கும் எனக்கும் விபூதி பூசி வாழ்த்தி விட்டுப் போனர். 'நீங்கள் மெத்தையிலே என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு 'இரட்டை பாஷையென்ருல் அர்த்தமென்ன? என்பதைப்பற்றி' அந்த வேணு முதலி மடையன், தர்க்கம் பண்ணுகிருன்' என்று சொல்லிச் சிரித்து விட்டுப் போனர்'' என்று சொன்னுள்.

# 3. இருள்

வித்யா நகரம் என்ற பட்டணத்தில், எண்ணூறு வருஷத்துக்கு முன், திடசித்தன் என்று ஒரு ராஜா இருந்தான். அவனுடைய பந்துக்களிலே சிலர் விரோதத்தினால் அவனுக்குப் பல தீங்குகள் செய்யலாயினர். ஒரு நாள் அவன் நித்திரை செய்யும்போது எதிரிகள், அரண்மனை வேலைக்காரரிலே சிலரை வசமாக்கி உள்ளே நுழைந்து அவன் கால்களைக் கட்டி எடுத்துக் கொண்டு போய், சமீபத்திலிருந்த மலைச்சாரலில் ஒரு குகைக்குள்ளே போட்டு வெளியே வர முடியாதபடி ஒரு பாறையால் மூடி வைத்து விட்டார்கள். இவ்வளவுக்குமிடையே அவன் கண் விழிக்காதபடி மூக்கிலே ஒரு மயக்கப் பச்சிலையின் சாற்றைப் பிழிந்து விட்டார்கள்.

நெடுநேரம் கழிந்த பிறகு, பச்சிலையின் மயக்கம் தெளியவே அரசன் கண்ணை விழித்துப் பார்க்கும்போது, கை கால்கள் கட்டுண்டு, தான் பேரிருளிலே கிடப்பதை உணர்ந்து கொண்டான். "எங்கிருக்கிறோம்?" என்று சிந்தித்தான். இடம் தெரியவில்லை. "நமக்கு யார் இவ்விதமான தீமை செய்திருக்கக்கூடும்?" என்று யோசனை செய்து பார்த்தான். ஒன்றும் தெளிவாக விளங்கவில்லை. எழுந்து நிற்க முயற்சி செய்தான். சாத்தியப்படவில்லை. தாகம் நாக்கை வறட்டிற்று, கண்கள் சுழன்றன. நெஞ்சு படபடலென்று புடைத்துக் கொண்டது. "தெய்வமே, என்னைக் கொல்லவா நிச்சயித்துவிட்டாய்?" என்று கூவினான்.

"ஆம்" என்றொரு குரல் கேட்டது.

"ஆமென்கிறாயே, நீ யார்?" என்று வினவினான்.

"நான் காலன். உன் உயிரைக் கொண்டு போக வந்திருக்கிறேன்" என்று அந்த மறை குரல் சொல்லிற்று.

அப்போது திடசித்தன்: "நான் யௌவனப் பருவத்தில் இருக்கிறேன். அறிவிலும் அன்பிலும் சிறந்த எனது மனைவியையும், சிங்கக்குட்டி போன்ற என் மகனையும் செழிப்பும் புகழும்

மிகுந்த என் நாட்டையும் விட்டு விட்டு உன்னுடன் வருவதில் எனக்கு ஸம்மதமில்லை. இங்கிருந்து போய்விடு" என்றான். மறை குரல் கொல்லென்று சிரித்தது.

"நான் எப்போது கொண்டு போகப்படுவேன்?" என்று திடசித்தன் கேட்டான்.

"விடியும் ஒரு ஜாமத்திற்குள்ளே" என்று குரல் சொல்லிற்று.

இது கேட்ட மாத்திரத்திலே திடசித்தன் அயர்ந்து போனான். கண்கள் முன்னிலும் அதிகமாகச் சுழன்றன. நெஞ்சு முன்னிலும் விரைவாக அடித்தது. கால்கள் பதறலாயின.

அப்போது அவனுடைய தாய் சொல்லிக்கொண்டிருந்த மந்திர மொன்று நினைப்பு வந்தது. உடனே உச்சரித்தான். தாய் இறந்து போகும் சமயத்தில் அவனை அழைத்து அந்த மந்திரத்தை அவன் காதிலே உபதேசம் செய்துவிட்டு, "மகனே, உனக்கு எவ்வளவு பெரிய ஆபத்து வந்த சமயத்திலும் நீ இம்மந்திரத்தை உச்சரித்தால் விலகிப் போய்விடும்" என்று சொல்லியிருந்தாள். இப்போது அதனை உச்சரித்தான். "கரோமி" (செய்கிறேன்) என்பதே அம்மந்திரம். கரோமி, கரோமி" என்று மூன்றுதரம் சொன்னான்.

காலிலே ஒரு பாம்பு வந்து கடித்தது.

"தாயே, உன் மந்திரத்தின் பயன் இதுதானா?" என்று அலறினான்.

"அஞ்சாதே, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு, மந்திரத்தைச் சொல்லு" என்று அசரீரி வாக்குப் பிறந்தது.

இந்தப் புதிய வாக்கைக் கேட்கும்போது அவனுடைய தாயின் குரலைப் போலேயிருந்தது.

கரோமி, கரோமி, கரோமி, செய்கிறேன், செய்கிறேன், செய்கிறேன் என்று மறுபடி ஜபிக்கலானான்.

"குரு, குரு, குரு" (செய், செய், செய்) என்றது அசரீரி. உடனே மூச்சை உள்ளே இழுத்து அமானுஷிகமான வேகத்துடன் கைகளை உதறினான். கைத்தளைகள் படீரென்று நீங்கின. உடைவாளையெடுத்தான். "செய், செய், செய்" என்று மறுபடி சத்தம் கேட்டது. பாம்பு கடித்த கால்விரலைப் பளிச்சென்று வெட்டி எறிந்து விட்டான். குரு, குரு, குரு என்ற சத்தம்

மீண்டும் கேட்டது.

உடம்பிலிருந்த துணியைக் கிழித்து, மண்ணிலே புரட்டி அதிக ரத்தம் கால் விரலிலிருந்து விழாதபடி சுற்றிக்கொண்டான்.

மறுபடியும் 'செய்' என்ற தொனி பிறந்தது. தளைகளை வாளால் வெட்டிவிட்டான்.

அப்போது அவனுடைய சரீரத்திலே மறுபடியும் ஆயாஸமுண்டாயிற்று. அப்படியே சோர்ந்து விழுந்தான். ஜ்வரம் வந்து விட்டது. மரண தாகமுண்டாயிற்று.

"ஐயோ தாகம் பொறுக்கவில்லையே, என்ன செய்வேன்?" என்று புலம்பினான்.

"மந்திரத்தை ஜபம் பண்ணு" என்றது அசரீரி.

"கரோமி, கரோமி, கரோமி" என்று தாய் மந்திரத்தை மறுபடி ஜபித்தான்.

"செய்" என்று கட்டளை பிறந்தது.

"என்ன செய்வது?" என்றேங்கினான்.

"சோர்வடையாதே, செய்கை செய்" என்றது தொனி.

"என்ன செய்வது?" என்று பின்னொரு முறை கேட்டான்.

"கல்லிலே முட்டு" என்று கட்டளை பிறந்தது.

எழுந்துவந்து குகையை மூடியிருந்த பாறையிலே போய் முட்டினான். மண்டையுடைந்து செத்தால் பெரிதில்லையென்று துணிவுகொண்டு செய்தான். மண்டை உடையவில்லை. குகையை மூடிச் சென்றவர்கள் அவசரத்தாலே அந்தக் கல்லை மிகவும் சரிவாக வைத்துவிட்டுப் போயிருந்தார்கள். பாறை சரிந்து கீழே விழுந்துவிட்டது. வெளியே வந்து பார்த்தான். சூர்யோதயம் ஆயிற்று. கரோமி, கரோமி, கரோமி; செய்கிறேன், செய்றேன், என்று சொல்லிக்கொண்டு தனது ராஜதானி போய்ச் சேர்ந்தான். பிறகு அவனுக்கோர் பகையுமில்லை.

# 4. புதிய கோணங்கி

## (அதாவது குடுகுடுப்பைக்காரன்)

வேதபுரத்தில் ஒரு புது மாதிரிக் குடுகுடுப்பைக்காரன் புறப்பட்டிருக்கிறான். உடுக்கைத் தட்டுவதிலே முப்பத்தைந்து தாள பேதங்களும், அவற்றிலே பல விந்யாசங்களும் காட்டுகிறான். தாள விஷயத்திலே மஹா கெட்டிக்காரன். உடம்பு மேலே துணி மூட்டை சுமந்து கொண்டு போவதில்லை. நல்ல வெள்ளை வேஷ்டி உடுத்தி, வெள்ளைச் சட்டை போட்டுக்கொண்டிருக்கிறான். தலையிலே சிவப்புத் துணியால் வளைந்து வளைந்து பெரிய பாகை கட்டியிருக்கிறான். பாகையைப் பார்த்தால் நெல்லூர் அரிசி மூட்டையிலே பாதி மூட்டையைப் போலிருக்கிறது. நெற்றியிலே பெரிய குங்குமப் பொட்டு, மீசையும் கிருதாவுமாக மிகவும் விரிந்த பெரிய முகத்துக்கும் அவனுடைய சிவப்பு நிறத்துக்கும் அந்தக் குங்குமப் பொட்டு நன்றாகப் பொருந்தியிருக்கிறது. ஆள் நெட்டை; தடியன். காலிலே ஹைதராபாத் ஜோடு மாட்டியிருக்கிறான். நேற்றுக் காலையிலே, அவன் நம்முடைய வீதி வழியாக வந்தான். உடுக்கையிலே தாள விஸ்தாரம் நடக்கிறது. பெரிய மிருதங்கக்காரன் வேலை செய்வது போலச் செய்கிறான், நல்ல கெட்டிக்காரன். அவன் சொன்னான் :—

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு ;
நல்ல காலம் வருகுது ; நல்ல காலம் வருகுது ;
ஜாதிகள் சேருது ; சண்டைகள் தொலையுது ;
சொல்லடி, சொல்லடி, சக்தி மாகாளி,
வேதபுரத்தாருக்கு நல்ல குறி சொல்லு ;
தரித்திரம் போகுது, செல்வம் வருகுது ;
படிப்பு வளருது, பாவம் தொலையுது ;
படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான், போவான் ; ஐயோவென்று போவான்,
வேதபுரத்திலே வியாபாரம் பெருகுது ;

தொழில் பெருகுது ; தொழிலாளி வாழ்வான் ;
சாத்திரம் வளருது ; சூத்திரந் தெரியுது ;
மந்திரம் பெருகுது ; தந்திரம் வளருது ;
மந்திரமெல்லாம் வளருது ; வளருது !
குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு,
சொல்லடி, சொல்லடீ, மலையாள பகவதீ.
அந்தரி, வீரி, சண்டிகை, சூலி ;
குடுகுடு குடுகுடு''

இப்படி அவன் சொல்லிக் கொண்டு போவதை நான் மெத்தையிலிருந்து கேட்டேன். இதென்னடா புதுமையாக இருக்கிறதென்று ஆச்சரியத்துடன் அவனை நிற்கச் சொன்னேன். நின்றான். கீழே இறங்கிப் போய், அவனை ஸமீபத்தில் அழைத்து ''எந்த ஊர்'' என்று கேட்டேன். ''சாமி, குடுகுடுக்காரனுக்கு ஊரேது, நாடேது? எங்கேயோ பிறந்தேன், எங்கேயோ வளர்ந்தேன். எங்கெல்லாமோ சுத்திக் கொண்டு வருகிறேன்'' என்றான். அப்போது நான் சொன்னேன் :—

''உன்னைப் பார்த்தால் புதுமையாகத் தெரிகிறது. சாதாரணக் கோணங்கிகளைப் போலில்லை. உன்னுடைய பூர்வோத்தரங்களைக் கூடிய வரையில் ஸவிஸ்தாரமாகச் சொல்லு. உனக்கு நேர்த்தியான சரிகை வேஷ்டி கொடுக்கிறேன்'' என்றேன். அப்போது, குடுகுடுக்காரன் சொல்லுகிறான் : ''சாமி, நான் பிறந்த இடந் தெரியாது. என்னுடைய தாயார் முகம் தெரியாது. என்னுடைய தகப்பனாருக்கு இதுவே தொழில். அவர் தெற்குப் பக்கத்தைச் சேர்ந்தவர். 'ஒன்பது கம்பளத்தார்' என்ற ஜாதி. எனக்குப் பத்து வயதாக இருக்கும் போது தஞ்சாவூருக்கு என் தகப்பனார் என்னை அழைத்துக் கொண்டு போனார். அங்கே வைசூரி கண்டு செத்துப்போய் விட்டார். பிறகு நான் இதே தொழிலில் ஜீவனம் செய்து கொண்டு பல தேசங்கள் சுற்றி ஹைதராபாத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போது எனக்கு வயது இருபதிருக்கும். அங்கே ஜான்ஸன் என்ற துரை வந்திருந்தான். நல்ல மனுஷ்யன். அவன் ஒரு 'கம்பெனி ஏஜெண்டு.' இந்தியாவிலிருந்து தாசிகள், நட்டுவர், கழைக் கூத்தாடிகள், செப்பிடு வித்தைக்காரர், ஜாலக்காரர் முதலிய பல தொழிலாளிகளைச் சம்பளம் கொடுத்துக்

கூட்டிக் கொண்டு போய், வெள்ளைக்காரர் தேசங்களிலே, பல இடங்களில் கூட்டாரமடித்து வேடிக்கை காண்பிப்பது அந்தக் கம்பெனியாரின் தொழில். விதிவசத்தினால் நான் அந்த ஜான்ஸன் துரை கம்பெனியிலே சேர்ந்தேன். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய ஐரோப்பிய தேசங்களிலே ஸஞ்சாரம் செய்திருக்கிறேன். அமெரிக்காவுக்குப் போயிருக்கிறேன். இரண்டு வருஷங்களுக்கு முன்பு சண்டை தொடங்கினபோது, மேற்படி 'கம்பெனி' கலைந்து போய்விட்டது. எங்களுக்கெல்லாம் பணம் கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பி விட்டார்கள். உயிருள்ளவரை போஜனத்துக்குப் போதும்படியான பணம் சேர்த்து வைத்திருக்கிறேன். ஆனாலும் பூர்வீகத் தொழிலைக் கைவிடுவது ஞாயமில்லை என்று நினைத்து இங்கு வந்த பின்னும் பல ஊர்களில் சுற்றி, இதே தொழில் செய்து வருகிறேன்.

ஐரோப்பா முதலிய தேசங்களில் சுற்றின காலத்தில் மற்றக் கூத்தாடிகளைப் போல வீண் பொழுது போக்காமல், அவ்விடத்துப் பாஷைகளைக் கொஞ்சம் படித்து வந்தேன். எனக்கு இங்கிலீஷ் நன்றாகத் தெரியும். வேறு சில பாஷைகளும் தெரியும். அநேக புஸ்தகங்கள் வாசித்திருக்கிறேன். இங்கு வந்து பார்க்கையிலே அவ்விடத்து ஜனங்களைக் காட்டிலும் இங்குள்ளவர்கள் பல விஷயங்களிலே குறைவுபட்டிருக்கிறார்கள்.

நம்முடைய பரம்பரைத் தொழிலை வைத்துக் கொண்டே ஊரூராசப்போய் இங்குள்ள ஜனங்களுக்குக் கூடியவரை நியாயங்கள் சொல்லிக் கொண்டு வரலாமென்று புறப்பட்டிருக்கிறேன். இது தான் என்னுடைய விருத்தாந்தம்" என்றான்.

ஒரு ஜரிகை வேஷ்டி எடுத்துக் கொடுக்கப் போனேன்; போன தீபாவளிக்கு வாங்கினது; நல்ல வேஷ்டி.

"சாமி வேண்டியதில்லை" என்று சொல்லி விட்டு அவன் மறுபடி உடுக்கை யடித்துக் கொண்டு போய் விட்டான். போகும் போதே சொல்லுகிறான் :—

"குடு குடு, குடு குடு, குடு குடு, குடு குடு
சாமிமார்க்கெல்லாம் தைரியம் வளருது,
தொப்பை சுருங்குது; சுறுசுறுப்பு விளையுது,
எட்டு லட்சுமியும் ஏறி வளருது,

பயங் தொலையுது, பாவங் தொலையுது
சாத்திரம் வளருது, சாதி குறையுது,
நேத்திரம் திறக்குது, நியாயங்தெரியுது,
பழைய பயித்தியம் படீலென்று தெளியுது.
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது,
சொல்லடீ சக்தி, மலையாள பகவதி,
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது,"

என்று சொல்லிக் கொண்டே போனான். அவன் முதுகுப்புறத்தை நோக்கி, தெய்வத்தை நினைத்து, ஒரு கும்பிடு போட்டேன்.

# 5. அர்ஜுன சந்தேகம்

ஹஸ்தினாபுரத்தில் துரோணாசாரியரின் பள்ளிக்கூடத்தில் பாண்டு மகாராஜாவின் பிள்ளைகளும் துரியோதனாதிகளும் படித்து வருகையில், ஒருநாள் சாயங்கால வேளையில் காற்று வாங்கிக் கொண்டு வரும்போது, அர்ஜுனன் கர்ணனைப் பார்த்து :- "ஏ கர்ணா, சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா?" என்று கேட்டான். (இது மஹாபாரதத்திலே ஒரு உபகதை; சாஸ்திர ப்ரமாணமுடையது; வெறும் கற்பனையன்று.)

"ஸமாதானம் நல்லது" என்றான் கர்ணன்.

"காரணமென்ன?" என்று கிரீடி கேட்டான்.

கர்ணன் சொல்லுகிறான்: "அடே, அர்ஜுனா, சண்டை வந்தால் நான் உன்னை அடிப்பேன். அது உனக்குக் கஷ்டம். நானோ இரக்கச் சித்தமுடையவன். நீ கஷ்டப்படுவதைப் பார்த்தால் என் மனம் தாங்காது. ஆகவே இரண்டு பேருக்கும் கஷ்டம். ஆதலால் சமாதானம் சிறந்தது" என்றான்.

அர்ஜுனன்: "அடே கர்ணா, நம் இருவரைக் குறித்து நான் கேட்கவில்லை. பொதுப்படையாக உலகத்தில் சண்டை நல்லதா? சமாதானம் நல்லதா? என்று கேட்டேன்" என்றான்.

அதற்குக் கர்ணன்: "பொது விஷய ஆராய்ச்சிகளில் எனக்கு ருசியில்லை" என்றான்.

இந்தப் பயலைக் கொன்றுபோடவேண்டும் என்று அர்ஜுனன் தன் மனத்துக்குள்ளே தீர்மானம் செய்துகொண்டான். பிறகு அர்ஜுனன் துரோணாசாரியாரிடம் போய் அதே கேள்வியைக் கேட்டான்.

"சண்டை நல்லது" என்று துரோணாசாரியார் சொன்னார்.

"எதனாலே?" என்று பார்த்தன் கேட்டான்.

அப்போது துரோணாசாரியார் சொல்லுகிறார்: "அடே விஜயா சண்டையில் பணம் கிடைக்கும்; கீர்த்தி கிடைக்கும், இல்லாவிட்டால் மரணம் கிடைக்கும். சமாதானத்தில் சகலமும்

சந்தேகம் - ஸ-ஸ-ஸ" என்றார்.

பிறகு அர்ஜுனன் பீஷ்மாசார்யரிடம் போனான். "சண்டை நல்லதா தாத்தா?" என்று கேட்டான். அப்போது கங்கா புத்திரனாகிய அந்தக் கிழவனார் சொல்லுகிறார்: "குழந்தாய், அர்ஜுனா, சமாதானமே நல்லது. சண்டையில் நம்முடைய க்ஷத்திரிய குலத்திற்கு மஹிமையுண்டு. சமாதானத்தில் லோகத்துக்கே மஹிமை" என்றார்.

"நீர் சொல்லுவது நியாயமில்லை" என்று அர்ஜுனன் சொன்னான்.

"காரணத்தை முதலாவது சொல்ல வேண்டும், அர்ஜுனா, தீர்மானத்தை அதன் பிறகு சொல்ல வேண்டும்" என்றார் கிழவர்.

அர்ஜுனன் சொல்லுகிறான்: "தாத்தாஜி, ஸமாதானத்தில் கர்ணன் மேலாகவும் நான் தாழ்வாகவும் இருக்கிறோம். சண்டை நடந்தால் உண்மை வெளிப்படும்" என்றான்.

அதற்கு பீஷ்மாச்சாரியர்: "குழந்தாய், தர்மம் மேன்மையடையும். சண்டையாலேனும், சமாதானத்தாலேனும், தர்மம் வெல்லத்தான் செய்யும். ஆதலால் உன் மனதில் கோபங்களை நீக்கி சமாதானத்தை நாடு. மனுஷ்ய ஜீவரெல்லாம் உடன் பிறந்தாரைப்போல. மனுஷ்யர் பரஸ்பரம் அன்போடிருக்க வேண்டும். அன்பே தாரகம். முக்காலும் சொன்னேன். அன்பே தாரகம்" என்று சொல்லிக் கண்ணீர் ஒரு திவலை உதிர்த்தார்.

சில தினங்களுக் கப்பால் அஸ்தினாபுரத்துக்கு வேதவியாஸர் வந்தார். அர்ஜுனன் அவரிடம் போய்ச் சண்டை நல்லதா, சமதானம் நல்லதா என்று கேட்டான்.

அப்போது வேதவியாஸர் சொல்லுகிறார்: "இரண்டும் நல்லன. சமயத்துக்குத் தக்கபடி செய்ய வேண்டும்" என்றார்.

பல வருஷங்களுக்கப்பால் காட்டில் இருந்து கொண்டு துர்யோதனாதிகளுக்குத் தூது விடுக்கு முன்பு, அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ணனை அழைத்து, "கிருஷ்ணா, சண்டை நல்லதா" சமாதானம் நல்லதா?" என்று கேட்டான்.

இதற்குக் கிருஷ்ணன்: "இப்போதைக்கு சமாதானம் நல்லது. அதனாலேதான் சமாதானம் வேண்டி ஹஸ்தினாபுரத்திற்குப் புறப்படப் போகிறேன்" என்றாராம்.

# 6. வேப்பமரம்

இளவேனிற் காலத்தில் ஒரு நாள் காலை வேளையில் நான் மலய கிரிச் சார்பிலே தனியாக உலாவிக் கொண்டிருந்தேன். நெடுந் தூரம் சுற்றிய பிறகு என் உடம்பில் சற்றே இளைப்புண்டா யிற்று. அந்த இளைப்புத் தீரும் பொருட்டாக அங்கொரு தோப்புக்குள்ளே போய் ஒரு வேப்ப மரத்தடியில் படுத்துக் கொண்டேன். இன்பமான காற்று வீசிற்று. சிறிது நேரத்துக் குள் கண்ணயர்ந்து நித்திரையில் ஆழ்ந்துவிட்டேன். அப்போது நான் கண்ட அபூர்வமான கனவை இங்கெழுதுகிறேன்,

நான் தூங்கிக் கொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு; எழுந்திரு" என்று அமானிஷிகமாக ஒலியொன்று கேட்டது. இந்த ஒலியைக் கேட்டவுடன் கண்ணை விழித்தேன். உண்மையாகவே விழிக்கவில்லை. கனவில் விழித்தேன். அதா வது விழித்துக் கொண்டதாகக் கனவு கண்டேன்.

விழித்து, "யார் கூப்பிட்டது?" என்று கேட்டேன்.

"நான்தான் வேப்பமரம்; நான்தான் கூப்பிட்டேன், எழுந்திரு" என்று மறுமொழி உண்டாயிற்று.

உடனே நான் யோசிக்கலானேன் :

"ஓஹோ, ஓஹோ! இது பேயோ, பிசாசோ, யக்ஷர், கிந்நரர், கந்தர்வர் முதலிய தேவ ஜாதியோ, வன தேவதைகளோ, யாரோ தெரியவில்லை. இல்லாவிட்டால் வேப்ப மரம் எங்கேனும் பேசுவ துண்டோ? அட, போடா, பேயாவது? அதெல்லாம் சுத்தக் கட்டுக் கதையன்றோ; நான் உண்மையாகவே கண்ணை விழித்து ஜாக்ர நிலையடையவில்லை. இன்னும் கனவு நிலையிலேதானிருக் கின்றேம். இந்த ஒலி கனவில் கேட்கும் கற்பனையொலி"— இங்ஙனம் நான் யோசனை செய்து கொண்டிருக்கையில், "ஏ மனிதா, ஏ மனிதா, எழுந்திரு" என்று மறுபடி சத்தமுண்டா யிற்று,

"நீ யார்?" என்று பின்னும் கேட்டேன்.

"நான் வேப்ப மரம். என் அடியிலேதான் நீ படுத்திருக்கிறாய். உனக்குச் சில நேர்த்தியான விஷயங்கள் கற்றுக் கொடுக்கும் பொருட்டாக எழுப்புகிறேன்" என்று மறுமொழி வந்தது.

அப்போது நான்: "சரி, நமக்குத் தெரியாத விஷயங்கள் உலகத்தில் எத்தனையோ உண்டென்று ஷேக்ஸ்பியரே சொல்லியிருக்கிறார். அந்தப்படி மரங்களுக்குப் பேசும் சக்தி இருக்கலாம். அவ்விஷயம் நமக்கு இதுவரை தெரியாமலிருக்கலாம். ஆதலால், இந்த மரத்துடன் சம்பாஷணை செய்து விஷயத்தை உணர்ந்து கொள்வோம்" என்றெண்ணிக் கண்ணைத் திறந்து கொண்டெழுந்து நின்றேன்.

(உண்மையாகவே எழுந்து நிற்கவில்லை. எழுந்து நின்றதாகக் கனவு கண்டேன்.) எழுந்து நின்று கொண்டு: "வேப்ப மரமே, உனக்கு மனித பாஷை எப்படித் தெரிந்தது? மனிதரைப் போல நெஞ்சு, வாய், தொண்டை, அண்ணம், நாக்கு, பல், உதடு என்ற கருவிகளில்லாதபோது மனித பாஷை பேசுவது ஸாத்யப்படாதே? எங்களிலே பல் மாத்திரம் விழுந்தவர்களுக்கும் உச்சரிப்பு நேரே வராமல் போகிறதே. அடிநாக்கில்லாதவர்கள் ஊமையாய்ப் போகிறார்களே. அப்படியிருக்க நீ மனித சரீரமேயில்லாமல் மனிதபாஷை எங்ஙனம் பேசுகிறாய்?" என்று கேட்டேன்.

அப்போது வேப்ப மரம் சொல்லுகிறது:—

"கேளாய், மானுடா, மனிதனுக்கு ஒரே வாய்தானுண்டு. எனக்கு உடம்பெல்லாம் வாய். மனித பாஷை பேசுவதற்கு வாய் முதலிய புறக் கருவிகள் மனிதரைப் போலவேயிருத்தல் அவசியமென்று நீ நினைக்கிறாய். ஸாதாரண ஸ்திதியில் அவை அவசியந்தான். ஆனால், நான் மரமில்லை. நான் அகஸ்திய முனிவரின் சிஷ்யன். தமிழ் பாஷையில் எனக்குள்ள ஞானம் இக்காலத்தில் அகஸ்தியரைத் தவிர வேறு யாருக்குமே கிடையாது........"

வேப்ப மரம் பின்னும் சொல்லுகிறது:—

"நடந்த கதையை அடியிலிருந்து சொல்லுகிறேன். மானுடா கவனத்துடன் கேள். எனக்கு இப்போது முப்பது வயதுதானாகிறது. நான் இள மரம். பதினைந்து வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் வஸந்த காலத்தின்போது இராவேளையில் ஆச்சர்யமான நிலா வீசிக்கொண்டிருந்தது. நான் விழித்துக்கொண்டிருந்தேன்.

ஸாதாரணமாக மரங்கள் மனிதரைப் போலவே பகல் முழுவதும் விழித்துக் கொண்டிருக்கும். இரவானவுடனே தூங்கும். அன்றிரவு எனக்கு எந்தக் காரணத்தாலோ தூக்கமே வரவில்லை. நிலாவையும், வானத்தையும், சூழ்ந்திருக்கும் மரங்களையும் பார்த்துக் கொண்டு பிரும்மானந்தத்தில் மூழ்கியிருந்தேன். அப்போது பதினாறு வயதுடைய, மிகவும் அழகான மனித ஆண் பிள்ளையொருவனும், அவனைக் காட்டிலும் அழகான பன்னிரண்டு வயதுடைய மனிதப் பெண் ஒருத்தியும் அதோ தெரிகிற நதியில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டேன். சிறிது நேரத்துக்குள்ளே அவ்விருவரும் சாமானிய மனிதரில்லையென்பது எனக்குத் தெளிவாய் விட்டது. சிறகுகளில்லாமல் அவர்கள் வானத்தில் பறந்து விளையாடுவது கண்டேன். பிறகு ஒருவருக்கொருவர் பேசிய வார்த்தைகளிலிருந்து அவர்கள் இன்னாரென்று தெரிந்து கொண்டேன். அவ்விருவரும் யாரெனில் அகஸ்திய மஹரிஷியும் தாமிரபரணியம்மனும். அகஸ்தியர் சாதாரண காலத்தில் கட்டை விரலளவுடைய வடிவந்தரித்திருப்பது வழக்கம். ஆனால் அவர் காமரூபி. அதாவது, நினைத்தபோது நினைத்த வடிவந்தரிக்கும் திறமை படைத்தவர். தாமிரபரணியம்மனும் அப்படியே. ஆதலால் அவ்விருவரும் அப்போது அதிசுந்தரமான மனுஷ்ய ரூபந்தரித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கிரீடை பொழுது விடியும்வரை நடந்தது. அப்பால் தாமிரபரணி மறைந்து விட்டாள்..........'',

வேப்ப மரம் சொல்லுகிறது: "கேளாய், மானுடா, கவனத்துடன் கேள். தாம்ரபர்ணியம்மன் பகலைக் கண்டவுடன் மறைந்து சென்றுவிட்டாள். அகஸ்தியர் மாத்திரம் தனியாக வந்து எனதடியில் இப்போது நீ நிற்குமிடத்திலே படுத்துக் கொண்டு யோகநித்திரையில் ஆழ்ந்தனர். எனக்கு அந்த மையத்தில் அகஸ்தியருடைய சக்திகளெல்லாம் நன்றாகத் தெரியாது. ஆதலால், அவர் யோகத்திலிருக்கிறாரென்பதை அறியாமல் ஜலக்கிரீடையின் சிரமத்தால் சாதாரண நித்திரையிலிருக்கிறாரென்று நினைத்தேன். பொழுது விடிந்து ஏறக்குறைய ஒரு ஜாமமாயிற்று. அப்போது அதோ, உனக்கெதிரே ஒரு புளிய மரம் நிற்கிறது பார் – அந்த மரத்தின் கீழேயுள்ள புற்றிலிருந்து

ஒரு பெரிய நல்லபாம்பு 'ஹூஸ்' என்று சீத்காரம் செய்து கொண்டு அகஸ்தியர் படுத்திருந்த இடத்தை நோக்கிப் பாய்ந்து பாய்ந்து வரலாயிற்று. அதைக் கண்டமாத்திரத்தில் நான் திடுக்கிட்டுப் போனேன். 'ஐயோ! இந்தக் கொடிய பாம்பு இந்த மஹா புருஷனைக் கொன்றுவிடப் போகிறதே! இவரை எப்படியேனும் கண்விழிக்கும்படிச் செய்வோமானால் தம்முடைய தவவலிமையினால் பாம்பை அடக்கிவிடுவார்!' என்றெண்ணி அவரை விழிக்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் என் இலைகளை அவர்மீது சொரிந்தேன். அவர் விழிக்கவில்லை. இதற்குள் பாம்பும் அவரை நெருங்கிவந்து அவருடைய பாதத்தில் இரண்டுமுறை கடித்தது. மூன்றாம் முறை கடிக்கும் பொருட்டும் படத்தைத் தூக்கிற்று. அத்தருணத்தில் அவர் கண்ணைத் திறந்து பார்த்துக் கயிற்றைத் தூக்குவதுபோல் எளிதாக அந்தப் பாம்பைக் கையால் எடுத்துக் கழுத்தில் வளைய வளையச் சுற்றிக்கொண்டார். அந்தப் பாம்பும் கயிற்றைப் போலவே ஒன்றும் செய்யாமல் பரமஸாதுவாக அவர் கழுத்தில் கிடந்தது. கடியுண்ட இடத்தில் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்தது. அதில் அவர் கொஞ்சம் மண்ணை எடுத்துப் பூசினார். புண் உடனே ஆறிப்போய் சாதாரணத் தோலாகி விட்டது. இதை கண்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். இப்படிப்பட்ட மஹானிடம் ஒருவார்த்தை பேசக்கூட யோக்கியதையில்லாமல் ஊமை மரமாய்ப் பிறந்துவிட்டோமே என்றெண்ணித் துயரப் பட்டேன். எப்படியேனும் எனது கருத்தை அவருக்குத் தெரிவிக்க விரும்பி அவர் காலின்மீது சில மலர்களையும் இலைகளையும் சொரிந்தேன். அவர் தலையை நிமிர்ந்து என்னை நோக்கி:-

'வேப்பமரமே' என்று கூப்பிட்டார்.

வேப்பமரம் பின்னுங்கதை சொல்லுகிறது:—

"கேளாய், மானுடா, கவனத்துடன் கேள். இங்ஙனம் என்னை அகஸ்தியர் கூப்பிட்டவுடனே என்னையறியாமலே என் கிளைகளிலுள்ள வாய்களினின்றும், 'என்ன முனிவரே?' என்ற தமிழ்ச்சொற்கள் உதித்தன. என் உடம்பு முழுவதும் புளகிதமாய்விட்டது. மாற்றிப்பிறக்க வகையறிந்து கொண்டேன், வேப்பமரப் பிறவி போய் எனக்கு மனிதப் பிறவியுண்டாயிற்றென்று

தெரிந்துகொண்டேன். உடம்பு மாறவில்லை. உடம்பு மாறினுலென்ன, மாருவிட்டாலென்ன? நான் உடம்பில்லை. நான் ஆத்மா. நான் போதம்; நான் அறிவு. திடீரென்று வேப்பமரச் சித்தம் மாறிப்போய் எனக்குள் மனுஷ்ய சித்தம் சமைந்து விட்டது. மனுஷ்ய சித்தம் ஏற்பட்டாலன்றி மனித பாஷை பேசவருமா? கோடி ஜன்மங்களில் நாம் பெற்றிருக்க வேண்டிய பயனை அந்த முனிவர் எனக்கு ஒரே கணத்தில் அருள் செய்தார். எனக்கேற் பட்ட ஆனந்த மிகுதியால் என் பூக்களையும், இலைகளையும் கணக் கில்லாமல் அவருடைய பாதத்தின்மீது வர்ஷித்தேன். அவர் மிகவும் மகிழ்ச்சி பூத்தவராய், 'ஏ, வேப்பமரமே, நேற்றிரவு நானும் தாமிரபரணியும் இங்கு ராமநதியில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்த காலத்தில் நீ பார்த்துப் பெருமகிழ்வெய்திப் பல ஆசீர்வாதங்கள் கூறினுய். அதை நான் ஞானதிருஷ் டியால் உணர்ந்தேன். அப்பால், சிறிது நேரத்துக்கு முன்பு நான் யோக ஸமாதியிலிருந்தபோது இந்தப் பாம்பு வரு வதைக் கண்டு நீ என்னைக் காக்க விரும்பி என்னை எழுப்பும் பொருட்டாக என்மீது நின் இலைகளையும் பூக்களையும் சொரிந் தாய். இங்ஙனம் நீ என்னிடம் காட்டிய அன்பிற்குக் கைம்மா ருக உனக்கு நான் ரிஷிபோதம் கொடுக்கிறேன். இதனுல் உனக்கு ஸகல ஜந்துக்களின் பாஷைகளிலும் சிறந்த ஞானம் இயல்பாகவே உண்டாகிவிடும். எல்லா ஜந்துக்களிடத்திலும் ஸமமான பார்வையும் ஸமமான அன்பும் உண்டாகும். எல்லா உயிர்களிடத்திலும் தன்னையே காண்பதாகிய தேவ திருஷ்டி ஏற்படும். இவற்ருல் நீ ஜீவன் முக்தி பெறுவாய்' என்ருர். அது முதல் நான் அவர் கூறிய சக்தி களெல்லாம் பெற்று, யாதொரு கவலையுமில்லாமல் யாதொரு பயமுமில்லாமல் ஜீவன் முக்தி பதமடைந்து வாழ்ந்து வருகிறேன்" என்று வேப்ப மரம் சொல்லிற்று. உடனே நான் அந்த வேப்ப மரத் தடியில் ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் பண்ணினேன். "உனக் கென்ன வேண்டும்?" என்று கேட்டது. அப்போது நான் அந்த வேப்ப மரத்தை நோக்கி, "உனக்கெப்படி அகஸ்தியர் குருவோ அப்படியே நீ எனக்கு குரு. அந்த முனிவர் உனக் கருள் புரிந்த ஜீவன் முக்தி பதத்தை நீ எனக்கருள் புரிய

வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தேன்.

"கொடுத்தேன்" என்றது வேப்பமரம்..............

இந்த சமயத்தில் நான் உண்மையாகவே தூக்கந் தெளிந்து கண்ணை விழித்தெழுந்து நின்றேன், எழுத்தாணிக் குருவிகளும், சிட்டுக் குருவிகளும் வேறு பலவிதமான குருவிகளும் பறந்து கூவி விளையாடிக் கொண்டிருந்தன. அணில்களும் ஓந்திகளும் ஆடியோடிக் கொண்டிருந்தன. காக்கைகளும், கிளிகளும், பருந்துகளும், தட்டான் பூச்சிகளும், வேறு பலவகை வண்டுகளும் ஒளிக் கடலிலே களித்தோணி கொண்டு, நீந்துவதுபோல் உலாவி வந்தன. கண்ணுக்குப் புலப்படாத மறைவிலிருந்து ஓராண் குயிலும் ஒரு பெண் குயிலும் ஒன்றுக்கொன்று காதற் பாட்டுக் கள் பாடிக் கொண்டிருந்தன.

ஆண் குயில் பாடுகிறது:—

"துஹூ, துஹூ, துஹூ
துஹூ, துஹூ, துஹூ
ராதா ரே."

(இதன் பொருள் :—
நீ, நீ, நீ,
நீ, நீ, நீ,
ராதையடீ)

பெண் குயில் பாடுகிறது:—

"துஹூ, துஹூ, துஹூ
ராதா கிருஷ்ண, கிருஷ்ண, கிருஷ்ண"

வேப்ப மரம் தனது பசிய இலைகளை வெயிலில் மெல்ல மெல்ல அசைத்துத் கொண்டிருந்தது. "என்ன ஆச்சரியமான கனவு கண்டோம்!" என்றெண்ணியெண்ணி வியப்புற்றேன். இதற்குள் வெயிலேறலாயிற்று. எனக்கும் பசியேறத் தொடங்கிற்று. வேப்ப மரத்துக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுத் தோப்பினின்று புறப்பட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

# 7. காந்தாமணி

“காந்தாமணி, உங்கப்பா பெயரென்ன?” என்று பாட்டி கேட்டாள். ஒரு கிணற்றங்கரையில் நடந்த ஸங்கதி. கோடைக் காலம்; காலை வேளை. வானத்திலே பால ஸூரியன் கிரணங்களை ஒழிவில்லாமல் பொழிந்து விளையாடுகிறான். எதிரே நீல மலை, பச்சைமரங்கள், பசுக்கள், பல மனிதர், சில கழுதைகள், இவற்றின் தொகுதி நின்றது. வெயிலொளி எந்தப் பொருள் மீது பட்டாலும் அந்தப் பொருள் அழகுடையதாகத் தோன்றுமென்று ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிராயன் சொல்லுகிறான். எனக்கு எந்த நேரத்திலும் எந்தப் பொருள்களும் பார்க்க அழகுடையனவாகத் தோன்றுகின்றன.

ஆனால் காலை வேளையில் மனிதக் கூட்டத்தில் கொஞ்சம் உற்சாகமும், சுறுசுறுப்பும் அதிகமாகக் காணப்படுவதால் அப்போது உலகம் மிகவும் சந்தோஷகரமான காட்சியுடையதாகிறது.

தோட்டத்துக்கு நடுவே ஒரு கிணறு. அத்தோட்டத்தில் சில அரளிப்பூச் செடிகள், சில மல்லிகைப்பூச் செடிகள், சில ரோஜாப்பூச் செடிகள். அக் கிணற்றிலிருந்து அதற்கடுத்த வீதியிலுள்ள பெண்களெல்லாரும் ஜலம் எடுத்துக் கொண்டு போவார்கள்.

இந்தக் கதை தொடங்குகிற அன்று காலையில் அங்குக் காந்தாமணியையும் பாட்டியையும் தவிர ஒரு குருட்டுக் கிழவர் தாமே ஜலமிறைந்து ஸநானத்தைப் பண்ணிக்கொண்டிருந்தார். போலீஸ் உத்தியோகத்திலிருந்து தள்ளுபடியாகி அதிலிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்து தமது வாழ்நாளின் மாலைப் பொழுதை ராமநாமத்தில் செலவிடும் பார்த்தசாரதி அய்யங்கார் அங்குப் பக்கத்திலே நின்று கிழவியைக் குறிப்பிட்டு பார்த்துக் கொண்டிருந்தார்.

மேற்படி கிணற்றுக்கருகே ஒரு குட்டிச்சுவர். அதற்குப்

பின்னே ஒரு வேப்பஞ்சோலை. அங்குப் பல மூலிகைகளிருக்கின்றன. அவற்றுள் ஒன்று மிகுந்த பசி உண்டாக்குமென்று என்னிடம் ஒரு சாமியார் சொன்னார். அது கொண்டு நான் மேற்படி மூலிகையைப் பறித்து வரும் பொருட்டாக அந்தச் சோலைக்குப் போயிருந்தேன். வானத்தில் குருவிகள் பாடுகின்றன. காக்கைகள் 'கா, கா' என்று உபதேசம் புரிகின்றன. வான வெளியிலே ஒலி நர்த்தனம் பண்ணுகிறது. எதிரே காந்தாமணியின் திவ்ய விக்ரஹம் தோன்றிற்று.

"உங்கப்பா பெயரென்ன?" என்று பாட்டி காந்தாமணியிடம் கேட்டாள்.

"எங்கப்பா பெயர் பார்த்தசாரதி அய்யங்கார்" என்று காந்தாமணி புல்லாங் குழலைப் போல் ஊதிச் சொன்னாள். கிழவி, போலீஸ் பார்த்தசாரதி அய்யங்காரை நோக்கி, ஒரு முறை உருட்டி விழித்தாள். போலீஸ் பார்த்தசாரதி அய்யங்கார் கையும் காலும் வெலவெலத்துப் போனார். அவருக்கு முகமும், தலையும் வெள்ளை வெளேரென்று நரைத்துப் போய்த் தொண்ணூறு வயதுக் கிழவனைப் போலே தோன்றினாலும் உடம்பு நல்ல கட்டுமஸ்துடையதாகப் பதினெட்டு வயதுப் போர்ச் சேவகனுடைய உடம்பைப் போலிருக்கும். அவர் ஆண் புலி வேட்டைகளாடுவதில் தேர்ச்சியுடையவரென்று கேள்வி. பாம்பு நேரே பாய்ந்து வந்தால் பயப்படமாட்டேனென்று அவரே என்னிடம் பத்துப் பதினைந்து தரம் சொல்லியிருக்கிறார்.

அடிப்பட்ட சூராதி சூரனாகிய பார்த்தசாரதி அய்யங்கார் கேவலம் ஒரு பாட்டியின் விழிப்புக்கு முன்னே இங்ஙனம் கை கால் வெலவெலத்து மெய் வெயர்த்து முகம் பதறி நின்றதைக் கண்டு வியப்புற்றேன்.

அப்பால் அந்தப் பாட்டி காந்தாமணியிடம் மேற்படி போலீஸ் அய்யங்காரைச் சுட்டிக் காட்டி—இதோ நிற்கிறாரே, இந்தப் பிராமணன், இவரா உங்கப்பா?" என்று கேட்டாள்.

அதற்குக் காந்தாமணி தன் இரண்டு கைகளையும் வானத்திலே போட்டு, முகத்திலே வானொளியை நகைக்கத் தக்க ஒளியுடைய நகை வீச: "ஏ, ஏ, இவரல்லர்; இவர் கன்னெங்கரேலென்று ஆசாரியைப் போலிருக்கிறாரே! எங்கப்பா செக்கச்

செவேலென்று எலுமிச்சம் பழத்தைப் போலிருப்பார். இவர் நரைத்த கிழவரன்றோ? எங்கப்பா சின்னப்பிள்ளை" என்று காந்தாமணி உரைத்தாள்.

அப்போது போலீஸ் பார்த்தசாரதி அய்யங்கார் காந்தா மணியை நோக்கி: "உங்கப்பாவுக்கு எந்த ஊரிலே வேலை?" என்று கேட்டார்.

"எங்கப்பா சங்கரநாதன்கோயில் சப்இன்ஸ்பெக்டர்" என்று காந்தாமணி சொன்னாள். பார்த்தசாரதி அய்யங்கார் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவருக்கு "சப்இன்ஸ் பெக்டர்" என்ற பெயர் பாம்புக்கு இடி போல். அப்போது காந்தாமணிக்கும் பாட்டிக்குமிடையே பின்வரும் சம்பாஷணை நிகழலாயிற்று.

"நீங்கள் அக்கா, தங்கை எத்தனை பேர்?" என்று பாட்டி கேட்டாள். அப்போது காந்தாமணி சொல்கிறாள்: எங்கக்கா வுக்குப் பதினெட்டு வயது. போன மாசந்தான் திரட்சி நடந்தது; ஸ்ரீவைகுண்டத்திலே. எனக்கு அடுத்த மாசம் திரட்சி. என் தங்கை ஒரு பெண் திரள நிற்கிறது. நாங்கள் மூன்று பேரும் பெண்கள். எங்கப்பாவுக்குப் பிள்ளைக் குழந்தை இல்லையென்று தீராத மனக்கவலை. என்ன செய்யலாம்? பெருமாள் அநுக்ரஹம் பண்ணினாலன்றோ தாழ்வில்லை? அதற்காக அவர் சோதிடம் பார்த் தார். எங்கம்மாவுக்கு இனிமேல் ஆண் குழந்தை பிறக்காதென்று பாழாகப் போவான் ஒரு ஜோதிடன் சொல்லிவிட்டான். அதை முத்திரையாக முடித்துக்கொண்டு இந்த அறுதலிப் பிராமணன் எங்கப்பா, அடுத்த மாசம் மன்னார்கோயிலில் ஒரு பெண்ணை இளையாளாகக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறார். முகூர்த்த மெல்லாம் வைத்தாய் விட்டது" என்றாள்.

"மன்னார்கோவிலில் உங்கப்பாவுக்குப் பெண் கொடுக்கப் போகிற மாமனாருடைய பெயரென்ன?" என்று அந்தப் பாட்டி கேட்டாள். அதற்குக் காந்தாமணி: "அவர் பெயர் கோவிந்த ராஜய்யங்காராம். அந்த ஊரிலே அவர் பெரிய மிராசாம். அவருக்கு ஒரே பெண்தானாம். கால் முதல் தலை வரை அந்தப் பெண்ணுக்கு வயிர நகை சொரிந்து கிடக்கிறதாம். தேவரம்பை யைப்போல் அழகாம் அந்தப் பெண்" என்றாள்.

"அப்படிப்பட்ட அழகான பணக்கார இடத்துப் பெண்ணை இளையாளாகக் கொடுக்கக் காரணமென்ன?" என்று பாட்டி கேட்டாள். "அந்தப் பெண் திரண்டு மூன்று வருஷங்களாய்விட்டன. அதன் தாயும் இறந்துபோய்விட்டாள். அதன் நடையுடை பாவனைகளெல்லாம் ஐரோப்பியர் மாதிரி. ஆதலால் இதுவரை அதற்குக் கல்யாணத்துக்கு யாரும் வரவில்லை. எங்கப்பா அந்த ருதுவான வார்த்தையெல்லாம் வீண் பொய்யென்று சொல்லித் தாம் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஸம்மதப்பட்டுவிட்டார். மேலும் இவருக்கு மனதுக்குள்ளே சந்தோஷந்தான். தமக்கு ருதுவான பெண் கிடைப்பது பற்றி. இன்றைக்குக் காலையிலே கூட அவரும் எங்கம்மாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் இந்த ஊர்ச் சத்திரத்திலேதான் ஒரு வாரமாக இறங்கியிருக்கிறோம். எங்கப்வும், அம்மாவும் பேசிக் கொண்டிருந்தபோது அம்மா சொன்னாள்: 'மன்னார்குடிப் பெண் திரண்டு மூன்று வருஷமாய் விட்டதாக இந்த ஊரிலே கூடப் பலமான பிரஸ்தாபம். ஆண், பெண் எல்லோரும் ஒரே வாக்காகச் சொல்லுகிறார்கள்' என்றாள். அப்பா அதற்கு: 'நெவர்மைன்ட். அந்தக் குட்டி திரண்டிருப்பதைப் பற்றி நமக்கு இரட்டை சந்தோஷம். நமக்குப் பணம் கிடைக்கும். ஆண் பிள்ளை பிறக்கும். குட்டி ஏராளமான அழகு. இந்த மாதிரி இடத்திலே ஐ டோன் கேர், எ டேம் எபௌட் சாஸ்திரங்கள், நாம் சாஸ்திரங்களைப் புல்லாக மதிக்கிறோம்' என்றார்....." என்று காந்தாமணி சொன்னாள்.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கிற சத்தம் என் காதில் விழுந்தது. என்னுடைய பார்வை முழுவதும் போலீஸ் பார்த்தசாரதி ஐயங்கார் மேல் நின்றது. அவரைப் பார்த்துக் கொண்டிருக்கையிலே என் மனதில் திடீரென்று ஒரு யோசனை பிறந்தது. அங்கிருந்தவர்களில் எனக்குக் காந்தாமணியின் முகந்தான் புதிது. பார்த்தசாரதி ஐயங்காரையும் தெரியும்; அந்தக் கிழவியையுந் தெரியும். அந்தக் கிழவி அய்யங்கார்ச்சியில்லை; ஸ்மார்த் தச்சி. அந்தக் கிராம முன்சீபின் தங்கை. அவளுக்கும் போலீஸ் பார்த்தசாரதி அய்யங்காருக்கும் பால்யத்தில் பலமான 'காதல்' நடைபெற்று வந்ததென்றும், அதனால் போலீஸ் பார்த்தசாரதி

அய்யங்காருக்கும் மேற்படி கிராம முன்சீபுக்கும் பல முறை யுத்தங்கள் நடந்தனவென்றும், அந்த யுத்தங்களிலே ஒன்றின்போது தான் பார்த்தசாரதி அய்யங்காருக்கு ஒரு கண்ணில் பலமான காயம்பட்டு அது பொட்டையாய் விட்டதென்றும் நான் கேள்விப் பட்டதுண்டு. அந்தக் கேள்வியையும் மனதில் வைத்துக் கொண்டு இப்போது மேற்படி ஸ்திரீகளின் ஸம்பாஷணையின்போது மேற்படி அய்யங்காரின் முகத்தில் தோன்றிய குறிப்புகளையும் கவனித்த விடத்தே என் மனதில் பின்வரும் விஷயம் ஸ்பஷ்டமாயிற்று.

கிழவியினிடத்தில் பழைய காதல் தனக்கு மாருமல் இன்னும் தழல் வீசிக்கொண்டிருக்கிறதென்ற செய்தியை அய்யங்கார் கிழவியினிடம் ஸ்திரப்படுத்திக் காட்ட விரும்புகிருரென்றும், காந்தாமணி முதலிய யுவதிகளின் அருகே கூடத் தனக்கு அக் கிழவியின் வடிவே அதிக ரம்மியமாகத் தோன்றுகிறதென்றும் உணர்த்த விரும்புகிருரென்றும் தெரியலாயின. ஆனுல் அவருடைய முகக் குறிப்புகளிலே பாதி பொய் நடிப்பென்பதும் தெளிவாகப் புலப்பட்டது.

ஏனென்ருல், காந்தாமணியையும் அக்கிழவியையும் ஒருங்கே தன் கையால் படைத்து, இருவருக்கும் பிதாவாகிய பிரமதேவன் கூடக் காந்தாமணியின் ஸந்நிதியில் அந்தக்கிழவியைப் பார்க்கக் கண் கூசுவான். அப்படியிருக்கக் கிழவியின்மீது அங்கு காதற் பார்வையை அசைவின்றி நிறுத்த முயன்ற போலீஸ் பார்த்த சாரதி அய்யங்காரின் முயற்சி மிகவும் நம்பக்கூடாத மாதிரியில் நடைபெற்று வந்தது.

இந்த ஸங்கதியில் மற்ெருரு விசேஷமென்ன வென்ருல் மேற்படி அய்யங்காரை நான் விருக்ஷ மறைவிலிருந்து கவனித்துக் கொண்டு வந்தது போலவே காந்தாமணியும், கிழவியும் அவரை அடிக்கடி கடைக்கண்ணுல் கவனித்துக் கொண்டு வந்தார்கள். பெண்களுக்குப் பாம்பைக் காட்டிலும் கூர்மையான காது, பருந்தைக்காட்டிலும் கூர்மையான கண். எனவே பார்த்தசாரதி அய்யங்காருடைய அகத்தின் நிலைமையை நான் கண்டது போலவே அந்த ஸ்திரீகளும் கண்டு கொண்டனரென்பதை அவர்களுடைய முகக் குறிகளிலிருந்து தெரிந்து கொண்டேன்.

என்னை மாத்திரம் அம்மூவரில் யாரும் கவனிக்கவில்லை. நான் செடிகொடிகளின் மறைவில் நின்று பார்த்தபடியால்

என்னை அவர்களால் கவனிக்க முடியவில்லை.

இப்படியிருக்கையிலே அங்கு இருபது வயதுள்ள ஒரு மலையாளிப் பையன் பெருங்காயம் கொண்டு வந்தான். சில்லறையில் பெருங்காயம் விற்பது இவனுடைய தொழில். இவன் பலமுறை அந்தக் கிராமத்துக்குப் பெருங்காயம் கொண்டு வந்து விற்பதை நான் பார்த்திருக்கிறேன். இவனைப் பற்றி வேறொன்றும் நான் விசாரித்தது கிடையாது. இவன் பார்வைக்கு மன்மதன் போலிருந்தான். கரிய விழிகளும், நீண்ட மூக்கும், சுருள் சுருளான, படர்ந்த உச்சிக் குடுமியும்—அவனைக் கண்டபோது எனக்கே மோஹமுண்டாயிற்று.

அந்த மலையாளி கிணற்றருகே வந்து உட்கார்ந்து கொண்டு கிழவியிடம் தாஹத்துக்கு ஜலங் கேட்டான். அவனைப் பார்த்த மாத்திரத்தில் காந்தாமணி நடுங்கிப் போனதைக் கவனித்தேன். அப்பால் அந்த மலையாளி காந்தாமணியை ஒருமுறை உற்றுப் பார்த்தான். அவள் தன் இடுப்பிலிருந்த குடத்தை நீரோடு நழுவ விட்டு விட்டாள். அது தொப்பென்று விழுந்தது. காந்தாமணி அதைக் குனிந்தெடுத்து "ஐயோ, நான் என்ன செய்வேனம்மா? குடம் ஆரங்குல ஆழம் அமுங்கிப் போய்விட்டதே? எங்கம்மா எனக்குத் தூக்குத் தண்டனை விதிப்பாளே?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டாள்.

மார்புத் துணியை நெகிழவிட்டாள். பொதியை மலைத் தொடரை நோக்கினாள்.

இந்தக் காந்தாமணி மேற்படி மலையாளிப் பையனிடம் காதல் வரம்பு மிஞ்சிக் கொண்டவளென்பதை நான் தொலைவிலிருந்தே தெரிந்து கொண்டேன். பின்னிட்டு விசாரணை பண்ணியதில் காந்தாமணியின் பிதாவாகிய பார்த்தசாரதி அய்யங்கார் பூர்வம் நெடுநாள் மலையாளத்தில் உத்தியோகம் பண்ணிக் கொண்டிருந்தாரென்றும் அங்கு மிகச் சிறிய குழந்தைப் பிராய முதலாகவே காந்தாமணிக்கும், அந்த மலையாளிக்கும் காதல் தோன்றி அது நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறதென்றும் வெளிப்பட்டன. சப்—இன்ஸ்பெக்டர் அய்யங்கார் திரவிய லாபத்தை உத்தேசித்துக் காந்தாமணியைப் பென்ஷன் டிப்டி கலெக்டரும், கந்தலாபுரம் ஜமீன் திவானுமாகிய ஐம்பத்தைந்து வயதுள்ள கோழம்பாடு

ஸ்ரீநிவாஸாசாரியார் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்து விட்டார். இந்த ஸ்ரீநிவாஸாசாரியாருடன் வாழக் காந்தா மணிக்குச் சம்மதமில்லை. இந்தச் செய்தியெல்லாம் எனக்குப் பின்னிட்டுத் தெரிய வந்தது.

அன்று கிணற்றங்கரையில் என் கண்முன்னே நடந்த விஷயத்தை மேலே சொல்லுகிறேன். காந்தாமணி குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு, "எங்கம்மா வைவாளே, நான் என்ன செய்வேனம்மா!" என்று அழுதுகொண்டே போனாள். ஆனால் அவள் தன்னுடைய தாய் தந்தையர் இருந்த சத்திரத்திற்குப் போகவில்லை. நேரே, அந்த ஊருக்கு மேற்கேயுள்ள நதிக்குப் போனாள். தாகத்துக்கு நீர் குடித்த பின்பு மலையாளியும் அந்த ஆற்றங்கரையை நோக்கிச் சென்றான். இதற்குள்ளே எனக்கு ஸந்தியாவந்தன காலம் நெடுந்தூரம் தவறிவிட்டபடியால் நான் அந்தக் கிணற்றடியை விட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அன்று மாலை என் வீட்டுக்கு மேற்படிக் கிராமத்து வாத்தியார் சுந்தர சாஸ்திரி வந்தார். வந்தவர் திடீரென்று கேட்டீர்களோ விஷயத்தை வெகு ஆச்சரியம்! வெகு ஆச்க்ரியம்! என்று கூக்குரலிட்டார்.

"என்ன ஓய் ஆச்சரியம்? நடந்ததைச் சொல்லிவிட்டுப் பிறகு கூக்குரல் போட்டால் எனக்குக் கொஞ்சம் ஸௌகர்யமாக இருக்கும்" என்றேன். "சத்திரத்திலே சப்-இன்ஸ்பெக்டர் பார்த்தசாரதி அய்யங்கார் சங்கரநாதன் கோவிலிலிருந்து வந்து இறங்கியிருக்கிறாரோ, இல்லையோ? அவர் ஒரு பெண்ணையும் கூட்டிக்கொண்டு வந்தார். அவருடைய மகள், அந்தக் குட்டி வெகு அழகாம். திலோத்தமை, ரம்பையையெல்லாம் இவளுடைய காலிலே கட்டி அடிக்கவேண்டுமாம். அதற்குப் பெயர் காந்தா மணியாம். சொல்லுகிறபோதே நாக்கில் ஜலம் சொட்டுகிறது. காந்தாமணி, காந்தாமணி, என்ன நேர்த்தியான நாமம். ரஸம் ஒழுகுகிறது........"

இங்ஙனம் ஸுந்தர சாஸ்திரி காந்தாமணியை வர்ணித்துக் கொண்டு போவதை நான் இடையே மறித்து: "மேலே நடந்த சரித்திரத்தைச் சொல்லும்" என்றேன்.

"அந்தக் காந்தாமணியைக் காணவில்லையென்று விடியற் காலமெல்லாம் தேடிக் கொண்டிருந்தார்கள். இப்போதுதான்

அம்பாசமுத்திரத்திலிருந்து ஒரு தந்தி கிடைத்ததாம். இன்று பகல் 3 மணிக்கு மேற்படி காந்தாமணியும், ஒரு மலையாளப் பையனும் கிறிஸ்தவக் கோவிலில் விவாகம் செய்து கொண்டார்களென்று அந்தத் தந்தி சொல்லுகிறதாம்'' என்றார்.

சில தினங்களுக்கப்பால் மற்றொரு ஆச்சரியம் நடந்தது. கிராமத்து மாஜிப் போலீஸ் சேவகர் நரைத்த தலைப் பார்த்தசாரதி அய்யங்காரும், அன்று கிணற்றங்கரையில் அவருடைய காதற் பார்வைக்கிலக்காயிருந்த கிழவியும் ரங்கூனுக்கு ஓடிப் போய் விட்டார்கள். பின்னிட்டு அந்தக் கிழவி தலை வளர்த்துக் கொண்டு விட்டாளென்றும் பார்த்தசாரதி அய்யங்காரும் அவளும் புருஷனும் பெண்சாதியுமாக வாழ்கிறார்களென்றும் அய்யங்கார் அங்கொரு நாட்டுக்கோட்டைச் செட்டியிடம் வேலை பார்த்துத் தக்க சம்பளம் வாங்கிக் கொண்டு க்ஷேமமாக வாழ்கிறாரென்றும் ரங்கூனிலிருந்து செய்தி கிடைத்தது.

# 8. உஜ்ஜயிநீ

"கண்ணே, நாம் சக்தி தர்மத்தைக் கைக்கொண்டோம். நமக்கு நீ சக்தி. நீ இறந்தால் நான் உடன் கட்டை ஏறுவேன்" என்று விக்கிரமாதித்த ராஜன் தன்னுடைய ப்ரியதனமாகிய ஸ்ரீமுகியினிடம் சொன்ஞன். அப்போது அவள் "உஜ்ஜயிநீ புரத்து மாகாளி அருளாலே உனக்கு ஆயிரம் வயதுண்டு. அப்படி ஆயிரத்தில் ஒன்று குறைய நானும் இருப்பேன்" என்ருள்.

"எனக்கு வயது தொளாயிரத்துத் தொன்னூற்ெருன்பது தான் போலும்! "என்று விக்கிரமாதித்தன் பெருமூச்சு விட்டான். அப்பொழுது ஸ்ரீமுகி சொல்லுகிருள்:—

"காந்தா, நீ எனது குமாரன். என் சொற்படி கேள். தர்மம் பெண்ணுல் ஏற்படுத்தப்பட்டது. விரதம், தவம், பூஜை, ஆஹாரம், வீடு, பள்ளிக்கூடம் அனைத்தும் ஏற்படுத்திக் கொடுத்தது பெண். தர்மம் பெண்ணுல் உண்டானது. பெண் தாய், பெண்ணைத் தன்னில் பாதியென்று கருதாமல், தனக்கு அது பகுதிப்பட்டிருக்கவும் வேண்டும். ஆனல் தான் அதைத் தன் பகுதி யாகத் தாஞக, நோக்கவும் மாட்டேன் என்று ஆண் நெடுங்கால மாகச் சொல்லி வருகிறது. அதற்காகப் பெண் பழி வாங்குகிறது. ஆணைப் பழி வாங்கி அந்தத் துயரத்தில் தானும் மடிகிறது.

"சிவன் பாதி, சக்தி பாதி போலச் சரி பாதியாக எப்போது ஆண் பெண்ணை ஒப்புக் கொள்கிறதோ, அப்போது ஆணுக்குப் பெரிய வலிமை சித்திக்கிறது. கலியுக முடிவில் இது முற்றிலும் பரிபூரணமாக நிகழும்" என்ருள்.

"அப்போது நமது மஹாகாளி தேவிக்கு நாமமென்ன?" என்று விக்கிரமாதித்தன் கேட்டான்.

அப்போது ஸ்ரீமுகி சொல்லுகிருள்—

"அப்போது மஹாகாளி தேவிக்கு நித்ய கல்யாணீ உஜ்ஜயிநீ என்று பெயர்"

"இதற்கு யாரெல்லாம் ஸாக்ஷி?" என்று விக்ரமாதித்தன் கேட்டான்.

"இதற்கு தேவர் ஸாக்ஷி, பஞ்ச பூதங்கள் ஸாக்ஷி மனுஷ்ய, மிருக, பக்ஷி, கீடாதி ஜந்து கணங்கள் ஸாக்ஷி; இதற்கு அந்த மஹாகாளியே ஸாக்ஷி" என்று ஸ்ரீமுகி சொன்னாள். "சரி" என்று சொல்லி விக்கிரமாதித்தன் இருந்து விட்டான். மறுநாள் காலையில் இருவரும் ஆலயத்துக்குச் சென்றனர். அங்கே தேவியின் முடிமீது நித்ய கல்யாணீ உஜ்ஜயினீ என்று வயிர எழுத்துக்களால் எழுதியிருந்தது. அதனைக் கண்டு இருவரும் தொழுது மகிழ்ச்சியுற்றனர். மற்றை நாள் விக்கிரமாதித்தன் தனது அரண்மனையில் ஒரு பொற்றூண் நாட்டி அதில்: "பெண்ணைப் பேணுவோர் கண்ணைப் பேணுவார். பெண்ணுக்குக் கண் உண்டு. பெண் தாய். வந்தே மாதரம்" என்று எழுதி வைத்தான். மேற்படி கதை சாக்த சாத்திரத்திலே கூறப்பட்டது. அதை லோகோப காரமாக வெளிப்படுத்துகிறேன்.

# 9. கடல்

ஒரு நாள் மாலையில் நான் வேதபுரம் கடற்கரையில் தனியிடத்தில் மணல் மேலே போய்ப்படுத்துக் கொண்டிருந்தேன். பகலில் நெடுந்தூரம் நடந்த இளைப்பினால் அப்படியே தூங்கிப் போய்விட்டேன். அந்தத் தூக்கத்திலே கண்ட கனவை எழுதுகிறேன்.

நடுக்கடலில் ஒரு தீவு; அதனிடையே பெரிய அரண்மனை. அரண்மனைக்கருகே சிங்காரத் தோட்டம். அதில் ஒரு நீரோடை; அதனருகே புல்லாந்தரைமேல் பதினாறு வயதுள்ள ஒரு கன்னிகை உட்கார்ந்திருந்தாள். அவள் என்னைக் கண்ட மாத்திரத்தில் எழுந்து அரண்மனைக்குள் ஓடிப்போய்விட்டாள். நான் அவ் வழியைப் பின் தொடர்ந்து சென்றேன். போகிற வழியில் ஒரு பெரிய பாம்பு கிடந்தது. என்னைக் கண்டவுடன் படத்தைத் தூக்கி என்மேலே பாய்ந்து கடிக்க வந்தது. நான் ஓடினேன். அது என்னைத் துரத்திக் கொண்டு வந்தது. ஓடியோடிக் கடற் கரைக்கு வந்து சேர்ந்தேன். பாம்பு காலுக்கு மிகவும் சமீபமாக வந்தது. கடலுக்குள்ளே குதித்தேன். கடலிலே புயற்காற்று ஓரலையைத் தூக்கி மூன்று பனையளவு தூரம் மேலே எறிகிறது. மற்றோரலை மூன்று பனையளவு பள்ளத்தில் வீழ்த்துகிறது. எப்படியோ சாகாமல் அந்த அலைக்குத் தப்பிவிட்டேன். நெடு நேரத்துக்கப்பால் அலை அடங்கிற்று. நான் நீச்சை விடவில்லை. எப்படியோ நீந்திக் கொண்டு வருகிறேன். ஆனால் கரை தென்படவில்லை, பிறகு கைகளில் நோவுண்டாயிற்று. என்னால் நீந்த முடியவில்லை. என்னுடைய குலதெய்வத்தின் பெயரை உச்சரித்தேன். அங்கே ஒரு கிழவன் தோணி விட்டுக் கொண்டு வந்தான். "அண்ணே, அண்ணே, என்னை உன்னுடைய தோணியில் ஏற்றிக் கொள்ளு. நான் புயற்காற்றில் அடிபட்டு மிகவும் நொந்துபோயிருக்கிறேன்" என்று சொன்னேன். அவன் தனது தோணியில் ஏற்றிக் கொண்டான். தோணியை விட்டுக் கொண்டு கடலிலே

போகிறோம், போகிறோம், வழி தொலையவேயில்லை, "அண்ணே, கரை சேர இன்னும் எத்தனை காலம் செல்லும்?" என்று சொன்னேன். அந்தக் கிழவன் தின்பதற்குக் கொஞ்சம் அரிசி மாவும், ஒரு மிடறு தண்ணீரும் கொடுத்தான். இளைப்பாறி அப்படியே கண்ணயர்ந்தேன். (கனவுக்குள்ளே ஒரு தூக்கம்) கொஞ்சம் ஆயாசம் தெளிந்தவுடனே கண்ணை விழித்துப் பார்த்தேன். கரை தெரிந்தது. கிழவன் என்னைக் கரையிலிறக்கிவிட்டு, மறுபடி தனது தோணியைக் கடலிலே செலுத்திக்கொண்டு போனான்.

நான் அவனிடம் எதெல்லாமோ கேள்வி கேட்டேன். அவன் ஒன்றுக்கும் மறுமொழி சொல்லவில்லை. கண்ணுக் கெட்டும் வரை அவன் தோணியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மறுபடி அந்தத் தீவுக்குள் கொஞ்ச தூரம் போனவுடனே பழைய அரண்மனை தெரிந்தது. அதனருகே சிங்காரத் தோட்டம், அதே நீரோடை. அந்தப் பெண்ணும் முன்போலவே புல்லாந் தரைமேல் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். என்னைக் கண்டவுடன் மறுபடி எழுந்து தன் வீட்டை நோக்கி ஓடினாள். நான் தொடர்ந்து போகவில்லை. தொடர்ந்து போனால் முன்போலவே வழியில் பாம்பு கிடக்குமென்று நினைத்து மிகவும் பயங்கொண்டவனாய், அதிவேகமாகக் கடற்கரையை நோக்கி ஓடிச் சென்றேன். ஓடும் போதே பாம்பு துரத்திக் கொண்டு வருகிறதா என்று பலமுறை திரும்பிப் பார்த்தேன். பாம்பு வரவில்லை. கரைக்கு வந்து சேர்ந்தவுடனே இந்தத் தீவிலிருந்து எப்படியேனும் வெளியேறிப் போகலாமென்று யோசித்தேன். அந்தப் பெண் யாரென்று தெரிந்துகொண்ட பிறகுதான் அந்தத் தீவிலிருந்து புறப்பட வேண்டுமென்று மற்றொரு யோசனையுண்டாயிற்று, அப்போது பசியும் களைப்பும் அதிகமாக இருந்தபடியால் அவற்றைத் தீர்க்க ஏதேனும் வழியுண்டா என்று சுற்றிப் பார்த்தேன். கரையோரமாகவே நெடுந்தூரம் நடந்து வந்தபோது அங்கே ஒரு குடிசை தென்பட்டது. அந்தக் குடிசைக்குள்ளே போய் நுழைந்தேன். அதற்குள்ளே ஒரு பிள்ளையார் வைத்திருந்தது. அந்த மூர்த்தியின் முன்னே ஓரிலையில் சோறு, கறி, பாயஸம், பக்ஷணம் முதலியனவும், ஒரு குடத்தில் நீரும், பக்கத்தில் புஷ்பம், சந்தனம் முதலிய

பூஜா திரவியங்களும் வைத்திருக்கக் கண்டேன். எனது பசியின் கொடுமையினால் அந்த ஆஹாரத்தைத் தின்றுவிடலா மென்று யோசித்தேன். பிறகு சிந்தனை பண்ணிப் பார்த்தேன், "போன ஜன்மத்தில் என்ன பாவம் பண்ணியோ இந்த ஜன்மத்தில் இந்தத் தீவில் வரவும் இத்தனை கஷ்டப்படவும் ஹேதுவுண்டாயிற்று. இப்போது பசி துன்பத்தைப் பெரிதாக எண்ணி, எந்த மஹானோ ஸ்வாமி பூஜைக்காக வைத்திருக்கும் திருவமுதை அபகரித்தால், இன்னும் பாவமேற்படும். ஆதலால் அந்தக் காரியம் செய்யக் கூடாது என்று தீர்மானம் செய்துகொண்டேன். பசி தாங்க வில்லை, நாமே பூஜை நைவேத்தியம் முடித்துவிட்டுப் பிறகு அந்த உணவைக் கொள்ளலாமென்று நினைத்து ஸ்நானம் செய்ய இடம் கிடைக்குமா என்று பார்க்கும்பொருட்டு வெளியே வந்து சிறிது தூரம் சுற்றிப் பார்த்ததில் அங்கே ஒரு சுனை இருந்தது. அதில் ஸ்நானம் செய்து ஸந்தி முதலிய கர்மங்களை முடித்துவிட்டு மறுபடி குடிசைக்குள்ளே போய்ப் பார்க்கையில் பிள்ளையார் மாத்திரந்தானிருந்தது. சோறு, வடை, தண்ணீர், பூ, சந்தனம், ஒன்றையும் காணவில்லை. எனக்கு வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. "பிள்ளையாரே, பிள்ளையாரே உனக்கு எங்கள் வேதபுரி சேர்ந்தவுடனே முப்பத்து மூன்று தேங்காய் உடைத்துப் பூஜை செய்கிறேன். எனக்கிந்த ஆபத்து நேரத்தில் உதவி செய்ய மாட்டாயா ?" என்று வேண்டி வருத்தப்பட்டேன்.

இந்நிலையில் எனது கனவு தடைப்பட்டது. பல குழப்பங்களுண்டாயின. செய்தி நினைப்பில்லை, பிறகு மறுபடியும் நான் கடலலைகளின்மீது மிதந்து செல்வது கண்டேன். யுகப்ரளயம் போல இருந்தது. என் கைகள் புடைத்தன. கண் தெரியவில்லை. பிரக்ஞை சரியில்லை. கடலைத் திவலை திவலையாக உடைத்து நாசம் செய்துவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் வாயு புடைப்பது போலிருந்தது. அந்தச் சமயத்தில் எனதுடம்பைக் கடலலைகள் பந்தாடின. என்னுயிரைக் கால தூதர் பந்தாடுவது போலத் தோன்றிற்று. அப்போது மீண்டும் குலசக்தியின் பெயரை ஸ்மரித்து விநாயகரை நினைத்துப் "பிள்ளையாரே, என்னை வேதபுரத்துக் கரை சேர்த்து விட்டால் உமக்கு மூவாயிரத்து முந்நூறு தேங்காய் உடைக்கிறேன். காப்பாற்ற வேண்டும், காப்பாற்ற வேண்டும்" என்று என்னை அறியாமல் கூவினேன்.

சிறிது நேரத்துக்குள் புயற்காற்று நின்றது. அங்கே ஒரு தோணி வந்தது, தோணியின் அழகு சொல்ல முடியாது. மயில் முகப்பும், பொன்னிறமும் கொண்டதாய் அன்னம் நீந்திவருவதுபோல மெதுவாக என்னருகில் வந்த அத் தோணியிடையே ஒரு மறக் குமாரன் ஆஸனமிட்டு வீற்றிருந்தான். அவன் முகத்தினொளி தீயொளிபோல விளங்கிற்று. தோணியைக் கண்டவுடனே நான் கை கூப்பினேன். அப்போது தோணிக்காரனிடம் என்னை ஏற்றிக் கொள்ளும்படி அவன் கட்டளையிட்டான். அவர்கள் என்னை ஏற்றிக் கொண்டனர். அந்தத் தோணியில் ஏறினவுடனே என் உடம்பிலும், மனதிலுமிருந்த துன்பங்களெல்லாம் நீங்கிப் போயின. என் உடம்பைப் பார்த்தால் ராஜாவுடை தரித்திருக் கிறது. பதினாறு வயதுப் பிள்ளையாகவே நானுமிருந்தேன். தோணியிடையிருந்த மன்னன் கரத்தில் வேல் தெரிந்தது. அப்போது கண்ணை விழித்தேன். வேதபுரத்துக் கடற்கரை, மாலை வேளை, மணல்மீது நான் படுத்திருப்பது கண்டேன்.

நம்பிக்கையுண்டாகவில்லை. கண்ணை நன்றாகத் துடைத்துப் பார்த்தேன். தீவும், புயல்காற்றும், கனவென்று தெரிந்து கொண்டேன். அந்தத் தீவில் என்னைக் கண்டவுடன் ஓடி மறைந்த பெண்ணின் வடிவம் என் கண்முன்னே நிற்பது போலிருந்தது. பிறகு தோணியிலே கண்ட மன்னன் வடிவம் தெரிந்தது..வீடு வந்து சேர்ந்தேன்.

வேதபுரத்தில் மௌனசாமியார் என்றொருவர் இருக்கிறார். அவரிடம் எனது கனவைச் சொல்லி, அந்தத் தீவிலே கண்ட பெண் யாரென்று கேட்டேன். "உன்னை யார் காப்பாற்றிய தென்பதை நீ அறியவில்லை, அந்தப் பெண் உன்னிடம் அன்பு கொண்டாள். இரண்டாமுறை தோணியிலே தோன்றிய இளவரசன் கையில் ஒரு வேல் இருந்தது கண்டனையா ? " அதுவே உனக்குப் பெண்ணாகத் தோன் றிற்று. உன்னைக் கவலைக் கடலில் வீழ்த்திய பெண்ணே பிறகு வேலாகத் தோன்றி உன்னைக் காத்தாள்" என்று சொன்னார். சக்தியே வேலென்றும் அதுவே உயிருக்கு நல்ல துணையென்று தெரிந்து கொண்டேன். சீக்கிரத்தில் நல்ல நாள் பார்த்து வேதபுரத்திலுள்ள ஏழைப் பிள்ளையாருக்கு மூவாயி ரத்து முன்னூறு தேங்காய் உடைக்க வேண்டுமென்று தீர்மானம் செய்திருக்கிறேன்.

# 10. கத்திச் சண்டை

மார்கழி மாதத்து நாலாம் வாரம். அதாவது, குளிர் ஜாஸ்தி. அதிலும், வேதபுரம் கடற்கரைப் பட்டணம். குளிர் மிகவும் ஜாஸ்தி. ஒரு நாள் ராத்திரி நான் குளிருக்குப் பயந்து சுகாதார சாஸ்த்ரத்தைக் கூடப் பொருட்டாக்காமல் என் அறைக்குள் நாலு ஜன்னல்களையும் சாத்தி முத்திரை வைத்துவிட்டுப் படுத்துக் கொண்டிருந்தேன்.

விடிய இரண்டு ஜாமம் இருக்கும்போது விழித்துக் கொண்டேன். அதற்கும் குளிர்தான் காரணம். வாடை குளு குளு வென்று வீசுகிறது. வடபுறத்து ஜன்னலின் கதவுகள் காற்றில் தாமாகவே திறந்து கொண்டன. எழுந்து போய் ஜன்னலை நேராக்குவோமென்று யோசித்தால் அதற்கும் சோம்பலாக இருந்தது. போர்வையை நீக்கிவிட்டு இந்தக் குளிரில் எவன் எழுந்து போய் ஜன்னலைச் சாத்துவான்? என்ன செய்வோம் என்று ஸங்கடப்பட்டுக் கொண்டே படுத்திருந்தேன். மழை இதற்குள்ளே பெரிதாக வந்து விட்டது. மழை களகளவென்று கொட்டுகிறது. வாடைக் காற்று வந்து பல்லைக் கட்டுகிறது.

உயிரை வெறுத்து தைரியத்துடன் எழுந்து போய் ஜன்னலை சாத்துவோம் என்று சொல்லி எழுந்தேன்.

அப்போது ஒரு பண்டாரம் சங்கூதிச் சேகண்டி யடித்துப்பாடிக் கொண்டு வந்தான். மார்கழி மாதத்தில் வருஷந்தோறும் ஒரு வள்ளுவன் வந்து பாதி ராத்திரி நேரத்திலேயே வேதபுரத்து வீதிகளில் எல்லாம் திருவாசகம் பாடிக்கொண்டு சங்கூதிக் கொண்டு சேகண்டி யடித்துக் கொண்டு சுற்றுவது வழக்கம். அவன்தான் இந்த வருஷமும் வந்து கொண்டிருப்பானென்றெண்ணி நான் ஆரம்பத்தில் ஒரு நிமிஷம் கவனியாமல் இருந்தேன். பிறகு கணீர் என்று பாட்டுச் சத்தம் காதில் வந்து மதுரமாக விழுந்தது. அடா இது பழைய வள்ளுவனுடைய குரலில்லை. இது ஏதோ புதிய குரலாக இருக்கிறதென்றெண்ணி நான் குளிரையும் கவனி

யாமல் ஜன்னல் ஓரத்திலே கொஞ்சம் நின்றேன். மழை கொட்டுகிறது. அறைக்குள்ளே எனக்கு கைகால் விரையலெடுக்கிறது.

அந்தப் பண்டாரம் வஸந்த காலத்தில், மாலை நேரத்தில், பூஞ்சோலையில் ராஜகுமாரன் ஒருவன் காற்று வாங்கிக் கொண்டு ஓய்யாரமாக நடப்பது போலே (அந்தப் பண்டாரம்) அந்த மழையில் நடந்து செல்லுகிறான். பிரம்மானந்தமாகத் திருவாசகம் பாடுகிறான் :—

" பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறை போலும் காணேடி !"

இந்தப் பாட்டை அவன் பாடின ராகம் என் மனதை விட்டு இப்போது கூட நீங்கவில்லை. மனுஷ்ய கானம் போலில்லை. தேவகானம் போலேயிருந்தது. " ஹே ! யாரப்பா பண்டாரம், நில்லு !" என்று சொல்லிக் கூவினேன். அவன் நின்றான். " நீ போன வருஷம் திருப்பள்ளியெழுச்சி பாடி வந்தவனாகத் தோன்றவில்லையே ? நீ யார் ?" என்று கேட்டேன். " நான் போன வருஷம் பாடினவனுடைய மகன். நான் பாடினது திருச்சாழல் " என்றான். இவன் அதிக பிரஸங்கி என்று தெரிந்து கொண்டு, " உன் பெயரென்ன ?" என்று கேட்டேன். " என் பெயர் நெட்டை மாடன் " என்று சொன்னான். " சரி போ " என்று சொன்னேன். அவன் இரண்டடி முன்னே போய் மறுபடி திரும்பி வந்து " ஐயரே, உம்முடைய பெயர் என்ன ?" என்று கேட்டான்.

" என் பெயர் காளிதாசன் " என்று சொன்னேன்.

" ஓஹோ ? பத்திரிகைக்குக் கதைகள் எழுதுகிறீரே, அந்தக் காளிதாசன் நீர் தானோ ?" என்றான்.

" ஓஹோ ? இவன் பத்திரிகை படிக்கிறானா ?" என்றெண்ணி வியப்புற்று, நான் அவனிடம் " தம்பி, நெட்டை மாடா, உனக்கு சங்கீதம் யார் கற்றுக் கொடுத்தார்கள் ? நீ இதுவரை எந்த ஊரிலே வளர்ந்தாய் ?" என்று கேட்டேன். அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான் :—

" ஏ, ஐயரே, நான் மழையில் நிற்கிறேன். நீ அறைக்குள் நின்று கொண்டு என்னிடம் நீண்ட கதை பேசுகிறாயே. மேல் தளத்திலிருந்து கீழே இறங்கிவா, வாசல் திண்ணையில் உட்

கார்ந்து கொண்டு பேசலாம். நானும் உன்னிடத்தில் பல கேள்விகள் கேட்கவேண்டுமென்று நெடுநாளாக யோசனை பண்ணிக் கொண்டிருந்தேன். இறங்கி வருவீரா? என்று கேட்டான்.

"இவன் என்னடா: வெகு விசேஷத்தனாகத் தெரிகிறதே!" என்று நான் ஆச்சரியப்பட்டுக் கீழே இறங்கி வருவதாக ஒப்புக் கொண்டேன். அவன் வாசற்படியேறி திண்ணையில் உட்கார்ந்தான். நான் கீழே போகையில் ஒரு மழை லாந்தர் கொளுத்திக் கொண்டு போனேன். அவன் கையிலும் ஒரு மழை லாந்தர் கொண்டு வந்திருந்தான். திண்ணையில் போய் உட்கார்ந்த உடனே நாங்கள் இருவரும் ஒருவரை யொருவர் ஏற இறங்க பார்த்துக் கொண்டோம். அவன் தலை சுத்த மொட்டை, உடம்பு ஒற்றை நாடி; சதைப்பற்றுக் கிடையாது. ஆனால் உறுதியான உடம்பு; மேலே துணி கிடையாது. இடுப்பில் மாத்திரம் ஒரு துணி கட்டிக் கொண்டிருந்தான். மேலெல்லாம் மழைத்தண்ணீர் ஓடுவதை அவன் துடைக்கவில்லை. குளிரினால் அவன் முகம் விகாரப்படவில்லை. அவனைப் பார்த்தவுடனேயே எதனாலேயோ ஹம்ஸ பக்ஷியின் ஞாபகம் வந்தது. ஹாம்! ஆமாம்! அவன் முன்பு நடந்து செல்லக் கண்டபோது நான் என் மனதில், 'இவன் என்னடா, அன்ன நடை நடக்கிறான்!' என்று நினைத்துக் கொண்டேன். மேலும், இவன் ஆசாமியைப் பார்த்தால் கோயில் அன்னவாஹனம் எத்தனை பொறுமையும், இனிமையுமாகத் தோன்றுமோ அத்தனை பொறுமையும் இனிமையுமான முக வசீகரமுடையவனாக இருந்தான்.

நான் அப்போது அவனை நோக்கி:— "என்னிடம் ஏதோ கேள்விகள் கேட்க வேண்டுமென்று நெடுங்காலம் யோசனை, செய்து கொண்டிருந்ததாகச் சொன்னாயே, கேள்" என்றேன்.

அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான்:—

"உன்னிடம் கேள்விகள் கேட்க வேண்டுமென்ற விருப்பமிருந்ததாக நான் தெரிவிக்கவில்லை. உன்னிடம் ஸம்பாஷணை செய்ய வேண்டுமென்ற விருப்பமிருந்ததாகச் சொன்னேன். நீ ஏதாவது கேள்வி கேள். நான் ஜவாப் சொல்லுகிறேன். அதுதான் எனக்குகந்த ஸம்பாஷணை" என்றான். "இதென்ன ஸங்கடம்" என்று யோசித்து, நான் இவனிடம் முன் கேட்ட

கேள்விகளைத் திரும்பவும் கேட்டேன். "நீ ஸங்கீதம் எங்கே படித்தாய்? இத்தனை காலம் எந்த ஊரில் இருந்தாய்?" என்று வினவினேன்.

நெட்டை மாடன் சொல்லுகிறான்:— "அறிவூர் வீணை ரகுநாத பட்டர் மகன் ஆஞ்சனேய பட்டரிடம் நான் ஸங்கீதம் வாசித்தேன். இதுவரை அந்த ஊரிலே தான் வாஸம் செய்தேன்" என்றான்.

அப்போது நான் கேட்டேன்:—"தம்பி நெட்டை மாடா, நீ ஜாதியில் வள்ளுவனாயிற்றே! ரகுநாதபட்டர் ஆஞ்சனேய பட்டர் என்ற பெயர்களைப் பார்த்தால் அவர்கள் பிராமணராகத் தோன்றுகிறதே! உங்கள் ஜாதியார் பிராமணருக்கு ஸமீபத்தில் வந்தால் கூட தீண்டல் தோஷம் என்று சொல்லுவது வழக்கமாயிற்றே. அப்படியிருக்க நீ அவரிடம் ஸங்கீதம் எப்படிப் படித்தாய்?" என்றேன்.

அதற்கு நெட்டை மாடன் சொல்லுகிறான்:— "நீ கேட்ட கேள்விக்கு ஜவாப் சொல்ல வேண்டுமானால் என்னுடைய கதையை ஆரம்பத்திலிருந்தே தொடங்கிச் சொல்ல வேண்டும். அவ்வளவு தூரம் பொறுமையுடன் கேட்பாயா?" என்றான்.

"கேட்கிறேன்" என்று சொல்லி உடம்பாடு தெரிவித்தேன். அப்போது நெட்டை மாடன் சொல்லுகிறான்:—

"நான் வேதபுரத்தில் இருபத்தாறு வருஷங்களுக்கு முன் பிறந்தேன். என் தகப்பனார் சோற்றுக் கில்லாமல் நான் நாலு வயதுப் பையனாக இருக்கும் போது ஒரு ஸர்க்கஸ் கம்பெனியாருக்கு என்னை விற்று விட்டார். அந்தக் கம்பெனியில் சூராதி சூரத்தனமான வேலைகள் செய்து மிகுந்த கீர்த்தி ஸம்பாதித்தேன். பன்னிரண்டு வயதாக இருக்கும்போது அறிவூருக்குப் போனேன். அந்தக் கம்பெனித் தலைவரான மஹாராஷ்ட்ரப் பிராமணருக்கு என்னிடம் மிகுந்த அபிமானம். அறிவூர் என்பது மலை நாட்டில் ஒரு பெரிய ஜமீந்தாருடைய ராஜதானி நகரம். அந்த ஊரில் ஸர்க்கஸ் இரண்டு மாஸம் ஆடிற்று. அப்போது என்னுடைய எஜமானனாகிய ராயருக்கு வயதாய் விட்டபடியால் சீக்கிரத்தில் கம்பெனியைக் கலைத்துவிட்டுப் பண்டரிபுரத்துக்குப் போய் அங்கு வீடு வாங்கித் தனது முதுமைப் பருவத்தை ஹரி பக்தியில் செல

விட வேண்டுமென்ற யோசனை பண்ணிக் கொண்டிருந்தார். அவருக்கும் ஜமீந்தாருக்கும் மிகுந்த நட்புண்டாயிற்று. ஜமீந்தார் கத்திச் சண்டையில் கெட்டிக்காரனுகவும் வயதில் குறைந்தவனுக வும் தனக்கொரு பக்கச் சேவகன் வேண்டுமென்று விரும்பினுர். என்னுடைய எஜமானுகிய ராயர் என்னை சிபாரிசு பண்ணினுர். இதற்கிடையே எனது தகப்பனுருக்கும் எஜமான் ராயருக்கும் அடிக்கடி கடிதப் போக்கு வரவு நடந்து கொண்டு வந்தது. எனது தகப்பனுரும் என்னை அடிக்கடி பல ஊர்களில் வந்து பார்த்துக் கொண்டிருந்தார். அறிவூர் ஜமீந்தார் எனக்கு அரண்மனையிலே சோறு போட்டு மகன் போலே வளர்த்தார். ஸங்கீதம் அந்த ஸமஸ்தானத்து பாகவதராகிய ஆஞ்சனேய பட்டரிடம் படித் தேன். யோகாப்யாசம் பண்ணியிருக்கிறேன். கத்திச் சண்டை யிலே பேர் வாங்கியிருக்கிறேன். ஆறு பாஷை பேசுவேன். பாடு வேன். நாட்டியமாடுவேன். மிருதங்க மடிப்பேன். ஆனை யேற் றம், குதிரை யேற்றம், கழைக் கூத்து, மல் வித்தைகள்—எனக் குப் பல தொழிலும் தெரியும்'' என்று சொன்னுன்.

இதற்குள் பொழுது விடிந்து விட்டது. நல்ல ஸூர்யோத யத்தில் அவன் முகத்தைப் பார்க்கும்போது நல்ல சுந்தர ரூப முடையவனுக இருந்தான்.

அப்போது நான் அவனை நோக்கி:— "நீ இன்று நம்முடைய வீட்டிலேயே காலை நேரம் போஜனம் செய்துகொள். உன்னுடைய கத்தி சுற்றும் திறமையை எனக்கும் கொஞ்சம் காண்பி'' என் றேன். சரி யென்று ஸம்மதப்பட்டான். பின்பு சொல்லுகிருன்:— "எனக்கு சரியாகக் கத்தி சுழற்றக் கூடியவர்கள் இந்த ஊரில் ஒரே மனுஷ்யன் தான் இருக்கிருர். நான் போய் என் வீட்டிலிருந்து கத்திகளை எடுத்துக் கொண்டு அவரையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்'' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு போய், மறுபடி ஐந்து..மணியிருக்கும் போது வந்தான். இவன் பட்டாக் கத்தி, உண்மையான,....சண்டைக் கத்திகள் கொண்டு வருவா னென்று நான் நினைத்திருந்தேன். இரண்டு மொண்ணை வாள்— வெண்ணெயை வெட்டும் ஸர்க்கஸ் கத்திகள் கொண்டு வந்தான். தனக்கு எதிர் நின்று சண்டை போடக்கூடிய வீராதி வீரனை என் னிடம் அழைத்து வருவதாக அவன் வாக்குக் கொடுத்தபடி அந்த

மனிதனைத் தேடிப் பார்த்ததாகவும், அகப்படவில்லை என்றும், மற்றொரு நாள் கூட்டி வருவதாகவும் இன்று தான்மாத்திரம் தனியே கத்தி வீசிக் காண்பிப்பதாகவும் சொன்னான். சரியென்று சொல்லி நான் அவனுக்கு முதலாவது காபியும், இட்டலியும் கொண்டு வந்து வைத்து சாப்பிடச் சொன்னேன். பாதி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அப்போது குள்ளச் சாமியார் என்ற யோகீசுரர் அங்கே வந்தார். அவரைக் கண்டவுடன் நெட்டை மாடன் எழுந்து ஸலாம் பண்ணி,—'ஜராம், ராம மஹா ராஜ்': என்றான். அவரும் இவனைக் கண்டவுடன் 'ராம், ராம்' என்றார். பிறகு நெடுநேரம் இருவரும் மலையாள பாஷையில் பேசிக் கொண்டார்கள். எனக்கு மலையாளம் அர்த்தமாகாதபடியால் நான் அவர்களுடைய ஸம்பாஷணையை கவனிக்கவில்லை. குள்ளச் சாமியாரை நான் குருவென்று நம்பியிருக்கிறபடியால் அவருக்குக் கடையிலிருந்து வாழைப்பழம் வாங்கிக் கொண்டு வந்து பாலும் பழமும் கொடுத்தேன். இரண்டு பேரும் சாப்பிட்டு முடித்தார்கள். கீழ்த் தளத்தில் சாப்பிட்டார்கள். பிறகு நான் வெற்றிலைத் தட்டைக் கையில் எடுத்துக் கொண்டு மேல் மாடியில் பூஜா மண்டபத்துக்குப் போகலாம் என்று கூறி அழைத்து வந்தேன். இருவரும் மேல் மாடிக்கு வந்தார்கள். நான் ஊஞ்சலின்மீது அவர்கள் இருவரையும் வீற்றிருக்கும்படி செய்து தாம்பூலம் கொடுத்தேன். இருவரும் தாம்பூலம் போட்டுக் கொண்டார்கள். பிறகு ஒரு க்ஷணத்துக்குள்ளே நெட்டை மாடன் வெளிமுற்றத்திலிருந்து ஒரு நாற்காலி எடுத்துக் கொண்டு வந்தான். அதன் மேலே ஏறிக் கொண்டு ஊஞ்சல் சங்கிலிகளைக் கழற்றினான். அடுத்த க்ஷணத்துக்குள் ஊஞ்சலையும் சங்கிலிகளையும் கொண்டு சுவரோரத்தில் போட்டு விட்டான். பிறகு நெட்டை மாடன் என்னை நோக்கி, "எனக்கு ஸமானமாகக் கத்தி வீசத் தெரிந்தவர் இந்த ஊரில் ஒருவர்தானுண்டு என்று சொன்னேனே, அவர் யாரெனில் இந்தச் சாமியார் தான்" என்று குள்ளச் சாமியாரைக் காட்டினான். நான் ஆச்சரியத்தால் ஸ்தம்பிதனாய் விட்டேன்.

ஒரு க்ஷணத்துக்குள் அந்த இருவரும் தலைக்கொரு கத்தியாக எடுத்துக் கொண்டு வீசத் தொடங்கி விட்டார்கள். நெடுநேரம் அவர்களுக்குள்ளே கத்திச் சண்டை நடந்தது. அதைப் பார்த்து

நான் பிரமித்துப் போய் விட்டேன். அத்தனை ஆச்சரியமாக அவ்விருவரும் கத்தி சுழற்றினார்கள். ஒருவருக்கும் காயமில்லை. ஆனால் நடுவே இவன் தலை போய் விடுமோ அவன் தலை போய் விடுமோ என்று எனது நெஞ்சு படக்குப் படக்கென்று புடைத்துக் கொண்டிருந்தது.

பிறகு இருவரும் கத்தியைக் கீழே வைத்து விட்டுக் கொஞ்ச மேனும் ஆயாசமில்லாமல் மறுபடியும் மலையாளத்தில் ஸம்பா ஷணை செய்யத் தொடங்கி விட்டார்கள். கொஞ்சம் பொழுது கழிந்த பின்பு நெட்டை மாடன் போய் விட்டான். குள்ளச்சாமி யார் என்னை நோக்கிச் சொல்லுகிறார் :—" தம்பி, காளிதாஸா, இந்த நெட்டை மாடன் ராஜயோகத்தினால் சித்தத்தைக் கட்டின வன். இவனுக்கு ஈசன் யோகசித்திக்கு வாட்போரை வழியாகக் காண்பித்தான். இவனுக்கு நிகராக வாள் சுழற்றுவோர் இந்தப் பூமண்டலத்தில் யாரும் கிடையாது. ஆனால் இவன் தன்னைக் கொல்ல வந்த பாம்பையும் கொல்லக் கூடாதென்று அஹிம்ஸா விரதத்தைக் கைக்கொண்ட மஹா யோகியாதலால், கொலைத் தொழிலுக்குரியதான கூர்வாளை இவன் கையினால் தீண்டுவது கிடையாது. உடம்பு நன்றாக வசமாக்கும்படி செய்கிற ஹட யோக வித்தைகளில் ஒன்றாக அதை நினைத்து உன் போன்ற அபிமானிகளுக்கு மாத்திரம் தனது திறமையை ஸர்க்கஸ் கத்தி வைத்துக் கொண்டு காண்பிப்பான். வள்ளுவர் குலத்தில் நம் ஊரிலேயே இப்படி ஒரு மஹான் இருப்பது உனக்கு ஆச்சரிய மாகத் தோன்றலாம். இனிமேல் இதற்கெல்லாம் ஆச்சரியப் படாதே. ஹிந்துஸ்தானத்துப் பரதேசி பண்டாரங்களையெல்லாம் மிகுந்த மதிப்புடன் போற்று. பரதேசி வேஷத்தைக் கண்டால் கும்பிடு போடு. எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ? உனக்கு மேன்மேலும் மஹான்கள் தரிசனம் தருவார்கள்" என்றார்.

நான் ஹிந்துஸ்தானத்தின் மஹிமையை நினைத்து வந்தே மாதரம் என்று வாழ்த்திக் குள்ளச் சாமியாரைக் கையெடுத்துக் கும்பிட்டேன். அவர் "ஜீவ" என்று வாழ்த்தி விட்டு, விடை பெற்றுக் கொண்டு சென்றார்.

## கட்டுரைகள்: மாதர்


1. பெண் .. 75
2. தமிழ்நாட்டின் விழிப்பு .. 82
3. பதிவிரதை .. 85
4. பெண் விடுதலை .. 88
5. தமிழ் நாட்டு நாகரிகம் .. 97

# 1. பெண்

வேதபுரத்தில் தர்மவீதியில் வாத்தியார் பிரமராய அய்யர் என்ருெரு பிராமணர் இருக்கிருர். இவர் சாக்த மதத்தைச் சேர்ந்தவர். "சக்திபூஜை" பண்ணுவோரில் சிலர் மதுமாம்ஸ போஜனம் செய்கிருர்கள். இந்த வாத்தியார் அப்படியில்லே. இவர் "சுத்த சைவம்"; அதாவது ஆட்டுக் குட்டியை மாம்ஸம் தின்னும்படி செய்தாலும் செய்யலாம்; இந்த வாத்தியாரை மாம் ஸம் தின்னும்படி செய்ய முடியாது. இவர் இங்கிலீஷ், ப்ரெஞ்சு என்ற இரண்டு பாஷைகளிலும் நல்ல பாண்டித்ய முடையவர். கொஞ்சம் ஸம்ஸ்கிருதமும் தெரியும். பகவத்கீதை, வால்மீகி ராமாயணம், குமார ஸம்பவம் மூன்று நூலும் படித்திருக்கிருர். வேதாந்த விசாரணையிலே நல்ல பழக்கமுண்டு. கதை, காலக்ஷேபம், உபந்யாஸம் முதலியன நடந்தால் தவருமல் கேட்கப் போவார். பெரும்பாலும் கதை கேட்டுவிட்டு அதிருப்தியுடனே திரும்பி வருவார். வீட்டுக்கு வந்து உபந்யாஸிகளின் கொள்கைகளை ஒரு மாஸம் தொடர்ச்சியாக நண்பர்களுடனே தர்க்கிப்பார். "ஹிந்துக்கள் முற்காலத்தில் நல்ல மேதாவிகளாக இருந்தனர். இன்னும் அதிசீக்கிரத்தில் மேலான நிலைமைக்கு வரப்போகிருர் கள். ஆனல், இந்தத் தேதியில், பண்டிதர்களாக வெளிப்பட்டு பிர ஸங்கங்களும், கதைகளும், காலக்ஷேபங்களும் நடத்தும் ஹிந்துக் களிலே நூற்றுக்கு தொண்ணூறு பேர் சமையல் வேலைக்குப் போகவேண்டியவர்கள். அதை விட்டு, உலகத்துக்கு ஞானோபதே சம் பண்ணக் கிளம்பிவிட்டார்கள். இது பெரிய தொல்லை, உபத் திரவம், தொந்தரவு, கஷ்டம், ஸங்கடம், ஹிம்ஸை, தலைநோவு. இந்தத் தேதியில், ஹிந்து ஜாதி முழு முடமாக இருக்கிறது. நம்மவர்கள் மூளைக்குள்ளே கரையான் பிடித்திருக்கிறது. எனக்கு ஹிந்துக்களின் புத்தியை நினைக்கும்போது வயிற்றெறிச்சல் பொறுக்க முடியவில்லை. படகோனியா தேசத்தில் கூட சராசரி நூற்றுக்கு இத்தனைபேர் மூடர்களாக இருப்பார்களென்று

தோன்றவில்லை.'' என்று நாலாவிதமாக நம் தேசத்தாரின் அறிவு நிலைமையை தூஷணை செய்துகொண்டேயிருப்பார்.

மேற்படி பிரமராய வாத்தியாருக்குத் தமிழிலும் கொஞ்சம் ஞானமுண்டு. ஐரோப்பியரின் சாஸ்திரங்களில் பலவற்றைத் தமிழில் எழுதியிருக்கிறார். சில சமயங்களில் கவிதை கூட எழுதுவார். இவருடைய கவிதை மிகவும் உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை; நடுத்தரமானது. இவருக்கு ஸங்கீதத்தில் நல்ல ஞானமுண்டு. ஆனால் பாடத் தெரியாது. தொண்டை சரிப்படாது. தாளத்தில் மஹா நிபுணர். பெரிய பெரிய மிருதங்கக்காரரெல்லாம் இவரைக் கண்டால் பயப்படுவார்கள்.

இவர் இந்தத் தெருவில் வார்த்தை சொன்னால் மூன்றாவது தெருவுக்குக் கேட்கும். பகலில் பள்ளிக்கூடத்து வேலை முடிந்தவுடனே வீட்டுக்கு வந்து, ஸாயங்காலம் ஆறு மணி முதல் எட்டு மணிவரை தம் வீட்டுத் திண்ணையில் சிநேகிதர்களுடன் பேசிக் கொண்டு, அதாவது, கர்ஜனை செய்து கொண்டிருப்பார். பிறகு சாப்பிடப் போவார். சாப்பிட்டுக் கையலம்பி கை ஈரம் உலர்வதற்கு முன்பு, மறுபடி திண்ணைக்கு வந்து சப்தம் போடத் தொடங்கிவிடுவார். இவருடைய வீட்டுத் திண்ணைக்கு அக்கம் பக்கத்தார் 'இடிப் பள்ளிக்கூடம்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அந்த இடிப் பள்ளிக்கூடத்துக்கு வந்து மாலைதோறும் நாலைந்து பேருக்குக் குறையாமல் இவருடைய பேச்சைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அந்த நாலைந்து பேருக்கும் இன்னும் காது செவிடாகாமலிருக்கும் விஷயம் அனேகருக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது.

மேற்படி வாத்தியாருக்கும் எனக்கும் ஸ்நேகமுண்டு. நானும் அடிக்கடி இடிப்பள்ளிகூடத்துக்குப் போய் பேச்சுக் கேட்கும் வழக்கமுண்டு. ஹிந்துக்கள் பரம மூடர்களென்று அவர் சொல்லும் வார்த்தையை மாத்திரம் நான் அங்கீகாரம் செய்து கொள்வது கிடையாது. மற்றப்படி, அனேகம் விஷயங்களில் அவருடைய அபிப்பிராயங்கள் எனக்கு நியாயமாகவே தோன்றும்.

நாலாநாள் ஞாயிற்றுக் கிழமை சாயங்காலம் மழைத்தூற்றலாக இருந்தபடியால், நான் வெளியே உலாவப் போகாமல், பொழுது போக்கும் பொருட்டாக மேற்படி இடிப்பள்ளிக்

கூடத்துக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கே வாத்தியார் கர்ஜனை அட்டஹாஸமாக நடந்து கொண்டிருந்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்களின் " ஜாப்தா " பின்வருமாறு:

(1) வீராசாமி நாயக்கர். (இந்த நாயக்கர் ஆனைக் குட்டியைப் போலிருப்பார்; சர்க்கார் உத்தியோகம்; முப்பத்து மூன்று வயது; அதற்குள் சரியான வழுக்கை நல்ல வ்யவஹார ஞானமுடையவர்; வாய் பேசுவது கிடையாது; கோபம் வருகிற போது கொஞ்சம் பொடி யெடுத்து மூக்கில் போட்டுக் கொள்வார்.

(2) கொங்கண பட்டர். (இவர் பெருமாள் கோயில் பட்டர்; ஏழரையடி உயரம்; இவரை யார் வேண்டுமானாலும் வையலாம்; வேஷ்டியைப் பிடித்திழுக்கலாம். மேற்படி வீராசாமி நாயக்கர் இவருடைய தலையில் கால்மணி நேரத்திற் கொருதரம் குட்டுவார். இவருக்குக் கோபம் வராது. இவருடைய ஜாதகத்திலே கோபத்துக்குரிய கிரகம் சேரவில்லையென்று கேள்வி.)

(3) நாராயண செட்டியார் (பணக்காரர். குள்ளம். வட்டிக்குக் கொடுக்கல் வாங்கல், இடிப்பள்ளிக் கூடம்—இந்த இரண்டு தொழிலையுந் தவிர மூன்றாவது காரியத்தை இவர் கவனிப்பதே கிடையாது. வாரத்துக் கொருமுறை வெள்ளிக் கிழமையன்று பிள்ளையார் கோவிலுக்குப் போவார். மற்றப்படி வீட்டை விட்டு வெளியே போகமாட்டார். இவரை அந்தப்புரச் செட்டியாரென்றும் சொல்வார்கள்.)

(4) குருசாமி பாகவதர். (ஸங்கீத வித்வான்; குழந்தைகளுக்குப் பாட்டும், வாத்தியமும் சொல்லிக் கொடுப்பார். சாரீரம் கட்டை.)

மேற்படி சபையில் நானும் போய்ச்சேர்ந்தேன். பிரமாய வாத்தியாருக்கு என்னைக் கண்டவுடன் கொஞ்சம் சந்தோஷம் ஏற்பட்டது.

"வாருங்கள், வாருங்கள். உங்களுக்கும் ரஸப்படக்கூடிய விஷயந்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்றார்.

"அதாவது என்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"ஸ்திரீகளுடைய பேச்சு" என்றார்.

"ஸ்திரீகளைப் பற்றிய பேச்சா? சரிதான். மேலே உபந்யாஸம் நடக்கட்டும்" என்றேன்.

வாத்தியார் கர்ஜனையைத் தொடங்கினார்:—

"நான் சொன்ன விஷயத்தைச் சுருக்கமாக, 'சக்தி தாஸ'*ருக்கு மறுமுறை சொல்லிக் காட்டிவிட்டு மேலே சொன்னால் தான் அவருக்குத் தொடர்ச்சி தெரியும்" என்று சொல்லி பூர்வ கதையை யெடுத்தார்.

அந்த நிமிஷத்தில் வீராசாமி நாயக்கர் ஒரு தரம்பொடி போட்டுக் கொண்டு கொங்கண பட்டர் தலையில் ஒரு குட்டுக் குட்டினார்.

"சில்லரை விளையாட்டு வேண்டாம்; வாத்தியார் பிரசங்கம் நடக்கட்டும்" என்றேன்.

வாத்தியார் கர்ஜனை செய்யலானார்,

"இந்தியாவில் ஆண் பிள்ளைகளுக்குக்கூட வாக்குச் சீட்டுக் கிடையாது. அதாவது ஜனங்களுடைய இஷ்டப்படி ஆள் நியமித்து ஜன சபையாலே நடத்தும் அரசாட்சி யுரிமை ஹிந்துக்களுக்குக் கிடையாது. ஹிந்துக்களுக்குப் புத்தி சொற்பம். நம்முடையதேசத்தில் ஆண் பிள்ளைகளுக்குக் கிடையாத மேற்படி வாக்குச் சீட்டுச் சுதந்திரம் வேறு சில தேசங்களிலே பெண்களுக்கு உண்டு. அதாவது, அரசாட்சி இன்னபடிதான் நடக்கவேண்டுமென்று நியமிக்கும் பாத்தியதை அங்கே ஸ்திரீகளுக்கும் உண்டு.

"ஆஸ்திரேலியா, நீயூஸிலாந்து, டென்மார்க், நார்வே, யுனைடெட் ஸ்டேட்ஸ்லே பாதி, கானடா—இத்தனை தேசங்களில், பெண்களுக்கு வாக்குச் சீட்டு கெட்டியாகவுண்டு. இங்கிலாந்திலே கூட அந்த அநுஷ்டானத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பலர் மன்றாடுகிறார்கள். போன மந்திரி ஆஸ்க்வித் கூட அந்தக் கட்சியை நெடுங்காலமாக எதிர்த்து வந்து, ஸமீபத்தில் அதற்கனுகூலமாகப் பேசுகிறாரென்று கேள்வி. இதை விடுங்கள்.

"துருக்கி தேசம் தெரியுமா? அங்கே நேற்று வரை ஸ்திரீகளை மூடிவைத்திருப்பது வழக்கம். கஸ்தூரி மாத்திரைகளை டப்பியில் போட்டு வைத்திருக்கிறார்களோ இல்லையோ? அந்த மாதிரி; திறந்தால் வாசனை போய்விடும் என்று. நம்முடைய தேசத்திலேயே கூட அநேக ஜாதிக்காரர் அந்த மாதிரிதானே செய்கிறார்கள்.

* ஸ்ரீ பாரதியாரின் புனை பெயர்.

ஹிந்து ஸ்திரீ ஏறக்குறைய அடிமை நிலைமையிலிருக்கிறாள். நம்முடைய வீடுகளில் அறைக்குள் அடைத்து வைப்பது கிடையாது. அறைக்குள்ளே தான் இருந்தாலென்ன, குடிகெட்டிப் போச்சுது? அடிமையைத் தண்ணீர் கொண்டுவர தெருவிலே விட்டால்தான் என்ன, அதுவும் கூடாதென்று கதவைப் பூட்டிக் கைதியாக வைத்திருந்தாலென்ன? எந்த நிலைமையிலிருந்தாலும் அடிமை அடிமை தானே ஸ்வாமி? மனுஷ்ய ஜீவனுக்கு இரண்டு வித நிலைமை தான் உண்டு. எதுவும் தன்னிஷ்டப்படி செய்து, அதனால் ஏற்படக்கூடிய இன்ப நஷ்டங்களுக்குத்தான் பொறுப்பாளியாக இருப்பது ஒரு நிலைமை. அதுதான் சுதந்திரம். அப்படி இல்லாமல் பிறர் இஷ்டப்படி தான் இஷ்டமிருந்தாலும் இல்லாவிட்டாலும் மீறி நடக்கக் கூடாதபடி கட்டுப்பட்டிருத்தல், அடிமை நிலை. அந்த ஸ்திதியில் நம்முடைய ஸ்திரீகளை வைத்திருக்கிறோம். சும்மா பொய்க் கதை சொல்வதில் பிரயோஜனமென்ன, ஸ்வாமி? நம்முடைய ஸ்திரீகள் அடிமைகள். அதிலே சந்தேகமில்லை. ஹிந்துக்களுக்குள்ளே புருஷர்களுக்கே அரசாட்சியில் வாக்குச் சீட்டுக் கிடையாது. அவர்களுக்குள்ளே ஸ்திரீகள் அடிமைகள். ஹிந்து ஸ்திரீகளைக் காட்டிலும் இப்போது துருக்கி ஸ்திரீகள் நல்ல நிலைமையில் வந்திருக்கிறார்கள். மிஸ் எல்லிஸன் என்றொரு இங்கிலீஷ்காரி ஒரு புஸ்தகம் போட்டு, நேற்றுத்தான் ஒரு பத்திரிகையில் அந்த புஸ்தகத்தைப் பற்றி அபிப்பிராயம் போட்டிருந்தது. அந்த அபிப்பிராயம் எழுதினவர் ஒரு சிங்களத்துப் பௌத்தர். அவர் பெயர் ஜினராஜதாஸர். அவர் ஒரு இங்கிலீஷ்காரியைக் கலியாணம் பண்ணிக் கொண்டிருக்கிறார். துருக்கி ஸ்திரீகள் படிப்பு, ராஜ்யப் பொறுப்பிலே ஊக்கம் முதலிய சகல அம்சங்களிலேயும் போதுமானபடி விருத்தியாய்க் கொண்டு வருவதாக அந்த இங்கிலீஷ் புத்தகத்தில் போட்டிருப்பதாக அந்த பௌத்தர் சொல்லுகிறார். ஐயோ, ராமா, ராகவா, கேசவா, விசுவாமித்ரா!—நமக்கு ஸந்தியா வந்தனம் கொஞ்சம் மறதி!"

இங்ஙனம், அவர் பிரசங்கத்தில் கொஞ்சம் மூச்சு வாங்கும் பொருட்டாக ஒரு விகட வார்த்தை சொன்னவுடனே, அவருடைய முக்கிய சிஷ்யராகிய கொங்கண பட்டர் கொல்லென்று சிரித்தார்.

வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசாரியாருடைய தலையில் ஒரு குட்டுக் குட்டி ஒரு தரத்துக்குப் பொடி போட்டுக் கொண்டார்.

வாத்தியார் மறுபடியும் கோஷிக்கலானார்:—

"ருதுவான பிறகு, பெண்ணுடைய இஷ்டப்படி, கலியாணம் செய்ய வேண்டும்; புருஷன் கொடுமையை சகிக்க முடியாமலிருந்தால், ஸ்திரீ சட்டப்படி அவனை தியாஜ்யம் செய்துவிடச் சட்டமும் இடம் கொடுக்க வேண்டும்; ஊர்க்காரரும் தூஷணை செய்யக் கூடாது. பெண் உழைத்துச் சாப்பிட முடியாது. அந்த விஷயத்தில் ஐரோப்பிய ஸ்திரீ ஸ்வதந்திர முயற்சிக்காரருடைய அபிப்பிராயத்திலிருந்து என் அபிப்பிராயம் பேதப்படுகிறது. பெண்ணை ஸம்பாத்யம் பண்ணிப் பிழைக்க விடக்கூடாது. அவளுக்கு பிதுரார்ஜிதத்தில் பாகமிருக்க வேண்டும். கலியாணம் செய்துகொண்டால் புருஷனுடைய சொத்து அவளுடையதாகவே பாவிக்க வேண்டும். (பெண்டாட்டி கையில் காசு கொடுக்கக் கூடாதென்று சொல்லுகிற மனுஷ்யர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.) பெண் அவளிஷ்டப்படி சஞ்சரிக்கலாம். தன் இடங்களில் ஸ்த்ரீகளைக் கண்டால் மரியாதை செய்து வணங்க வேண்டும். அப்படி எந்தப் புருஷன் மரியாதை செய்யவில்லை யென்று தோன்றுகிறதோ, அவனை கிருகஸ்தர்கள் நெருங்கக்கூடாது. அவன் கூட ஒருவனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்துவிட வேண்டும். அப்படி வீதி வழியோ, கடைத் தெருவோ, ரயில் வழியோ, காசிப் பட்டணமோ ஸ்திரீகள் தனியே போனாலும், புருடர் கண்டு வணங்கும்படி ஏற்பாடு செய்வது நாளது தேதியில் இந்த தேசத்தில் வெகு கஷ்டம். என்ன செய்யலாம்? ஹிந்துக்களிலே நூற்றுக்குத் தொண்ணூறுபேர் மூட ஜனங்கள். அது எப்படி நாசமாய் போனாலும், படித்துக் கௌரவமாக குடித்தனம் பண்ணும் ஜனக் கூட்டத்துக்குள்ளே, ஸ்திரீகள் சுயேச்சையாகப் பேசலாம், சுயேச்சையாக ஸஞ்சரிக்கலாம், என்று வைக்க வேண்டும். அது ஸாத்யமாகும்படி புருஷரைத் தண்டிக்க வேண்டும். கையாலாகாத பேரை தண்டிப்பதிலே என்ன பிரயோஜனம், ஸ்வாமி? எத்தனை நாள் இந்த தேசத்தில் பழங் குப்பையில் முழுகிக் கிடக்கப் போகிறார்கள்? நத்தைப் புழுவைப் போல ஆணும் பெண்ணும் கூடப் பிறக்கிறோம். உடன் பிறந்தான்

ஆண்டான், உடன் பிறந்தவள் அடிமை, ஸ்வாமி? சுத்த பாமர ஜனங்கள்" என்று சோனு மாரியாகப் பொழிந்தார்.

இந்த சமயத்தில் என்னுடைய குழந்தை வீட்டிலிருந்து ஓடி வந்து என்னைச் சாப்பிடக் கூப்பிட்டது. நான் எழுந்தேன். "பிரம ராய வாத்தியார் சொல்லுகிற விஷயத்தைக் குறித்து உம்முடைய அபிப்பிராய மென்ன?" என்று என்னை நோக்கிக் கொங்கண பட்டர் கேட்டார்.

நான் சொல்லத் தொடங்கு முன்னே, வீராசாமி நாயக்கர் மேற்படி பட்டாசார்யாருடைய தலையில் ஒரு குட்டுக் குட்டி, "நீர் சும்மா இருமே, ஓய்" என்று சொன்னார். பிறகு நான் :— "பூலோகத்துப் பஞ்சாயத்தெல்லாம் எனக்கு வேண்டியதில்லை ஸ்வாமி, யாருக்கு என்ன காரியம் சித்தியாக வேண்டுமானாலும், 'ஓம் சக்தி, ஓம் சக்தி' என்று சொன்னால், அவர்களுக்கு அந்தக் காரியம் சித்தியாகும். இதுதான் எனக்கு தெரிந்த விஷயம்" என்றேன்.

பிரமராய வாத்தியார் "அது உண்மை" என்றார். இடிப் பள்ளிக்கூட முழுவதும் "வாஸ்தவந்தான்" என்று ஒப்புக் கொண்டது. நான் போஜனத்துக்குப் புறப்பட்டேன்.

# 2. தமிழ்நாட்டின் விழிப்பு

ஜீவஹிம்ஸை கூடாது. மது மாம்ஸங்களால் பெரும்பான்மை யோருக்குத் தீங்கு உண்டாகிறது. மது மாம்ஸங்கள் இல்லாதிருத்தல் பிராமணருக்குப் பெரிய கீர்த்தி. அது பெரிய தவம். அது கிருத யுகத்துக்கு, வேராகக் கருதக் கூடிய அநுஷ்டானம்.

ஆனாலும், தாம் ஒரு காரியத்தைச் செய்யாமலிருக்குமிடத்து, அதைப் பிறர் செய்யும்போது அஸூயை கொள்வது தவறு.

ஊண், உடை, பெண் கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் மூடத்தனமாகக் கட்டுப்பாடுகளும் விதிகளும், தடைகளும் கட்டுவதில் யாதொரு பிரயோஜனமும் கிடையாது.

மேலும், உலகத்து மனிதர்களெல்லாரும் ஒரே ஜாதி. 'இந்தச் சண்டையில் இத்தனை ஐரோப்பியர் அநியாயமாக மடிகிறார்களே' என்பதை நினைத்து நான் கண்ணீர் சிந்தியதுண்டு. இத்தனைக்கும் சுதேசியத்திலே கொஞ்சம் அழுத்தமானவன். அப்படியிருந்தும் ஐரோப்பியர் மடிவதில் எனக்கு சம்மதம் கிடையாது. எல்லா மனிதரும் ஒரே வகுப்பு.

சகல மனிதரும் சகோதரர். மனுஷ்ய வர்க்கம் ஓருயிர். இப்படியிருக்க, நாம் ஒரு வீட்டுக்குள்ளே மூடத்தனமான ஆசாரச் சுவர்கள் கட்டி, "நான் வேறு ஜாதி, என் மைத்துனன் வேறு ஜாதி, இருவருக்குள் பந்தி போஜனம் கிடையாது. அவனை ஜாதிப் பிரஷ்டம் பண்ண வேண்டும்" என்பது சுத்த மடமையென்பதைக் காட்டும் பொருட்டாக இத்தனை தூரம் எழுதினேனே தவிர வேறில்லை.

தமிழ் நாட்டில் ஜாதி ஸம்பந்தமான மூட விதிகளும் ஆசாரங்களும் சடசட வென்று நொறுங்கி விழுகின்றன.

அடுத்த விஷயம், பெண் விடுதலை. தமிழ் நாட்டில் பெண் விடுதலைக் கக்ஷிக்குத் தலைவியாக ஸ்ரீமான் நீதிபதி சதாசிவய்யரின் பத்தினி மங்களாம்பிகை விளங்குகிறார். ஸ்ரீ அனி பெசண்ட்

இந்த விஷயத்தில் அவருக்குப் பெரிய திருஷ்டாந்தமாகவும், தூண்டுதலாகவும் நிற்கிறார்.

இவ்விருவராலும் இப்போது பாரத தேசத்தில் உண்மையான பெண் விடுதலை உண்டாக ஹேது ஏற்பட்டது. இவ்விருவருக்கும் தமிழுலகம் கடமைப் பட்டது. இவர்களுடைய கக்ஷி என்னவென்றால்: "ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தி யுண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவு மல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான். புறவுறுப்புகளில் மாறுதல்; ஆத்மா ஒரே மாதிரி."

இதனை மறந்து அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார். பஞ்சுத் தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறந்தார். இரண்டும் பிழை.

ஸ்திரீகள் தமக்கிஷ்டமான பேரை விவாகம் செய்து கொள்ளலாம். விவாகம் செய்து கொண்ட புருஷனுக்கு ஸ்திரீ அடிமையில்லை; உயிர்த்துணை; வாழ்க்கைக்கு ஊன்றுகோல், ஜீவனிலே ஒரு பகுதி; சிவனும் பார்வதியும் போலே; விஷ்ணுவும் லக்ஷ்மியும் போலே. விஷ்ணுவும் சிவனும் பரஸ்பரம் உதைத்துக் கொண்டதாகக் கதை சொல்லும் பொய்ப் புராணங்களிலே லக்ஷ்மியை அடித்தாரென்றாவது, சிவன் பார்வதியை விலங்கு போட்டு வைத்திருந்தாரென்றாவது கதைகள் கிடையா. சிவன் ஸ்திரீயை உடம்பிலே பாதியாக தரித்துக் கொண்டார். விஷ்ணு மார்பில் மேலே இருத்தினார். பிரம்மா நாக்குக்குள்ளேயே மனைவியைத் தாங்கி நின்றார். ஜகத்திற்கு ஆதாரமாகிய பெரும் கடவுள் ஆண் பெண் என இரண்டு கலைகளுடன் விளங்குகிறது. இரண்டும் பரிபூர்ணமான சமானம். பெண்ணை அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும்.

எனவே, இன்று தமிழ் நாட்டில் மாத்திரமே யல்லாது பூமண்டல முழுவதிலும், பெண்ணைத் தாழ்வாகவும் ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்; அநீதிகளுக்கெல்லாம் கோட்டை; கலியுகத்திற்குப் பிறப்பிடம்.

இந்த விஷயம் தமிழ் நாட்டில் பல புத்திமான்களின் மனதிலே பட்டு, பெண் விடுதலைக் கக்ஷி தமிழ் நாட்டின் கண்ணே பலமடைந்து வருவதை நோக்குமிடத்தே எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி யுண்டாகிறது. இந்த விஷயத்திலும் தமிழ்நாடு பூமண்டலத்துக்குச் சிறந்த வழிகாட்டியாக விளங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை.

அடுத்த விஷயம் மத பேதங்களைக் குறித்தது. இதில் பாரத தேசம் முக்கியமாகத் தமிழ்நாடு—இன்று புதிதாக அன்று, நெடுங் காலமாக தலைமையொளி வீசிவருதல் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ராமானுஜர் தமிழ்நாட்டில் பிறந்தவர் அன்றோ? ஆழ்வார்களும் நாயன்மார்களும் அவதாரம் புரிந்தது தமிழ் நாட்டிலன்றோ? பறையனைக் கடவுளுக்கு நிகரான நாயனாராக்கிக் கோயிலில் வைத்தது தமிழ் நாட்டிலன்றோ? சிதம்பரம் கோயிலுக்குள்ளே நடராஜாவுக்கு ஒரு சந்நிதி, பெருமாளுக்கொரு சந்நிதி. ஸ்ரீரங்கத்திலே, பெருமாளுக்கு ஒரு துருக்கப் பெண்ணைத் தேவியாக்கித் துலுக்க நாச்சியார் என்று பெயர் கூறி வணங்குகிறார்கள். "எம்மதமும் சம்மதம்" என்றார் ராமலிங்க ஸ்வாமி. உலகத்திலுள்ள மத பேதங்களையெல்லாம் வேருடன் களைந்த ஸர்வ ஸமய ஸமரஸக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால், அதற்குத் தமிழ்நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்யவல்ல மஹான்கள் இப்போது தமிழ் நாட்டில் தோன்றியிருக்கிறார்கள். அது பற்றியே பூமண்டலத்தில் புதிய விழிப்பு தமிழகத்தே தொடங்குமென்கிறோம்.

மேலே சொன்னபடி, 'பரிபூரண ஸமத்வம் இல்லாத இடத்தில் நாம் ஆண் மக்களுடன் வாழமாட்டோம்' என்று சொல்லுவதனால் நமக்கு நம்முடைய புருஷராலும், சமூஹத்தாராலும் நேரத்தக்க கொடுமைகள் எத்தனையோயாயினும், எத்தன்மையுடையனவாயினும் நாம் அஞ்சக் கூடாது. சகோதரிகளே! ஆறிலும் சாவு; நூறிலும்சாவு; தர்மத்துக்காக இறப்போரும் இறக்கத் தான் செய்கிறார்கள். பிறரும் இறக்கத்தான் செய்கிறார்கள். ஆதலால், சகோதரிகளே; பெண் விடுதலையின் பொருட்டாக தர்ம யுத்தம்தொடங்குங்கள். நாம் வெற்றி பெறுவோம். நமக்குப் பராசக்தி துணைபுரிவாள். வந்தே மாதரம்.

# 3. பதிவிரதை

*இந்தக் காலத்தில், பல பொய்கள் இடறிப்போகின்றன. பல பழைய கொள்கைகள் தவிடு பொடியாகச் சிதறுகின்றன. பல அநீதிகள் உடைபடுகின்றன. பல அநியாயக்காரர் பாதாளத்தில் விழுகிருர்கள்.*

*இந்தக் காலத்தில், யாருக்கும் பயந்து நாம் நமக்குத் தோன்றுகிற உண்மைகளை மறைக்கக் கூடாது. பத்திரிகைகள் தான், இப்போது உண்மை சொல்ல, சரியான கருவி. பத்திராதிபர்கள் இந்தக் காலத்தில் உண்மைக்குப் புகலிடமாக விளங்குகிருர்கள்.*

*'ஸ்திரீகள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும்' என்று எல்லோரும் விரும்புகிருர்கள். அதிலே கஷ்டம் என்னவென்ருல், ஆண் பிள்ளைகள் யோக்கியர்கள் இல்லை. ஆண் மக்களில் ஒவ்வொருவனும் தன் மனைவி, மக்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டுமென்பதில் எத்தனை ஆவலோடு இருக்கிருனே, அத்தனை ஆவல் இதர ஸ்திரீகளின் பதி விரத்யத்திலே காட்டுவதில்லை. ஒவ்வொருவனும் ஏறக்குறைய தன் இனத்து ஸ்திரீகளை பதிவிரதை என்று நம்புகிருன்.*

*ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மையுண்டாகும்; பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. சாவித்திரி தனது கணவனை எமன் கையிலிருந்து மீட்ட கதையில் உண்மைப் பொருள் பொதிந்திருக்கிறது. ஆனல், பதிவிரதை இல்லை என்பதற்காக, ஒரு ஸ்திரீயை வதைத்து ஹிம்சை பண்ணி அடித்து ஜாதியை விட்டுத் தள்ளி ஊரார் இழிவாக நடத்தி அவளுடன் யாவரும் பேசாமல் கொள்ளாமல் தாழ்வு படுத்தி அவளைத் தெருவிலே சாகும்படி விடுதல் அநியாயத்திலும் அநியாயம்.*

*அட பரம மூடர்களா! ஆண் பிள்ளைகள் தவறினல் ஸ்திரீகள் எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்? கற்பனைக் கணக்குப் போட்டுப் பார்ப்போம். ஒரு பட்டணத்தில் லக்ஷம்*

ஜனங்கள், ஐம்பதினுயிரம் பேர் ஆண்கள், ஐம்பதினுயிரம் பேர் பெண்கள். அதில் நாற்பத்தையாயிரம் ஆண்கள் பர ஸ்திரீகளை இச்சிப்பதாக வைத்துக் கொள்வோம். அதிலிருந்து குறைந்த பக்ஷம் நாற்பத்தையாயிரம் ஸ்திரீகள் பர புருஷரின் இச்சைக்கிடமாக வேண்டும். இந்தக் கட்டத்தில் இருபதினுயிரம் புருஷர்கள் தம் இச்சையை ஓரளவு நிறைவேற்றுவதாக வைத்துக் கொள்வோம். எனவே, குறைந்த பக்ஷம் இருபதினுயிரம் ஸ்திரீகள் விபசாரிகளாக இருத்தல் அவசியமாகிறது. அந்த இருபதினுயிரம் விபசாரிகளில் நூறு பேர்தான் தள்ளப்படுகிருர்கள். மற்றவர்கள் புருஷனுடன் வாழ்கிருர்கள். ஆனுல், அவளவளுடைய புருஷனுக்கு மாத்திரம் அவளவள் விபசாரி என்பது நிச்சயமாகத் தெரியாது. தெரிந்தும் பாதகமில்லையென்று சும்மா இருப்பாருமுளர்.

ஆகவே, பெரும்பாலோர் விபசாரிகளுடனே தான் வாழ்கிருர்கள். இதனிடையே, பாதி வ்ரத்யத்தைக் காப்பாற்றும் பொருட்டாக ஸ்திரீகளைப் புருஷர்கள் அடிப்பதும், திட்டுவதும், கொடுமை செய்வதும் எல்லையின்றி நடைபெற்று வருகின்றன. சீச்சி, மானங் கெட்ட தோல்வி, ஆண்களுக்கு! அநியாயமும் கொடுமையும் செய்து பயனில்லை!

இதென்னடா, இது! "என்மேல் ஏன் நீ விருப்பம் செலுத்தவில்லை?" என்று ஸ்திரீயை அடிப்பதற்கு அர்த்தமென்ன? இதைப்போல் மூடத்தனம் மூன்று லோகத்திலும் வேறே கிடையாது.

ஒரு வஸ்து நம்முடைய கண்ணுக்கு இன்பமாக இருந்தால், அதனிடத்தில் நமக்கு விருப்பம் இயற்கையிலே உண்டாகிறது. கிளியைப் பார்த்தால் மனிதர் அழகென்று நினைக்கிருர்கள். தவளை அழகில்லை என்று மனிதர் நினைக்கிருர்கள். இதற்காகத் தவளைகள் மனிதரை அடித்தும், திட்டியும், சிறையிலே போட்டும் துன்பப்படுத்த அவற்றுக்கு வலிமை இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்படி அவை செய்தால் நாம் நியாயமென்று சொல்லுவோமா?

சில தேசங்களில் அன்னியர் வந்து கொடுங்கோல் அரசு செலுத்துகிருர்கள். அவர்களிடம் அந்த ஜனங்கள் ராஜ பக்தி

செலுத்த வேண்டுமென்றும் அங்ஙனம் பக்தி செய்யா விட்டால், சிறைச்சாலையிலே போடுவோம் என்றும் சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட ராஜ்யத்தை உலகத்து நீதிமான்கள் அவமதிக்கிறார்கள்.

'அந்த அரசுபோலே தான், ஸ்திரீகள் மீது புருஷர் செய்யும் கட்டாய ஆட்சியும்' என்பது யாவருக்கும் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெளிவாக விளங்கும். கட்டாயப்படுத்தி, 'என்னிடம் அன்பு செய்' என்று சொல்லுவது அவமானமல்லவா?

ஸ்திரீகள் புருஷரிடம் அன்புடன் இருக்க வேண்டினால், புருஷர் ஸ்திரீகளிடம் அசையாத பக்தி செலுத்த வேண்டும். பக்தியே பக்தியை விளைவிக்கும். நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருஷனாயினும் மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனுஷ்ய ஆத்மா வெளிக்கு அடிமைபோல நடித்தாலும் உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டுதான் இருக்கும்.

அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.

# 4. பெண் விடுதலை

## 1

இங்கிலாந்தில் பெண்களுக்கு வாக்குச் சீட்டுக் கொடுத்தாய் விட்டதென்று சில தினங்களின் முன்பு 'ராய்டர்' தந்தி வந்தது. அதைப் பற்றிய பத்திராதிபர் குறிப்பொன்று "ஸ்திரீகளின் ஐயம்" என்ற மகுடத்துடன் சுதேசமித்திரன் பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. நேற்று மாலை நானும் என்னுடைய சினேகிதர் வேதாந்த சிரோமணி ராமராயரும் வேறு சிலருமாக இருக்கையில் மேற்படி தேதி (அதாவது "ஸ்திரீகளின் ஐயம்" எழுதியிருந்த) சுதேசமித்திரன் பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டு மோட்டு வீதி கோபாலய்யர் பத்தினி வேதவல்லி அம்மை வந்தார்.

வேதவல்லி அம்மைக்கு நாற்பது வயது. தமிழிலும் இங்கிலீஷிலும் உயர்ந்த படிப்பு. ஸம்ஸ்கிருதம் கொஞ்சம் தெரியும். இவருடைய புருஷன் கோபாலய்யர் பெரிய சர்க்கார் உத்தியோகத்திலிருந்து விலகி பணச்செருக்கு மிகுந்தவராய் தமது பத்தினியாகிய வேதவல்லியுடனும் நான்கு குழந்தைகளுடனும் சௌக்கியமாக வேதபுரத்தில் வாழ்ந்து வருகிறார். வேதவல்லிக்கு அவர் விடுதலை கொடுத்துவிட்டார். எங்கும் போகலாம். யாருடனும் பேசலாம். வீட்டுச் சமையல் முதலிய காரியமெல்லாம் ஒரு கிழவி பார்த்துக் கொள்கிறாள். வேதவல்லி அம்மை புஸ்தகம், பத்திரிகை, சாஸ்திர ஆராய்ச்சி, பொதுக் கூட்டம் முதலியவற்றிலே காலங் கழித்து வருகிறார்.

வேதவல்லி வரும்போது நான் ராமராயர் முதலியவர்களுடன் வேதவியாசர் செய்த பிரம்ம சூத்திரத்திற்கு சங்கராச்சாரியர் எழுதின அத்வைத பாஷ்யத்தை வாசித்து அதன் சம்பந்தமாகத் தர்க்கித்துக் கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் வேதவல்லியார் வந்தனர். (ஒருமை பன்மை இரண்டும் பெண்களுக்கு உயர்வையே

காட்டும்.) வேதவல்லிக்கு நாற்காலி கொடுத்தோம். உட்கார்ந்தாள். தாகத்துக்கு ஜலம் கொண்டு வரச் சொன்னுள். பக்கத்திலிருந்த குழந்தையை மடைப்பள்ளியிலிருந்து ஜலம் கொண்டு கொடுக்கும்படி ஏவினேன். அதனிடையே, வேதவல்லி அம்மை "என்ன சாஸ்திரம் ஆராய்ச்சி செய்கிறீர்கள்?" என்று கேட்டாள். சங்கர பாஷ்யம் என்று சொன்னேன். வேதவல்லி சிரித்தாள். "சங்கர பாஷ்யமா! வெகு ஷோக். இந்துக்களுக்கு இராஜ்யாதிகாரம் வேண்டுமென்று சொல்லித்தான் மன்ருடப் போய் 'ஆனி பெஸண்ட்' வலைக்குள் மாட்டிக் கொண்டாள். அவள் இங்கிலீஷ்கார ஸ்திரீ. நம்முடைய தேசத்து வீராதி வீரராகிய ஆண் பிள்ளைச் சிங்கங்கள் சங்கர பாஷ்யம் வாசித்து பொருள் விவரித்துக் கொண்டிருக்கிருர்கள். ஷோக்! ஷோக்! இரட்டை ஷோக்!" என்ருள்.

ராமராயருக்கு பளிச்சென்று கோபம் வந்துவிட்டது. "சரி தானம்மா, நிறுத்துங்கள். தங்களுக்குத் தெரிந்த ராஜயுக்திகள் பிறருக்குத் தெரியாதென்று நினைக்க வேண்டாம்" என்ருர்.

"இங்கிலாந்தில் ஸ்த்ரீகளுக்குச் சீட்டுக் கொடுத்தாய்விட்டது" என்று சொல்லி வேதவல்லி தன் கையில் இருந்த சுதேசமித்திரன் பத்திரிகையை ஏறக்குறைய ராமராயர் முகத்தில் வந்து விழும்படி வீசிப் போட்டாள். ராமராயர் கையில் தடுத்துக் கீழே விழுந்த பத்திரிகையை எடுத்து மெதுவாக மேஜையின் பேரிலே வைத்து விட்டுத் தலைக்கு மேலே உத்தரத்தைப் பார்த்துக் கொண்டு ஏதோ யோசனையில் இறங்கிவிட்டார். குழந்தை இச் சமயத்தில் ஜலம் கொண்டு கொடுத்தது. வேதவல்லியம்மை இதை வாங்கி சற்றே விடாய் தீர்த்துக் கொண்டாள். "என்ன? ராமராயரே, மோட்டைப் பார்க்கிறீரே? மோட்டில் என்ன எழுதியிருக்கிறது? 'ப்ரம்மம் ஸத்யம், லோகம் மித்தை; ஆதலால், வித்வான்கள் எப்பொழுதும் பொய் சொல்லிக் கொண்டே இருப்பதே மேன்மை' என்றெழுதி யிருக்கிறதா?" என்று கேட்டாள்.

ராமராயருக்கு முகம் சிவந்து போய்விட்டது. கொஞ்சம் மீசையைத் திருகிவிட்டுக் கொண்டார். தாடியை இரண்டுதரம் இழுத்தார். கடகடவென்று சிரிக்கத் தொடங்கினுர்.

ஸ்ரீமதி ஆனி பெஸண்ட் ராஜ்ய விஷயத்திலே தலையிட்டு சுதேசியமே தாரகமென்றும், வந்தே மாதரம் ஒன்றே ஜீவ மந்திரம் என்றும் பேசத் தலைப்பட்டது மேற்படி ராமராயருக்கு சம்மதமில்லை. வேதாந்திகள் எப்போதும் பரப்ரஹ்மத்தையே கவனிக்க வேண்டும்; லௌகிக விஷயங்களைத் துளிகூட கவனிக்கக் கூடாதென்பது அவருடைய மதம்.

வேதவல்லி அம்மை ராமராயரை நோக்கிச் சொல்லுகிறார்:— "எடுத்ததற்கெல்லாம் ஆனி பெஸண்ட் சொன்னதே பிரமாணம் என்று தொண்டை வறண்டு போகக் கத்திக் கொண்டிருந்தீர். இப்போது அந்த அம்மாள் சுயராஜ்யம் நல்லதென்று சொல்லும் போது அவளைப் புறக்கணிக்கிறீர்! ஐயோ! கஷ்டம்! புருஷ ஜன்மம்! ஸ்திரீகளுக்குள்ள திறமையிலே நாளிலொரு பங்கு புருஷர்களுக்கில்லை. எல்லா தேசங்களிலும் புருஷரைக் காட்டிலும் ஸ்திரீகளுக்கு ஆயுள் அதிகம், அதனால் சரீர உறுதி அதிகம் என்று ருஜுவாக்கியாயிற்று; புத்தி அதிகமென்பதுந்தான். ராமாயணத்தில் சீதை பொய் மானை மெய் மான் என்று நினைத்து ஏமாற்றம் அடைந்தாள், என்று எங்கள் வீட்டில் ஒரு தாத்தா நேற்று வந்து பேசிக் கொண்டிருந்தார். அந்தச் சீதை சொல்லுக்குக் கட்டுப்பட்டு அதை வேட்டையாடப் போன ராமனுடைய புத்தியைக் காட்டிலும் அவளுக்கு புத்தி அதிகமா, குறைவா, என்று நான் கேட்டேன். தாத்தா தலையைக் குனிந்துக் கொண்டு வாயில் கொழுக்கட்டையை போட்டுக் கொண்டு சும்மாயிருந்தார். சகல அம்சங்களிலும் ஸ்திரீயே மேல். அதில் சந்தேகமில்லை" என்று வேதவல்லி சொன்னாள்.

"ஸ்திரீகளுக்குப் பேசும் திறமை அதிகம்" என்று ராமராயர் சொன்னார்.

வேதவல்லியம்மை சொன்னார்: "ஆனி பெஸண்டுக்கு ஸமானமாக நம்முடைய புருஷரில் ஒருவருமில்லை. அந்த அம்மாள் கவர்னருடனே சம்பாஷணை செய்ததைப் பார்த்தீரா? அந்த மாதிரி கவர்னரிடத்தில் நீர் பேசுவீரா?"

இதைக் கேட்டவுடன் ராமராயர், "நான் வீட்டுக்குப் போய் விட்டு வருகிறேன்" என்று சொல்லி எழுந்து நின்றார். நான் இரண்டு கட்சியையும் ஸமாதானம் பண்ணிக் கடைசியாக வேத

வல்லியம்மை பொதுப்படையாக ஆண் பிள்ளைகளை எவ்வளவு கண்டித்துப் பேசிய போதிலும் ராமராயரைச் சுட்டிக்காட்டி ஒரு வார்த்தையும் சொல்லக்கூடாது என்று தீர்மானம் செய்து கொண்டோம். அப்பால் வேதவல்லி அம்மையின் உபந்யாஸம் நடக்கிறது :—

" ஹிந்து ஸ்திரீகள் ராஜ்ய விவகாரங்களில் சேர்ந்து பாடு படாத வரையில் இங்குள்ள புருஷர்களுக்கு விடுதலை ஏற்பட நியாயமில்லை. இந்த தேசத்தில் ஆதிகாலத்துப் புருஷர் எப்படி யெல்லாமோ இருந்ததாகக் கதைகளில் வாசித்திருக்கிறோம். ஆனால் இப்போதுள்ள புருஷரைப் பற்றிப் பேசவே வழியில்லை. ஹிந்து ஸ்திரீகள் ராஜ்ய விவகாரங்களிலே தலையிட்டால் ஆனி பெஸண்டுக்கு ஸமானமாக வேலை செய்வார்கள். இங்குள்ள ஆண் பிள்ளைகள் வேதாந்த விசாரணைக்கும் குமாஸ்தா வேலைக் கும் தான் உபயோகப்படுவார்கள். ராஜ்ய க்ஷேமத்தைக் கருதி தைரியத்துடன் காரியம் நிறைவேறும்வரை பாடுபடும் திறமை இத்தேசத்துப் புருஷருக்கு மட்டு. ஸரோஜினி நாயுடு எவ்வளவு தைரியமாகப் பேசுகிறாள், பார்த்தீர்களா ? உலகத்தில் எங்குமே புருஷரைக் காட்டிலும் ஸ்திரீகள் அதிக புத்திசாலிகள் என்றும் தைரியசாலிகள் என்றும் எனக்குத் தோன்றுகிறது. மற்ற தேசங்களில் எப்படியானாலும், இங்கே பெண்ணுக்குள்ள தைரிய மும் புத்தியும் ஆணுக்குக் கிடையாது. இங்கிலாந்தில் ஆண் பிள்ளைகளை வசப்படுத்தி எவ்வளவு சுலபமாகச் சீட்டு வாங்கி விட்டார்கள்.

ஹோ ! ஹோ ! அடுத்த தடவை இங்கிருந்து காங்கிரஸ் காரர் இங்கிலாந்திற்கு ஸ்வராஜ்யம் கேட்கப் போகும்போது, அங்குள்ள புருஷரைக் கெஞ்சினால் போதாது. ஸ்திரீகளைக் கெஞ்ச வேண்டும். அதற்கு இங்கிருந்து புருஷர் மாத்திரம் போனால் நடக்காது. இந்த தேசத்து புருஷர்களைக் கண்டால் அங்குள்ள ஸ்திரீகள் மதிக்க மாட்டார்கள். ஆதலால், காங்கிரஸ் ஸபையார் நமது ஸ்திரீகளை அனுப்புவதே நியாயம். எனக்கு இங்கிலீஷ் தெரியும். என்னை அனுப்பினால் நான் போய் அங்கு உள்ள பெண் சீட்டாளிகளிடம் மன்றாடி இந்தியாவுக்கும் சீட் டுரிமை வாங்கிக் கொடுப்பேன். பெண் பெருமை பெண்ணுக்குத்

தெரியும். உங்களிடம் சொல்லிப் பிரயோஜனம் இல்லை" என்று சொன்னாள்.

ராமராயர் :— "வேறு விஷயம் பேசுவோம்" என்றார். தான் பாதி பேசும் போது, ராமராயர் தடுத்துப் பேசியதிலிருந்து, அந்த வேதவல்லி அம்மைக்கு கோபம் உண்டாகி, நான் "இவரைக் குறிப்பிட்டு ஒன்றும் சொல்லுவதில்லையென்றும், இவர் சும்மாயிருக்க வேண்டும் என்றும், ஆரம்பத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை இவர் அதற்குள்ளே மறந்து விட்டார்" என்றும் சொல்லி வெறுப்புடன் எழுந்து போய் விட்டார்.

நான் எத்தனையோ சமாதானம் சொல்லியும் கேட்கவில்லை. "ராமராயர் இருக்கும் சபையிலே தான் இருக்கலாகாது" என்று சொன்னாள். அந்த அம்மை சென்ற பிறகு ராமராயர் ஏதோ முணு முணுத்துக் கொண்டிருந்தார், "என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டேன்.

ஸ்திரீகளுக்கு விடுதலை கொடுப்பது மிகவும் அவசியத்திலும் அவசியம் என்று ராமராயர் சொன்னார். பிறகு மறுபடி சங்கர பாஷ்யத்தில் இறங்கி விட்டோம்.

## 2

அடிமைகள் யாராயினும், அவர்களுக்கு விடுதலை கொடுத்தால், அதினுன்றும் யுகப்பிரளயம் நிச்சயமாக நேரிட்டு, அண்டச் சுவர்கள் இடிந்துபோய் ஜகமே அழிந்துவிடும் என்று சொல்லுதல் அவர்களை அடிமைப்படுத்தி ஆள்வோருடைய ஸம்பிரதாயம்.

இருபது முப்பது வருஷங்களுக்கு முன்பு, பெண் கல்வி ஏற்பட்டால் மாதர் ஒழுக்கத்தில் தவறி விடுவார்களென்று தமிழ் நாட்டில் பலர் கூறினர். இப்போதோ பெண் கல்வி தமிழ் நாட்டில் சாதாரணமாகப் பரவி யிருக்கிறது. அண்டச் சுவர்கள் இன்னும் இடிந்து போகவில்லை. இதுவரை கூடியமட்டும் பத்திரமாகவே இருந்து வருகின்றன. ஆனால் இப்பொழுது பெண்

களுக்கு விடுதலை கொடுத்தால் ஏழு லோகமும் கட்டாயம் இடிந்து பூமியின்மேல் விழும் என்றும், வால் நக்ஷத்திரம் வகையராக் களெல்லாம் நடுவிலே அகப்பட்டுத் துவையலாய் விடும் என்றும் பலர் நடுங்குகிறார்கள். 'மதராஸ் மெயில்' போன்ற ஆங்கிலேயப் பத்திராதிபதியிடம் போய் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் என்ன நடக்கும் என்று கேளுங்கள். "ஓஹோ! ஹோ! ஹோ! இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் பஞ்சாபிகள் ராஜபுத்திரரைக் கொல்வார்கள். பிறகு, ராஜபுத்திரர் மஹாராஷ்டிரரின் கூட்டத்தையெல்லாம் விழுங்கிப் போடுவார்கள். அப்பால், மஹாராஷ்டிரர் தெலுங்கரையும் கன்னடரையும் மலையாளிகளையும் தின்று விடுவார்கள். பிறகு மலையாளிகள் தமிழ்ப் பார்ப்பாரையும், தமிழ்ப் பார்ப்பார் திராவிடரையும் சூர்ணமாக்கி விடுவார்கள். சூர்ணித்த திராவிடர் வங்காளிகளின் எலும்புகளை மாலையாகப் புனைவர்" என்று சொல்லிப் பெருமூச்சு விடுவார். அதே கேள்வியை நீதிபதி மணி அய்யர், கேசவப் பிள்ளை, சிதம்பரம் பிள்ளை முதலியவர்களைப் போய்க் கேளுங்கள். "அப்படிப் பெரிய அபாயம் ஒன்றும் உண்டாகாது. ஸ்வராஜ்யம் கிடைத்தால் கஷ்டம் குறையும். பஞ்சம் வந்தால், அதைப் பொறுக்கத் திறன் உண்டாகும். அகால மரணம் நீங்கும். அவ்வளவுதான்" என்று சொல்லுவார்கள்.

அது போலவே, பெண்களுக்கு விடுதலை கொடுத்ததனால் ஜன சமூகம் குழம்பிப் போய்விடும் என்று சொல்லுவோர், பிறர் தமது கண்முன் ஸ்வேச்சையுடன் வாழ்வதை தாம் பார்க்கக்கூடாதென்று அசூயையால் சொல்லுகிறார்களே யொழிய வேறொன்றுமில்லை. விடுதலை என்றால் என்ன அர்த்தம்? விடுதலை கொடுத்தால் பிறகு ஸ்திரீகள் என்ன நிலையில் இருப்பார்கள்? பெண்களுக்கு விடுதலை கொடுக்க வேண்டும் என்றால், என்ன செய்ய வேண்டும்? வீடுகளை விட்டு வெளியே துரத்திவிடலாமா? செய்ய வேண்டிய விஷயமென்ன? என்று பலர் சங்கிக்கலாம். இங்ஙனம் சங்கையுண்டாகும்போது, 'விடுதலையாவது யாது?' என்று மூலத்தை விசாரிக்கும்படி நேரிடுகிறது. இதற்கு மறுமொழி சொல்லுதல் வெகு சுலபம். பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வையாமலும், கொல்லாமலும், அவர்

களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றபடி ஏறக் குறைய 'நான் ஏது பிரியமானாலும் செய்யலாம்' என்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக் கிடத்தகும். 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்ட மான தெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை' என்று ஹெர் பர்ட் ஸ்பென்ஸர் சொல்லுகிறார்.

இந்த விதிப்படி உலகத்தில் பெரும்பான்மையான ஆண் மக்க ளுக்கே விடுதலை உண்டாகவில்லை. ஆனால் இவ்விடுதலை பெறும் பொருட்டாக நாடுதோறும் ஆண் மக்கள் பாடுபட்டு வருகிறார்கள். ஆண் மக்கள் ஒருவருக்கொருவர் அடிமைப்பட்டிருக்கும் கொடுமை சகிக்க முடியாது. ஆனால், இதில் ஏற்படும் கஷ்டம் நஷ்டங்களைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு அதிகக் கஷ்ட நஷ்டங்கள் பெண் கூட்டத்தை ஆண் கூட்டம் அ:டிமைப்படுத்தி வைத்திருப்பதால் விளைகின்றன.

அடிமைத் தேசங்களிலே கூட ஆண் மக்களிற் பெரும்பாலோர் —அதாவது ரஹஸ்ய போலீஸ் உபத்திரவத்திற்கு இடம் வைத்துக் கொண்டவர் தவிர மற்றவர்கள்—தம் இஷ்டப்படி எந்த ஊருக்குப் போக வேண்டுமானாலும் போகலாம், எங்கும் சஞ்சரிக்கலாம். தனியாக சஞ்சாரம் பண்ணக் கூடாதென்ற நியதி கிடையாது. ஆனால் பெண் தன்னிஷ்டப்படி தனியே சஞ்சரிக்க வழியில்லாத தேசங்களும் உள. அவற்றில் நமது தேசத்தில் பெரும்பகுதி உட் பட்டிருப்பதைப்பற்றி மிகவும் விசனப்படுகிறேன்.

"ஓஹோ! பெண்கள் தனியாக சஞ்சாரம் செய்ய இடங் கொடுத்தால் அண்டங்கள் கட்டாயம் இடிந்து போகும். ஒருவித மான நியதியும் இருக்காது. மனுஷ்யர் மிருகப் பிராயமாய் விடு வார்கள்" என்று சில தமிழ் நாட்டு வைதிகர் நினைக்கலாம். அப்படி நினைப்பது சரியில்லை. ஐரோப்பாவிலும், அமெரிக்காவி லும் பெண்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போகலா மென்று வைத்திருக்கிறார்கள். அதனால் பூகம்ப மொன்றும் நேர்ந்து விடவில்லை. ஸ்ரீமதி அனி பெஸண்டை நம்மவர்களிலே பலர் மிகவும் மரியாதையுடன் புகழ்ந்து பேசுகிறார்கள். 'அவரைப் போலே நமது ஸ்திரீகள் இருக்கலாமே' என்றால், நம்மவர் கூடா தென்று தான் சொல்லுவார்கள். காரணமென்ன? ஐரோப்பிய

ஸ்திரீகளைக் காட்டிலும் நமது ஸ்திரீகள் இயற்கையிலே நம்பத் தகாதவர்கள் என்று தாத்பரியமா ?

'மேலும் ஐரோப்பியரை திருஷ்டாந்தம் காட்டினால் நமக்கு ஸரிப்படாது. நாம் ஆரியர்கள், திராவிடர்கள். அவர்களோ கேவலம் ஐரோப்பியர்' என்று சொல்லிச் சிலர் தலையசைக்கலாம்.

சரி, இந்தியாவிலே மஹாராஷ்டிரத்தில் ஸ்திரீகள் யதேச்சை யாகச் சஞ்சாரம் பண்ணலாம்; தமிழ் நாட்டில் கூடாது, ஏன்?

பெண்களுக்கு விடுதலை கொடுப்பதில் இன்னும் முக்கியமான ஆரம்பப்படிகள் எவையென்றால்:—

(1) பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

(2) அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தல் கூடாது.

(3) விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங்கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப் படுத்தக்கூடாது.

(4) பிதுரார்ஜிதத்தில் பெண்குழந்தைகளுக்கு ஸமபாகம் கொடுக்க வேண்டும்.

(5) புருஷன் இறந்த பின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக்கூடாது.

(6) விவாகமே இல்லாமல், தனியாக இருந்து வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றால் கௌரவமாக ஜீவிக்க விரும்பும் ஸ்திரீகளை யதேச்சையான தொழில் செய்து ஜீவிக்க இடங்கொடுக்க வேண்டும்.

(7) பெண்கள் கணவனைத் தவிர வேறு புருஷருடன் பேசக் கூடாதென்றும் பழகக் கூடாதென்றும் பயத்தாலும் பொறாமை யாலும் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனையை ஒழித்துவிடவேண்டும்.

(8) பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக்கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.

(9) தகுதியுடன் அவர்கள் அரசாட்சியில் எவ்வித உத்யோகம் பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது.

(10) தமிழ் நாட்டில் ஆண் மக்களுக்கே ராஜரிக சுதந்திரம் இல்லாமல் இருக்கையிலே, அது பெண்களுக்கு வேண்டு

மென்று இப்போது கூறுதல் பயனில்லை. எனினும், சீக்கிரத்தில் தமிழருக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும். சென்ற வருஷத்து காங்கிரஸ் சட்டசபையில் தலைமை வகித்தவர் மிஸஸ் அனிபெஸண்டு என்ற ஆங்கிலேய ஸதிரீ என்பதை மறந்து போகக் கூடாது.

இங்ஙனம் நமது பெண்களுக்கு ஆரம்பப் படிகள் காட்டிடுளே மானல், பிறகு அவர்கள் தமது முயற்சியிலே பரிபூரண விடுதலை நிலைமையை எட்டி மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றுவார்கள். அப்போதுதான் நமது தேசத்துப் பூர்வீக ரிஷிபத்தினிகள் இருந்த ஸ்திதிக்கு நமது ஸ்திரீகள் வர இடமுண்டாகும். ஸ்திரீகளை மிருகங்களாக வைத்து நாம் மாத்திரம் மஹர்ஷிகளாக முயலுதல் மூடத்தனம். பெண் உயராவிட்டால் ஆண் உயராது.

# 5. தமிழ் நாட்டு நாகரிகம்

தமிழ் நாகரிகத்தைக் குறித்து சென்ற வ்யாசத்திலே பொதுப் படையாக சில விஷயங்கள் சொன்னேன். இங்கு அவற்றைச் சற்று விஸ்தாரமாகத் தெரிவிக்கின்றேன். பண்டைத் தமிழ் நாகரிகத்தில் ஸ்திரீகளுக்கு அதிகமாக ஸ்வதந்திரம் இருந்தது. இதற்குரிய காரணங்களில் முக்கியமானது யாதெனில், தமிழ் நாட்டுக்கு மூல அரண்போல் இயற்கையால் வகுப்புற்றிருக்கும் மலையாள நாட்டின் பயிற்சிக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் எப் போதும் அதிகமான ஊடாட்டமிருந்துகொண்டு வந்தது. மலை யாளத்து நாகரிகமோ ஸ்திரீகளை முன்னிட்டு விளங்குவது.

மிகப் பழைய தமிழ் பாஷையும் மிகவும் புராதனமான மலை யாள பாஷையும் ஒரே வஸ்து தான். பிற்காலத்திலும் சேர நாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப்பட்டு வந்தது. சேர ரனைவரும் தமிழரசரே; தமிழ் நாட்டு வேந்தருள்ளே சேர்த் தென்னப்பட்டு வந்தனர். பாஷையை யொப்பவே நாகரிக விஷ யத்திலும் மிகப் பழைய தமிழ் நாகரிகமும் மிகப் பழைய மலை யாள நாகரிகமும் ஒரே வஸ்துதான்.

பிற்காலத்தில் மலைக்கோட்டைக்கு உட்பட்ட மலையாள நாடு பழைய தமிழ் நாகரிகத்தை இயன்றவரை சிதையாமல் காப் பாற்றிக் கொண்டு வந்தது. மலையடிக்கு கிழக்கே மைதானத் தின் மீது வளர்ச்சி பெற்ற தமிழ் நாகரிகமோ வெனில், தெலுங்கு முதலிய வட நாட்டுப் பயிற்சிகளின் ஊடாட்டத்தால் நாளுக்கு நாள் அதிக மாறுதல் பெற்று ஹிந்து தேசத்தின் பொது நாகரி கத்தை அனுசரித்து வருவதாயிற்று.

எனினும், மலையாளத்துப் பழக்கம் ஒரு போதும் நீங்கவே யில்லை. மலைநாட்டு ஆண் மக்கள் உலகமெங்கும், புலி, கரடி, ஓநாய் முதலிய மலை மிருகங்களுடன் போராடியும், மலை வெப்பத் துக்கும் மலை மழைக்கும் மலைப்பனிக்கும் மலைத் தீக்கும் தப்பி யும், கஷ்டத்துடன் பிழைக்க வேண்டியவர்களாதலால், மைதானங்

களில் வாழும் ஜனங்களைப் போல் ஸ்திரீகளின் விஷயத்தில் அதிக கடின சித்தமில்லாமல் அவர்களைத் தயவுடனும், மதிப்புடனும் நடத்துவது வழக்கம். ஐரோப்பாவுக்குள்ளே ஸ்விட்சர்லாண்டு தேசத்து மலைப் பெண்கள் மற்றப் பகுதியிலுள்ள மாதரைக் காட்டிலும் ஸ்வதந்திர முடையோராக வாழ்ந்து வருகின்றனர்.

மலையாளத்திலோ, மாதர்கள் மிக உயர்ந்த சுதந்திர முடையோர்களாக யிருப்பது மட்டுமேயன்றி, சொத்துடைமை அங்கு பெண் சந்ததியாருக்கு ஏற்பட்டிருக்கிறது. இவ்விதமான மலையாள நாகரிகத்துள் நெருங்கிப் பழகி ஊடாடிக்கொண்டு வந்திருப்பதினின்றும், தமிழ் நாட்டு நாகரிகமும் இங்குள்ள மாதர்களுக்கு—ஹிந்து தேசத்தின் மற்றப் பகுதிகளிலுள்ள மாதர்களைக் காட்டிலும்—அதிக ஸ்வதந்திரம் கொடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. முகம்மதிய நாகரிகத்தின் ஆதிக்கம் பலமடைந்ததின்றும் வட இந்தியாவில் மேல் ஜாதி ஹிந்து ஸ்திரீகள் கோஷா என்ற முகம்மதிய வழக்கத்தைக் கைக்கொள்ளும்படி ஏற்பட்ட காலத்திலே கூட, தமிழ் நாட்டிலும் அதன் நாகரிகத்தைத் தழுவிய தெலுங்கு, கன்னடம் முதலிய நாடுகளிலும் அந்த வழக்கம் உண்டாகவில்லை.

மேலும் உலகத்திலுள்ள மாதர்களுக் கெல்லாம் நீதி ஆண் மக்களாலேயே விதிக்கப்பட்டது. தமிழ் நாட்டு மாதரும் ராஜநீதி சம்பந்தப்பட்ட சிறிதளவிலே பொதுவான ஆண் சட்டத்துக்குக் கீழ்ப்பட்டிருந்தனரேயாயினும், ஜன ஸமூஹ நீதிகளின் விஷயத்தில் தமிழ் நாட்டில் எப்போதும் ப்ரமாணமாக இயன்று வருவது ஔவையின் நீதி வாக்கியங்களும் நீதி நூல்களுமேயாம். ஆண் மக்களிலேகூட உயர்ந்த கல்வி பயின்றோர் மாத்திரமே ஜன ஸமூஹ விஷயங்களில் வள்ளுவர் குறள், நாலடியார் முதலியவற்றை ப்ரமாணமாகக் கூறுவர். அதிகப் படிப்பில்லாதவர்களும் படிப்பே தெரியாதவர்களுமாகிய ஜனங்கள் ஆண் பெண் அனைவருக்கும் ஔவையாரின் நீதியே வழிகாட்டி. தமிழ் ஜனங்களில் பெரும்பான்மையோருக்கு சுமார் சென்ற இரண்டாயிரம் வருஷங்களாக ஔவையாரின் நீதியே ப்ரமாணமாக நடைபெற்று வருகின்றது.

ஸாமான்ய ஜனங்கள் ஔவை நீதியைக் கொண்டாடி வருகிறார்களெனில், கற்றோரும் அரசரும் அதைப் புறக்கணித்து

வந்தார்களென்று கருதுதல் வேண்டா. கற்ருேருக்கும் அரசர்க்கும் தமிழ் மக்கள் எல்லோருக்கும் குறள், நாலாடியார் முதலிய நூல்களைக் காட்டிலும் ஔவையின் நூல்களில் அகப் பற்றுதலும் அபிமானமும் இருந்து வருகின்றன. ஆனல், இந்த நீதி நூல்கள் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த முதல் ஔவையால் இயற்றப்பட்டன அல்லவென்றும் சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னேயிருந்த இரண்டாம் ஔவையால் செய்யப்பட்டன என்றும் ஒரு கட்சியார் சொல்லுகிருர்கள்.

ஔவையார் வெறுமே நூலாசிரியர் மட்டுமல்லர். அவர் காலத்திலேயே அவர் ராஜநீதியில் மிகவும் வல்லவரென்று தமிழ் நாட்டு மன்னர்களால் நன்கு மதிக்கப்பெற்று ராஜாங்கத் தூதில் நியமனம் பெற்றிருக்கிருர். மேலும் அவர் சிறந்த ஆத்ம ஞானி; யோக சித்தியால், உடம்பை முதுமை, நோவு, சாவுகளுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றி வந்தார்.

“ மாசற்ற கொள்கை மனத்தமைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு ”

அதாவது, ஹிருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால், உடம்பில் தெய்வத்தன்மை, அதாவது சாகாத்தன்மை (அமரத்தன்மை) விளங்கும் என்றும் பொருள் படுவது. இந்தக் குறள் பாடியவர் ஔவையார். இவர் தாமே நெடுந்தூரம் இக்கொள்கைப்படி ஒழுகியவரென்பது இவருடைய சரித்திரத்தில் விளங்குகிறது.

ஒரு தேசத்தின் நாகரிகத்துக்கு அந்த தேசத்தின் இலக்கியமே மேலான அடையாளமென்று முந்திய வியாசத்தில் சொன்னேன். திருஷ்டாந்தமாக ஆங்கிலேய நாகரிகத்துக்கு ‘ஷேக்ஸ்பியர்’ முதலிய மஹா கவிகளின் நூல்களே அளவுக் கருவியாக கருதப்படுகின்றன. ‘நாங்கள் இந்தியா தேசத்து ராஜ்யாதிகாரத்தை இழக்க ஒருப்பட்டாலும் ஒருப்படுவோமேயன்றி ஷேக்ஸ்பியரை இழக்க ஒரு நாளும் ஒருப் படமாட்டோம்’ என்று நாம் மறுமொழி சொல்வோமென்று மெக்காலே என்னும் ஆங்கிலேய ஆசிரியர் சொல்லுகிருர்.

இந்த மாதிரியாகப் பெருமைப் படுத்தி நம்மவர் கம்பனைச் சொல்லலாம்; திருவள்ளுவரைச் சொல்லலாம்; சிலப்பதிகார மியற்றிய இளங்கோவடிகளைக் கூறலாம்; இன்னும் பல புலவர்களைக் காட்டலாம். எனினும், கம்பர், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவராலேயே தம் அனைவரிலும் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட ஒளவைப் பிராட்டியையே மிகவும் விசேஷமாக எடுத்துச் சொல்லக்கூடும். "தமிழ் நாட்டின் மற்றச் செல்வங்களை யெல்லாம் இழந்துவிடப் பிரியமா? ஒளவையின் நூல்களை இழந்து விடப் பிரியமா?" என்று நம்மிடம் யாரேனும் கேட்பார்களாயின், மற்றச் செல்வங்களை யெல்லாம் பறிகொடுக்க நேர்ந்தாலும் பெரிதில்லை. அவற்றைத் தமிழ்நாடு மீண்டும் சமைத்துக் கொள்ள வல்லது. ஒளவைப் பிராட்டியின் நூல்களை இழக்க ஒருபோதும் சம்மதப்படமாட்டோம். அது மீண்டும் சமைத்துக் கொள்ள முடியாத தனிப் பெருஞ் செல்வம்" என்று நாம் மறுமொழி உரைக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். தமிழ் நாட்டு நாகரிகத்துக்கு இத்தனை பெரும் செல்வமாகவும், இத்தனை ஒளி சான்ற வாடா விளக்காகவும் தனிப் பேரடையாளமாகவும் தமிழ் மாதொருத்தியின் நூல்கள் விளங்குவது நமது நாட்டு ஸ்திரீகளுக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்கதொரு செய்தியன்றோ? இஃது தமிழ் ஸ்திரீகளுக்கு வெறுமே புகழ் விளைவிப்பது மாத்திரமன்று. அவர்களுக்கு கிரமமான காவலுமாகும். ஒளவையார் பிறந்த நாட்டு மாதரை, ஒளவையார் இனத்து மாதரை, ஆண் மக்களைக் காட்டிலும் அறிவிலே குறைந்த கூட்டத்தாரென்று வாய் கூசாமல் எவனும் சொல்லத் துணிய மாட்டான். மற்ற தேசங்களில், திருஷ்டாந்தமாக இங்கிலாந்து தேசத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அங்கே ஆண் மக்களுக்கு சமானமான உரிமைகளை பெண்களுக்குக்கொடுப்பது தகாதென்று வாதம் பண்ணுகிற கக்ஷியார், மாதர்கள் இயற்கையிலேயே ஆண் மக்களைக் காட்டிலும் அறிவில் குறைந்தவர்களென்றும், ஆதலால் வீட்டுக் காரியங்களுக்கே அவர்கள் தகுதியுடையோராவாரல்லாது அறிவுவன்மையால் நடத்த வேண்டிய நாட்டுப் பொதுக் காரியங்களை நிர்வகிக்க அவர்களுக்கு திறமை கிடையாதென்றும் தர்க்கிக்கு மிடத்தே, அதற்கு ஒரு ஸாக்ஷியுமாக, "ஆண் மக்களின்

ஷேக்ஸ்பியர் என்னும் கவியரசர் எழுதியிருப்பது போன்ற கவிதை எழுதும் திறமை கொண்ட ஸ்திரீ ஒருத்தி நமது நாட்டில் எப்போதேனும் தோன்றியிருப்பதுண்டா? ஏன் தோன்றவில்லை? இதனால் இயற்கையிலே ஸ்திரீகள் ஆண் மக்களைக் காட்டிலும் புத்தியில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகின்ற தன்றோ?" என்கிறார்கள்.

தமிழ்நாட்டிலோவெனில், இப்படிப்பட்ட வாதம் செல்லாது. அதற்கு நேர் எதிரிடையாக இந்நாட்டில் ஸ்திரீகள்:—"ஔவை யாரைப் போல் கவிதையும் சாத்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண் மகன் இங்கு பிறந்திருக்கிறானா? ஏன் பிறக்கவில்லை? இதனின்றும் ஆண்மக்கள் இயற்கையிலேயே பெண்களைக் காட்டிலும் அறிவுத் திறமையில் குறைந்தவர்களென்பது தெளிவாக விளங்குகிற தன்றோ?" என்று வாதிக்கக் கூடிய நிலைமையிலிருக்கிறார்கள்.

மகிமை பொருந்திய ஆத்ம ஞானியாகிய ஔவையார் இயற்றி யிருக்கும் "ஔவை குறள்" என்ற ஞான நூல் தமிழ் நாட்டு யோகிகளாலும் சித்தர்களாலும் உபநிஷத்துக்களுக்குச் சமான மாகப் போற்றப்பட்டு வந்திருக்கிறது. யோக சாஸ்திரத்துக்கும் மோக்ஷ சாஸ்த்திரத்துக்கும் இந் நூல் முக்கிய பாடங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது. மேலும் யோகாநுபூதி ஸம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாத தென்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். ஔவையின் நூலோ மிகத் தெளிந்த, மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக் கிறது. "சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்" என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் ஔவை ஒப்பற்ற வள். இத்துடன் மிகவும் அருமையான நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வ தாகிய அற்புதத் தொழிலை உயர்ந்த கவிராசர்களே தெய்வீகத் தொழில் என்றும் தெய்வ சக்தி பெறாத சாதாரணக் கவிகளுக்கு சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிறார்கள். இந்த அற்புத தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவள்.

புருஷார்த்தங்கள், அதாவது மானிட ஜன்மம் எடுத்ததி னின்றும் ஒருவன் அடையக்கூடிய மிக உயர்ந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கில் வீடு என்று சொல்லப்படும் முக்தி வாக்குக்கும் மனதுக்கும் எட்டாதாகையால் அதனை விரித்துக்கூற முயலாமல், அதற்குச் சாதனமாகிய தெய்வ பக்தியை மாத்திரம் முதல் அத்யாயத்தில் கூறி நிறுத்திவிட்டு, மற்ற மூன்று புருஷார்த்தங்களையும், விளக்கி, திருவள்ளுவ நாயனுர் 'முப்பால்' (மூன்று பகுதிகளுடையது) என்ற பெய ருடைய திருக்குறள் செய்தருளினுர். ஆயிரத்து முன்னூற்று முப்பது சிறிய குறட் பாக்களில் நாயனுர் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலையும் அடக்கிப்பாடியது மிகவும் அபூர்வ மான செய்கை என்று கருதப்பட்டது. இது கண்ட ஔவைப் பிராட்டி வீட்டுப் பாலையும் கூட்டி நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே சிறிய வெண்பாவுக்குள் அடக்கிப் பாடினுர். இந்த ஆச்சரிய மான வெண்பா பின்வருமாறு:—

"ஈதலறம்; தீவினைவிட்டீட்டல் பொருள்; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்—தாதரவு
பட்டதே இன்பம்; பரனை நினைந்திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

இவ்வெண்பாவின் கருத்து யாதெனில், ஈதலாவது அருள் செய்தல் அல்லது கொடுத்தல் என்றும் பொருள்படும். அதாவது, உலகத்தாருக்குப் பயன்படும் வண்ணமாக நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் பண்ணிவிடுதல்; நமது பொருளாலும், வாக்காலும் மனத்தாலும், உடற் செய்கையாலும், பிறருடைய கஷ்டங்களை நீக்கி அவர்களுக்கினியன செய்தல்; பொருள் கொடுப் பது மாத்திரமே ஈகையென்று பலர் தவருகப் பொருள் கொள்கி ருர்கள். பிறர் பொருட்டாக நம் உயிரைக் கொடுத்தல் கொடை யன்ருே? வைத்தியம் முதலிய சிகிச்சைகளால் பிறருக்குப் பிராண தானம் செய்தல் ஈகையன்ருே? பொருள் முதலிய நலன்களையெல் லாம் ஒருவன் தனக்குத்தானே சேகரித்துக்கொள்ளக்கூடிய திறமை அவனுக்கு ஏற்படும்படி அவனுக்குக் கல்வி பயிற்றுதல் தானமாகாதா?

எனவே, கைம்மாறு கருதாமல் பிறருக்கு எவ்விதத்திலேனும் செய்யப்படும் கஷ்ட நிவாரணங்களும் அனுகூலச் செயல்களும் ஈகை எனப்படும். இதுவே மனிதனுக்கு இவ்வுலகத்தில் அறம், அல்லது தர்மம், அல்லது கடமையாம். இனி, தீயசெயல்கள் செய்யாதபடி, எவ்வகைப்பட்ட அறிவு முயற்சியாலேனும் சரீர முயற்சியாலேனும் சேகரிக்கப்படும் உணவு, துணி முதலிய அவசியப் பண்டங்களும், குதிரை வண்டிகள், ஆபரணங்கள், வாத்தியங்கள், பதுமைகள் முதலிய சௌக்கிய வஸ்துக்களும், இவற்றை அனுபவிப்பதற்குச் சாதனங்களாகிய வீடு, தோட்டம் முதலியனவும், இப் பண்டங்களுக்கெல்லாம் பொதுக் குறியீடும் பிரதியுமாக மனிதரால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கும் பொற் காசு, வெள்ளிக் காசு, காகிதப் பணம் முதலியனவும், செல்வம் அல்லது அர்த்தம் எனப்படும். நற்செயல்களாலே சேர்க்கப்படும் பொருளே இன்பத்தைத் தருவதாகையாலும், தீச்செயல்கள் செய்து சேர்க்கும் பொருள் பலவிதத் துன்பங்களுக்கு ஹேது வாய் விடுமாகையாலும், தீவினைகள் விட்டுச் சேர்ப்பதே பொருள் என்னும் பெயர்க்குரியதென்றும் தீவினைகளாலே சேர்ப்பது துன்பக் களஞ்சியமே யாகுமென்றும் ஔவையார் குறிப்பிட்டருளினர்.

இனி இன்பத்துக்கு ஔவையார் கூறும் இலக்கணமோ நிகரற்ற மாண்புடையது. காதலின்பத்தையே முன்னோர் இன்பமென்று சிறப்பித்துக் கணக்கிட்டனர். பொருளைச் சேர்ப்பதிலும் அறத்தைச் செய்வதிலும் தனித்தனியே பலவகையான சிறிய சிறிய இன்பங்கள் தோன்றும். ஆயினும், இவை காதலின்பத்துக்குத் துணைக்கருவிகளாவது பற்றியே ஒருவாறு இன்பங்களென்று கூறத் தக்கனவாம். உலகத்தில் மனிதர் ருசியான பதார்த்தங்களை உண்டல், நல்ல பாட்டுக்கேட்டல், நல்ல மலர்களை முகர்தல் முதலிய இந்திரிய இன்பங்களை விரும்பி அவற்றை அடையும் பொருட்டு மிகவும் பாடுபடுகிறார்கள். அதிகார இன்பம், புகழின்பம் முதலிய எண்ணற்ற வேறு பல இன்பங்களுக்காகவும் உழைக்கிறார்கள். ஆனால், இவையெல்லாம் அற்பமான இன்பங்களென்று கருதி முன்னோர் இவற்றை இன்பப் பாலிலே சேர்க்கவில்லை. புகழ், அதிகாரம் முதலியவற்றை அறத்

துப்பாலிலும், பொருட்பாலிலும் சார்ந்தனவாகக் கணித்தார்கள், இந்திரிய இன்பங்களுக்குள்ளே இனிய பக்ஷணங்களையும் கனிகளையும் உண்டல், மலர்களை முகர்தல் முதலியன மிகவும் எளிதிலே தெவிட்டக் கூடியனவும், வெறுமே சரீர சுகமாத்திரமன்றி ஆத்ம சுகத்துக்கு அதிக உபகார மில்லாதனவு மாதல் பற்றி அவற்றையும் இன்பப் பாலிலே சேர்க்கவில்லை.

" கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடிக் கண்ணேயுள "

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

"கண்டல், கேட்டல், உண்டல், மோப்பு, தீண்டுதல் எனும் ஐவகை இந்திரியங்களையும் ஒருங்கே இன்புறுத்தும் இயல்பு ஒளி பொருந்திய வளையணிந்த இப்பெண்ணிடத்தே தானுள்ளது" என்பது அக்குறளின் பொருள். இதனுடன் உயிருக்கும் மனத்துக்கும் ஆத்மாவுக்கும் சேர இன்பமளிப்பதனால் காதலின்பம் இவ்வுலக இன்பங்களனைத்திலும் தலைமைப்பட்ட தாயிற்று. ஆதலால், நான்கு புருஷார்த்தங்களுள் அதாவது மனிதப் பிறவி எடுத்ததனால் ஒருவன் எய்தக்கூடிய பெரும் பயன்களைக் கணக்கிடப் புகுந்த இடத்து, நம் முன்னோர் காலின்பத்தையே இன்ப மென்னும் பொதுப் பெயரால் சொல்லியிருக்கிறார்கள். இங்ஙனம் இன்பமென்ற பொதுப் பெயரால் சிறப்பித்துக் கூறத்தக்க பெருஞ்சுவைத் தனியின்பம் மனிதனுக்குக் காதலின்பமே யாகும் என்பதையும், அவ்வின்பத்தை தவறுதலின்றி, நுகர்தற்குரிய வழியின்ன தென்பதையும் ஔவைப் பிராட்டியார் சால இனிய தமிழ் சொற்களிலே காட்டி அருள் புரிந்திருக்கிறார்.

ஒருவன் ஒருத்தியினிடத்திலும், ஒருத்தி ஒருவனிடத்திலும் மனத்தாலும், வாக்காலும், செய்கையாலும், கற்பு நெறி தவறாமல் நித்தியப் பற்றுதலுடையோராய் மன ஒருமை யெய்தித் தம்முள் ஆதரவுற்றுத் துய்க்கும் இன்பமே இன்பமெனத் தகும் என்று ஔவையார் கூறுகிறார்.

இனி, முக்தியாவது யாதெனில் :— கடவுளை உள்ளத்திலிருத்தி தானென்ற கொள்கையை மாற்றி ஈச போதத்தை யெய்தி, மேற் கூறிய மூன்று புருஷார்த்தங்களிலும் பொறுப்பு நீங்கியிருப்பதே முக்தி. இந்த முக்தி பெறுவதனால் ஒருவன் மற்ற மூன்று புரு

ஷார்த்தங்களிலும் எவ்விதமான ஸம்பந்தமுமில்லாமலே செய்கை யற்று மடிந்து கிடப்பானென்றெண்ணுதல் பெருந் தவறு. உயிர் உள்ளவரை ஒருவன் தொழில் செய்யாதிருக்கக் கடவுளுடைய இயற்கை இடங் கொடாது. “யாவனாயினும் (மனத்தாலேனும், வாக்காலேனும், உடம்பாலேனும்) யாதேனுமொருவிதமான செய்கை செய்து கொண்டிராமல் சும்மாயிருத்தல் ஒரு க்ஷணங் கூட ஸாத்தியப்படாது. இயற்கையிலேயே பிறக்கும் குணங் களால் ஒவ்வொருவனும் தன் வசமின்றியே எப்போதும் தொழில் செய்து கொண்டிருக்கும்படி வற்புறுத்தப்படுகிறான்” என்று கண்ணபிரான் பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இன்னும் ஔவைப் பிராட்டியின் நூல்களிலுள்ள வசனங் களை உதாரணம் காட்டி அவருடைய மகிமைகளையெல்லாம் விளக்கிக் கூற வேண்டுமாயின் அதற்கு எத்தனையோ சுவடிகள் எழுதியாக வேண்டும். நமது வியாசமோ ஏற்கனவே மிகவும் நெடிதாய் விட்டது. ஆதலால் இந்தக் கவியரசியைக் குறித்துத் தற்காலத்தினர் தெரிந்து கொள்ளவேண்டிய அம்சங்களில் மிகவும் முக்கியமான, எனக்கு தோன்றுவனவற்றை மற்றொரு வியாஸத் தில் சுருக்கமாகச் சொல்ல உத்தேசம் கொண்டிருக்கிறேன்.

தமிழ் நாட்டு மாதராகிய, என் அன்புக்கும் வணக்கத்துக்கு முரிய சகோதரிகளே, இத்தனை பெருமை வாய்ந்த தமிழ் நாகரி கத்தின் எதிர்கால வாழ்வு உங்களுடைய பயிற்சிகளையும் முயற்சி களையும் பொறுத்திருக்கிறது. பூமண்டலத்தில் நிகரில்லாத அருஞ் செல்வமுடைய சேம நிதியொன்றுக்குக் கடவுள் உங்களைக் காவலாக நியமித்திருக்கின்றான். மனித உலகமோ, இந்த நேரத் தில், பிரமாண்டமான சண்ட மாருதங்களைப் போன்ற மாறுதல் களாலும், கிளர்ச்சிகளாலும், புரட்சிகளாலும், கொந்தளிப்புற்ற கடலிடைப்பட்டதொரு சிறு தோணிபோல் அலைப்புண்டும், புறளுண்டும், மோதுண்டும், எற்றுண்டும், சுழற்றுண்டும் தத்தளிக்கிறது. இந்த மஹா ப்ரளய காலத்தில் தமிழ் நாகரிகம் சிதறிப் போகாதிருக்கும்படி கடவுள் அருள் புரிவாராகுக. அஃது அங்ஙனம் சிதறாமலிருக்குமாறு தகுந்த கல்விப் பெருமையாலும், ஒழுக்க மேன்மையாலும் விடுதலையின் சக்திகளாலும் அதைக் காப்பாற்றக்கூடிய திறமையை உங்களுக்கு பர ப்ரம்மம் அருள் செய்க.

## கட்டுரைகள்: சமூகம்


1. ஜாதிக் குழப்பம் .. 109
2. பழைய உலகம் .. 114
3. மிருகங்களும் பக்ஷிகளும் .. 117
4. அனந்த சக்தி .. 121
5. தமிழ் .. 124
6. விடுதலை .. 126
7. நாகரிகத்தின் ஊற்று .. 129

# 1. ஜாதிக் குழப்பம்

இந்தியாவில் விசேஷக் கஷ்டங்கள் இரண்டு. பணமில்லாதது ஒன்று. ஜாதிக் குழப்பம் இரண்டாவது. பணக்கஷ்டமாவது வயிற்றுக்குப் போதிய ஆஹாரமில்லாத கொடுமை. இந்தத் துன்பத்துக்கு முக்கியமான நிவர்த்தி யாதென்றால் நமது தேசத்தில் விளைந்து, உணவுக்குப் பயன்படக் கூடிய தான்யங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி யாகாமல் தடுத்து விடவேண்டும். இங்கிலாந்து முதலிய சில தேசங்களில் காலையில் எழுந்தால் ஆஹாரத்துக்கு மீன் தென் அமெரிக்காவிலிருந்து வரும்படியாக இருக்கும். வெண்ணெய் ஆஸ்டிரேலியாவிலிருந்து வரும்படியாக இருக்கும். இந்நாட்டினரின் நிலைமை அப்படியில்லை. இங்கு பூமி நம்முடைய ஜனங்களுக்கெல்லாம் போதிய ஆஹாரம் கொடுக்கிறது; ஆதலால், ஏற்கெனவே போதிய அளவு பணம் குவித்து வைத்திருந்தாலன்றி உணவுக்கு வழி கிடையாது என்ற நிலைமை நம்முடைய தேசத்திற்கில்லை. உணவுத் தான்யங்களின் ஏற்றுமதியை எந்த நிமிஷத்தில் நிறுத்தி விடுகிறோமோ, அந்த நிமிஷம் முதல் நம்முடைய ஜனங்களுக்குத் தட்டில்லாமல் யதேஷ்டமான ஆஹாரம் கிடைத்துக் கொண்டு வரும். இந்த விஷயத்தில் ஜயமடைய வேண்டினால், நம்முடைய வியாபாரிகள் வெறுமே தம்முடைய வயிறு நிரப்புவது மாத்திரம் குறியாகக் கொள்ளாமல் தமக்கும் லாபம் வரும்படியாகவும் பொது ஜனங்களுக்கும் கஷ்டம் ஏற்படாமலும் செய்தற்குரிய வியாபார முறைகளைக் கைக்கொள்ளும்படி அவர்களை வற்புறுத்த வேண்டும். இங்ஙனம் நம்முடைய நாட்டிலேயே தான்யங்களை நிறுத்திக் கொண்டு, அந்தந்த ஊரில் மிக எளியோராக இருப்போரிடம் தக்க வேலைகள் வாங்கிக் கொண்டு அவர்களுக்கு உணவு வேண்டிய மட்டும் கொடுத்துவர ஏற்பாடு செய்தல் மிகவும் எளிது.

பூரி (ஜகந்நாதம்) பிரதேசங்களில் மிகவும் கொடிய பஞ்சம் இந்த க்ஷணத்தில் நடைபெற்று வருகிறது. நம் நாட்டில் ராஜாக்

களும், சாஸ்திரிகளும், பெரிய மிராசுதார்களும், ஸாஹுகார்களும், வக்கீல்களும், பெரிய பெரிய உத்யோகஸ்தர்களும், வயிறு கொழுக்க, விலாப்புடைக்க, அஜீர்ணமுண்டாகும்படி ஆஹாரங்களைத் தம்முள் திணித்துக் கொண்டிருக்கையிலே உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாதபடி இந்தியாவில் மட்டும், தீராத மாறாத பஞ்சம் தோன்றி ஜனங்களை அழிக்கிற கொடுமையைத் தீர்க்க வழிதேட வேண்டிய யோசனை அவர்களுடைய புத்திக்குச் சற்றேனும் புலப்படாதிருப்பதை எண்ணுந்தோறும் எனக்கு மிகுந்த வருத்தமுண்டாகிறது. இத்தனை கஷ்டத்துக்கிடையே ஜாதிக் கொடுமை ஒரு புறத்தே தொல்லைப் படுத்துகிறது.

பெரும்பாலும் தாழ்ந்த ஜாதியார்களே அதிக ஏழைகளாக இருக்கிறார்களென்பது மறுக்க முடியாத விஷயம். உழைப்பும் அவர்களுக்குத்தான் அதிகம். அதிக உழைப்பு நடத்திவரும் வகுப்பினருக்கு அதிக வலுவு தேவைப்படும். அநீதி உலக முழுதிலுமிருக்கிறது. எனினும், நம்முடைய தேசத்தைப் போல் இத்தனை மோசமான நிலைமை வேறெங்குமில்லை.

இந்த ஊரில் (கடையத்தில்) ஒரு செல்வர் வீட்டு விசேஷமொன்றுக்காக சங்கரநயினார் கோவிலிலிருந்து கோவில் யானையை இங்கு கொண்டு வந்திருக்கிறார்கள். அது ஆண் யானை; 18 வயதுள்ள குட்டி. அது மிகவும் துஷ்ட யானை யென்று பெயர் கேட்டிருப்பதால், அதை இவ்வூரில் அனேக ஜனங்கள் திரள் திரளாகச் சென்று பார்க்கிறார்கள். இன்று காலை நானும் என் நண்பரொருவருமாக இந்த யானையைப் பார்க்கச் சென்றோம். அந்த யானையைப் பற்றிய முக்கிய விசேஷம் யாதெனில், இதற்கு மாவுத்தர்களாக இரண்டு ப்ராமணப் பிள்ளைகளும், சைவ ஓதுவார் (குருக்கள்) வம்சத்தைச் சேர்ந்த ஒருவரும் வேலை பார்க்கிறார்கள். ஸாதாரணமாக, பாவுத்தர் வேலை செய்ய மஹம்மதியர்களும் ஹிந்துக்களில் தணிந்த ஜாதியாருமே ஏற்படுவது வழக்கம். இந்த யானைக்கு ப்ராமண மாவுத்தர் கிடைத்திருக்கிறார்கள்.

மேற்படி ப்ராமண மாவுத்தரில் ஒருவனிடம் நான் இந்த யானையின் குணங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். நான் நதிக்கு போய்க் கொண்டிருக்கையில் அவன் அந்த யானையை நிஷ்கருணையாக அடித்துக்கொண்டிருக்க நான் பார்த்தேனாதலால்,

அதை அவனுக்கு நினைப்பு மூட்டி "மிருகங்களை அன்பினால் பழக்கவேண்டும். கருணையில்லாமல் அடித்துப் பழக்குவது சரியில்லை" என்றேன். நான் இந்த வார்த்தை சொன்னதுதான் தாமஸம், அவன் மிகவும் நீளமாகத் தன் சாஸ்திரக் கட்டுகளையெல்லாம் அவிழ்த்து விரிக்கத் தொடங்கிவிட்டான். அந்த மாவுத்தன் சொல்லுகிறான்:— "இந்த யானை கீழ்ஜாதி யானை; யானைகளில் ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என நான்கு முக்கிய ஜாதிகளுண்டு. ஒவ்வொரு ஜாதியிலும் கிளை வகுப்புக்களிருக்கின்றன. அவற்றுள் இது சூத்திர ஜாதியைச் சேர்ந்த யானை. மனிதர்களில் சூத்திரர்களுக்குள்ளே ஈழுவர் என்ற ஜாதியர் இருக்கிறார்களே, அதே மாதிரி இந்த யானை 'வீரன்' வகுப்பைச் சேர்ந்தது............"

இங்ஙனம் அந்த மாவுத்தன் நீண்ட கதை சொன்னான்.

நான் இந்த விஷயத்தை இங்கு எடுத்துச் சொல்லியதின் நோக்கம் யாதெனில், நம்மவர்கள் மனதில் இந்த ஜாதிக்கொள்கை எத்தனை ஆழமாகப் பதிந்திருக்கிறது என்பதை உணர்த்தும் பொருட்டேயாம். யானையை எடுத்தால், அதில் ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்! குதிரையிலும் அப்படியே! வானத்திலுள்ள கிரஹங்களிலும் அதே மாதிரி ப்ரம்ம, க்ஷத்திரிய முதலிய ஜாதி பேதங்கள். இரத்தினங்களிலும் அப்படியே!

இங்ஙனம் ஜாதிக்கொள்கை வேரூன்றிக் கிடக்கும் நாட்டில், மனுஷ்ய ஸ்வதந்திரம், ஸமத்வம், ஸஹோதரத்வம் என்னுங் கொள்கைகளை நிலை நிறுத்துவதென்றால் அது ஸாதாரண வேலையா? கொஞ்ச ஜாதியா? அவற்றில் உட்பிரிவுகள் கொஞ்சமா? பறை பதினெட்டாம்! நுளை நூற்றெட்டாம்! அதாவது பறையர்களுக்குள்ளே 18 பகுதிகளும், நுளையர்களில் 108 பகுதிகளும் இருக்கின்றனவாம். மேலும், பறையன், பள்ளன் சக்கிலியன் எல்லோரும் வெவ்வேறு ஜாதிகள்; ஒன்றுக்கொன்று பந்தி போஜனம் கிடையாது. பெண் கொடுக்கல், வாங்கல் கிடையாது. கேலி; கேலி; பெருங்கேலி. இங்ஙனம் ஏற்கனவே மலிந்து கிடக்கும் பிரிவுகள் போதாவென்று புதிய புதிய பிரிவுகள்நாள்தோறும் ஏற்பட்டு வருகின்றன. சீர்திருத்தம் வேண்டுமென்ற நல்ல நோக்கமுடையவர்களிலே சிலர்

செய்கை நெறியுணராமல் புதிய வகுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். கடையத்து வேளாளரில் இங்கிலீஷ் படித்த சிலர் தாங்கள் "திராவிடப் ப்ராமணர்" என்று பெயர் வைத்துக் கொண்டு பரம்பர்யாக வந்த "பிள்ளை"ப் பட்டத்தை நீக்கி "ராயர்" பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறார்கள். திருஷ்டாந்தமாக ஒருவருக்கு "ஆண்டியாப் பிள்ளை" என்ற பெயர் இருந்தால், அவர் அதை ஸர்க்கார் மூலமாக "ஆண்டியப்ப ராயர்" என்று மாற்றி அப்படியே ஸகல விவகாரங்களும் நடத்துகிறார். இந்த திராவிடப் ப்ராமணரின் பட்டம் எப்படி நேரிட்டது என்பதைக் கண்டு பிடிக்க வழியில்லை.

இங்ஙனமே சில தினங்களின் முன்பு வள்ளுவர்கள் தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு கூட்டம் கூடித் தாங்கள் உயர்ந்த ஜாதியாரென்றும் மற்றப் பறையர்களைத் தொடக்கூடாதென்றும் அவர்களுக்கு பஞ்சாங்கம் முதலியன சொல்லக்கூடாதென்றும் அவ்வாறு செய்யும் வள்ளுவர்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் துண்டுப் பத்திரிகைகள் போட்டிருந்தார்களாம். இதைக் கண்டு மனம் பொறுக்காமல் வள்ளுவக் குலத்தைச் சேர்ந்த ஸ்ரீமான் வி. எல். பெருமாள் நாயனார் என்பவர் "வள்ளுவர் பறையரே, பஞ்சமரே" என்பதை மிகவும் தெளிவாக ருஜுப்படுத்தி சென்ற வியாழக் கிழமை (ஜூன் மாதம் 3-ம் தேதி) சுதேசமித்திரனில் ரஸமான வியாஸமொன்று எழுதியிருப்பதைக் கண்டு என் மனம் சால மகிழ்ச்சியெய்திற்று.

ஆனால், அதே வியாஸத்தில், நாயனார் நான்காம் வகுப்பாகிய வேளாளர் குலத்திலிருந்து பறையர் பிரிந்தாரென்று சொல்லுவது பொருத்தமில்லாத வார்த்தை. இவர் எந்த ஆதாரத்தில் இங்ஙனம் சொல்லுகிறார் என்பது விளங்கவில்லை. வெறும் ஜாதி விரோதத்தாலேதான் இங்ஙனம் சொல்லுகிறாரென்று தோன்றுகிறது. வீண் பகைமைகளால் நன்மை ஏற்படாது.

எல்லா வகுப்பு மக்களுக்கும் சரியானபடி படிப்புச் சொல்லிக் கொடுத்தால், எல்லோரும் ஸமான அறிவுடையோராய் விடுவார்கள். மாம்ஸ போஜனம் செய்யும் வகுப்பினர் அதை நிறுத்தி விட வேண்டும். பிறகு ஸ்வாமி விவேகாநந்தர் சொல்லியபடி, எல்லாரையும் ஒரேயடியாக பிராமணராக்கி விடலாம். கீழ் ஜாதி

யரை நல்ல ஸம்ஸ்காரங்களால் பிராமணர்களாக்கிவிட முடியு மென்பதற்கு நம்முடைய வேத சாஸ்திரங்களில் தக்க ஆதாரங் களிருக்கின்றன. அந்தப்படி இந்தியா முழுவதையும் பிராமண தேசமாகச் செய்து விட்டால் நல்லதென்பது என்னுடைய அபிப் பிராயம். எந்த ஜாதியாகயிருந்தாலும் சரி. அவன் மாம்ஸ பக்ஷ ணத்தை நிறுத்தும்படி செய்து அவனுக்கு ஒரு பூணூல் போட்டு காயத்திரி மத்திரம் கற்பித்துக் கொடுத்துவிட வேண்டும். பிறகு, அவன் பிராமணனுகவே கருதப்பட வேண்டும். இதுதான் விவே காநந்தர் சொல்லிய உபாயம். கூடியவரை நல்ல உபாயமும் கூட. ஆனுல், மேல் வகுப்பினர் தம்முடைய உயர்வை மறந்து கீழ் வகுப் பினருடன் கலத்தல் இதனிலும் சிறந்த உபாயமாகும்.

# 2. பழைய உலகம்

இந்த உலகம் மிகப் பழமையானது. இதன் வடிவம் புதிதாகத் தோன்றும். இயற்கை பழமை; தனி வேப்பமரம் சாகும்; ஒற்றை வேப்பமரம் பிறக்கும்; வேம்புக்குலம் எந்நாளும் உண்டு. பூமியுள்ளவரை வெயில் என்றைக்கும் இப்படியே அடிக்கும். மழை, காற்று, பிறப்பு, வளர்ப்பு, நோய், தீர்வு, கட்டு, விடுதலை, தீமை, இன்பம், துன்பம், பக்தி, மறதி, நரைப்பு, துயரம், கலக்கம்—எல்லாம் எக்காலத்திலுமுண்டு.

கருவிகள் மாறுபடுகின்றன; இயற்கை செல்கின்றது. ஏன் சொல்லுகிறேன், தெரியுமா? நமக்கெல்லாம் தெரியாமல் ஆகாசத்திலிருந்து புதிய நாகரிகம் ஒன்று குதித்திருப்பதாகச் சில பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சொல்லிக் கொள்ளுகிறார்கள். நான் அதை நம்பவில்லை. உலகமே பழைய உலகம்.

ஏழை பாடு எப்போதும் கஷ்டம். பணக்காரனுக்குப் பலவித சௌக்கியங்களுண்டு. கோயில் காத்தவனுக்குப் பஞ்சமில்லை. சாமிகள், முக்கால்வாசிக்குக் குறையாமல் பாதி கல் பாதி சாமி. முழுச்சாமி இருந்து கோயில் நடத்தினால், உடனே கிருதயுகம் பிறந்து விடாதா?

எந்த தேசத்திலும் எந்தக் காலத்திலும் இதே கதைதான் நடந்து வருகிறது. எவன் கை ஏறியிருக்கிறதோ அவன் பாடு கோலாஹலம். ஏழைக்குக் கஷ்டம்.

பணக்காரன் ஏழை என்ற பிரிவு முன் காலத்தில் எப்படி உண்டாயிற்று? குடி, படை என்ற இரண்டாக மனித ஜாதி ஏன் பிரிந்தது? எல்லாரும் ஒன்று கூடி உழுது பயிரிட்டுப் பிழைக்கும் கிராமத்தில் வேற்றுமை எந்தக் காரணத்தினால் வந்தது? இவை யெல்லாம் எஜமானன் விசாரணைகள். இந்த நிமிஷம் ஸௌகர்யமில்லை. ஏழை பணக்காரன் விஷயத்தை மாத்திரம் இப்போது கருதுவோம்.

ஒரு செட்டி வியாபாரத்தில் ஏழையாய் நொந்து போய் தனது வீட்டுப் பஞ்சாங்கத்தையரிடம் 'பணக்காரனுவதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டான். நவக்ரஹ பூஜை நடத்த வேண்டும் என்று அய்யர் சொன்ஞன். எவ்வளவு பணம் செலவாகுமென்று செட்டி கேட்டான். பத்துப் பொன்ஞகுமென்று பார்ப்பான் சொன்ஞன். அதற்குச் செட்டி சொல்லுகிறுன் :—" என்னிடம் இப்போது கொழும்புக்காசு, தென்னைமரம் போட்டது, ஒற்றைக்காசு கூடக் கிடையாது. இந்த நிலைமையில் என்ன செய்தால் பணம் கிடைக்குமென்று உம்முடைய சாஸ்திரம் பேசுகிறது. அதைச் சொல்லும்" என்ருன்.

அப்போது பார்ப்பான் சொன்ஞன் :—" நீ போன ஜன்மத்தில் பிராமணருக்கு நல்ல தானங்கள் செய்திருக்க மாட்டாய். அதனுல் இந்த ஜனமத்தில் உனக்கு இந்த நிலைமை ஏற்பட்டது. உனக்குப் பிராயச் சித்தம் நம்முடைய சாஸ்திரத்தில் கிடையாது. இந்த ஜன்மத்தில் இனியேனும் புண்ணியங்கள் செய்தால் அடுத்த பிறவியில் உனக்குச் செல்வமுண்டாகலாம்."

இவ்வாறு அய்யர் சொல்லிய உபாயம் செட்டிக்கு ரஸப்படவில்லை. எனக்கும் பயனுடையதாகத் தோன்றவில்லை. அடுத்த ஜன்மத்தில் நான் மற்ெருரு மனிதனுகப் பிறந்து வாழ்க்கையிலே செல்வமுண்டாஞல், இப்போதுள்ள எனக்கு எவ்விதமான லாபமும் இல்லை. அதைப் பற்றி எனக்கு அதிக சிரத்தை இல்லை. இந்த ஜன்மத்தில் பணம் தேடுவதுதான் நியாயம். வரும் ஜன்மத்து ரூபாய்க்கு இப்போது சீட்டுக் கட்டுவது புத்திக் குறைவு.

எவ்விதமான மிருகமும் பக்ஷியும் கூட்டம் கூடி கக்ஷி கட்டித் தன் குலத்தைத் தானே அழிப்பது வழக்கமென்று தோன்றவில்லை. மனித ஜந்து ஒன்றுக்கே இவ் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஹோமர் காலமுதல் கான்ஸ்டன்டைன் ராஜா காலம் வரையிலும் யவன தேசத்தில் போர் நிற்கவில்லை. புயற் காற்றடித்த இரவிலே கூட களவு நிற்கவில்லை. தீமை எக்காலத்திலுமுண்டு. விஷத்துக்கு மாற்றும், நோய்க்குத் தீர்வும், மிடிமைக்குச் செல்வமும், மடமைக்குக் கல்வியும் எக்காலத்திலும் தேடலாம். தேட வேண்டுமாஞல், அதற்கு உபாயங்களும் எல்லார் காலத்திலுல் ஒன்ருகவே யிருப்பதன்றி மாறுபடுவதில்லை. மனிதர்

கருவிகளையே மாற்றுகின்றனர். மற்றப்படி பழமையை விடாமல் நடத்தி வருகிறார்கள்.

ஒரு வியாபாரத்தில் ஒரு லாபம் கிடைக்க வேண்டுமானால், ஒரேயடியாக ஸூர்யமண்டலத்துக்குத் தாவிப்போக முடியாது. பழைய வழக்கப்படி மெதுவாக ஒவ்வோர் அடியாகத்தான் போக வேண்டும். பதறின காரியம் சிதறும். மெதுவாகச் செல்வோனே குறியடைவான். பழைய வழிதான் நல்ல வழி. அது தான் எப்போதுமே நடக்கக் கூடிய வழி. உலகத்தில் எல்லாக் காரியமும் படிப்படியாகத்தான் ஏறுகிறது. படீலென்று ஏறினால், படீலென்று விழ நேரிடலாம். காற்றாடி துள்ளிப் பாய்கிறது. சூரியன் ஒரே கணக்காக நடக்கிறான். அவன் நெறிமாறுவதில்லை, தாழ்ப்பதில்லை, செல்லுகிறான்; எப்போதுமே ஏறிச் செல்லுவான். பழைய வழிதான் வியாபாரத்துக்குச் சரியான வழி.

# 3. மிருகங்களும் பக்ஷிகளும்

"கொல்லா விரதம் குவலய மெல்லாமோங்க
எல்லார்க்கும் சொல்லுவதென் இச்சை பராபரமே"
— தாயுமானவர்.

லௌகிக விஷயங்களில் மஹா நிபுணரும், சிறந்த வேதாந்தப் பயிற்சியுடையவருமாகிய என் நண்பரொருவர் (அவருக்கு "கோபால பிள்ளை" என்ற புனைப் பெயர் சூட்டுகிறேன்) இன்று பகல் நேரத்தில் என்னிடம் வந்து சம்பாஷணை செய்து கொண்டிருந்தார்.

அவர் என்னிடம் சொன்னார்:—"நீங்கள் பத்திரிகைக்கு விஷயங்கள் எழுதுவதில், எந்த வகுப்பினருக்கும் மனவருத்தம் நேரிடாதபடியாக எழுதுவதே நன்று. 'இன் சொலால் அன்றி இரு நீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே.' பிறருக்குக் கோபம் ஏற்படாத வகையில் எவ்வளவோ எழுத இடமிருக்கிறது. உலகத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதும், உலகத்தாருக்கு உங்களால் இயன்றவரை நன்மை செய்ய வேண்டுமென்பதுமே, நீங்கள் பத்திரிகைக்கு வியாசங்கள் எழுதுவதின் நோக்கம். அந்த நோக்கம் விரைவில் நிறைவேற வேண்டுமானால், நம்முடைய கொள்கைகளைச் சிறிதேனும் கோபமில்லாமலும், ஆத்திரப்படாமலும், பிறர் யாவரேயாயினும் அவர் மனம் சிறிதேனும் நோவாமலும், முற்றிலும் இன் சொற்களால் எழுதுவதே சிறந்த வழியாகும்" என்றார்.

இது கேட்டு நான்:—"மிகவும் நன்றாகச் சொன்னீர்கள். இதுவே என் சொந்த அபிப்பிராயமும். ஆனாலும், ஸ்திரீகளின் நிலைமை, கீழ்ச் சாதியாரின் நிலைமை, ஏழைகளின் நிலைமை, மிருக பக்ஷிகளின் நிலைமை—இவற்றைக் குறித்து எழுதும்போது, மேற்படி மாதர் முதலான எளிய வகுப்பினருக்குச் சிறிதேனும் ஈரம் இரக்கமின்றிக் கொடுமைகள் செய்யும் மக்களின் மீது சில சமயங்களில் என்னையும் மீறி எனக்குக் கோபம் பிறந்து

விடுகிறது. ஆனால், இந்தக் கோபத்தையும் கூடிய சீக்கிரத்தில் முயற்சி பண்ணி அடக்கிவிடுகிறேன். நீங்கள் சொன்ன விதியையே எப்போதும் பரிபூரணமாக அனுஷ்டிக்க முயலுகின்றேன். ஏனென்றால், கோபச் சொற்கள் நமது நோக்கத்தின் நிறைவேறுதலுக்கே, நீங்கள் குறிப்பட்டவாறு, தடையாகி முறிகின்றன. ஆடு மாடு தின்போரை நாம் வாய்க்கு வந்தபடி வைதால், அதனின்றும் அவர்களுக்கு நம்மீது கோபம் அதிகப்படுமே யொழிய, அவர்கள் மாம்ஸ பக்ஷணத்தை நிறுத்த வழி யுண்டாகாது. தக்க நியாயங்கள் காட்டுவதும் அவர்களுடைய காருண்யத்தை நாம் கெஞ்சுவதுமே மனிதர் நாம் சொல்லும் கக்ஷியை அங்கீகரிக்கும்படி செய்யும் உபாயங்களாம்'' என்றேன்.

அப்போது என் நண்பர் :—"மிருகங்களைக் கொன்று தின்னும் அநியாயத்தை நினைக்கும்போது, எனக்கும் அடக்கமுடியாத வயிற்றெரிச்சல் உண்டாகத்தான் செய்கிறது. அவற்றை வெட்டும்போது, நீங்கள் நேரில் பார்த்திருக்கிறீர்களா? ஆட்டை வெட்டப்போகும் ஸமயத்தில், அது தலையை அங்குமிங்கும் அசைத்து விட்டால் வெட்டு சரியாக விழாதென்பதை உத்தேசித்து, அதன் வாய்க்கெதிரே பச்சைக் குழையைக் காட்டுகின்றார்கள். அது குழையைத் தின்பதற்காக முகத்தை நேரே நீட்டும் சமயத்தில் திடீரென்று ஒரே வெட்டு வெட்டி அதன் தலையைத் துண்டித்து விடுகிறார்கள். அங்ஙனம் வெட்டும்போது பார்த்தால், வெட்டுவோனிடம் நமக்கு மிகுந்த குரோதம் உண்டாகத் தான் செய்கிறது. அவனை க்ஷமிப்பது கஷ்டமாகத்தான் இருக்கிறது. இத்தனை சுலபமாக ஒரு ஆட்டை வெட்டிக்கொன்று தீர்த்து விடுகிறார்கள். ஒரு ஆட்டிற்கு உயிர் அளிக்க இவர்களால் முடியுமா?

"சில தினங்களுக்கு முன்பு, சங்கரநயினார் கோயிலுக்கருகே ஒரு கிராமத்திற்குப் போயிருந்தேன். அங்கே ஒரு மாடன் கோயிலில் பெரிய ஜனத்திரள் கூடி பூசை போட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த மாடசாமி யார் தெரியுமா? அந்த கிராமத்தில் பல வருஷங்களின் முன்னே ஒரு மறவன் இருந்தானாம். அவன் கொலை களவு முதலிய செயல்களில் மிகுந்த வீரனாகவும் ஏழைகளியோர் மீது மாத்திரம் கிருபையுடையவனாகவும் இருந்தானாம்.

அவன் செத்த பின், அவனை அந்த இடத்தில் ஸமாதிவைத்து, அந்த ஸமாதியில் ஓர் கோயில் கட்டி, அந்த மறவனையே மாட சாமியாகச் செய்து அந்தப் பக்கத்துக் கிராமத்தார் கும்பிட்டு வருகிறார்கள். அந்தக் கோயிலில் வேடிக்கை பார்க்கும் பொருட்டாக நான் சில சிநேகிதர்களுடன் போயிருந்தேன். அங்கே இருநூறு, முந்நூறு கழு மரங்கள் நாட்டி அவற்றில் ஆடுகளைக் கோத்து வைத்திருக்கிறார்கள். அந்த ஆடுகள் கழு மரங்களில் குற்றுயிராகத் துடித்து கொண்டிருக்கையிலே நான் பார்க்கவில்லை. அப்போது பார்த்தால் என் மனம் என்ன பாடுபட்டிருக்குமோ, அறியேன். அவை செத்துப்போய் இரத்தமும் நிணமும் ஒழுகிக் கொண்டிருக்கையிலே நான் பார்த்தேன். அந்தக் காட்சியை நினைக்கும்போது, இப்போதும் என் உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. ஆஹா! என்ன கொடும்பாவம்! என்ன மஹாபாதகம்!'' என்று கூறி, என் நண்பராகிய கோபாலபிள்ளை மிகவும் பரிதாபப்பட்டார்.

அப்போது நான் சொன்னேன்:—''சில தினங்களின் முன்பு பாரஸீகத்தின் பொம்மை ராஜாவாகிய ஷா சக்கிரவர்த்தி பாக்தாது நகரத்திற்குத் திரும்பி வந்தாராம். அதாவது, அவர் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் பண்ணிவிட்டுத் தம் தேசத்திற்கு வருகையிலே பாக்தாது நகரத்திற்கு விஜயம் பண்ணினாராம். அப்போது, அவருடைய வரவை அலங்கரிக்கும் பொருட்டாக பாக்தாது நகரத்தில் 80 ஆடோ 100 ஆடோ வெட்டப்பட்டதாக சுதேசமித்திரன் பத்திரிகையில் தந்தி சமாசாரம் வந்திருந்தது. அதைப் படித்தபோது என் வயிற்றில் நெருப்புப் பந்தம் விழுந்தது போலிருந்தது. ஆனால், நமது தேசத்து சில்லரைத் தெய்வங்களின் கோயில்களிலே பூஜைதோறும், சில இடங்களில் 1,000 ஆடு 10,000 ஆடு வீதம் வெட்டப்படுவதை நினைக்கும்போது எனக்கு அடக்க முடியாத கோபமுண்டாகிறது.

'' திருநெல்வேலிக்கருகே 'குரங்கிணியம்மன்' கோயில் என்று ஒரு கோயில் இருக்கிறது. அங்கு வருஷோத்ஸவ காலங்களில் கணக்கில்லாத ஆடுகள் வெட்டுப்படும் என்று கேள்விப்படுகிறேன்.

"இதே மாதிரி சென்னைப் பட்டணத்திற்கருகே ஒரு கிராமத்தில் ஒரு அம்மன் கோயில் இருக்கிறது. இன்னும் நாடு முழுமையிலும் இம் மாதிரியான கோயில்கள் எத்தனையோ இருக்கின்றன. இவற்றில் நடக்கும் கொலைகளைத் தடுக்கும்படி அந்தக் கோயில் தர்மகர்த்தாக்களையும், பொதுஜனத் தலைவர்களையும் காலில் விழுந்து கேட்டுக் கொள்வதாகப் பத்திரிகைக்கு எழுதப் போகிறேன். 'கோபச் சொற்கள் சொல்வதிலும், வைவதிலும் காரியம் இல்லை' என்று நீங்கள் சொல்லுகிறீர்களே? நாம் என்ன செய்வோம்?" என்றேன்.

இங்ஙனம் நெடுநேரம் ஜீவநாசத்தின் அநியாயத்தையும் அதனால் மனிதருக்குண்டாகும் எண்ணற்ற பாவங்களையும் அவற்றால் உண்டாகும் நோய் சாவுகளையும் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம். அந்த சம்பாஷணை முழுவதையும் இங்கு எழுத இடமில்லை: . எனினும், நான் கோபால பிள்ளையிடம் வாக்குக் கொடுத்தபடியே இங்கு வேண்டுதல் செய்கிறேன்: "தமிழ் நாட்டு ஜனத் தலைவர்களே, உங்கள் காலில் வீழ்ந்து கோடி தரம் நமஸ்காரம் செய்கிறேன். மாம்ஸ பக்ஷணத்தை நிறுத்துவதற்கு வழி செய்யுங்கள்."

# 4. ஆனந்த சக்தி

எறும்பு இறந்துபோன புழுவை இழுத்துச் செல்லுகிறது; எதனால்? சக்தியினால். தூமகேது அநேக லட்சம் யோசனை தூரமான தனது வாலை இழுத்துக் கொண்டு திசை வெளியில் மஹா வேகத்தோடு சுழலுகின்றது; எதனால்? சக்தியினால். அந்த தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒரு மண்டலமாகத் தன்னைச் சுற்றிவரும்படி சூரிய கோளம் நியமிக்கிறது; எதனால்? சக்தியினால்.

ஓர் கன்னிகை பாடுகிறாள். நெப்போலியன் ஐரோப்பாக் கண்டம் முழுமையும் வெல்லுகிறான். இவை இரண்டிற்கும் சக்தியே ஆதாரம். கண்ணுக்குப் புலப்படுவதும், ஊக்கத்திற்குப் புலப் படுவதுமாகிய வெளியுலகங் கூட எல்லையற்றதென்று பண்டிதர் கள் கண்டிருக்கிறார்கள். இந்த எல்லையற்ற உலகத்தை இயக்கும் சக்தி தானும் எல்லையற்றதாகும், அநந்தமானது, அதனிலும் பெரிது. இவ்வித சக்தியை மனிதன் பாவனை செய்வதால் பலவிதப் பயன்களுண்டு. "யத்பாவயஸி தத் பவஸி." எதனைப் பாவிக் கிறாயோ நீ அதுவாக ஆகின்றாய்.

ஆனால், இங்ஙனம் பாவனை செய்வது லேசான காரியமென்று நினைத்து விடலாகாது. உயிர் ததும்பியதும் கனல்வதுமான சிரத்தையுடன் பாவனை செய்ய வேண்டும். பொறி பறக்கும் பக்தியுடன் தியானம் செய்ய வேண்டும். இதனை வீண் கதை யென்று நினைத்து விடவேண்டாம். விடாமல் அனுஷ்டானம் செய்து பார்த்தால் இதன் பயன் தெரியும்.

ஞானிகளென்றும், யோகிகளென்றும் சொல்லப்படுவோர், இந்த சக்தியை, மனதறிந்து சில முறைகளை அனுஷ்டித்து, பெறு கிறார்கள். ஸாமான்ய ஜனங்கள் விஷயம் தெரியாமல் இயற்கை முறையிலே சிறிது பெற்றவர்களாகின்றனர். சக்தி சிறிதும் இல்லாவிட்டால், ஒருவன் க்ஷண நேரங்கூட மூச்சு விட்டுக் கொண்டு இவ்வுலகத்தில் இருக்க முடியாது. வெளிக் காற்றிலே

உலவி அத்துடன் யோகப்படுவதால் சக்தியுண்டாகிறது. சரீரத்தை உழைப்புக்கு உட்படுத்துவதால் இடைவெளியெங்கும் ததும்பிக் கிடக்கும் சக்தி அதனுள்ளே குடிகொள்ளுகிறது. அறிவைப் பல விஷயங்களிலே சிரத்தையுடன் செலுத்தி உழைப்பதனால் சக்தியுண்டாகிறது. இங்ஙனம் சிறிது சிறிது ஏற்படும் சக்தியினாலேயேதான் உலகத்தில் மனிதர்கள் ஜீவித்திருக்கிறார்கள்.

தமிழ் ஜனங்களுக்குள் சக்தி மேன்மேலும் பெருகச் செய்ய வேண்டுமென்பது நமது நோக்கம். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டாகவே நாம் உயிர் தரிக்கின்றோம். 'மாதா இந்த நாட்டு ஜனங்களுக்குச் சக்தி யதிகரிக்கும்படி செய்க; அக்காரியத்தை நிறைவேற்றுவதற்குரிய சக்தியை எனக்கருள் புரிக' என்று நம்மில் ஒவ்வொருவனும் தியானம் புரிய வேண்டும். ஆட்டம் ஆடுதல், கூத்து முதலியவை, மற்போர் முதலியவற்றிலே பழகுதல், பாடுதல், தர்க்கம், வாதம், தவம், பிரம்மசரியம், சுத்தம் முதலியவற்றால் ஓர் ஜாதிக்கு சக்தி அதிகப்படுகிறது. மனம், வாக்கு, செயல் மூன்றும் சுத்தமாக இருக்க வேண்டும். உள்ளும், புறமும் மாசில்லாது செய்யப் பழகவேண்டும். பயம், ஸந்தேஹம், சலனம் மூன்றையும் வெறுக்க வேண்டும். இதனால் சக்தி யேற்படும்.

புராதன ஸம்பிரதாய மென்பதால் மட்டுமே ஒன்று பொய்யாய் விட மாட்டாது; புதியதென்பதால் மாத்திரமே ஒன்றை மெய்யாகக் கொண்டு விடுதலும் பிழை. ஆராய்ந்து, அனுபவத்தால் பார்க்குமிடத்தே தான், ஒரு விஷயத்தின் மெய்ம்மையும், பொய்ம்மையும் விளங்கும். நமது முன்னோர்கள் "யோகம்" என்றதோர் மார்க்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இஃது ஹடயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் என நான்கு வகைப்படும். இவற்றில் ஹடயோகந்தான் மிகக் குறைந்த பயன் தரக்கூடியது; மற்ற மூன்றிலும் அனந்த சக்திகள் பெறலாம். விஷயம் தெரியு முன்பாகவே, 'இதில் பயனென்ன விளையப்போகிறது' என்று சந்தேகப்படுதல் தெளிந்தோர் செய்யும் காரியமன்று. அவற்றை ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். அங்ஙனம் சாதனை செய்தவர்களுக்கு பலவித அபூர்வ சக்திகளுண்டா யிருப்பதைக் கண்ணாரக் காண்கிறோம். நமக்கும் ஏன் இந்த சக்திகள் ஏற்படக்

கூடாது? இந்த மூடத் தமோ குணத்தால் என்ன சுகங்கள் கண்டு விட்டோம்? சோம்பலாலும் அற்ப விஷயங்களிலே ஆசை கொண்டு மனதைக் கடலில் அகப்பட்ட துரும்பு போலச் சலிக்க விடுவதாலும் என்ன பேறுகள் பெற்றுவிட்டோம்?

துணிவு, உள்ளத் தூய்மை, ஏதாவதொரு மகத்தான லட்சியத்திலே அறிவை ஆணி கொண்டடித்தது போலப் பற்றுறச் செய்து கொள்ளுதல், லாப நஷ்டங்களிலே சிந்தனை இல்லாமை—இவை தான் யோகத்தின் இரகசியம்.

# 5. தமிழ்

கல்கத்தாவிலிருந்து வெளிப்படும் 'மாடன் ரெவ்யூ' என்ற மாதப் பத்திரிகையின் தை-மாசி ஸஞ்சிகையை நேற்றுப் பொழுது போக்கின் பொருட்டாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதிலே திருநெல்வேலி ஹிந்து காலேஜ் சரித்திர பண்டிதர் ஸ்ரீ நீலகண்டையர் ஒரு சிறிய கடிதமெழுதியிருக்கிறார். ஏற்கனவே மேற்படி பத்திரிகையில் ஸ்ரீயதுநாத ஸர்க்கார் என்ற வித்வான் எழுதியிருந்த சில வார்த்தைகளைக் குறித்து ஸ்ரீஐயர் தமது கருத்துக்களை வெளியிடுகிறார்.

கலாசாலையிலே சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்று கொடுப்பது பயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறதென்றும் தேச பாஷைகளிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையு மென்றும் ஸ்ரீ ஸர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்லு-கிறார் :—"பாஷைத் தொல்லை பெருந்தொல்லையாகவே இருக்கிறது. ஆனால் எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்ட வரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப் பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிகம் பயன்படுமென்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும் வழக்குப் பிழைகளும் நிறையச் செய்தபோதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுது கிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹரிக்கும்போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது."

இங்ஙனம் எழுதுகிற ஸ்ரீநீலகண்டையரின் நிலைமையை நினைத்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். சொந்த பாஷையை நேரே பேசத் தெரியாதவர்கள் சாஸ்திர பாடங்கள் நடத்தும் விநோதத்தை இந்தத் தேசத்திலேதான் பார்த்தோம். புதுமை! புதுமை!! புதுமை!!!

மேலும் இவர் தமக்குத் தாய்மொழி தெரியாதென்ற செய்தியை வங்கப் பத்திரிகைக்கு ஏன் எழுதப் போனுர் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை. ஜப்பானியர், சீனர், நார்வேக்காரர் முதலிய உலகத்து ஜாதியாரெல்லாம் நம்மை அறிவிலும் சாஸ்திரங்களிலும் பாஷைத் திறமையிலும் தாழ்வென்று நினைத்து வந்தார்கள். இப்போதுதான் ஹிந்து ஜாதியாராகிய நாம் காட்டு மனிதரில்லை, வாலில்லாத குரங்குகளில்லை, நமக்குப் பாஷைகள் இருக்கின்றன; நமக்குள்ளே சாஸ்திர விற்பன்னர்கள் இருக்கிருர்கள்; கவிகள் இருக்கிருர்கள் என்று நம்மவரிலே சிலர் வெளியுலகத்தார் தெரிந்து கொள்ளும்படி செய்து வருகிருர்கள். இதற்குள்ளே தமிழ் வகுப்பு மற்ற ஹிந்துஸ்தான வகுப்புக்களைக் காட்டிலும் குறைவுபட்டதென்று நம்மில் சிலர் முரசடிக்கத் தொடங்குவது எனக்கு நகைப்புண்டாக்குகிறது.

என்னுடைய சொந்த அபிப்பிராயத்தைக் கொஞ்சம் சொல்லி விடுகிறேன்.

உலகத்திலுள்ள ஜாதியார்களிலே ஹிந்து ஜாதி அறிவுத் திறமையில் மேம்பட்டது. இந்த ஹிந்து ஜாதிக்குத் தமிழராகிய நாம் சிகரம்போல் விளங்குகிருேம். எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப் போல வலிமையும், திறமையும், உள்ளத் தொடர்பும் உடைய பாஷை வேறென்றுமே யில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகத்திலே பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நானறிவேன். ஆனுல் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் ஸத்யமில்லை. நாளை வரப்போவது ஸத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவா விட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள். அதுவரையில் இங்குப் பண்டிதர்களாக இருப்போர் தமக்குத் தமிழ்ச் சொல் நேரே வராவிட்டால் வாயை மூடிக்கொண்டு வெறுமே இருக்க வேண்டும். தமிழைப் பிறர் இழிவாகக் கருதும்படியான வார்த்தைகள் சொல்லாதிருக்க வேண்டும், இவ்வளவுதான் என்னுடைய வேண்டுகோள்.

# 6. விடுதலை

திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்கிற மூன்று புருஷார்த்தங்களையும் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளுக்குள் பாடிக் காட்டிய திறமையைக் கண்டு வியந்து சிலர் ஒளவையாரிடம் சொன்னார்களாம். ஒளவையார் நான்கு புருஷார்த்தங்களையும் ஒரே வெண்பாவுக்குள் பாடிக் காட்டினாளாம்.

ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் ; எஞ்ஞான்றும்
காதலிருவர் கருத்தொருமித்-தாதரவு
பட்டதே யின்பம் ; பரனைநினைந் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு.

கொடுப்பது தருமம்.

பாட்டைக் கொடுத்தாலும் சரி; நாட்டைக் கொடுத்தாலும் சரி; பணம், கல்வி, மருந்து, தைரியம் ஏதேனுமொரு நல்ல பொருளை உடையவன் வேண்டியவனுக்குக் கொடுத்தால் அஃதறம். உலகத்தில் ஸாமான்ய மனிதனைச் சூழ்ந்து மிக்கோர், ஸமானஸ்தர், தாழ்ந்தோர் என மனிதர் மூன்று வகையாகக் காணப்படுகிறார்கள். இந்த மூன்று திறத்தாருக்கும் அவன் கொடுக்க வேண்டிய கொடைகள் காலம், தேசம், இவற்றுக்குத் தக்கபடி அந்தந்த விதமாக மாறி நிற்கும். இன்னின்ன காலத்தில் இன்னின்னாருக்கு இன்னின்ன பொருள் கொடுக்க வேண்டுமென்பது தர்மிஷ்டனுக்கு ஸ்வபாவத்திலேயே தெரியும். சேர்க்கப்படுவது செல்வம். மனிதனுக்கு இன்பம் தரும் பண்டங்களையும் அவற்றைக் கொள்வதற்கு நல்ல கருவியாகிய பொன்னையும் சேகரித்து வைக்க வேண்டும். இடைவிடாமல் சேர்க்கவேண்டும். கை பற்றினபடியாகவே இருக்க வேண்டும் ; ஆனால் தீயகாரியம் செய்து, கெட்ட தொழில் செய்து சேர்த்த செல்வம் நிற்காது. செல்வம் சேர்ந்த பிறகு அதன் உரத்தால் பிறருக்குத் தீங்கு செய்வோரும் விரைவிலே கெடுவார். "அல்லற் பட்டாற்றாது அழுதகண்ணீ ரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை" என்று

திருவள்ளுவரும் சொன்னார். துன்பப்பட்டார் அது பொறுக்காமல் அழும் கண்ணீரானது, அந்தத் துன்பமுண்டாக்கியவனுடைய ஐசுவரியத்தை அறுத்தெறியும் ஆயுதமாகும். செல்வம் இனிது. அது முயற்சியினால் சேர்க்கப்படுவது. பயனுள்ள தொழிலை மேன்மேலும் ஊக்கத்துடனும், அறிவுடனும் செய்வதால் பொருள் பெருகும். தீயது செய்தாலன்றிப் பொருள் தேடமுடியாதென்று மூடர் நினைக்கிறார்கள். தீயது செய்யாதபடி சேகரிப்பதே பொருளென்றும், மற்றையது பல துன்பமுண்டாக்கி விரைவிலே அழிந்து போவதோர் மருளென்றும் ஔவை சொல்லுகிறாள்.

பெண்ணும், ஆணும் அன்பு கொண்டு வாழ்வது இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம். உணவும், ஸ்நானமும், பூவும், சந்தனமும் முதலிய இன்பங்களெல்லாவற்றைக் காட்டிலும் காதலின்பமே சிறந்தது. காதலுடைய இருவர் கருத்திலே ஒன்றுபட்டவராய் ஆதரவு கொள்ளும் நிலையை மனிதர் கட்டுப்பாடுகளாலும், பணச் செருக்காலும், அநீதியாலும் பெற விரும்புகிறார்கள். ஆண், பெண் உறவினால் வரும் துன்பந்தான் மனிதருக்கு இவ்வுலகத்தில் மற்றெல்லாத் துன்பங்களைக் காட்டிலும் அதிகமாக ஏற்பட்டு விட்டது. விவாக முறையைச் சில தேசங்களில் நரகம்போலே செய்துவிட்டார்கள். தெய்வம் கொடுக்கும் இன்பத்தை மனிதர் அறியாமையாலும், பாபசிந்தையாலும் துன்பமாக மாற்றிக் கொள்ளுகிறார்கள்.

தெய்வத்தை நம்பி மேற்படி மூன்றனுள் எதுவும் இன்றியமையாததில்லை யென்று கொண்டு, வருவது தானே வருமென்று சொல்லி, எல்லாம் தெய்வத்தின் செய்கையாதலால் நமக்கெவ்வித மான பொறுப்புமில்லையென்று நடப்பதே விடுதலை இன்பம். துன்பம் எது நேர்ந்தாலும் சரியென்று மனசு கவலையை ஒரேயடியாக நெருப்பிலே போட்டுக் கொளுத்திவிட்டு தெய்வத்தின் நினைப்பே கதியென்று நிற்பது விடுதலை. "எல்லாத் தருமங்களையும் விட்டு என்னையே சரணடைக" என்று கீதையும் சொல்லிற்று.

இந்த விடுதலை பெற்றவன் பண்டாரமாகிக் கந்தையுடுத்தும் பிச்சை வாங்கித் தின்பானென்று சில பாமர ஜனங்கள் நினைக்கிறார்கள். அது முற்றிலும் தவறு. ஆயிரத்திலொரு ஜீவன்

முக்தன் பண்டார வழியிலே சென்ருலும் செல்லக்கூடும். ஆனல் அதுவே மார்க்கமென்று நினைத்துவிடக்கூடாது. ஜனகன் ஜீவன் முக்திபெற்று ராஜ்யமாண்டான். அர்ஜுனனும், அப்படியே ரிஷிகளெல்லாரும், பெண்டுபிள்ளைகளுடன் சுகமாக வாழ்ந்தார்கள். விடுதலை பெற்றவர் எந்தத் தொழிலைச் செய்தாலும் செய்வார்கள். ஆனல் அந்தரங்க நம்பிக்கை தெய்வமொன்றினிடத்தேயே செலுத்தி வாழ்வார்கள். "எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப்பட்டாலும் முக்தர் மனமிருக்கு மோனத்தே" என்பது முன்னேர் வாக்கு. பரனை நினைந்து முன் மூன்றையும் விட்டுவிடுதல் இன்பமென்று ஔவை கூறினள். பற்று விட்டிருப்பதே விடுதலை. உள்ளத் துறவே துறவு. உள்ளத் துறவுடைய மனிதனை நாம் என்ன அடையாளத்தாலே கண்டு பிடிக்கலாம்? பக்தி முதிர்ச்சிக்கு எது தவருத லக்ஷணம்? "அஞ்சாதே!" என்றது வேதம். பயம் நீங்கியிருப்பதே விடுதலைக்கு லக்ஷணம். ஒருவன் உண்மையாகவே தெய்வத்தை நம்பினனு, வீணுக்குச் சொல்லுகிருனு என்பதை அறிய வேண்டுமானல் ஆபத்து வேளையிலே பார்க்க வேண்டும். ஆபத்து நேரும் போது நெஞ்சு நடுங்காமலிருப்பவன் ஞானி, பக்தன், முக்தன், மரணத்துக் கஞ்சாதவன், தெய்வத்தை உண்மையாகச் சரணமடைந்தவன். தெய்வத்தை நம்பினல் தீமை நமக்கு வாராதென்பதை ப்ரத்யக்ஷ ஞானமாகக் கொண்டு ஜீவன் முக்தர் எந்தப் பதவியிலிருந்தபோதிலும் நிகரற்ற வீரராக விளங்குவார்.

# 7. நாகரிகத்தின் ஊற்று

ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரி ஸ்தானத்திலிருந்தவராகிய ஸ்ரீமான் க்ளெமான்ஸோ சில தினங்களாக இந்தியாவில் ஸஞ்சாரம் பண்ணிவரும் செய்தி நம் நேயர்களுக்குத் தெரிந்ததேயாம். இவருக்குச் சில நாட்களின் முன்னே பம்பாயில் நடந்த விருந்தின் போது இவர் செய்த ப்ரஸங்கத்தில் பின்வரும் ஸாரமயமான வாக்யம் காணப்படுகிறது:—

"ப்ரான்ஸிற்காக இரத்தம் சிந்திய மக்களைப் பெற்ற தேசத்தை வந்து பார்ப்பது எனக்குப் பெருமையுண்டாக்குகிறது. ப்ரெஞ்சு குடும்பங்களுடன் இந்தியச் சிப்பாய்களிலிந்தபோது நான் பார்த்திருக்கிறேன். அவர்களுடைய மரியாதையும் அன்பும் ப்ரான்ஸ் தேசத்தாரை மோஹிக்கும்படிச் செய்தன. கீழ்த் திசையானது நாகரிகத்தில் குறைந்ததன்று. அன்பு, மானுஷீகம் என்பவற்றிற்குரிய மஹோந்நத லக்ஷ்யங்களெல்லாம் கீழ்த் திசையிலிருந்து வந்தன. மேற்குத் திசையார் அவற்றை ஸ்வீகரித்துத் தம்முடைய லக்ஷ்யங்களாகச் செய்துகொண்டனர். எனவே, உங்களைக் காட்டிலும் உயர்ந்த நாகரிகத்தின் ப்ரதிநிதியாக என்னை மதித்து நான் உங்களோடு பேசவில்லை. (இந்தியாவாகிய) நாகரிகத்தின் ஊற்றை நோக்கி நீஞ்சி வந்தவனாக என்னை மதிக்கிறேன்" என்றார்.

இவர் யார்? ப்ரான்ஸ் தேசத்து முதல் மந்திரியாக இருந்து அதிஸமீப காலத்தில் விலகியவர். வெறும் இலக்கியப் படிப்பு மட்டும் உடையவரல்லர். மிகவும் பழுத்த லௌகிகத் தேர்ச்சியும், ஐரோப்பிய ராஜ தந்திரத்தில் மஹா கீர்த்தி வாய்ந்த நிபுணத் தன்மையுமுடையவர். இவரே பத்து வருஷங்களுக்கு முன் இப்படிப் பேசியிருக்க மாட்டார். நினைத்துக்கூட இருக்க மாட்டார். ஐரோப்பிய நாகரிகமே மேம்பட்டதென்று நினைத்திருப்பார். இன்றைக்கு இந்தியாவை வந்து கூடியவரை நிஷ்பக்ஷபாதமான, தெளிந்த விழிகளுடன் பார்க்கும்போது, இந்த

எண்ணம் இவர்மீது வற்புறுத்தப்படுகிறது. இவருடைய வசனத்தை நன்ருக ஊன்றிப் படிக்கும்படி நம்மவர்களை வேண்டுகிறேன். இவர் என்ன சொல்லுகிருர்? ஐரோப்பிய நாகரிகத்தின் பரம லக்ஷ்யங்கள் அவர்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றக் கருதும் தர்மங்கள், ஐரோப்பாவுக்கு சொந்தமல்லவென்றும் அவை கீழ்த்திசையிலிருந்தே கிடைத்தனவென்றும் சொல்லுகிருர் நாமே ஐரோப்பாவுக்கு லக்ஷ்ய தானம் செய்தோமென்றும் நம்முதவியின்றி அவர்கள் இன்னும் பச்சை குத்திய நிர்வாணமான காட்டு ஜனங்களாகவே யிருந்திருப்பார்களென்றும் அங்கீகரித்துக் கொள்ளுகிருர். ஆசியாவிலிருந்து நாகரிகம் ஐரோப்பாவுக்குச் சென்றது. ஆசியாவின் நாகரிகத்துக்கு மூலஸ்தானம் நமது பாரத வர்ஷம். ஆனுல் முற்காலத்தில் நாம் எத்தனை உயர்ந்த நிலைமையிலிருந்து உலகத்திற்கு எத்தனை அரிய நலங்கள் செய்த போதிலும் இப்போது நாம் சரியான நிலைமையில்லாதிருப்போமானுல் நமது பண்டைக்காலப் பெருமை யாருக்கும் நினைப்பிராது. இன்று மீண்டும் நமது தேசம் அபூர்வமான ஞானத் திகழ்ச்சியும் சக்திப் பெருக்கமும் உடையதாய்த் தலைதூக்கி நிற்பதே நமது பெருமையைக் குறித்து ஸ்ரீமான் க்ளெமான்ஸோ முதலியவர்கள் மேலே காட்டியபடி பூஷித்துப் பேசக் காரணமாகிறது. எனினும் நாம் உலகத்திற்குப் புது வழி காட்டத் தகுதியுடையோமென்பதை ருஜுப்படுத்தியிருக்கிருேம் அன்றி இன்னும் அந்த ஸ்தானத்தில் நாம் உறுதிபெறவில்லை. "மேற்குத் திசையிலிருப்பதுபோலவே இங்கும் மனிதர், பரஸ்பரம் அன்புசெலுத்தும்படி விதித்த கடவுளின் கட்டளையை மறந்து, ஒருவருக்கொருவர் விரோதிப்பதையும் கொலைபுரிவதையும் கண்டு நான் வ்யஸனப்படுகிறேன்" என்று ஸ்ரீக்ளெமான்ஸோவே சொல்லியிருக்கிருர். ஆனுல் இந்த ஸமயத்தில் இந்தியாவில் பரவிவரும் ஸாத்வீக தர்மக் காற்றைச் சுவாஸ்யாமலிருப்பாரானுல், ஸ்ரீ க்ளெமான்ஸோவின் வாக்கில் இந்த வார்த்தை உதித்தேயிராதென்று நான் நிச்சயமாகக் கூறுவேன். இப்போது ஸ்ரீ க்ளெமான்ஸோ பாரிஸ் நகரத்திலிருந்தால் அங்கு மறுபடி வீசிவரும் ஜெர்மானிய விரோதக் காற்று இவரையும் தாக்கி இவருடைய புத்தி ஸாத்வீக நெறிகளிலே செல்ல இடங்கொடுத்திராது. எனவே, இந்தியா, அன்பு

நெறியால் வலிமையோங்கி உலகை நடத்த வேண்டுமென்ற கொள்கையை ஆதரிக்கத் தொடங்கிவிட்டது. இந்த ஆசாரத்தின் ஆரம்பக் கலைகளே மிகவும் ஆச்சரியமாக, உலகத்தாரெல்லாரும் கண்டு வியக்கும்படி யிருக்கின்றன. இனி இக்கொள்கை இந்தியாவில் மக்களுக்குள்ளே எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் பூர்ணமாக ஸ்தாபிக்கப்பட்டு விளங்கும் காலத்தைக் கடவுள் விரைவிலே அருள் செய்வாராகுக.

## கட்டுரைகள் : தத்துவம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | இனி | .. | 135 |
| 2. | மூட பக்தி | .. | 138 |
| 3. | வாசக ஞானம் | .. | 142 |
| 4. | அமிர்தம் தேடுதல் | .. | 146 |
| 5. | புனர் ஜென்மம் | .. | 149 |
| 6. | உலக வாழ்க்கையின் பயன் | .. | 156 |
| 7. | கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம் | .. | 159 |
| 8. | ஞான ரதம் (ஒரு பகுதி) | .. | 166 |
| 9. | பகவத்கீதை முன்னுரை (ஒரு பகுதி) | .. | 173 |
| 10. | சந்திரிகையின் கதை (முதல் அத்தியாயம்) | .. | 180 |
| 11. | வேதரிஷிகளின் கதை (முன்னுரை) | .. | 186 |
| 12. | தராசு (ஒரு பகுதி) | .. | 189 |

# 1. இனி

நடந்ததெல்லாம் போக; இனிமேல் நடக்கவேண்டிய காரியத்தை நாம் யோசனை செய்ய வேண்டும்.

கோவில் குருக்களுக்கு இனி நம்முடைய தேசத்து ஜனங்கள் ஒத்து நடக்க வேண்டுமானால், ஜனங்களிடம் பூசாரிகள் எதையும் மறைக்காமல், எந்த விஷயத்திலும் ஜனங்களை ஏமாற்றாமல், விஷயத்தைச் சொல்ல வேண்டும்.

'கடவுள் எங்கும் இருக்கிறாரே? எல்லாம் கடவுள்தானே? ஊருக்கு நடுவில் ஒரு கோவிலைக் கட்டி, அதில் ஒரு கல்லையோ செம்பையோ நட்டு, அங்கே தான் எல்லோரும் வந்து கும்பிட வேண்டும் என்ற நியமம் எதற்காக?' என்றால், ஜனங்களுக்குள் ஐக்யம் ஏற்படுவதற்காக.

கல்லில் மாத்திரம் தெய்வம் இருக்கிறதென்று நம்பி, நம்மைச் சூழ்ந்த ஜனங்களிடம் தெய்வம் இல்லையென்று நம்பலாமா?

கவனி! அண்ட பகிரண்டங்கள் எல்லாவற்றையும் உள்ளே இருந்து ஆட்டுவிக்கும் பரஞ்சுடரே நம்மைச் சூழும் அநந்த கோடி ஜீவராசிகளாக நின்று சலிக்கிறது.

இதுதான் வேதத்தின் கடைசியான கருத்து. 'தன்னிடத்தில் உலகத்தையும் உலகத்தினிடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன்' என்பது முன்னோர் கொள்கை.

உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்று. நீ, நான், முதலை, ஆமை, ஈ, கருடன், கழுதை—எல்லோரும் ஒரே உயிர், அந்த உயிரே தெய்வம்.

ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து, மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டு தமக்குள் இருக்கும் ஆத்மவொருமையை அவர்கள் தெரிந்து கொள்ள இட முண்டாகுமென்று கருதி முன்னோர் கோவில் வகுத்தார்கள்.

ஊரொற்றுமை கோவிலால் நிறைவேறும். வீட்டுக்குள் தனியாகச் சிலை வைத்துக் கும்பிடுவது குடும்ப ஒருமை உண்டாகும் பொருட்டாக.

கவனி! நல்ல பச்சைத் தமிழில் சொல்லுகிறேன். ஆறுகிய நீ கும்பிடுகிற தெய்வங்களில் பெண் தெய்வம் எல்லாம், உனது தாய், மனைவி, சகோதரி, மகள் முதலிய பெண்களினிடத்தே வெளிப் படாமல் இதுவரை மறைந்து நிற்கும் பராசக்தியின் மகிமையைக் குறிப்பிடுகின்றன. அம்மன் தாய். அவளைப் போலவே நம் முடைய பெண்கள், மனைவி, சகோதரி, மாதா முதலியோர் ஒளி வீச நாம் பார்க்க வேண்டும் என்பது குறிப்பு.

ஆண் தெய்வமெல்லாம், நீ, உன் பிதா, உன் சகோதரர், உன் மகன், உன்னைச் சேர்ந்த ஆண் மக்கள் அடைய வேண்டிய நிலைமையைக் குறிப்பிடுகின்றன.

சிவன் நீ; சக்தி உன் மனைவி.

விஷ்ணு நீ; லக்ஷ்மி உன் மனைவி

பிரம்மா நீ; ஸரஸ்வதி உன் மனைவி.

இதைக் காட்டி. மிருக நிலையிலிருந்து மனிதரை தேவநிலையிற் கொண்டு சேர்க்கும் பொருட்டாக ஏற்பட்ட தேவப் பள்ளிக் கூடங்களே கோவில்களாம்.

இதைப் பூசாரிகள் மறைக்கிறார்கள். கும்பிடுவோர் நித்ய அடிமைகளாகவும், தெய்வாம்சம் உடையோர் தாமாகவும் இருந் தால் நல்லதென்று பூசாரி யோசனை பண்ணுகிறான். பிறரை அடிமை நிலையில் வைக்க விரும்புவோரிடம் தெய்வாம்சம் ஏற்படாது.

அப்படியிருக்கப் பல பூசாரிகள் தம்மிடம் தெய்வாம்சம் இருப் பதுபோலே நடித்து ஜனங்களை வஞ்சனை செய்து பணம் பிடுங்கு கிறார்கள்.

கெட்டிக்காரன் புழுகு எட்டு நாள். எத்தனை காலம் ஒரு மோசக்கார மனிதனை மூடிவைத்து அவனிடம் தெய்வங் காட்ட முடியும்? ஆகையால் இந்தப் பூசாரிகளுடைய சாயம் வெளுத்துப் போகிறது. ஜனங்கள் பூசாரிகளை அவமதிப்பாக நடத்தி பழைய மாமூலை உத்தேசித்துக் கல்லை மாத்திரம் கும்பிடுகிறார்கள். அப்படிப்பட்ட கல் வரம் கொடுக்கவே கொடுக்காது. எப்படி சாதாரணமாக ஒரு கல்லில் நல்ல சாதுக்கள் பக்தியுடன் மந்திரம் ஜபித்துக் கும்பிட்ட மாத்திரத்தில் பகவான் நேரே வந்து

நர்த்தனம் பண்ணுவாரோ, அதுபோல் யோக்யதையில்லாத பூசாரி தொட்ட மாத்திரத்தில் பகவான் அந்தக் கல்லை விட்டுப் போய்விடுவார். அது மறுபடி சாதாரண ரஸ்தா உருளை ஸ்தானத்திற்கு வந்து சேர்ந்துவிடும்.

கோவிலுக்குப் போனாலும் சரி; போகாவிட்டாலும் சரி, தெய்வத்தைக் கும்பிட்டாலும் சரி; கும்பிடாவிட்டாலும் சரி; பிறரை ஏமாற்றுவதை நிறுத்தினால், தெய்வம் அருள் புரியும். துளிகூட, ஒரு அணுக் கூட, மற்றவர்களை ஏமாற்றுவதே கிடையாதென்று ஒருவன் பரிபூரண சக்தி அடைவானாகில், அவனே ஈசுவரன். குருவி, காக்கை, புழு, எறும்பு, ஒரு ஜந்துவுக்கும் வஞ்சனை பண்ணக்கூடாது. வஞ்சனையில்லாமல் "ஏதோ உலகத்திற் பிறந்தோம். தெய்வம் விட்டதே வழி" என்று ஆற்றின்மீது மிதந்து செல்லும் கட்டைபோல் உலக வெள்ளத்தில் மிதந்து செல்ல வேண்டும். அங்ஙனம் முற்றிலும் பராதீனனாய் எவன் ஈசுவரன்மீது ஸகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ, அவனுக்குத் தெய்வத் தன்மை உண்டாகும். இதில் ஸந்தேஹமே கிடையாது.

பலஹீன ஜந்துக்களுக்கு மனிதன் எதுவரை அநியாயம் செய்கிறானோ அதுவரை கலியுகம் இருக்கும். அநியாயம் நீங்கினால் கலியில்லை; உலகம் முழுவதும் கலியில்லை. "உலகம் முழுவதும் அநியாயத்தைவிட்டு சமீப காலத்தில் நீங்குமென்று நினைக்க ஏதுவில்லையாதலால் கிருதயுகம் வரப்போவதில்லை. நாம் மாத்திரம் ஏன் நியாயம் செய்ய வேண்டும்?" என்று விபரீதமாக யோசித்து எவனும் தான் நடக்கும் அநியாய வழியிலே தொடர்ந்து செல்லக்கூடாது. எவன் அநியாயத்தை விடுகிறானோ, அவனுக்குக் கிருதயுகம் அந்த க்ஷணமே கைமேலே கிடைக்கும். இதில் ஸந்தேஹமில்லை.

ஒருவன் கலியை உடைத்து நொருக்கினால், அவனைப் பார்த்துப் பத்துப்பேர் உடனே நொருக்கி விடுவார்கள். இங்ஙனம், ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், லக்ஷம், கோடியாக; மனித ஜாதியில் ஸத்ய யுகம் பரவுதலடையும் காலம் ஏற்கனவே ஆரம்பமாய் விட்டது. இதில் ஸந்தேஹமில்லை.

# 2. மூட பக்தி

நம்முடைய ஜனங்களுக்கிடையே இந்த நிமிஷம் வரை நடை பெறும் மூட பக்திகளுக்கு கணக்கு வழக்கே கிடையாது. இதனால் நம்மவர்களின் காரியங்களுக்கும் விவஹாரங்களுக்கும் ஏற்படும் விக்கினங்களுக்கு எல்லையில்லை.

இந்த மூட பக்திகளிலே மிகவும் தொல்லையான அம்சம் யாதெனில், எல்லாச் செய்கைகளுக்கும் நாள், நக்ஷத்திரம், லக்னம் முதலியன பார்த்தல். க்ஷவரம் பண்ணிக் கொள்ள வேண்டுமென்றால், அதற்குக் கூட 'நம்மவர் மாஸப் பொருத்தம், பக்ஷப் பொருத்தம், திதிப் பொருத்தம், நாட் பொருத்தம், நக்ஷத்திரப் பொருத்தம், இத்தனையும் பார்த்தாக வேண்டியிருக்கிறது. க்ஷவரத்துக்குக் கூட இப்படியென்றால், இனிக் கல்யாணங்கள், சடங்குகள், வியாபாரங்கள், யாத்திரைகள், விவசாய ஆரம்பங்கள் முதலிய முக்கிய காரியங்கள் பல்லாயிரத்தின் விஷயத்திலே நம்மவர் மேற்படி பொருத்தங்கள் பார்ப்பதில் செலவிடும் கால விரயத்துக்கும் பொருள் விரயத்துக்கும் வரம்பே கிடையாது. சகுனம் பார்க்கும் வழக்கமும் காரியங்களுக்குப் பெருந் தடையாக வந்து மூண்டிருக்கிறது. இதில் நேரும் அழிவுகளும் அவற்றால் பொருள் அழிவுகளும் எவ்வளவு உண்டாகின்றன என்பதை நம்மவர் கணிப்பதே கிடையாது. சகுனம் பார்ப்பதினால் காரிய நஷ்டம் மாத்திரம் உண்டாகிறது. நாட் பொருத்தம், லக்னப் பொருத்தம் முதலியன பார்க்குமிடத்தே காரிய நஷ்டம் மட்டுமின்றி மேற்படி லக்னம் முதலியன பார்த்துச் சொல்லும் சோதிடருக்கு வேறு பணம் செலவாகிறது.

"காலம் பணவிலை யுடையது" என்ற குறிப்புடைய இங்கிலீஷ் பழமொழி ஒன்றிருக்கிறது. இந்த சமாசாரம் நம்மவருக்குத் தெரிவதே கிடையாது. பொழுது வீணே கழிக்கப்படுமாயின், அதனால் பண லாபம் கிடையாமற் போகும். இன்று செய்யக் கூடிய காரியத்தை நாளைக்குச் செய்யலாமென்று தாமஸப்படுத்தி

வைப்பதனால், அந்தக் காரியம் பலமான சேதமடைந்து போகும். எதையும் தோன்றிய மாத்திரத்திலே சூட்டோடு செய்யும்போது, அதில் வெற்றி பெரும்பாலும் நிச்சயமாகக் கிடைக்கும். அதைத் தூங்கப் போட்டுவிட்ட பிறகு செய்யப்போனால் அதில் ஆரம்பத்தில் இருந்த ரஸம் குறைந்து போகும். அதற்குத் தக்கபடி பயனும் குறைவெய்தும்.

'இத்தகைய மூட பக்திகளெல்லாம் படிப்பில்லாமையால் ஏற்பட்டிருக்கின்றன' என்றும் 'ஜனங்களுக்குப் படிப்புக் கற்றுக் கொடுத்தால் இவை அழிந்து போய்விடும்' என்றும் இங்கிலீஷ் படிப்பாளிகள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். நானும் ஒருவாறு அது மெய்யென்றே நம்புகிறேன். ஆனால் அதற்குத் தற்காலத்தில் நமது தேசத்துப் பாடசாலைகளில் பயிற்றுவிக்கப்படும் இங்கிலீஷ் படிப்பு சுத்தமாகப் பிரயோஜன மில்லையென்பது ஸ்பஷ்டமாக விளங்குகிறது. சென்ற நூறு வருஷங்களாக இந்நாட்டில் இங்கிலீஷ் படிப்பு நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கான பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவற்றுள் லக்ஷக்கணக்கான கோடிக்கணக்கான ஜனங்கள் படித்துத் தேறியிருக்கிறார்கள். இவர்கள் மூட பக்திகளை எல்லாம் விட்டு விலகி நிற்கிறார்களா? இல்லை. நமது தேசத்தில் முப்பத்து மூன்று கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இத்தனை ஜனங் களுக்கும் ஒருவர் மிச்சமில்லாமல் உயர்தரக் கல்வி கற்றுக் கொடுத்த பின்பு தான் மேற்கூறிய ஸாமான்ய மூட பக்திகள் விலக வேண்டுமென்பது அவசியமில்லை. ஏற்கனவே, இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் படித்துத் தேறியவர்கள் இந்த விஷயத்தில் தமது மனச்சாக்ஷிப்படி யோக்யமாக நடந்து வந்திருப்பார்க ளானால், மற்றவர்களிலும் பெரும்பாலோர் நடை திருந்தியிருப் பார்கள். இன்னும் எத்தனையோ விஷயங்களில் நம்மவர் இங்கிலீஷ் படித்தவரின் நடையைப் பின்பற்றித் தங்கள் புராதன வழக்கங்களை மாற்றிக் கொண்டிருக்கக் காண்கிறோம். அது போலவே இந்த விஷயத்திலும் நடந்திருக்கும்.

ஆனால் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்குப் போய் தேறினவர் களிடம் மனச்சாக்ஷிப்படியும் தன் அறிவுப் பயிற்சியின் விசாலத் திற்குத் தகுந்தபடியும் நடக்கும் யோக்யதை மிகமிகக் குறைவாக

இருக்கிறது. இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் எத்தனையோ சாஸ்திரங்கள்—நிஜ சாஸ்திரங்கள், பொய் சாஸ்திரங்கள், இரண்டுங் கலந்தன — எத்தனையோ வித சாஸ்திரங்கள் பயிற்றுகிறார்கள்.

ஆனால் ஸ்வதந்திரம், ஆண்மை, நேர்மை, உண்மை, வீர்யம்— இவை அத்தனை ஜாக்கிரதையாகக் கற்றுக் கொடுப்பதில்லை. அதிலும் ஒருவன் தன் மனமறிந்த உண்மையின்படி ஒழுக வேண்டுமென்றும் அங்ஙனம் ஒழுகாதிருத்தல் மிகவும் அவமானமும், பாவமுமாகுமென்றும் கற்றுக் கொடுக்கும் வழக்கமேயில்லை. இந்த விஷயத்தைக் கூட வாய்ப்பாடமாய்ப் படிப்பித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒழுக்கப் பயிற்சியில்லை. புஸ்தகத்துக்கும் வாய்ப்பேச்சுக்கும் செய்கைக்கும் இடையே லக்ஷம் யோசனை தூரமாக நடப்பவர்களுக்கு திருஷ்டாந்தம் காட்டப் புகுமிடத்தே, நமது நாட்டில் இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் தேறிவரும் மனிதரைப்போல் இத்தனை சிறந்த திருஷ்டாந்தம் வேறெங்கும் கிடைப்பது மிகவும் துர்லபமென்று தோன்றுகிறது.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறுடையார் தொடர்பு

என்று திருவள்ளுவர் பாடியிருக்கிறார்.

இதன் பொருள்—வாய்ப்பேச்சு ஒரு மாதிரியாகவும் செய்கை வேறொரு மாதிரியாகவும் உடையோரின் உறவு கனவிலும் கொள்ளுதல் தீது என்பதேயாம். பீ.ஏ., எம்.ஏ. பரீக்ஷைகள் தேறி வக்கீல்களாகவும், உபாத்தியாயராகவும், என்ஜினீர்களாகவும், பிற உத்தியோகஸ்தராகவும் வாழும் கணக்கில்லாத ஐயர், அய்யங்கார், பிள்ளை முதலியவர்களில் எவராவது ஒருவர் தன் வீட்டுக் கல்யாணத்துக்கு லக்னம் பார்க்க வேண்டிய அவசியமில்லை என்று நிறுத்தியிருப்பாரா? "பெண் பிள்ளைகளின் உபத்திரவத்தால் இவ்விதமான மூட பக்திகளுக்குக் கட்டுப்பட்டு வாழும்படி நேரிடுகிறது" என்று சிலர் முறையிடுகிறார்கள். பெண் பிள்ளைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்க வேண்டும். மூடத்தனமான, புத்திமான்கள் கண்டு நகைக்கும்படியான செய்கைகள் செய்ய வேண்டுமென்று ஸ்திரீகள் பலனின்றிப் பிதற்றுமிடத்தே, அவர்களுடைய சொற்படி

நடப்பது முற்றிலுந் தவறு. மேலும் அது உண்மையான காரணமன்று. போலிக் காரணம். நம்மவர் இத்தகைய ஸாதாரண மூட பக்திகளை விட்டு விலகத் துணியாமலிருப்பதின் உண்மையான காரணம் வைதிகரும் பாமரரும் நம்மை ஒருவேளை பந்திபோஜனத்துக்கு அழைக்காமல் விலக்கி விடுவார்கள்' என்பதுதான். இங்கிலீஷ் படித்த மேற்குலத்து ஹிந்துக்கள் கணக்கில்லாத மூட பக்திகளைக் கை விலங்குகளாகவும், கால் விலங்குகளாகவும், கழுத்து விலங்குகளாகவும் பூட்டிக் கொண்டு தத்தளிப்பதின் தலைமைக் காரணம் மேடி பந்தி போஜனத்தைப் பற்றிய பயந்தான். அதைத் தவிர வேறொன்றுமில்லை. அந்த மெய்யான காரணத்தை மறைத்துவிட்டு ஸ்திரீகளின் மீது வீண் பழி சுமத்தும் இந்த வீரர்கள் மற்றும் எத்தனையோ வியவகாரங் களில் தம்மினத்து மாதரை விலையடிமைகள் போலவும் விலங்குகள் போலவும் நடத்தும் விஷயம் நாம் அறியாததன்று. எண்ணில்லாத பொருள் நஷ்டமும் கால நஷ்டமும் அந்தக் காரணத்தின் இகழ்ச்சியும் உலகத்து அறிஞரின் நகையாடலும் ஸத்ய தெய்வத்தின் பகைமையும் சிறிதென்று கொண்டீர்! பந்தி போஜன ஸ்வதந்திரம் பெரிதென்று கொண்டீர்! தைரியமாக நீங்கள் உண்மையென்று உணர்ந்தபடி நடவுங்கள். பந்திபோஜனம் சிறிது காலத்துக்குத்தான் உங்களுக்குக் கிடைக் காதிருக்கும். பிறகு உங்கள் கூட்டத் தொகை அதிகமாகும்; ஸத்ய பலம் முதலிய பல பல காரணங்களால் மேற்படி பந்தி போஜனமும் உங்களுக்கு ஸித்தியாய்விடும். தைர்யமாக வேலை செய்யுங்கள்.

# 3. வாசக ஞானம்

வியாபாரம், கைத்தொழில், ராஜாங்கச் சீர்திருத்தம் ஜன சமூகத் திருத்தம் முதலிய லௌகிக விவகாரங்கள் எல்லாவற்றிலும், மனிதர் ஏறக்குறைய எல்லாத் திட்டங்களையும் உணர்ந்து முடித்து விட்டனர். ஒரு துறை அல்லது ஒரு இலாக காவைப் பற்றிய ஸூக்ஷ்ம தந்திரங்களை மற்றொரு துறையிற் பயிற்சி கொண்டோர் அறியாதிருக்கலாம். ஆனால், அந்தந்த நெறியிற் தக்க பயிற்சி கொண்ட புத்திமான்களுக்கு அதனை யதனைப் பற்றிய நுட்பங்கள் முழுமையும் ஏறக்குறைய நன்றாகத் தெரியும்.

பொதுவாகக் கூறுமிடத்தே, மனித ஜாதியார் அறிவு சம்பந்தப் பட்ட மட்டில் மஹா ஸூக்ஷ்மமான பரம ஸத்யங்களை யெல்லாம் கண்டுபிடித்து முடித்து விட்டனர். ஆனால் அறிவுக்குத் தெரிந்ததை மனம் மறவாதே பயிற்சி செய்ய வலிமையற்றதாய் நிற்கிறது. அறிவு சுத்தமான பின்னரும், சித்தசுத்தி ஏற்பட வழியில்லாமல் இருக்கிறது. எனவே, அறிவினால் எட்டிய உண்மைகளை மனிதர் ஒழுக்கத்திலே நடத்திக் காட்டுதல் பெருங் கஷ்டமாக முடிந்திருக்கிறது. ஆத்ம ஞானத்தின் சம்பந்தமாக கவனிக்குமிடத்தே, இந்த உண்மையைத் தாயுமானவர்,

"வாசக ஞானத்தினால் வருமோ ஸுகம் பாழ்த்த
பூசலென்று போமோ புகலாய் பராபரமே"

என்ற கண்ணியில் வெளியிட்டிருக்கிறார்.

இதன் பொருள் "வெறுமே வாக்களவாக ஏற்பட்டிருக்கும் ஞானத்தினால் ஆனந்த மெய்த முடியவில்லையே? என் செய்வோம்? பாழ்பட்ட மனம் ஓயாமல் பூசலிட்டுக் கொண்டிருக்கிறதே? இந்தப் பூசல் எப்போது தீரும்? கடவுளே, நீ அதனைத் தெரிவிப்பாய்" என்பதாம். இதே உண்மையை உலகநீதி விஷயத்தில் ஏற்கும்படி, திருவள்ளுவர்,

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

என்ற குறளால் உணர்த்துகிறார்.

இதன் பொருள் "வாயினால் ஒரு தர்மத்தை எடுத்துச் சொல்லுதல் யாவர்க்கும் சுலபமாக ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அந்தச் சொல்லின்படி நடத்தல் மிகவும் துர்லபம்" என்பது.

திருஷ்டாந்தமாக, 'ஆண்களும் பெண்களும் ஸமானமான ஆத்ம இயல்பும் ஆத்ம குணங்களும் உடையோராதலால், பெண்களை எவ்வகையிலும் இழிந்தவராகக் கருதுதல் பிழை' என்ற கொள்கை ஐரோப்பாவிற் படிப்பாளிகளுக்குள்ளே மிகவும் ஸாதாரணமாகப் பரவியிருக்கிறது. ஆயினும், பெண்களுக்கு வாக்குச்சீட்டு ஸ்வதந்திரம் வேண்டும் என்று கேட்டால், அதை பெரும்பான்மையான ஐரோப்பிய ராஜ தந்திரிகளும் பண்டிதர்களும் எதிர்த்துப் பேசுவதுடன், அங்ஙனம் எதிர்ப்பதற்குப் பல போலி நியாயங்களையும் காட்டவும் துணிகிறார்கள்.

"விஷ்ணு பக்தி யுடையோர் எந்தக் குலத்தோர் ஆயினும் எல்லா வகையிலும் ஸமானமாகப் போற்றுவதற்குரியர் என்பது ஸ்ரீராமானுஜாசாரியருடைய பரமசித்தாந்தம்" என்பதை நன்குணர்ந்த தற்காலத்து வைஷ்ணவர்கள் பிராமண சூத்ர பேதங்களை மற்ற வகுப்பினரைக் காட்டிலும் அதிகமாகப் பாராட்டுவது மாத்திரமன்றி, இன்னும் வடகலை தென்கலைச் சண்டைகளைக் கூட விடாமல் வீண் சச்சரவுகளில் ஈடுபட்டு உழல்கின்றார்கள்.

"எல்லாச் சரீரங்களிலும் நானே ஜீவனாக இருக்கிறேன்" என்று கண்ணன் கீதையால் உணர்த்திய உண்மையையும், "எல்லா உயிர்களினிடத்தும் தன்னையும், தன்னிடத்தே எல்லா உயிர்களையும் காண்பவனே காட்சியுடையவன்" என்று கண்ணபிரான் அதே கீதையிற் சொல்லிய கொள்கையையும் வேதோப நிஷத்துக்களின் முடிவான தீர்மானம் என்று தெரிந்த ஹிந்துக்கள், உலகத்திலுள்ள மற்றெல்லா ஜனங்களைக் காட்டிலும், ஜாதி வேற்றுமை பாராட்டுவதில் அதிகக் கொடுமை செலுத்துகிறார்கள்.

"இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன் கொலோ
வன்சொல் வழங்குவது"

என்ற குறளின்படி, 'இனிய சொற்கள் சொல்வதினின்றும் நன்மைகள் விளைவது கண்டும் மானிடர் ஒருவருக்கொருவர் கொடுஞ் சொற்கள் வழங்குவது மடமை' என்பது உலகத்தில் சாதாரண அனுபவமுடையவர்களுக் கெல்லாம் தெரியும். அங்ஙனம் தெரிந்தும், கொடுஞ் சொற்களும் கோபச் செயல்களும் நீங்கியவர்களை உலகத்திற் தேடிப்பார்த்தாலும் காண்பது அரிதாக இருக்கிறது.

"மரணம் பாவத்தின் கூலி" என்று கிருஸ்தவ வேதம் சொல்வது எல்லாக் கிருஸ்தவர்களுக்கும் தெரியும். அப்படியிருந்தும், பாவத்தை அறவே யொழித்த கிருஸ்தவர்கள் எவரையும் காண வில்லை. 'நாமெல்லோரும் பாவிகள்' என்பதை பல்லவிபோலே சொல்லிக்கொண்டு காலங் கடத்துகிறார்கள்.

இதென்ன கொடுமை! இதென்ன கொடுமை! இதென்ன கொடுமை! ஸாதாரணமாக வியாபாரம் விவசாயம் முதலிய காரியங்களிலேகூட மனிதர் நிச்சயமாக லாபங் கிடைக்கும் என்று தெரிந்த வழிகளை அனுசரிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பெரிய சக்திஹீனத்திற்கு மாற்றுக் கண்டுபிடிக்காமல் நாம் சும்மா இருப்பது நியாயமன்று.

கண்ணைத் திறந்து கொண்டு படுகுழியில் விழுவதுபோல, மனித ஜாதி நன்மையை நன்றாய் உணர்ந்தும் தீமையை உதற வலிமை யின்றித் தத்தளிக்கிறது.

இதற்கென்ன நிவாரணம் செய்வோம்? தைரியம் தான் மருந்து. தற்கால அஸௌகரியங்களையும் கஷ்ட நஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் மனிதர் உண்மையென்று கண்டதை நடத்தித் தீர்த்துவிட வேண்டும். அங்ஙனம் தைரியத்துடன் உண்மை நெறி பற்றி நடப்போரை மற்றவர்கள் புகழ்ச்சியாலும் ஸம்மானங்களாலும் ஊக்கப்படுத்த வேண்டும். கலி போதும்; வீண் துன்பங்களும் அநாவசியக் கஷ்டங்களும் பட்டுப் பட்டு உலகம் அலுத்துப் போய் விட்டது.

வாருங்கள், மக்களே! வாருங்கள், அண்ணன் தம்பிமார்களே! ஒருவரிருவர் நேர்மைவழியில் செல்ல முயல்வதில் பல இடர்கள் ஏற்படுகின்றன. அதனால் நேர்மை வழியிற் செல்ல விரும்பு

வோர்க்கெல்லாம் அதைரியம் ஏற்படுகிறது. வாருங்கள், உலகத்திரே! கூட்டங் கூட்டமாக நேர்மை வழியிற் புகுவோம்.

ஆண் பெண் ஸமத்வமே தர்மமென்று தெரிகிறதா? அப்படியானல், வாருங்கள்; மாதர்களை லக்ஷக்கணக்காக விடுதலை செய்வோம். ஜாதி பேதங்கள் பிரயோஜனம் இல்லை என்று தெரிந்ததா? நிற வேற்றுமைகளும் தேச வேற்றுமைகளும் உபயோகம் இல்லாதனவென்று தெரிந்ததா? நல்லது, வாருங்கள் கோடிக்கணக்காக. ஸமத்வ நெறியிலே பாய்ந்து விடுவோம். பழைய கட்டுகளை லக்ஷக்கணக்கான மக்கள் கூடி நின்று தகர்ப்போம்.

'அன்பே இன்பம் தரும். பகைமை அழிக்கும்' என்று தெரிந்தோமா? நல்லது, எழுங்கள் கோடிக்கணக்கான மானிடர் எங்கும், எப்போதும், எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தத் தொடங்குவோம். கலியை அழிப்போம். ஸத்யத்தை நாட்டுவோம்.

# 4. அமிர்தம் தேடுதல்

"காக்க நின்னருட் காட்சியல்லாலொரு போக்குமில்லை"

—தாயுமானவர்.

பல வருஷங்களின் முன்னே தெரு வழியாக ஒரு பிச்சைக்காரன் பாடிக் கொண்டு வந்தான்.

"தூங்கையிலே வாங்கிற மூச்சு - அது
சுழிமாறிப் போனாலும் போச்சு"

இந்தப் பாட்டைக் கேட்டவுடனே எனக்கு நீண்ட யோசனை உண்டாய் விட்டது. என்னடா இது! இந்த உடல் இத்தனை சந்தேகமாக இருக்கும்போது இவ்வுலகத்தில் நாம் என்ன பெருஞ் செய்கை தொடங்கி நிறைவேற்ற முடியும்? ஈசன் நம்மிடத்தில் அறிவை விளங்கச் செய்கிறான். அறிவே நமது வடிவமாக அமைத்திருக்கிறான். அறிவு இன்பத்தை விரும்புகிறது. அளவில்லாத அழகும் இன்பமும் கொண்ட உலகமொன்று நம்மோடிருக்கிறது. எப்போதும் இவ்வுலகம் இன்பம். இந்த உலகம் கவலையற்றதாகும்; இதிலே அணுவிலும் அணுவொக்கும் சிறிய பூமண்டலத்தின்மீது தான் நம்மால் ஸஞ்சரிக்க முடிகிறது. இதுபோல கணக்கில்லாத மண்டலங்கள் வானவெளியிலே சுழல் கின்றன. அவற்றின் இயல்பையும் நாம் அறிவினாலே காண்கிறோம். அவற்றிலே ஒரு பகுதியில் வடிவங்களைக் கண்ணாலே தூரத்தி லிருந்தே பார்க்கிறோம். இவ்வளவில் எங்கே பார்த்தாலும் ஒரே அழகு மயமாக இருக்கிறது. நமது பூமண்டலத்திற்கு வான் முழுதும் ஒரு மேற்கட்டிபோலத் தோன்றுகிறது. இடை யெல்லாம் ஒரே தெளிவான வெளி, ஸூரியன் செய்கிற ஆயிர விதமான ஒளியினங்கள். மலை, காடு, நதி, கடல்—அழகு.

தவிரவும், எதைத் தொட்டாலும் இன்பமும் துன்பமும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், நாம் அறிவினாலே பொருள் களின் துன்பத்தைத் தள்ளி இன்பத்தை எடுத்துக் கொள்ளலாம். தண்ணீர், குளித்தால் இன்பம். குடித்தால் இன்பம்; தீ, குளிர்

காய்ந்தால் இன்பம், பார்த்தாலே இன்பம்; மண், இதன் விளைவு களிலே பெரும்பான்மை இன்பம், இதன் தாங்குதல் இன்பம்; காற்று, இதைத் தீண்டினால் இன்பம், மூச்சிலே கொண்டால் இன்பம்; உயிர்களுடனே பழகினால் இன்பம்; மனிதரின் உறவிலே அன்பிருந்தால் இன்பக் கட்டி. பின்னும் இவ்வுலகத்தில், உண்ணுதல் இன்பம், உழைத்தல் இன்பம், உறங்கல் இன்பம்; ஆடுதல் இன்பம், கற்றல், கேட்டல், பாடுதல், எண்ணுதல், அறிதல்—எல்லாம் இன்பம் தான்.

துன்பத்தை நீக்குதல் விரைவிலே
ஈடேறவில்லை

ஆனால் இவ்வின்பங்களெல்லாம் துன்பங்களுடனே கலந்திருக் கின்றன. துன்பங்களை அறிவினால் வெட்டி யெறிந்துவிட்டு இன்பங்களை மாத்திரம் சுவை கொள்ள வேண்டுமென்று ஜீவன் விரும்புகிறது. துன்பங்களை வெட்டியெறியத் திறமை கொண்ட அறிவும் உறுதியும் வேண்டுமானால், அது எளிதில் முடிகிற காரிய மாகத் தோன்றவில்லை. பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகு தான், சிறிய உண்மைகள் புலப்படுகின்றன. நம்மைச் சுற்றி இன்பக் கோட்டைகள் கட்டிக் கொள்ள வேண்டும் என்கிற ஆசை ஒவ்வொருவனுக்கும் இருக்கிறது. மஹத்தான அறிவு வேண்டும். அழியாத நெஞ்சுறுதி வேண்டும். கல்விகள் வேண்டும். கீர்த்தி கள் வேண்டும். செல்வங்கள் வேண்டும். சூழ்ந்திருக்கும் ஊரார் தேசத்தார் உலகத்தார் எல்லாரும் இன்பத்துடன் வாழும்படி நாம் செய்ய வேண்டும். நல்லாசைகள் பெரிது பெரிதாக வைத்துக் கொண்டிருக்கிறோம். இந்த ஆசைகள் நிறைவேறவேண்டுமானால், பலமான அடிப்படைபோட்டு மெல்ல மெல்லத் கட்டிக் கொண்டு வரவேண்டும். நிலைகொண்ட இன்பங்களை விரைவிலே உண்டாக்கு தல் சாத்தியமில்லை. ஏழையாக இருப்பவன் பெரிய செல்வவானாக வேண்டுமானால் பல வருஷங்கள் ஆகின்றன. கல்வியில்லாதவர் கற்றுத் தேறப் பல வருஷங்கள் ஆகின்றன. உலகத் தொழில் களிலே தேர்ச்சியடைய வேண்டுமானால் அதற்குக் காலம் வேண்டும். ஆத்ம ஞானம் பெறுவதற்குக் காலம் வேண்டும். "பொறுத்தவன் பூமியாள்வான்." "பதறின காரியம் சிதறும்." இடையே குறுக்கிடும் மரணம். இங்ஙனம் இன்பங்களின்

தேட்டத்தில் நம்மால் இயன்ற வரையில் இடைவிடாமல் முயற்சி செய்து கொண்டு நாம் காலத்தின் பக்குவத்துக் காகக் காத்திருக்கும்படி நேரிடுகிறது. இதனிடையே, மேற்படி பிச்சைக்காரன் பாட்டு வாஸ்தவமாய் விட்டால் என்ன செய்வது? தூங்கையிலே வாங்குகிற மூச்சு, அது சுழிமாறிப் போனாலும் போச்சு, என்ன ஹிம்சை இது? நூறு வயதுண்டு என்பதேனும் நல்ல நிச்சயமாக இருந்தால் குற்றமில்லை. நூறு வருஷங்களில் எவ்வளவோ காரியம் முடித்து விடலாம். 'அடுத்த நிமிஷம் நிச்சயமில்லை' என்று தீர்ந்து விட்டால் எதைக் கொண் டாடுவது? இது கட்டி வராது. எப்படியேனும், தேகத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும். நமது காரியம் முடிந்த பிறகுதான் சாவோம்; அதுவரை நாம் சாகமாட்டோம். நமது இச்சைகள், நம்முடைய தர்மங்கள் நிறைவேறும்வரை நமக்கு மரணமில்லை.

# 5. புனர் ஜன்மம்

## 1

புனர் ஜன்மம் உண்டு.

மதுரையிலே ஒரு சாஸ்திரியார் நேற்று மாலை இறந்து போனதாக வைத்துக் கொள்ளுவோம். அவர் திரும்பவும் பிறப்பாரா? தெரு வழியாக ஒருவன் நடந்து போகும்போது காலிலே ஒரு சிற்றெறும்பு மிதிபட்டு இறந்து போவதாக வைத்துக் கொள்ளுவோம். அது திரும்பவும் பிறக்குமா? இதையெல்லாம் பற்றி சாஸ்திரங்கள் மிகவும் விஸ்தாரமாகப் பேசியிருக்கின்றன. அவற்றிலே படித்துக் கொள்ளலாம். ஆனால், நான் இப்போது சொல்ல வந்த கதை இதுவன்று. நான் சொல்ல வந்த விஷயம் ஹிந்துஸ்தானத்தின் புனர் ஜன்மம்.

'ஹிந்து ஸ்தானம்' என்பது ஹிந்துக்களின் ஸ்தானம். இது நமது தேசத்திற்கும், தேசத்திலுள்ள ஜனக் கூட்டத்திற்கும் பெயர். இந்த ஜனக் கூட்டத்திற்கு 'பாரத ஜாதி' என்றும் பெயர் சொல்வதுண்டு.

## பாரத ஜாதி

பாரதம் பரதன் நிலைநாட்டியது. இந்த பரதன் துஷ்யந்த ராஜாவின் மகன். இமயமலை முதல் கன்யாகுமரி முனை வரையி லுள்ள நமது நாட்டை இவன் ஒன்று சேர்த்து அதன்மிசை முதலாவது சக்ராதிபத்யம் ஏற்படுத்தியபடியால், இந்த நாட்டிற்கு, 'பாரத தேசம்' என்று பெயர் உண்டாயிற்று. கங்கையிலே வந்து சேரும் வாய்க்கால்களெல்லாம் கங்கையாகவே மாறிவிடும். பாரத தேசத்தில் வந்து குடியேறித் தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்களெல்லாம் நமது ஜனக் கூட்டத்தைச் சேர்ந்தவராகின்றனர்.

கிருஸ்துவர்களாயினும், பார்ஸிகளாயினும், மகம்மதியராயினும், எங்கிருந்து வந்து எந்த இஷ்ட தெய்வத்தை கொண்டாடிய போதிலும், பாரத பூமியிலே பிறந்து வளர்ந்து இதையே சரணுகக் கொண்ட மனிதர்களையெல்லாம் பாரத ஜாதியிலே சேர்த்துக் கணக்கிட வேண்டும். இது ஒரே ஜாதி; பிரிக்க முடியாதது; அழிவில்லாதது. இதற்கு ஆதாரமும் மூலபலமுமாவது யாதெனில், ஆர்ய ஸம்பத்து. அதாவது ஆரியரின் அறிவும் அந்த அறிவின் பலன்களும்.

## ஆர்ய ஸம்பத்து

ஸம்பத்து என்பது ஸம்ஸ்கிருதச் சொல். இதன் பொருள் செல்வம். ஆனுல் இங்கு செல்வம் என்பது திரவியத்தையும் பூஸ்திதியையும், ஆடு மாடுகளையும் மாத்திரமே குறிப்பிடுவதன்று. (1) அறிவுச் செல்வம், (2) ஒழுக்கச் செல்வம், (3) பொருட் செல்வம் ஆகிய மூன்றையும் குறிப்பிடும். 'ஆரிய ஸம்பத்து' என்பது ஹிந்துக்களுடைய அறிவு வளர்ச்சி.

நமது வேதம், நமது சாஸ்திரம், நமது ஜனக்கட்டு, நமது பாஷைகள், நமது கவிதை, நமது சிற்பம், நமது ஸங்கீதம், நமது நாட்டியம், நமது தொழில் முறைகள், நமது கோபுரங்கள், நமது மண்டபங்கள், நமது குடிசைகள்—இவை யனைத்துக்கும் பொதுப் பெயர் 'ஆரிய ஸம்பத்து.' காளிதாஸன் செய்த சாகுந்தல நாடகம், ஹிந்தி பாஷையிலே துளஸீதாஸர் செய்திருக்கும் ராமாயணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், ஆண்டாள் திருமொழி—இவையனைத்துக்கும் பொதுப் பெயராவது ஆரிய ஸம்பத்து. தஞ்சாவூர் கோயில், திருமலை நாய்க்கர் மஹால், தியாகையர் கீர்த்தனங்கள், எல்லோராவிலுள்ள குகைக்கோயில், ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், சரப சாஸ்திரியின் புல்லாங்குழல்—இவையனைத்துக்கும் பொதுப்பெயர் ஆரிய ஸம்பத்து. எனவே, ஆரிய ஸம்பத்தாவது ஹிந்துஸ்தானத்தின் நாகரீகம். இந்த ஸம்பத்தைப் பாதுகாக்கும் வரையில் இந்த ஜாதிக்கு உயிருண்டு. இந்த ஸம்பத்திலே துருப்பிடிக்க இடம் கொடுத்தால், இந்த ஜாதியைச் செல் அரித்துவிடும்.

இந்த ஆரிய ஸம்பத்தை உலகம் உள்ளவரை ஸம்ரக்ஷணம் செய்து, மேன்மேலும் ஒளியும் சிறப்பும் உண்டாகும்படி செய்யுங் கடமை தேவர்களால் பாரத ஜாதிக்கு ஏற்படுத்தப்பட்ட கடமையாகும்.

## இடையில் நமக்கு நேர்ந்த கேடு

இந்த ஆரிய ஸம்பத்தை நாம் பல பல நூற்றுண்டுகளாக ஆதரித்துக்கொண்டு வந்தோம். சென்ற சில நூற்றுண்டுகளாக இதில் துருப் பிடிக்க இடங் கொடுத்து விட்டோம். தேவர்கள் நமக்குக் கொடுத்த கடமையை கர்வத்தாலும், சோம்பலாலும், சிறுமையாலும் உல்லங்கனம் செய்யத் தொடங்கினோம். தேவர்கள் 'இந்த பாரத ஜாதியைக் கொஞ்சம் செல் அரிக்கக் கடவது!' என்று ஆசீர்வாதம் பண்ணினார்கள்.

மலைப் பாம்புக் கதை கேட்டிருக்கிறீர்கள் அல்லவா? அதன் வாலிலே தீப்பற்றி எரியுமாம் மலைப் பாம்பு சுகமாக குறட்டை விட்டுத் தூங்குமாம். செல்லரித்துக் கொண்டு போனது நமது ஸ்மரணையிலே தட்டவில்லை. அத்தனை கர்வம், அத்தனை கொழுப்பு, அத்தனை சோம்பர்.

நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று, ருசி குறைந்தது. கரடுமுரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை நமது கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்ற லாயிற்று. கவிராயர் 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது. உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன.

சவியுறத்தெளிந்து தண்ணென்றொழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்

என்று கம்பன் பாடியிருக்கின்றான்.

'சவி' என்பது ஒளி; இது வடசொல்; கம்பன் காலத்தில் அதிக வழக்கத்திலிருந்தது போலும். "ஒளி பொருந்தும்படி தெளிவு கொண்டதாகி தண்ணென்ற (குளிர்ந்த) நடையுடைய தாகி, மேலோர் கவிதையைப் போலக்கிடந்தது கோதாவரி நதி" என்று கம்பன் வர்ணனை செய்கிறான். எனவே, கவிதைகளில்

ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை.

மேலும், நெடுங்காலத்துக்கு முன்னே எழுதப்பட்ட நூல்கள் அக்காலத்து பாஷையைத் தழுவினவை. காலம் மாற மாற, பாஷை மாறிக் கொண்டு போகிறது; பழைய பதங்கள் மாறிப் புதிய பதங்கள் உண்டாகின்றன. புலவர் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளிவாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக்காட்சிகளை எளிமை கொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை. ஆனால் சென்ற சில நூற்றாண்டுகளாக, புலவர்களும் சாமியார்களும் சேர்ந்து வெகு ஸாதாரண விஷயங்களை அஸாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுதுவதுதான் உயர்ந்த கல்வித் திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்.

## இடைக்காலத்து ஸங்கீதம்

பாரத தேசத்து ஸங்கீதம் பூமியிலுள்ள எல்லா தேசத்து ஸங்கீதத்தைக் காட்டிலும் மேலானது. கவிதையைப் போலவே ஸங்கீதத்திலும் நவரஸங்களின் தொழில் இருக்க வேண்டும். நவரஸங்களைப் பற்றி இந்தப் பத்திரிகையிலே * தனியாக ஒரு வியாஸம் பின் எழுதப்படும். இன்ன இன்ன ராகங்களிலே இன்ன இன்ன சமயங்களில் இன்ன இன்ன ரஸங்கள் தோன்றப் பாடவேண்டு மென்ற விதிகள் எல்லாம் பூர்வகாலத்து நூல்களிலே காணப்படுகின்றன. கீர்த்தனத்திலுள்ள சொற்களின் அர்த்தமும் ராகத்தின் ஒளியும் ரஸத்திலே ஒன்றுபட்டிருக்க வேண்டும். தியாகையர் காலம்வரை நமது தேசத்து ஸங்கீதம் ஒளியுடனிருந்தது. பிறகு இதிலும் இருள் சேரத் தொடங்கி விட்டது. பாட்டிலே ரஸச் சேர்க்கை கிடையாது. அப்படியே சேர்த்தாலும் சோக ரஸம் (கருணை ரஸம்) தான் சேர்ப்பார்கள். மற்றவை மடிந்து போயின, பாட்டுக் கிசைந்தபடி தாளம் என்பது மாறிப் போய், தாளத்துக் கிசைந்தபடி பாட்டாகி விட்டது. 'இன்பத்தைக் காட்டிலும் கணக்கே பிரதானம்' என்று முடிவு செய்துகொண்டார்கள். இன்பமும் கணக்கும் சேர்ந்திருக்க

* சுதேசமித்திரன் பத்திரிகை.

வேண்டும். இன்பமில்லாமல் கணக்கு மாத்திரமிருந்தால், அது பாட்டாகாது.

## மறு பிறப்பு

இடைக் காலத்தே நமக்கு நேர்ந்த கேட்டிற்கு ஸங்கீதத்தையும் கவிதையையும் திருஷ்டாந்தங் காட்டினோம். ஆனால், இந்தக் கேடு அவை இரண்டையும் மாத்திரமே தொட்டு நிற்கவில்லை. நமது சித்திரத் தொழில், நமது சிற்பம், நமது ஜனக்கட்சி, ஜன நீதி, நமது சாஸ்திரம், தலை, கால்—எல்லாவற்றிலும் இந்தக் கேடு பாய்ந்துவிட்டது. நோய் முற்றிப்போயிருந்தது. பராசக்தி நல்ல வேளையில் நமக்குள் உயர்ந்த வைத்தியர் பலரை அனுப்பினாள். அவளுக்கு நம்மீது கிருபை வந்து விட்டது. எனவே, பிழைத்தோம். ஆனாலும், இம்முறை பிழைத்தது புனர்ஜன்மம். இந்தப் புனர் ஜன்மத்தின் குறிகளை எல்லாவற்றிலும் காண்கிறோம். பாரத ஜாதி புதிதாய் விட்டது. தற்காலத்திலே பூமண்டலத்து மஹா கவிகளில் நமது ரவீந்திரநாதர் ஒருவர் என்று உலகம் ஒப்புக் கொள்ளுகிறது. இதுவரை ஐரோப்பிய பண்டிதர்கள் இயற்கை நூல் (ப்ரகிருதி சாஸ்திரம்) தமது விசேஷ உடமை என்று கருதி வந்தார்கள். இப்போது நமது ஜகதீச சந்திர வஸு அந்த வழியில் நிகரற்ற திறமை பெற்றவர் என்பதை மேல் நாட்டு வித்வான்களில் ஒப்புக் கொள்ளாதவர் யாருமில்லை. தமிழ் நாட்டிலே புதிய கவிதையும் சாஸ்திர ஒளியும் விரைவிலே தோன்றும். உலகம் பார்த்து வியப்படையும்.

செத்துப் பிழைத்தோம். ஆனால் உறுதியாக நல்ல வயிரம் போலே பிழைத்து விட்டோம். புதிய ஜன்மம் நமக்கு மிகவும் அழகான ஜன்மமாகும்படி தேவர்கள் அருள் புரிந்திருக்கிறார்கள். அதன் பொருட்டு அவர்களை இடைவிடாமல் வாழ்த்துகிறோம்.

## 2

பாப புண்ணியங்களுக்கு இணங்க மானிடரின் கர்மத்தினுடைய பலனாக அடுத்த ஜன்மத்தில் உயர்ந்த பிறப்பேனும் தாழ்ந்த

பிறப்பேனும் கிடைக்கும் என்பது நமது தேசத்துப் பொது நம்பிக்கை. பாவம் செய்யும் ஒருவனை 'நீ அடுத்த ஜன்மம் மிருக மாகப் பிறப்பாய்' என்றால் அவனுடைய மனம் பதைக்கிறது. ஆனால், இந்த ஜன்மத்திலேயே மனிதர்கள் தாம் மிருகங்களைப் போலிருப்பதைக் கவனிப்பது கிடையாது. ஒவ்வொரு நிமிஷத்தி லேயும் ஒருவன் நினைக்கும் நினைப்புகளும் செய்யும் செய்கைகளும் அவன் பலவிதப் பிறவிகளை அடைவதற்குக் காரணமாகின்றன. இந்த உலகத்திலேயே, இப்பொழுதே, ஒரே சரீரத்திலுள்ள ஒருவன் ஆயிரம் பிறவிகள் பிறந்து மடிகிறான். 'ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொருவனும் பிறந்து பிறந்து மடிகின்றான்; ஒவ்வொரு க்ஷணமும் ஒவ்வொருவனும் பிறந்து பிறந்து மாய்கிறான்' என்று கூறத் தகும். மிருகங்களைப் போன்ற மனிதர்களை நாம் பார்த்ததில்லையா? நம்மை நாம் கவனிக்கு மிடத்து, எத்தனை வித மான மிருகங்களா யிருந்திருக்கிறோம் என்பது தெரியும். வஞ்சனை யாலும், தந்திரத்தாலும், சமயத்திற் கேற்பப் பல வித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் நரிதானே? ஊக்கமில்லாமல் ஏதேனு மொன்றை நினைத்துக் கொண்டு மனஞ்சோர்ந்து தலை கவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன் தேவாங்கு. மறைந்திருந்து பிறருக்குத் தீங்கு செய்பவன் பாம்பு. தாமதத்திலும், புகழிலும் விருப்ப மில்லாமல், அற்ப சுகத்திலே மூழ்கிக் கிடப்பவன் பன்றி. சுயா தீனத்திலே இச்சையில்லாமல் பிறர்களுக்குப் பிரியமாக நடந்து கொண்டு, அவர்கள் கொடுத்ததை வாங்கி வயிறு வளர்ப்பவன் நாய். கண்ட விஷயங்களிலெல்லாம் திடீர், திடீர் என்று கோப மடைகிறவன் வேட்டைநாய். காங்கிரஸ் சபையிலேயும் சேர்ந்து கொண்டு, ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் ஹிதமாக நடக்க வேண்டுமென்ற விருப்பமுடைய 'மேத்தா' கட்சியைச் சேர்ந்தவன் வெளவால். அறிவுத் துணிவால் பெரும் பொருள்களைத் தேர்ந்து கொள்ளாமல், முன்னோர் சாஸ்திரங்களைத் திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக் கொண்டிருப்பவன் கிளிப்பிள்ளை. பிறர் தன்னை எவ்வளவு அவமதிப்பாக நடத்தியபோதிலும் அவன் அக்கிரமத்தை நிறுத்த முயலாமல் தனது மந்த குணத்தால் பொறுத்துக் கொண்டிருப்பவன் கழுதை. வீண் மினுக்கு மினுக்கி டம்பம் பாராட்டுகிறவன் வான்கோழி. கல்வி யறிவில்லாதவனை

மிருகக் கூட்டத்திலேயும் சேர்க்கலாகாது, அவன் தூண். தான் சிரமப்படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்ணுபவன் கழுகு. ஓர் நவீன உண்மை வரும்போது, அதை ஆவலோடு அங்கீகரித்துக் கொள்ளாமல் வெறுப்படைகிறவன் (வெளிச் சத்தைக் கொண்டு அஞ்சும்) ஆந்தை.

ஒவ்வொரு நிமிஷமும் சத்தியமே பேசித் தர்மத்தை ஆதரித்துப் பரமார்த்தத்தைத் அறிய முயலுகிறவனே மனிதனென்றும் தேவனென்றும் சொல்வதற்குரியவனுவான். மிருக ஜன்மங்களை நாம் ஒவ்வொரு வரும் க்ஷணந்தோறும் நீக்க முயல வேண்டும்.

# 6. உலக வாழ்க்கையின் பயன்

உலக வாழ்க்கையில் மானிடராலும் மற்ற உயிர்களாலும் விரும்பப்படும் மிகச் சிறந்த பயன் யாது? எப்போதும் நீங்காத, எப்போதும் மாறாத, எப்போதும் குறையாத இன்பமெய்தி வாழ்தல்.

இவ் வகையான இன்பத்தை எய்தும் பொருட்டாகவே மானிடர் கல்வி கற்பதும், பொருள் சேர்ப்பதும், தவங்கள் செய்தலும், அரசாள்வதும், களவு செய்தலும், கொலை செய்வதும், பேசுதலும் சிரித்தலும், ஆடுதலும், பாடுதலும், அழுதலும், உழுதலும்— எல்லாத் தொழிலும் செய்கிறார்கள். மனிதர் மட்டுமேயன்றி மற்ற எல்லா உயிர்களும் தாம் செய்யும் எல்லாத் தொழில்களையும் மேற்கூறிய ஒரே நோக்கத்தோடுதான் செய்கின்றன.

ஆயினும், இதுவரை மேற்படி நித்யானந்த நிலையை எந்த உயிரும் எய்தவில்லையென்பது தெளிவு. உலகத்தில் தவிர்க்க முடியாத துக்கம் நிறைந்திருப்பதே புத்தர் கண்டதாகக் கூறப் படும் நான்கு உண்மைகளில், முதலாவது. இங்ஙனம் தீராத துன்பம் இருப்பதற்குக் காரணம் ஒவ்வோர் உயிரும் தன்னை யேனும் பிற உயிர்களையேனும் பார்த்தும் கருதியும் ஓயாமல் அருவருப்பும் பயமும் அடைகின்றனவாதலேயாம்.

இங்ஙனம் ஒவ்வொரு உயிர்க்கும் தன்னிடத்தும் பிற உயிர்களி டத்தும் பொருள்களிடத்தும் தீராத சகிப்பின்மையும், பயமும், வெறுப்பும், கவலையும் ஏற்படுவதற்குக் காரணம், அநாதி காலந் தொட்டு ஜீவர்களுக்குள்ளே நிகழ்ந்துவரும் ஓயாத போராட்டத் தால் ஏற்பட்ட பழக்கந் தவிர வேறொன்றுமில்லை.

எல்லா வஸ்துக்களும் எல்லாக் குணங்களும் ஒன்றென்னும் வேதாந்த ஞானத்தால் இந்த அஞ்ஞானப் பழக்கத்தை நீக்க வேண்டும். மேற்படி ஞானம், உலகம் தோன்றிய கால முதலாக, எத்தனையோ பண்டிதர்களின் மனத்திலும் கவிகளின் மனத்திலும் உதித்திருக்கிறது. எத்தனையோ கோடிக்கணக்கான பாமரர்

மனத்துள் அவை அழுத்தாமல், வாயினுல் பிதற்றிக்கொண்டு வந்திருக்கிருர்கள்.

ஆயினும், பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் ஒருங்கே அந்த ஞானத்தை நித்ய அநுபவத்தில் கொண்டுவர முடியாதபடி, பழைய அஞ்ஞானம் தடுக்கிறது.

'அஞ்ஞானத்தை வென்ருல், தீராத இன்பநிலை யெய்திவாழலாம்' என்று சாஸ்திரம், யுக்தி, அனுபவம்—மூன்று பிரமாணங்களாலும் விளங்குகிறது. எனினும், அந்த அஞ்ஞானப் பிசாசையும் அதன் குட்டிகளாகிய காமம், குரோதம், மோஹம், லோபம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு யமதூதர்களையும் வெல்ல மனிதனுடைய சித்தம் இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது. நாயைக் குளிப்பாட்டி நல்ல உணவளித்து நடு வீட்டில் வைத்தால், அது மறுபடியும் அசுத்த உணவை விரும்பி வாலைக் குழைத்துக் கொண்டு ஓடத்தான் செய்கிறது. எத்தனை புதிய இன்பங்களைக் காட்டியபோதிலும், மனம் அவற்றில் நிலைபெருமல், மீண்டும் ஏதேனும் ஒரு துன்பக் குழியிலே கண்ணைத் திறந்து கொண்டு போய் விழுந்து தத்தளிக்கத் தொடங்குகிறது.

மனம் கலங்கிய மாத்திரத்தில் புத்தி கலங்கிப் போய்விடுகிறது. ஆகையால், புத்தியை நம்பி எவனும் மனத்தைக் கலங்க விடாதிருக்க கடவன். மனத்தைக் கலங்க விடாமல் பயிற்சி செய்வதே எல்லாவித யோகங்களிலும் சிறந்த யோகமாகும். மனம் தவறி ஒரு துன்பக் குழியில் போய் விழுங் காலத்தில், புத்தி சும்மா பார்த்துக் கொண்டு நிற்கிறது. ஒரு வேளை புத்தி தடுத்தபோதிலும், அதை மனம் கவனிப்பதில்லை. புத்தியை மீறி உழலும் சக்தி மனத்துக்கு இருக்கிறது.

ஆதலால், மனம் துன்பத்தில் நழுவி விழத் தொடங்கும்போது, அதை உறுதி அல்லது தைரியம் என்ற கடிவாளத்தால் பிடித்து நிறுத்திப் பழகுவதே சரியான யோகப் பயிற்சியாம். இந்தப் பயிற்சி ஏற்படுத்திக் கொள்ளுமாறு சிலர் உலகத்தை விட்டு நீங்கித் தனியிடங்களிலிருந்து கண்ணை மூடிக்கொண்டு பழகுகிருர்கள். வேறு சிலர் மூச்சைப் பல இடங்களில் கட்டியும் அவயவங்களைப் பலவாறு திருப்பியும் பழகுகிருர்கள்; தனியே இருந்து ஜபம் பண்ணிப் பார்க்கிருர்கள்.

இதிலெல்லாம் இது வேகாது. உலகத்தாருடன் கூடி எல்லா வகைகளிலும் மற்ற உலகத்தாரைப் போலவே தொழில் செய்து கொண்டு உலக விவகாரங்களை நடத்திய வண்ணமாகவே சஞ்சலத்துக்கு இடங்கொடாதபடித் தன் மனத்தைக் கட்டக் கூடிய திறமையே பயன் தரக் கூடியது, மற்ற முயற்சிகளெல்லாம் வீண்.

நீதி, ஸமாதானம், ஸமத்துவம், அன்பு இவற்றாலேயே இவ்வுலகத்தில் தீராத தைரியமும், அதனாலே தீராத இன்பமும் எய்தலாம். வேறு வழியில்லை.

# 7. கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள தூரம்

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கொள்கையை உடையவராயிருக்க லாம். அதாவது, மற்ற எல்லாரையும் விட ஒரு நியாயம், அல்லது ஒரு தர்மம், அல்லது ஒரு மதம், இவற்றில் ஒன்றில் ஒருவன் விசேஷ மனப் பற்றுடையவனாய் இருக்கலாம். இவை ஒவ்வொன்றும் ஸர்வ ஜன ஸம்மதமாய் நன்மை பயக்கத்தக்கதாய் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. ஒரு கொள்கை தீமையை விளையச் செய்யினும் செய்யும். நன்மையை விளையச் செய்யினும் செய்யும். ஆனால், ஒருவர் ஒரு கொள்கைப்படி கருமங்களைச் செய்யும்பொழுது அது தனக்காவது பிறருக்காவது நன்மை தருமென்றே செய்வார். ஒருவன் கொடுங்கோல் அரசில் குடித்தனம் செய்தால் வயிற்றுக்குச் சோறில்லாமலும் சர்க்கார் அதிகாரிகளின் ஹிம்சையால் மானமிழந்தும் துன்பமடைய வேண்டியிருக்கிறது ; குடியானவனாயிருந்து பயிர்த்தொழில் செய்யவோ அநேக தடங்கல்கள் இருக்கின்றன ; பட்டத்தில் மழை பெய்யவில்லை ; அப்படி மழை பெய்தாலும், உழ எருதுகள் இல்லை; உழுதாலும் விதைக்க வித்துக்களில்லை ; விதை விதைத்தாலும், களைகளைச் சரியான காலத்தில் எடுத்துப் பயிர் அடித்துக் காவல் காத்து மாசூலை அறுவடை செய்து வீடு கொண்டுவந்து சேர்த்து ஸங்கிக்க ஐவேஜ் இல்லை ; அப்படி வீடு கொண்டு வந்து சேர்த்துப் பலனை அநுபவிக்கவும் இடமில்லை ; ஏனென்றால் சர்க்கார் தீர்வைக்கே தானிய தவசங்களை களத்தில் விற்றுவிட வேண்டியிருக்கிறது. ஆகையால், உழுது உண்ணுவதை விட வேறு என்ன தொழில் செய்தாயினும் பிழைக்கலாமென்று கொள்ளைக் கூட்டத்தோடு சேர்ந்து பிரயாணிகளை வழிப்பறி செய்தோ, கன்னம் வைத்துத் திருடியோ பிழைக்க ஆரம்பிக்கிறான். அவன் செய்யும் தொழில் ஒரு கொள்கையினடியாய் உண்டானதாயினும், அது அவனுக்குத்தான் நன்மை தருமேயல்லாது இதரர்களுக்குத்

தீமையே செய்யும். இருந்தாலும் ஆபத் தர்மம் என்ற கொள்கையை அவன் அனுசரிக்கிருன். மனைவி மக்கள் உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றி, பார்த்தவரெல்லாம் பரிதாபங் கொள்ளும்படியாய், ஒரு புருஷன் குடும்ப சவரக்ஷணை செய்வதால், அவன் மானம் அழிந்து போகிறது. 'பயிர்த் தொழிலில் ஒன்றும் கிடைக்காது' என்ற நிச்சயம் ஏற்பட்டு விட்டது. திருட்டுத் தொழிலில் ஏதேனும் பசியார உண்ணக் கிடைக்கும் என்ற திண்ணம் உண்டு. பிரயாணிகளோ ஆங்கிலேயர் ஆசீர் வாதத்தால் நிராயுதபாணிகளாய் இருக்கிருர்கள். போலீஸ் என்ற உள் நாட்டுக் காவற்காரரோ சம்பளம் சொற்பமானதாலும், அந்நியர் அரசாட்சி தங்கள் தயவின்றி நடவாதென்ற நம்பிக்கையாலும், தாங்களே திருடத் தயாராயிருக்கிருர்கள். கொள்ளைக் கூட்டத்தாரோடு 'எக்கிரிமெண்டு' (உடன்படிக்கை) செய்துகொண்டு அவர் கொள்ளையில் ஒரு பங்கு பெற்றுக் காலத்தைத் தள்ள காத்துக் கொண்டிருக்கிருர்கள். இத்தியாதி சவுகரியங்களால் திருட்டுப் பிழைப்பே மேலானதென்று ஒரு குடியானவன் அதைக் கைக் கொள்ளுகிருன். ஆனல் அந்தத் தொழிலில் ஜீவஹிம்சை செய்தே நடக்க வேண்டியிருக்கிறது. அப்படிச் செய்வது பாபமாகும். அந்தப் பாபத்தால் பாபத்திற் குரிய மோட்சத் தடை நேரிடும் என்ற பயமோ, சந்தேகமோ அவனுக்கு உண்டாகிறது. அதற்கு ஈடாக அவன் வழிப்பறி செய்யுங் காலத்தில் ஒரு தருமத்தை அனுசரிக்கிருன். அதாவது, சில வகுப்பார்களை அவன் தொடுவதில்லை. ஏழைகள், துணையின்றிச் செல்லும் ஸ்திரீகள், நோயாளிகள், தூர ஸ்தலங்களிலிருந்து வரும் யாத்திரைக்காரர்கள் ஆகிய இவர்களையும் இவர்களைப் போன்ற மற்றவர்களையும் ஹிம்ஸிப்பதில்லை. அதோடு நில்லாமல், தான் கொள்ளையடித்து ஈட்டிய பொருளில் ஒரு பாகத்தைக்கொண்டு தான தருமங்களும் செய்கிருன். தன்னைப் பகலில் கொள்ளையடித்த சாவுகாரனையும், லேவாதேவி செய்யும் நிஷ்கண்டகனையும், ஏன் இரவிற்கொள்ளை யடிக்கக்கூடாதென்று தன்னைத்தானே கேட்கலாகிருன். 'குனிந்தால் வரி, நிமிர்ந்தால் வரி, நின்ருல் வரி, உட்கார்ந்தால் வரி, நில வரி, நீர் வரி, பாசி வரி, ரோட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மோட்டு வரி,

கொடுக்கல் வரி, வாங்கல் வரி, வருமான வரி, தொழில் வரி, தோல்கேட்டு வரி, ரயில் வரி, சாக்கடை வரி, சாராயக்கடை வரி, மாட்டு வரி, ஆட்டு வரி, நாய் வரி, பூனை வரி, இறக்குமதி வரி, ஏற்றுமதி வரி, இன்னும் என்ன முடியாத வரிகளைப் போட்டு, வீடு வாசல், நிலம் கரை, ஆடு மாடு, சட்டி பொட்டி இவைகளை ஜப்தி செய்து ஏலங்கூறி கொள்ளையடித்துப் போகும் சர்க்கார் பணத்தை நாம் ஏன் திரும்பக் கொள்ளையடிக்கப் படாது?' என்ற கேள்வியும் அவனுக்கு உண்டாகிறது. இவ் விதமாக ஆட்சேபனை ஸமதானங்களால் தம் மனதில் கொள்ளை யடித்துப் பிழைப்பதே நல்லதென்று ஒரு தீர்மானம் செய்து கொள்ளுகிறான். இந்தத் தீர்மானம் அவன் பிறவிக் குணத்துக்கு விரோதமாய் இருப்பினும், தர்ம சாஸ்திரத்திற்கு முற்றும் ஒவ்வாததாய் இருப்பினும், கால சுபாவம் என்ற அவசியத்தால் ஆப்த தர்மமாக அவன் சித்தத்தில் நிலைத்து விடுகிறது. இதை ஒரு கொள்கையாக வைத்துக் கொண்டு அவன் காரியங்களை ஆரம்பிக்கிறான். சிலர் இதை நல்லதென்று சொல்லுவார்கள். எவன் எதைச் சொல்லினும், எவர் எதைச் செய்யினும், தான் கொண்டதே கொள்கை யென்று அவன் காலத்தைக் கழித்து வருகிறான். அவன் கொள்கைக்கும் செய்கைக்கும் ஒற்றுமை இருக்கிறது. இரண்டும் ஒன்றை யொன்று அடுத்துத் தொடர்ந்தே வருகிறது. அவன் மனோதிடம் வாய்ந்த புருஷன் என்றே சொல்லலாம்.

ஒரு கொள்கை என்ப தென்ன? இதை நாம் ஆராய்ந்து அறிவது அவசியம். ஏனெனில், கொள்கையின்றிக் காரியங்களைச் செய்து திரியும் சில மனிதர்கள் இருக்கிறார்கள். பகுத்தறியும் சக்தி இல்லாத எவனுக்கும் கொள்கையென்று ஒன்று இருக்காது. ஒரு கொள்கையை யுடையவன் பகுத்தறியும் சக்தி உடையவனாகவே இருக்க வேண்டும். ஒரு கிராமம் இருக்கிறது. அதில் வசிப்பவர்கள் ஒரே ஜாதி அல்லது வகுப்பைச் சேர்ந்தவர்களாக யிருக்கிறார்கள். எல்லாரும் கள்ளர்கள். தலைமுறை தலைமுறையாக அவர்களுக்குக் கொள்ளையே ஜீவனோபாயம். அந்த ஊரில் ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவன் அப்பன் திருடன், பாட்டன் திருடன், முப்பாட்டன் திருடன், அண்டை வீட்டுக்

காரன் திருடன், மாமன் திருடன், மைத்துனன் திருடன், ஆகையால் அவனும் திருடன். அம்மாதிரியான ஒருவன் தன் கருமங்களை ஒரு கொள்கை வசமாய்ச் செய்தான் என்று சொல்லக் கூடாது. அவனுக்குப் பகுத்தறிவு இருக்கலாம். அல்லது இல்லாதிருக்கலாம். ஆனால், அவ்வறிவின் துணையால் ஒரு கொள்கையை ஒப்புக்கொண்டு அதன் சாயலாகவே தன் கருமங்களைச் செய்து வருபவனல்ல. எத்தனையோ ஜீவப்பிரேதங்கள், ஜீவியத்தின் நோக்கம் இன்னதென்றே அறியாமல், கேவலம் இந்திரிய பாதைகளைக் கழித்துக் கொண்டு, உண்டு உடுத்தி, வாழ்ந்து இறந்து போகின்றனர். அவர்களெல்லாம் ஏதோ நல்லதோ கெட்டதோ கொள்கைகளைக் கடைபிடித்துக் கருமங்களை அவரவற்றிக் குரிய படி செய்து ஜீவிக்கும் மனிதர்களல்ல. ஆகையால் கொள்கையென்பதென்ன?

ஒரு கொள்கையாவது, 'பகுத்தறிவின் துணையால் செய்யத் தக்கது இது, செய்யத் தகாதது இது என்று ஒருவன் அறிந்து முன் பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக் கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய ஒரு கருத்தாம். நம் நாட்டில் இவ்வாறு கொள்கைகளைத் தேர்ந்து எடுத்துக் கொள்ளும் சக்தி வாய்ந்த மனிதர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் கொள்கைகளை அவாவோடு மனத்தால் கிரகித்தல் வேறு, அவற்றின்படி நடத்தல் வேறு. யாதேனும் ஒரு கொள்கையை ஒருவன் அங்கீகரித்துக் கொண்டு அதன்படி நடக்க முடியாதவனாய் இருந்தால், அவனும் ஜீவப் பிரேதந்தான்.

இதிலிருந்து, 'கொள்கையற்ற மானிடப் பதர்கள், கொள்கையிலிருந்தும் அதன்படி நடக்கவியலாத மானிடப் பதர்கள்' என்ற இரண்டு ஜாதிகள் உண்டென்று ஏற்படுகிறது. இவ்விரண்டு வகுப்பாரால் ஜன சமூகத்திற்கு அவ்வளவு கெடுதல் நேரிடாது. அவர்கள் இருக்கும் வரை சோற்றிற்குக் கேடாகவும் நிலத்திற்குப் பளுவாகவும் இருந்து போவார்கள்.

ஆனால், தாங்கள் வசிக்கும் நாட்டிற்குக் குடலைத் தின்னும் அரிபூச்சுகள் போல ஒரு வகுப்பார் தலையெடுத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தலை நிறைய திவ்வியமான கொள்கைகளை

அடைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அக்கொள்கைகளை விற்றும் ஜீவிக்கிறார்கள். பொது பீடங்களினின்றும் உலகறிய அவற்றை ஸாங்கோபாங்கமாகப் போதிக்கிறார்கள். பொது ஜனங்கள் அக் கொள்கைகளைக் கேட்டுப் பிரமித்து, 'இவ்வரிய கருத்துக்களுக்கு ஆலயமாகவிருக்கும் இவர்கள் மனமே மனம், இம் மஹான்கள் அவதார புருஷர்களே' என்று தம்மைப் போற்றும் பொழுது அப் பூஜிதையையும் ஏற்றுக் கொண்டு மகிழ்ந்து வெறியடைகிறார்கள். ஆனால் அவர்களைப் பின்தொடர்ந்து அவர்களின் வீட்டிற்குச் செல்வோமானால், அங்கே எலும்பும் தோலும் குப்பையும் சகலவிதமான அழுக்குகளும் நிறைந்து கிடக்கின்றன. இம்மஹான்களின் செய்கைகள் அவர் கொண்ட கொள்கைகளுக்கு முற்றிலும் விரோதமாய் இருக்கின்றன. 'தட்டிச் சொல்ல ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டம்' என்றபடி பேசிவிட்டு, ஆபத்து வந்த காலத்தில் 'நான் சொன்னபடி நீங்கள் செய்ய வேண்டும். நான் செய்கிறபடி நீங்கள் செய்யப்படாது' என்று ஜனங்களை ஏமாற்றுகிறார்கள். அதிலும் கேடாய், தங்களுடைய கொள்கைகளை ஜால வித்தைக் காரனை போல் மாற்றிவிடுகிறார்கள்.

இம் மஹா பாதகர்களால் நம் தேசத்திற்கு விளையும் தீமைகள் கணக்கில் அடங்கா. ஏனெனில் இவர்களைப் பார்த்து அநேகம் அறிவில்லாத மனிதர்கள் செல்லக் கூடாத மார்க்கங்களிற் சென்று விடுகிறார்கள். நமக்கு கொள்கை வேண்டுமே யல்லாது ஆள் வேண்டியது அவசியமில்லை. ஒருவன் தான் பறையறையும் நல்ல தோர் கொள்கையை விட்டு விட்டு விலகி நடப்பானானால், அப்பொழுதும் நாம் அவனைக் கொண்டாடுவது மதியீனம். அவனை எவ்வகையாலும் நாம் இகழ்ச்சி செய்தே நடத்த வேண்டும். தான் குடிக்கும் காப்பிக்காகவும், தான் தின்னும் சோற்றிற்காக வும், தான் உடுத்தும் ஆடைக்காகவும் ஒருவன் தன்னுடைய அருமையான கொள்கைகளைக் கைவிடு வானானால், அவனை மானிடரால் எந்த வகுப்பில் சேர்க்கலாம்? அவனிலும் பதரான மனிதன் ஒருவன் இருக்க முடியாது. அவன் சம்பந்தப்பட்ட மட்டில், கொள்கைக்கும் செய்கைக்கும் வெகு தூரம் உண்டு.

பாரத தேசத்தாராகிய நாம் சகலவிதமான சுதந்திரங்களையும் இழந்து எங்கேயோ யிருந்துவந்த ஒரு வெள்ளைநிற ஜாதியாருக்கு அடிமைப்பட்டிருக்கிறோம். நாம் முப்பது கோடி ஜனங்கள். அவர்கள் இரண்டு லக்ஷங் கூட இல்லை. உலகத்தோர் எல்லோரும் இதை எங்கும் எக்காலத்திலுமில்லாத அற்புதம் என்று நினைக்கிறார்கள். இதனால் உலகத்திலுள்ள மற்ற ஜாதியார்கள் நம்மை (முப்பது கோடி அல்லது மூவாயிரம் லக்ஷம் ஜனங்களையும்) அடக்கி ஆளும் ஆங்கிலேயர்களை மகா வீரசூரர்களென்றும், ஒப்பற்ற பலிஷ்டர்களென்றும் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் அதற்குப் பதிலாய், நம்மிடத்தில் அவர்களுக்கு அவ்வளவுக் கவ்வளவு வெறுப்பும் மதிப்புக் குறைவும் ஏற்பட்டுவிடுகிறது. இந்தியன் எங்கே போனாலும் நிந்திக்கப்படுகிறான். யாரும் நம்மீது காறித் துப்புகிறார்கள். உலகத்தோர் 'இந்த இந்தியர் என்ற ஆடுகளை ஆங்கிலேயர் மட்டுமல்ல, வேறே எந்த ஜாதியாரும் இலேசாக ஆளலாம்' என்று நம்பியிருக்கிறார்கள். அப்படியிருக்க, நாம் மிகுந்த அந்தஸ்துக்களைப் பாராட்டினால் அது ஒவ்வா ஒழுக்கம். நாம் சுயாதீனம் அடைந்த பிறகு மீசை முறுக்கலாம். இப்பொழுது வீண் டம்பங்கள் செய்தால் எல்லோரும் நகைப்பார்கள்.

நம்மில் ஒவ்வொரு புருஷனும் ஒவ்வொரு ஸ்திரீயும் ஏற்றுக் கொள்ள வேண்டிய கொள்கை ஒன்றேதான் உண்டு. அதாவது, நம்முடைய அருமை நாட்டில் சுயாதீனத்தை நாட்டி பிறர் அஞ்சி மதிக்கும்படியாக நாம் ஜீவிக்க வேண்டியது. இந்தக் கொள்கைப் படி நடக்க என்ன இடையூறுகள் வந்தாலும் அவற்றை நாம் விலக்கிக் கொண்டு போக வேண்டும். இந்த கொள்கையைக் கடைப்பிடித்து நடப்பதில் எவ்விதமான சுகத்தையும், மரியாதையையும் அந்தஸ்தையும் இச்சிக்கப்படாது. வீடு வாசல், மனை மக்கள், எல்லோரையும் இழக்கும்படி நேர்ந்தாலும் இழந்தே தீரவேண்டும்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்

என்ற மூதுரைக்கு இணங்கியே நாம் நடக்க வேண்டும். இவ்வாறு நடக்க முடியாதவன் தான் பேடியென்று ஒப்புக் கொண்டு பின்னடைய வேண்டும். நானும் ஸ்வராஜ்யக் கொள்கை யுள்ளவன் என்று முன் வந்து நிற்க வேண்டாம். சுதந்திரக் கொள்கையை உடையவன் தன் ஆத்மாவைத் தவிர்த்து மற்ற எல்லாவற்றையும் இழந்துவிடச் சித்தமாயிருக்க வேண்டும். ஹே, பரதா! சோம்பலுள்ளவனுக்கு எவ்விதக் கொள்கையும் ஏற்காது. மழையென்றும், வெய்யிலென்றும், காற்றென்றும், பசியென்றும், தாகமென்றும், நித்திரையென்றும் பாராட்டாதே. இந்தச் சரீரமே அநித்தியம் என்றால், அதையொட்டிய அவஸ்தை கள் நித்தியமாகுமா? இந்திரிய அவஸ்தைகளுக்கு அஞ்சியாவது இந்திரிய சுகங்களைக் கோரியாவது தேசிய தர்மத்தைக் கைவிடாதே. பிரம்மமே நித்தியம். சத்தியமே ஜெயம். நீயும் அடிமைத்தனத்திலிருந்து நீங்க வேண்டும். உன்னுடைய ஜய பேரிகையை அடித்துக் கொண்டு உலகத்தில் எங்கெந்த பாகத்தில் யார் யார் அடிமைப்பட்டிருக்கிறார்களோ அவரவரை விடுவிக்க வேண்டும். உன் செயலால் பாரதமாதா முன்போல் உலகத்திற்குத் திலகமாய் ஜ்வலிக்க வேண்டும். இந்தக் கொள்கைகளைக் கைவிடாதே, கைவிடாதே, கைவிடாதே, முக்காலும் சொன்னோம்.

# 8. ஞான ரதம்

## பீடிகை

பின்மாலைப்பொழுது, திருவல்லிக்கேணி வீரராகவ முதலித் தெருவில் கடற் பாரிசத்தை நோக்கியிருக்கும் ஓர் வீட்டு மேடையின் மீது சிரமபரிகாரத்தின் பொருட்டு ஓர் மஞ்சத்தின்மீது படுத்துக்கொண்டிருந்தேன். ஆனந்தகரமான கடற்காற்று நான் படுத்திருந்த முன்னறையிலே நான்கு பக்கங்களிலிருந்தும், கண்ணாடிச் சாளரங்களின் மூலமாகவும், புறக்கதவின் நிலைகளின் மூலமாகவும், வந்து நிரம்பிய வண்ணமாக இருந்தது. அந்தக் காற்றும், பின் மாலையொளியும் கலந்ததினால் உண்டாகிய தெளிவும், இன்பமும் என்னால் கூறமுடியாது. "ஆஹா! இப்போது போய் ஸ்நானம் செய்துவிட்டு, நேர்த்தியான ஒரு குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு, கடற்கரையோரமாகத் தெற்கே அடையாற்றுக்குப் போய், வழியெல்லாம் காளிதாசனுடைய சாகுந்தலத்தையேனும், அல்லது ஓர் உபநிஷத்தையேனும் கொண்டுபோய்ப் படித்து இன்பமடைந்து கொண்டே திரும்பினால் நல்லது என்ற சிந்தனை உண்டாயிற்று. ஆனால் என்னிடம் குதிரை வண்டி கிடையாது என்ற விஷயம் அப்பொழுதுதான் ஞாபகத்திற்கு வந்தது.

"அடடா! மிகுந்த செல்வம் இல்லாததனால், உலகத்திலே பலவிதமாகிய இழிவான இன்பங்கள் மட்டுமல்ல, உயர்ந்த இன்பங்கள் கூடப் பெறுவதற்குத் தடை ஏற்படுகிறதே!" என்று எண்ணினேன். அப்பொழுது, என் மனம்—"மூடா, ஸகல மனிதர்களிடத்திலும் ஈசன் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக்கின்றார். அது விரும்பிய திசைகளுக்கெல்லாம் போய் விரும்பிய காட்சிகளையெல்லாம் பார்த்து வரக் கூடிய வல்லமை உடையது; அதைப் பயன்படுத்தி இன்பமடையாமல் எந்த நிமிஷத்திலும் உன்னைக் கீழே தள்ளித் தீங்கு செய்யக்கூடியதாகிய இழிந்த மரவண்டியிலே ஏன் விருப்பம்

கொள்கிருய்?" என்றது. உடனே ஞானமாகிய ரதத்தைக் கொண்டு தயார் செய்துவைக்கும்படி எனது சேவகனுகிய "ஸங்கற்ப"னிடம் கட்டளையிட்டேன். ரதம் வந்து நின்றது. அதில் ஏறிக்கொண்டேன். ஆனால் எனது ஞானரதம் மற்றவர்களுடையதைப்போல் அத்தனை தீவிரம் உடையதன்று. எளிதாக நெடுந்தூரங் கொண்டுபோகத் தக்கதும் அன்று. கொஞ்சம் நொண்டி. என்ன செய்யலாம்? இருப்பதை வைத்துக்கொண்டு தானே காரியங் கழிக்கவேண்டும்? ஆகவே, அந்த ரகத்தின்மீது ஏறிக்கொண்டேன். அதிலேறி நான் கண்டுவந்த காட்சிகளும் அவற்றின் அற்புதங்களுமே இந்தப் புஸ்தகத்தில் எழுதப் படுகின்றன.

## முதல் அத்தியாயம்

## உபசாந்திலோகம்

## (கவலையற்ற பூமி)

எனது ஞானத் தேரை நோக்கி "இந்த க்ஷணமே என்னை, துக்கமில்லாத பூமி எங்கேனும் உளதாயின், அங்குக் கொண்டு போ" என்று எண்ணினேன். ஆஹா! இந்த ரதத்தை வைத்துக் கொண்டிருந்தும், இத்தனை நாள் எனக்குக் கவலையும், மன உளைச்சலும் இல்லாதிருக்க வழிதெரியாமல் போய்விட்டதே! எத்தனை நாள் எனது மனம் தூண்டிற் புழுவைப்போலத் துடித்துக்கொண்டிருக்க, அதை நிவிருத்தி செய்வதற்கு யாதொரு உபாயமும் அறியாமல் பரிதபித்திருக்கின்றேன். அம்மம்மா! இந்த உலகத்துக் கவலைகளை நினைக்கும்போதே நெஞ்சம் பகீரென்கிறது. அவற்றுக்குள்ள விஷ சக்தியை என்னென்பேன்? ஒருவனது முகத்திலுள்ள அழகையும், குளிர்ச்சியையும் இளமையையும் இந்தக் கவலைகளே அழித்து விடுகின்றன. கண்களின் ஒளியை மாற்றிப் பசலையும், உடல்நிறம் மங்குதலும் உண்டாக்கி விடுகின்றன. நெற்றியிலே வரிகளும் கன்னங்களிலே சுருக்கங்களும், இந்த நீசக் கவலைகளினுலேயே ஏற்படுகின்றன. எனது தொண்டையின் இனிய குரல்போய், கடூரமான கரகரப்புச் சத்தம் உண்டாகிறது. மார்பிலும், தோளிலும் இருந்த வலிமை நீங்கிப்போய் விடுகிறது. இரத்தம் விரைவாக ஓடுதலின்றி, மாசு

நீரோடைபோல் மந்தம் அடைகின்றது. கால்களில் தீவிர மில்லாமற் போய்விடுகிறது. கவலைகள் என்ற விஷ ஜந்துக்கள் ஒருவனுடைய சரீரத்தை உள்ளூர அரித்துவிடுகின்றன. சரீரத்தை மட்டுமா? அறிவையும் பாழாக்குகின்றன. மறதியை அதிகப்படுத்திவிடுகின்றன. முக்கியமான செய்திகளெல்லாம் நல்ல சந்தர்ப்பத்திலே நினைவிற்கு வராமல் போய்விடுகின்றன. படித்த படிப்பெல்லாம் பாலைவனத்திலே பெய்த மழைபோல நிஷ்பலனாய் விடுகின்றது. அறிவிலே பிரகாசமில்லாமல், எப்போதும் மேகம் படர்ந்தது போலாய்விடுகிறது. யோசனை தட்டுகிறது. ஐயோ! இந்தக் கவலைகளாகிய சிறிய சிறிய விஷப்பூச்சிகளுக்குள்ள திறமை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் கூறும் மஹா கொடூரமான—கண்ணுக்குத் தெரியாத—நோய்ப் பூச்சிகளுக்குக்கூடக் கிடையாது.

"ஞான ரதமே, நீ நம்மை இப்போது கவலையென்பதே இல்லாத உலகத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்" என்று கட்டளையிட்டேன். அப்போது மனம் வந்து ரதத்தைத் தடுத்துக் கொண்டது. "அது அத்தனை ஸுகமான உலகமன்று. கவலை இல்லாமலிருந்தால் மட்டும் போதுமா? வேறு இன்பங்கள் அனுபவிக்கக்கூடிய இடம் ஏதேனும் தமக்குத் தோன்றவில்லையா? கவலையே இல்லாத இடத்தில் ஸுகமும் இராது என்று எனக்குத் தோன்றுகிறது. மேலும், —மேலும், —என்னவோ; இன்ன காரணமென்று சொல்லமுடியாது. ஆனால் அங்குப் போவதில் எனக்குப் பிரியமில்லை" என்று மனம் கூறிற்று.

நான் கோபத்துடன், 'சீச்சீ! பேதை மனமே, உனக்கு ஓயாமல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் வேதனைகளையும் உளைச்சல்களையும் கண்டு இரங்கி, நான் உன்னைச் சிறிது நேரமேனும் அமைதியுலகத்திற்குக் கொண்டுபோய் வைத்துத் திரும்பலாம் என்று உத்தேசித்தேன். இதற்கு நீயே ஆக்ஷேபம் சொல்ல வருகிறாயா?" என்று கண்டித்தேன். மனம் பிணங்குதல் மாறாமல் மறுபடியும் எதிர்த்து நின்றது.

எனக்கு இந்த மனம் என்ற மோஹினியிடத்தில் காதல் அதிகமுண்டு. ஆதியில் எவ்வாறு இந்த மோஹம் உண்டாயிற்று என்பதை இங்கே விஸ்தரிக்க முடியாது. அது ரஹஸ்யம். ஆனால்,

நாளேற நாளேற நான் வேறு இந்த மனம் வேறு என்ற த்வைத சிந்தனையே பெரும்பாலும் மறந்துபோகும் வண்ணமாக எனக்கு இம்மோஹினியிடத்தில் பிரமை மிகுந்து போய்விட்டது. இந்த மனம் படும்பாடுகளைக் கண்டு பொறுக்காமலே தான் நான் சாந்திலோக தரிசனத்திலே விருப்பம் கொண்டேன். இப்போது மனம் அந்த யோசனையில் நிஷ்காரணமாக வெறுப்புக் கொள் வதைக் கண்டு எனக்குத் திகைப்பும், இரக்கமும், கோபமும் கலந்து பிறந்தன. எவ்வளவோ விதங்களில் மனத்தைச் சமா தானம் செய்ய முயன்றேன். மனம் பின்னும் கண்ணை மூடிக் கொண்டு ஓரேயடியாக மூடச் சாதனை சாதிக்கத் தொடங்கிற்று. எனக்கு இன்ன செய்வதென்று தெரியவில்லை. பிறகு ஒரே நிச்சயத்துடன், "மனமே, நான் இந்த விஷயத்தில் உன் பேச்சைக் கேட்கவே மாட்டேன். உன்னுடைய நன்மையைக் கருதியே நான் செய்கிறேன்—ஞானரதமே, உடனே புறப்படு" என்றேன். அடுத்த நிமிஷத்தில் உபசாந்தி பூமிக்கு வந்து சேர்ந்தோம்.

நெடிதோங்கி வளர்ந்த கோட்டைச் சுவர் வாயிலிலே போய் ரதம் நின்றுவிட்டது. நான் தூரத்திலிருந்தே அந்தக் கோட்டை யைப்பார்க்க முடிந்ததாயினும், எனது ஞானத் தேர் போனவுடன் அந்த வாயிற் கதவுகள் தாமே திறந்துவிடும் என்று எண்ணி னேன். அவ்வாறு திறக்கவில்லை. என்ன ஆச்சரியம்! ஞானத் தேர்கூட நுழைய முடியாதபடி அத்தனை பரிசுத்தமானதா இந்த லோகம் என்று வியப்புற்றேன். எனது மனமோ முன்னைக் காட்டிலும் ஆயிர மடங்கு அதிகமாகத் நடுங்கத் தொடங்கிற்று. அதற்கு என்னிடம் பேசக்கூட நாவெழவில்லை. கோட்டை வாயிலுக்கு வெளியே ஒரு வாயில் காப்பான் உருவின கத்தி யுடன் நின்றுகொண்டிருந்தான். நெருப்பு நிறங் கொண்டதும், இமயமலையைக் கூட ஒரே வெட்டில் பொடிப்பொடியாகச் செய்து விடுமென்று தோன்றியதுமாகிய அந்த வாளின்மீது "விவேகம்" என்று கண்ணைப் பறிக்கக்கூடிய ஜோதியெழுத்திலே எழுதப் பட்டிருந்தது. வாயில்காப்பான் :— "யார் அது? எங்கு வந் தாய்?" என்றான்.

நான் அவனுக்கு வந்தனம் கூறிவிட்டு, "உபசாந்தி லோகத்தைப் பார்த்து விட்டுத் திரும்பலாமென்ற எண்ணத்

துடன் வந்தேன்" என்று சொன்னேன். அதைக் கேட்டு அவன் கடகடவென்று குலுங்கக் குலுங்க நகைக்கலாயினன்.

"ஏனையா சிரிக்கிறீர்?" என்று கேட்டேன். அவன் மறுமொழி கூறுமல் சிரித்துக் கொண்டிருந்தான்.

ஏழை மனமோ நிமிஷத்துக்கு நிமிஷம் அதிகத் திகிலுறு வதாயிற்று. எனக்கு மிகவும் திகைப்புண்டாய்விட்டது. எனவே கோபத்துடன் வாயில் காப்பானை நோக்கி, "ஏனப்பா உள்ளே போகலாமா, கூடாதா? ஒரே வார்த்தையில் சொல்லிவிடு. கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கிருயே?" என்று கேட்டேன்.

அதற்கு வாயில்காப்பான், "உனக்கும் உபசாந்திக்கும் வெகு தூரம்" என்று தனது வாய்க்குள்ளேயே (ஆனல் எனது செவியிலே படும்படி) முணுமுணுத்து விட்டு பிறகு "கோபம் கொள்ளாதே அப்பா, நீ உபசாந்தி லோகத்தை ஏதோ நாடக சாலை போலக் கருதிப் பார்த்துவிட்டு திரும்ப உத்தேசமிருப்ப தாகக் கூறியது எனக்கு நகைப்பை உண்டாக்கிற்று. சாதாரண மாக, இவ்வுலகத்துக்கு வருபவர்கள் திரும்ப வெளியேபோகும் வழக்கம் கிடையாது" என்று இரைந்து கூறினன்.

"அது சரி, உள்ளே நாங்கள் பிரவேசிக்கலாமா, கூடாதா? தயவு செய்து சொல்லும்!"

"நீ ஸாதாரணமாய் பிரவேசிக்கலாம். இது ஸகல ஜீவர் களுக்கும் தாய்வீடு. இங்கு வரக்கூடாது என்று எந்த ஜீவனை யும் தடுக்க எனக்கு அதிகாரமில்லை. ஆனல் வைராக்கியக் கோட்டையைக் கடந்து உள்ளே செல்லும் உரிமை உன்னுடன் வந்திருக்கும் மனம் என்ற பொய்ப் பொருளுக்குக் கிடையாது. அது உள்ளே போகுமானல், அக்கினி லோகத்திலே பிரவேசித்த பஞ்சுப் பொம்மை போல நாசமடைந்துவிடும்" என்ருன்.

மனம் ஆரம்பத்திலேயே உபசாந்திலோகம் என்ற பெயரைக் கேட்டவுடன் நடுங்கத் தொடங்கியதற்கும், அது என்னை அங்குப் போகவேண்டாமென்று பிரார்த்தனைகள் செய்ததற்கும், கோட்டையருகே வந்தவுடன் தர்ம தேவதையின் முன்வந்து நிற்கும் கொடுங் கோலரசரைப் போல் நிலை மயங்கி அதற்கு அளவு கடந்த திகிலுண்டானதற்கும் காரணம் இன்னது என்

பதை இப்போது தான் அறிந்தேன். அப்பால் அந்த உலகத்திற் பிரவேசிக்க வேண்டும் என்ற விருப்பம் எனக்கு நீங்கிப் போய் விட்டது. மனத்தினிடம் வைத்திருந்த மோஹத்தால், அதைக் கொன்றுவிட்டு நான் இன்பமடைவதில் பிரியங் கொள்ளவில்லை.

"என்னை இப்போது என்ன செய்யச் சொல்லுகிறீர்?" என்று வாயில் காப்பானிடம் கேட்டேன். அதற்கு அவன் "மானுடா, மனம் இறந்த பிறகுதான் உபசாந்தியுண்டு. அது இருக்கும் வரையில், கவலைகள் நீங்கி இருக்கலாம் என்ற எண்ணம் வீண். கவலைகளாகிய அஸுரர்களை இடைவிடாது பெற்றுத் தள்ளிக் கொண்டே இருக்கும் தாய் மனமேயாகும். உனக்கு அந்தப் பொய்யரக்கியிடம் இன்னும் ப்ரேமை தீரவில்லை. பக்குவம் வந்த பிறகு, நீ தானே இங்கு வந்து சேரலாம். இப்போது போய்வா" என்று சொன்னான். திடீரென்று அந்தக் கோட்டை, வாயிற் காப்பான், எல்லாம் மறைந்து போய்விட்டது. அரை க்ஷணம் கண்ணிருட்சி உண்டாயிற்று. பிறகு கண்ணை விழித்துப் பார்த்தேன். மறுபடி, வீரராகவ முதலித் தெருவில், முன்னே கூறப் பட்ட வீட்டு மாடியில், தனியே கட்டிலில் நான் படுத்துக் கொண்டிருப்பதையும், கடற்பாரிசத்தினின்றும் இனிய காற்று வீசிக் கொண்டிருப்பதையும் கண்டேன்.

"சரி, போனது போகட்டும். இந்த உபசாந்திப் பேறு நமக்கு இப்போது கிடைக்கவில்லை. ஆயினும், பாதகமில்லை. ஏழை மனத்தைக் கொன்றுவிட்டு நாம் மட்டும் தனியே இன்பமுற விரும்புவதும் நன்றிகெட்ட செய்கையாகுமல்லவா? அதன் கவலைகளையும், உளைச்சல்களையும் பற்றி யோசித்தேனேயொழிய அதன் மூலமாக எனக்குக் கிடைத்திருக்கும் பெரிய பெரிய நன்மைகளைச் சிந்தித்தேனில்லை. எனக்கு உலக வாழ்க்கையே இந்த மனத்தினால் தானே எய்திற்று. இதை ஈசனென்றே சொல்லத் தகும். மேலும், எனக்கு அதையும், அதற்கு என்னையும் காட்டிலும் உயிர்த்துணைவர் யார் இருக்கிறார்கள்? அதற்குத் துரோகம் செய்யலாமா? எத்தனை கோடிக் கவலைகள் இருப்பினும் பெரிதில்லை. மனம் செத்து நான் தனியே வாழ்வதாகிய உபசாந்திலோகம் எத்தனை அரிதாயிருப்பினும், அது எனக்கு வேண்டாம்" என்று தீர்மானம் செய்துகொண்டேன். "உபசாந்தி என்று கத்தும் மனிதர்களை

உலகத்தார் ப்ரம்மஞானிகளென்றும், மஹரிஷிகளென்றும் புகழ்கிறார்களே! அந்த மனிதர்களெல்லாம் மூடர்களும், துரோகிகளுமாவார்களென்று எனக்குத் தோன்றுகிறது'' என்று சொல்லிக் கொண்டேன்.

நான் இவ்வாறு ஆலோசிப்பதை அறிந்து கொண்ட மனம், "அப்பாடா!" என்று பெருமூச்சுவிட்டு, தன் நடுக்கமெல்லாம் தீர்ந்து ஆறுதலுடனிருந்தது. எனக்கும் ஸந்தோஷம் உண்டாயிற்று. எனது மன மோஹினிக்கு ஓர் முத்தம் கொடுத்தேன்.

குறிப்பு:— முதல் அத்தியாயம் மட்டும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

# 9. பகவத்கீதை முன்னுரை

*புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு, நற் செய்கை தீச்செய்கை இரண்டையும் துறந்து விடுகின்றான். ஆதலால் யோக நெறியிலே பொருந்துக. யோகம் செயல்களிலே திறமையானது. (கீதை, 2–ஆம் அத்தியாயம்; 50–ஆம் சுலோகம்.)*

*இஃதே கீதையில் பகவான் செய்யும் உபதேசத்துக் கெல்லாம் அடிப்படையாம். புத்தியிலே சார்பு எய்தலாவது, அறிவை முற்றிலும் தெளிவாக மாசுமறுவின்றி வைத்திருத்தல். தெளிந்த புத்தியே மேற்படி சுலோகத்திலே புத்தி என்று சொல்லப்படுகிறது. அறிவைத் தெளிவாக நிறுத்திக் கொள்ளுதலாவது யாதென்றால் கவலை நினைப்புக்களும் அவற்றுக்கு ஆதாரமான பாவ நினைப்புக் களுமின்றி அறிவை இயற்கை நிலைபெறத் திருத்துதல்.*

*நீங்கள் குழந்தைகளைப் போல ஆனாலன்றி, மோக்ஷ ராஜ்யத்தை எய்தமாட்டீர்கள் என்று யேசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக் கொண்டுதான்.*

*'குழந்தைகளைப்போல ஆய்விடுங்கள்' என்றால், 'உங்களுடைய லௌகிக அனுபவங்களை யெல்லாம் மறந்து விடுங்கள்; நீங்கள் படித்த படிப்பை யெல்லாம் இழந்து விடுங்கள்; மறுபடியும் சிசுக் களைப்போலே தாய்ப் பால் குடிக்கவும் மழலைச் சொற்கள் பேசவும் தொடங்குங்கள்' என்பது கொள்கை யன்று, 'ஹிருதயத்தைக் குழந்தைகளின் ஹிருதயம் போலே நிஷ்களங்கமாகவும் சுத்த மாகவும் வைத்துக் கொள்ளுங்கள்' என்பது கருத்து.*

*ஹிருதயம் தெளிந்தாலன்றி, புத்தி தெளியாது. ஹிருதயத்தில் பரிபூரணமான சுத்த நிலை ஏற்படும் வரை புத்தி இடையிடையே தெளிந்தாலும், மீட்டு மீட்டும் குழம்பிப் போய்விடும்.*

*ஹிருதயம் சுத்தமானால் தெளிந்த புத்தி தோன்றும். பகவான் சொல்லுகிறார் :— "அந்த அறிவுத் தெளிவிலே நிலை பெற்றுநில், அர்ஜுனா" என. அப்போது நீ செய்யும் செய்கை யாதாயினும், அது நற் செய்கையாம். நீ ஒன்றும் செய்யாதே மனம் போனபடி*

இருப்பின் அஃதும் நன்றும். நீ நற் செய்கை தீச் செய்கை என்ற பேதத்தை மறந்து, உனக்கு இஷ்டப்படி எது வேண்டுமாயினும் செய்யலாம். ஏனென்றால் நீ செய்வதெல்லாம் நன்றாகவே முடியும். உனக்குப் புத்தி தெளிந்து விட்டதன்றோ? புத்தி தெளிவுற்ற இடத்தே, உனக்குத் தீயன செய்தல் ஸாத்யப்படாது. ஆதலால், நீ நல்லது தீயது கருதாமல் மனம் போனபடி யெல்லாம் வேலை செய்யலாம்.

இனி, இங்ஙனம் உரை கொள்ளாதபடி, நற் செய்கை தீச் செய்கை, அதாவது, எல்லா விதமான செய்கையைத் துறந்து விட்டு, 'அர்ஜுனா, நீ எப்போதும் தூங்கிக் கொண்டே இரு' என்று கடவுள் உபதேசம் பண்ணியதாகக் கருதுதல் வெறும் மடமையைத் தவிர வேறொன்று மில்லை.

ஏனென்றால் கடவுளே மேலே மூன்றும் அத்யாயத்தில் பின் வருமாறு சொல்லுகிறார் :— 'மேலும், எவனும் ஒரு க்ஷண மேனும் செய்கையின்றி இருத்தல் இயலாது. எல்லா உயிர்களும் இயற்கையில் தோன்றும் குணங்களால் தமது வசமின்றியே தொழிலில் பூட்டப்படுகின்றன' என.

ஆதலால் மனிதன் தொழில் செய்துதான் தீரவேண்டும். எப்போதும் தூங்கக் கும்பகர்ணனாலே கூட இயலாது. அவனுக்குக் கூட ஆறுமாஸ காலம் விழிப்பு உண்டு. ஆனால் நீ தொழில் செய்யுமிடத்தே, அதில் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மனமுடைந்து ஓயாமல் துன்பப்பட்டுக்கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப் போலே தொழில் செய்யாதே. ஸ்ரீ பகவான் சொல்லுகிறான் :— 'அர்ஜுனா, உனக்குத் தொழில் செய்யத்தான் அதிகாரம் உண்டு. பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதும் இல்லை' என.

ஆதலால், கடவுள் சொல்லுகிறார் : — 'கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ, அவனே துறவி, அவனே யோகி' என்று.

அறிவுத் தெளிவைத் தவற விடாதே. பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு. நீ எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும். நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத் தான் ஏதேனும் நன்மை செய்து கொண்டே இருக்கும்.

உடம்பினுல் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று. மனத்தால் செய்யப்படும் தொழிலும் தொழிலேயாம். ஜபம் தொழில் இல்லையா ? சாஸ்த்ரங்களெல்லாம், கவிதைகளெல்லாம், நாடகங்களெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம், புராணங்களெல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம் தொழில்கள் அல்லவா ? இவை எல்லாம் உடம்பாற் செய்வதின்றி மனத்தாற் செய்யப்படுவன அன்றே ?

அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே.

அப்பால், 'யோகம் பண்ணு. எதன் பொருட்டெனில், யோகமே செய்கைகளில் திறமையாவது' என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுகிறார்.

தொழிலுக்குத் தன்னைத் தகுதியுடையவனாகச் செய்து கொள்வதே யோகம் எனப்படும்.

யோகமாவது ஸமத்வம். 'ஸமத்வம் யோக உச்யதே'. அதாவது, பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்து, அப்போது மனத்தில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்ந்து, மனம் முழுவதையும் அதனுள் வயப்படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும்போது, உன் மனம் முழுதும் அப்பொருளின் வடிவமாக மாறிவிட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய்.

'யோகஸ்த, குரு கர்மாணி' என்று கடவுள் சொல்லுகிறார்.

'யோகத்தில் நின்று தொழில்களை செய்' என.

யோகி தன் அறிவை கடவுளின் அறிவு போலே விசாலப் படுத்திக் கொள்ளுதல் இயலும். ஏனென்றால், ஊன்றிக் கவனிக்கும் வழக்கம் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாய் விடுகிறது. ஆதலால் அவனுடைய அறிவு தெய்வீகமான விசாலத்தன்மை பெற்று விளங்குகிறது. அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது.

எனவே, அவன் எங்கும் கடவுள் இருப்பதைக் காண்கிறான்.

வேதத்தின் கொள்கைகளை விளக்கும் பொருட்டாகவே பகவத் கீதை செய்யப்பட்டது. ரிக் வேதத்திலுள்ள புருஷஸூக்தம் சொல்லுகிறது, 'இஃதெல்லாம் கடவுள்' என்று. இந்தக் கருத்தை

யொட்டியே கீதையிலும் பகவான், 'எவன் எல்லாப் பொருள் களிலும் ஆத்மாவையும், ஆத்மாவில் எல்லாப் பொருள்களையும் பார்க்கிறானோ, அவனே காட்சி யுடையான்' என்கிறார்.

நீயும் கடவுள். நீ செய்யும் செயல்களெல்லாம் கடவுளுடைய செயல்கள். நீ பந்தத்தில் பிறப்பதும் கடவுளுடைய செயல். மேன்மேலும் பல தளைகளை உனக்கு நீயே பூட்டிக் கொள்வதும் கடவுளுடைய செயல். நீ முக்தி பெறுவதும் கடவுளுடைய செயல்.

'ஆனால் நான் எதற்காகத் தளை நீங்கும்படி பாடுபட வேண்டும்? எல்லாம் கடவுளுடைய செய்கையாக இருக்கும் போது முக்தியடையும்படி நான் ஏன் முயற்சி செய்யவேண்டும்?' என்று ஒருவன் கேட்பானாயின், அதற்கு நாம் கேட்கிறோம்: 'முக்தியாவது யாது?'

எல்லாத் துயரங்களும் எல்லா அச்சங்களும் எல்லாக் கவலை களும் நீங்கி நிற்கும் நிலையே முக்தி. அதனை எய்த வேண்டு மென்ற விருப்பம் உனக்கு உண்டாயின், நீ அதற்கு உரிய முயற்சி செய். இல்லாவிட்டால், துன்பங்களிலே கிடந்து ஓயாமல் உழன்று கொண்டிரு, உன்னை யார் தடுக்கிறார்கள்? ஆனால், நீ எவ்விதச் செய்கை செய்தபோதிலும், 'அது உன்னுடைய செய்கை இல்லை, கடவுளுடைய செய்கை' என்பதை அறிந்துகொண்டு செய், அதனால் உனக்கு நன்மை விளையும் என்று சாஸ்திரம் சொல்லு கிறது. 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' என்பது ஸநாதன தர்மத் தில் ஸித்தாந்தம். எல்லாம் கடவுள் மயம், எல்லாத் தோற்றங் களும், எல்லா வடிவங்களும், எல்லா உருவங்களும், எல்லாக் காட்சிகளும், எல்லாக் கோலங்களும், எல்லா நிலைமைகளும், எல்லா உயிர்களும், எல்லாப் பொருள்களும், எல்லாச் சக்திகளும், எல்லா நிகழ்ச்சிகளும், எல்லாச் செயல்களும் — எல்லாம் ஈசன் மயம். (ஆதலால், எல்லாம் ஒன்றுக்கொன்று ஸமானம்.) "ஈசா வாஸ்யம் இதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" என்று ஈசா வாஸ்யோபநிஷத் சொல்லுகிறது. அதாவது:— 'இவ்வுலகத்தில் நிகழ்வது யாதாயினும் அது கடவுள் மயமானது' என்று பொருள் படும்.

இந்தக் கருத்தையே ஸ்ரீ கிருஷ்ணன் பகவத் கீதையில், 'இவ் வுலகனைத்திலும் நிரம்பிக் கிடக்கும் கடவுள் அழிவில்லாதது என்று உணர்' என்று சொல்லுகிறார்.

எனவே, எல்லாம் கடவுள் மயமாய், எல்லாச் செயல்களும் கடவுளின் செயலாக நிற்கும் உலகத்தில், எவனும் கவலைப் படுதலும், துயர்ப்படுதலும் அறியாமையன்றோ?

'எல்லாம் சிவன் செயல்' என்றால், பின் எதற்கும் நான் ஏன் வருத்தப்பட வேண்டும்? 'இட்டமுடன் என் தலையில் இன்னபடி என் றெழுதி விட்ட சிவன் செத்து விட்டானோ?'

நக்ஷத்திரங்க ளெல்லாம் கடவுள் வலியால் சுழல்கின்றன. திரிலோகங்களும் அவனுடைய சக்கரத்தில் ஆடுகின்றன. நீ அவன். உன் மனம், உன் மனத்தின் நினைப்புகள் எல்லாம் அவனே. "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்"—அங்ஙனமாக, மானுடா, நீ ஏன் வீணாகப் பொறுப்பைச் சுமக்கிறாய்? பொறுப்பையெல் லாம் தொப்பென்று கீழே போட்டுவிட்டு ஸந்தோஷமாக உன்னால் இயன்ற தொழிலைச் செய்து கொண்டிரு. எது எப்படியானால் உனக்கு என்ன? நீயா இவ்வுலகத்தைப் படைத்தாய்? உலகம் என்னும்போது உன்னைத் தவிர்ந்த மற்ற உலகத்தை யெல்லாம் கணக்கிடாதே. நீ உட்பட்ட உலகத்தை, உனக்கு முந்தியே உன் பூர்வகாரணமாக நின்று உன்னை ஆக்கி வளர்த்துத் துடைக்கும் உலகத்தை, மானுடா, நீயா படைத்தாய்? நீயா இதை நடத்து கிறாய்? உன்னைக் கேட்டா நக்ஷத்திரங்கள் நடக்கின்றன? உன்னைக் கேட்டா நீ பிறந்தாய்? எந்த விஷயத்துக்கும் நீ ஏன் பொறுப்பை வஹித்துக் கொள்கிறாய்?

கடவுள் சொல்லுகிறார்:—"லோபமும் பயமும் சினமும் அழிந்து, என்மயமாய், என்னைச் சார்ந்தோராய், ஞானத் தவத் தால் தூய்மை பெற்றோர் பலர் எனது தன்மை எய்தியுள்ளார்" (கீதை, 4-ஆம் அத்யாயம்; 10-ஆம் சுலோகம்). இந்த சுலோகத் தில் ஒருவன் இஹலோகத்திலேயே ஜீவன் முக்தி பெற்று ஈசுவரத் தன்மை அடைவதற்குரிய உபாயம் பகவானால் குறிப்பிடப்பட்டி ருக்கிறது. "ஞானத்தைக் கடைப்பிடி. அதனையே தவமாகக் கொண்டு ஒழுகு. சினத்தை விடு. விருப்பத்தை விடு. என்னையே சரணாகக் கொண்டு என்னுடன் லயித்திரு. நீ எனது தன்மை பெறுவாய்" என்று கடவுள் சொல்லுகிறார்.

எல்லாச் செயல்களையும் கடவுளுக்கென்று ஸமர்ப்பித்து விட்டுப் பற்றுதல் நீங்கி எவன் தொழில் செய்கிறானோ அவனைப்

பாவம் தீண்டுவதில்லே. தாமரையிலே மீது நீர் போலே. (கீதை, 5–ஆம் அத்தியாயம்; 10-ஆம் சுலோகம்.)

சால நல்ல செய்தியன்றோ, மானுடர்காள், இஃது உங்களுக்கு? பாவத்தைச் செய்யாமலிருக்கும் வழி தெரியாமல் தவிக்கும் மானுடரே, உங்களுக்கு இந்த சுலோகத்தில் நல்லவழி காட்டியிருக்கிறான் கடவுள். ஈசனைக் கருதி, அவன் செயலென்றும், அவன் பொருட்டாகச் செய்யப்படுவதென்றும், நன்கு தெளிவெய்தி, நீங்கள் எத் தொழிலைச் செய்யப் புகுந்தாலும், அதில் பாவம் ஒட்டாது தாமரையிலே மீது நீர் தங்காமல் நழுவி ஓடிவிடுவதுபோல், உங்கள் மதியைப் பாவம் கவர்ந்து நிற்கும் வலியற்றதாய், உங்களை விட்டு நழுவியோடிப் போய்விடும்.

"மனிதனுக்குச் சொந்தமான ஒரு செய்கையும் கிடையாது. செய்யும், திறமையும் அவனுக்குக் கடவுள் ஏற்படுத்தவில்லை. கர்மப் பயனை அவன் எய்துவதுமில்லை. எல்லாம் இயற்கையின் படி நடக்கிறது." (கீதை, 5-ஆம் அத்யாயம்; 14-ஆம் சுலோகம்.)

எனவே, அவன் செய்கைகளில் எவ்விதப் பொறுமையும் சஞ்சலமும் எய்த வேண்டா. தன் செயல்களுக்கு இடையூறாக நிற்குமென்ற எண்ணத்தால் அவன் பிற உயிர்களுடன் முரண்படுதலும் வேண்டா:

"கல்வியும் விநயமு முடைய அந்தணனிடத்திலும், மாட்டினிடத்திலும், யானையினிடத்திலும், நாயினிடத்திலும், அதையுண்ணும் சண்டாளனிடத்திலும், அறிஞர் ஸமமான பார்வையுடையோர்" (5-ஆம் அத்யாயம், 18–ஆம் சுலோகம்) என்று பகவான் சொல்லுகிறார்.

எனவே, கண்ணபிரான் மனிதருக்குள் ஜாதி வேற்றுமையும் அறிவு வேற்றுமையும் பார்க்கக் கூடாதென்பது மட்டுமேயன்றி எல்லா உயிர்களுக்குள்ளேயும் எவ்வித வேற்றுமையும் பாராதிருத்தலே ஞானிகளுக்கு லக்ஷணமென்று சொல்லுகிறார்.

எல்லாம் கடவுள் மயம் அன்றோ? எவ்வுயிரினும் விஷ்ணு தானே நிரம்பியிருக்கிறான்? 'ஸர்வமிதம் ப்ரஹ்ம.' பாம்பும் நாராயணன். நரியும் நாராயணன். பார்ப்பானும் கடவுளின் ரூபம்; பறையனும் கடவுளின் ரூபம். இப்படி இருக்க ஒரு ஜந்து மற்றொரு ஜந்துவை எக்காரணம் பற்றியும் தாழ்வாக நினைத்தல்

அஞ்ஞானத்துக்கு லக்ஷணம். அவ்விதமான ஏற்றத் தாழ்வு பற்றிய நினைப்புக்களுடையோர் எக் காலத்தும் துக்கங்களிலிருந்து நிவிர்த்தியடைய மாட்டார். வேற்றுமையுள்ள இடத்தில் பயம் உண்டு; ஆபத்து உண்டு; மரணம் உண்டு. எல்லா வேற்றுமைகளும் நீங்கி நிற்பதே ஞானம். அதுவே முக்திக்கு வழி.

(குறிப்பு: பாரதியார் பகவத்கீதையை மொழி பெயர்த்ததோடன்றி அதற்கு ஓர் அரிய முன்னுரையும் எழுதியுள்ளார். அந்த முன்னுரையின் ஒரு பகுதியே இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.)

# 10. சந்திரிகையின் கதை

## பூகம்பம்

பொதியைமலைச் சாரலில் வேளாண்குடி என்றொரு அழகான கிராமம் இருக்கிறது. அதற்கருகே, ஒரு சிறிய நதி ஓடுகிறது. நான்கு திசைகளையும் நோக்கினால் நீல, மலைச் சிகரங்களும் குன்றுகளும் தோன்றும். ஊரெங்கும் தோப்புக்கள், எனவே, காலையில் எழுந்தால் மாலைவரை எப்போதும் ரமணீயமான பக்ஷிகளின் ஒலிகள் கேட்டுக் கொண்டிருக்கும்.

இந்த ஊரில் மற்ற வீதிகளினின்றும் ஒதுக்கமாக, மேற்றிசையில், நதிக்கருகே ஓர் அக்ரஹாரம் அதாவது பிராமணர் வீதி இருந்தது. அந்த அக்ரஹாரத்தில் குழந்தைகளெல்லாம் எப்போதும் பக்ஷிகளின் நாதங்களுக்கிடையே வளர்ந்தது பற்றியோ, வேறு எந்தக் காரணத்தாலோ, மிகவும் இனிய குரலுடையனவாயிருந்தன. அக் குழந்தைகள்—விசேஷமாகப் பெண் குழந்தைகள்—பேசும்போது, ஸாதாரணமாக நம்மைப் போலவே, மனுஷ்த் தமிழ் பாஷையே பேசுமெனினும், அந்த பாஷையை குயில்கள் போலவும், கிளிகள் போலவும், நாகண வாய்ப்புட்கள் போலவும் அற்புதமான குரலில் பேசின.

அந்த அக்ரஹாரத்தின் மேலோரத்திலே கிழக்கைப் பார்த்த ஒரு கிருஷ்ணன் கோயில் இருந்தது. கோயிலுக்கெதிரே புல் ஏராளமாக வளர்ந்து கிடக்கும். அங்கு பசுக்களும் ஒரு சில கழுதைகளும் மேய்ந்து கொண்டிருக்கும். அல்லது, சில பசுக்கள் கிருஷ்ணன் ஸந்நிதிக்கெதிரே படுத்துக் கொண்டு ஸ்வாமியை நோக்கி ஜபம் பண்ணிக் கொண்டிருப்பதுபோல் அசை போட்டுக் கொண்டிருக்கும். அவற்றின்மீது காக்கைகள் வந்து உண்ணிகளைக் கொத்தி இன்புறுத்தும். சில சமயங்களில் கண்ணேரத்தைக் கொத்துவதுபோல் விளையாடி மாட்டுக்குப் பொழுது போகச் செய்து கொண்டிருக்கும். இதையெல்லாம் மரக்கிளைகளின் மீதுள்ள பக்ஷிகள் பார்த்து வியப்புரை கூறிக்கொண்டிருக்கும்.

அன்புக்கும் அமைதிக்கும் சாந்திக்கும் அழகுக்கும் இலக்கியமாகத் திகழ்ந்தது அவ்வேளாண்குடியூர் அக்ரஹாரம். அங்கு, பெண் மக்கள் எல்லாரும் மஹாஸுந்தரிகள். ஆண் மக்கள் மிகவும் நல்ல குணமுடையோர். ஆனால் பெரும்பாலும் பரம ஏழைகள். பூர்வீக சொத்து, நிலம், தோட்டம் முதலியன எல்லோருக்கும் சிறிதுண்டு. ஆனால், அதிலிருந்து வரும் வரும்படி வெறுமே போஜனத்துக்குக் கூடக் காணாது. இதில் வேஷ்டிகள், புடவைகள், ரவிக்கைகள், பாவாடைகள், குடுமிக் கலியாணம், பூணூல் கலியாணம், விவாகங்கள், ருது ஸ்நானங்கள், ருது சாந்திகள், சீமந்தங்கள், பல பல பண்டிகைகள், உற்சவங்கள், விழாக்கள் என்பன ஓயாமல் நிகழுமாதலால், அவ்வூர் கிருஹஸ்தர்கள், மேன்மேலும் தம் நிலம் முதலியன சுருங்கவும் வறுமை மேன்மேலும் வளரவும், ஏக்கம் பிடித்து வாழ்ந்து வந்தனர். ஆனால், வயது முதிர்ந்தோரிடையே இத்தனை ஏக்கமும் மனக்குறையும் குடிகொண்டிருந்தன என்ற செய்தி அவ்வூர்க் குழந்தைகளுக்குத் தெரியாது; பக்ஷிகளுக்குத் தெரியாது; கோயிலெதிரே எப்போதும் செழுமையாக வளர்ந்த புற்றரைகளில் மேய்ந்துகொண்டிருந்த பசுக்களுக்கும், கழுதைகளுக்கும் தெரியாது. இவை எப்போதும் மகிழ்ச்சியிலும், ஆரவாரத்திலும், பாட்டிலும், ஆனந்தக் களியிலும் மூழ்கிக் கிடந்தன.

இந்த அக்ரஹாரத்தில் மற்றெல்லா பிராமணர்களைக் காட்டிலும் அதிக ஏழையான மஹாலிங்கையர் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய குடும்பம் மிகப் பெரிது. வீடு மிகச் சிறிது. அவருடைய கிழத் தாய் தந்தையர் இருவர்; விதவையான தங்கை ஒருத்தி; சுமார் முப்பது வயதுள்ள மனைவி ஒருத்தி; அவளுக்கு ஐந்து பெண் குழந்தைகள். ஆறாவது ப்ரஸவம் நெருங்கிய ஸமயம்.

இத்தனை பேருக்கும் ஆஹாரம் வேண்டுமே? மஹாலிங்கையருக்கு பூர்வ சொத்துக் கிடையாது. இளமையும், ஊக்கமும், எப்படியேனும் பணம் ஸம்பாதிக்கலாமென்ற நம்பிக்கையும் அவரை விட்டுப் பிரிந்து நெடுங்காலமாய் விட்டது. அவருக்கு சுமார் நாற்பது வயதுக்கு மேலாகவில்லை. அதற்குள்ளே குழந்தைகளின் தொகை வலியாலும், மனைவியின் வாய் வலியாலும்,

தாய் தந்தையரின் நோய் வலியாலும், விதவைத் தங்கையின் இளமை வலியாலும் மேற்படி மஹாலிங்கையர் மனத்துயர் பெருகித் தலை மயிரெல்லாம் அன்னத் தூவிபோல் நரைத்துக் கூனிக் குறுகி மிகவும் மெலிந்து, கன்னங்கள் ஒட்டிக் கண்கள் குழி வீழ்ந்து முகம் சுருங்கித் திரை கொண்டு, இளமையிலே பாராட்டிய சிங்கார ரஸமிகுதியால் மேகநோய் கொண்டு, முகத்திலும் முதுகிலும் தோட்களிலும் பரந்த மேகப் படை களுடையவராய் விளங்கினார்.

இப்படியிருக்கையில் ஒரு மார்கழி மாதத்திரவில் வானம் மைபோல் இருண்டிருந்தது. நக்ஷத்திரங்களெவையும் கண்ணுக் குப்புலப்படவில்லை. கிராமத்தாரெல்லாரும் தத்தம் வீடுகளுக் குள்ளே பதுங்கிக் கிடந்தார்கள். வெளியே பெரு மழையும் சூறைக்காற்றும் மிகவும் உக்ரமாக வீசத் தொடங்கின. இரண்டு க்ஷணத்துக்கு ஒருமுறை, உலகம் தகர்ந்து விடச்செய்வன போன்ற இடியோசைகள் செவிப்பட்டன. மரங்கள் ஒடிந்து விழும் ஒலி கேட்டது. தோப்புகளெல்லாம் சூறைபோகும் ஒலி பிறந்தது. பக்கத்துக்குன்றுகள் ஒன்றுங்கொன்று மோதிச் சிதறுவன போன்ற ஓசை தோன்றிற்று.

அக்ரஹாரத்தில் தத்தம் வீடுகளுக்குள்ளே பதுங்கியிருந்த ஜனங்கள் இன்றுடன் உலகம் முடிந்துபோய் விட்டது என்று தம் மனதில் நிச்சயப்படுத்திக் கொண்டார்கள். குழந்தைகளெல்லாம் பயமிகுதியால் கோ கோ என்று அலறின. மாதர்கள் புலம்பினர். ஆண் மக்கள் விம்மினர். சூறைக்காற்றின் ஆர்ப்பு மிகுதிப்பட்டது.

இப்படியிருக்கையில் பூகம்பம் தொடங்கிற்று. அந்த அக்ர ஹாரத்திலுள்ள வீடுகளெல்லாம் பழைய வீடுகள். அத்தனை வீடுகளும் சிதறிப் போயின. அத்தனை ஜனங்களும் மடிந்து போயினர்.

மஹாலிங்கையர் வீட்டு வாயிற் புறத்திலிருந்த குச்சிலொன்று மாத்திரம் விழவில்லை. வீட்டு இரேழியில் கூடியிருந்த கிழவர், கிழவி, மஹாலிங்கையர், அவருடைய ஐந்து பெண் குழந்தைகள்— எல்லார் மீதும் வீடு விழுந்து, அவர்களத்தனை பேரும் பிணங் களாகக் கிடந்தனர். வாயிற் குச்சிலில் பிரஸவ வேதனையில்

இருந்த மஹாலிங்கையருடைய மனைவியும் அவளுக்குத் துணையாக அவருடைய விதவைத் தங்கையு மிருந்தனர்.

இரவு சுமார் ஏழு மணிக்குத் தொடங்கிய சூறை காற்றும் மழையும், காலை நான்கு மணி சுமாருக்கு பூகம்பத்துடன் முடிவு பெற்றன. அரை மணி நேரத்துக்கெல்லாம் உலகம் அமைதி பெற்று விட்டது. மறுநாள் பொழுது விடிந்தது. விதவைத் தங்கை—அவள் பெயர் விசாலாக்ஷி—வெளியே வந்து பார்த்தாள். எல்லா வீடுகளும் விழுந்திருந்தன. எங்கும் மனிதருடல்களும், மிருக பக்ஷிகளின் உடம்புகளும் பிரேதங்களாக விழுந்துகிடந்தன. முழுக் காட்சியும் அவள் பார்க்க நேரமில்லை. காற்றினாலும் மழையினாலும் மோதுண்டு வீதியில் வந்து கிடந்த பிரேதங்களை மாத்திரமே அவள் கண்டாள். இடிந்த வீடுகளுக்குள்ளே செத்துக் கிடக்கும் ஜனங்களை அவள் காணவில்லை எனினும் தன் வீட்டில் எல்லோரும் செத்தது அவளுக்குத் தெரியுமாதலால் மற்ற வீடுகளிலும் அப்படியே நடந்திருக்க வேண்டு மென்றும் அது கொண்டே தெருவில் ஆட்களைக் காணவில்லையென்றும் அவள் ஊஹித்துக் கொண்டாள். அப்பொழுது, மீளவும் அவளுடைய மனதில் சென்ற பயங்கரமான இரவில் நிகழ்ந்த பயங்கரமான செய்திகள் நினைப்புறலாயின. பூகம்பம் தோன்றினவுடனே மஹாலிங்கையருடைய பிதாவாகிய கிழவர், "ஐயையோ, பூமி ஆடுகிறதே! நாமெல்லோரும் வாயிற் புறத்திலுள்ள குச்சிலுக்குப்போய் விடுவோம். என்னை அங்கே கொண்டு விடுங்கள்" என்று அலறினார். அந்தச் சத்தம் மாத்திரம் விசாலாக்ஷியின் செவியிற்பட்டது. அப்புறம் நடந்த பேச்சொன்றும் அவள் செவியிற்படவில்லை. வாயிற் குச்சிலுக்குள் வெளித் திண்ணை வழியாகத்தான் புகலாம். வீட்டுக்குள்ளிருந்தபடியே அங்கு வர வழியில்லை. எனினும், ஒரு சாளரப் பொந்து வழியாக அந்தக் கிழவருடையபேரோலம் மாத்திரம் புயற்காற்றொலியையும் மிஞ்சி அவளுடைய செவியிற் பட்டது.

ஆனால், 'அங்ஙனம் அவர்கள் குச்சிலுக்குள் வருவது மாத்திரம் ஸாத்தியமில்லை' யென்பதை அவள் உடனே ஊஹித்துக் கொண்டாள். ஏனெனில் உள்ளேயிருந்தவர்கள் வீட்டு வாயிற் கதவைத் திறந்தன்றோ, திண்ணையிலேறி அதன் வழியாகத்

குச்சிலுக்குள் வரவேண்டும்? வாயிற் கதவைத் திறந்த மாத்திரத் திலே ஸப்த மேகங்களும், ஊழிக் காற்றும் வீட்டுக்குள் புகுந்து விடுமன்றோ? ஆதலால் அவர்கள் வெளியேறவில்லை யென்று நினைத்துக் கொண்டாள். ஓரிரண்டு க்ஷணங்களில் திடீரென்று உள் வீடெல்லாம் இடிந்து விழுந்த ஒலியும், அங்கிருந்தோர் எல்லாம் கூடியலறிய பேரொலியும், அவள் செவியிற் பட்டன. எல்லோரும் செத்தார்கள் என்று நிச்சயித்துக் கொண்டாள். தானிருந்த குச்சிலும் விழுமென்று அவள் மிகவும் எதிர் பார்த் தாள். அது விழவில்லை. அதற்குள்ளே பூகம்பம் நின்றுபோய் விட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் புயற்காற்றும் மழையும் அடங்கிப் போயின.

இச் செய்திகளை யெல்லாம் எண்ண மிட்டுக்கொண்டு விசாலாக்ஷி தன்னைச் சூழ இடிந்து கிடக்கும் வீடுகளையும், ஒடிந்து கிடக்கும் மரங்களையும் பார்த்து நிற்கையிலே, குச்சிலுக் குள்ளிருந்து "குவா! குவா!" என்ற சத்தம் வந்தது. உள்ளே போய்ப் பார்த்தாள் அண்ணன் மனைவியாகிய கோமதிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து கிடந்தது. விசாலாக்ஷி அதற்கு வேண்டிய சிகிச்சைகளெல்லாம் செய்து கொண்டிருக்கையில், கோமதிக்கு மரணாவஸ்தை நேர்ந்துவிட்டது. அவள் சாகும் போது:—"விசாலாக்ஷி! விசாலாக்ஷி! நான் இரண்டு நிமிஷங் களுக்கு மேல் உயிருடனிருக்க மாட்டேன். என் பிராணன் போகுமுன்னர் உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன் உள்ளவரை மறந்து போகாதே! முதலாவது, நீ விவாகம் செய்து கொள். விதவா விவாகம் செய்யத் தக்கது. ஆண்களும் பெண்களும் ஒருங்கே யமனுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். ஆதலால், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ளவரை வருந்தி வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை. ஆதலால், நீ ஆண் மக்கள் எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாஸ்த்ரத்தைக் கிழித்துக் கரியடுப்பிலே போட்டுவிட்டு, தைரியத்துடன் சென்னப்பட்டணத்துக்குப் போய் அங்கு கைம்பெண் விவாகத்துக்கு உதவி செய்யும் ஸபையாரைக் கண்டு பிடித்து, அவர்கள் மூலமாக நல்ல மாப்பிள்ளையைத் தேடி

வாழ்க்கைப்படு. இரண்டாவது, நீயுள்ளவரை என் குழந்தையைக் காப்பாற்று. அதற்கு சந்திரிகை என்று பெயர் வை" என்றாள்.

விசாலாக்ஷி 'சரி' என்றாள். கோமதியின் உயிர் பரலோகஞ் சென்றுவிட்டது.

குறிப்பு :— நெடுங் கதையாக இதை எழுத பாரதியார் எண்ணியிருந்தார். ஆனால் தமது எண்ணத்தை நிறைவேற்றுவதற்கு முன்பே அவர் காலமாகி விட்டார். விசாலாக்ஷியின் கதை பெரும்பாலும் நிறைவு பெற்றிருக்கிறது. அதில் முதல் பகுதி மட்டும் இங்கு சேர்க்கப்பட்டுள்ளது.

# 11. வேதரிஷிகளின் கவிதை

(முகவுரை மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது)

ஸ்ரீகாசியில் ஹிந்து ஸர்வகலா சங்கத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டியபோது பல வித்வான்கள் வந்து உபந்யாஸம் செய்தார்கள். இவற்றுள்ளே, நவீன சாஸ்திர (ஸயன்ஸ்) பண்டிதர்களின் சிகாமணியாக விளங்கும் ஸ்ரீமான் ஜகதீச சந்திர வஸு செய்த உபந்யாசம் மிகவும் மாண்புடையது.

"லௌகிக சாஸ்திர ஆராய்ச்சிகளிலே மறுபடியும் பாரத தேசம் தலைமை வகிக்கும்படி செய்வது நம்முடைய கடமை" என்பதை இவர் பல வகையிலே விளக்கிய பின்பு, தமது முடிவுரையில் பின்வருமாறு சொல்லுகிறார்:—

'ஹிந்து நாகரிகத்திற்குள்ளே ஒரு விசேஷ சக்தியிருக்கிறது. காலத்தின் அழிவுகளையெல்லாம், உலகத்திலேயுள்ள பொருளனைத்தையும் சிதைவுபடுத்த வரும் மாறுதல்களையெல்லாம், இந்த சக்தியினாலே நமது நாகரிகம் எதிர்க்க வல்லதாயிற்று. (எகிப்து தேசத்தில்) நீல நதிக்கரையிலேயும், அஸ்ஸீரியா தேசத்திலும், பாபிலோனிலும், பல்லாயிர வருஷங்களுக்கு முன்னே, பெரிய பெரிய அறிவுப் பயிற்சிகள் தோன்றி வளர்ந்ததையும், மாறியதையும், மறைந்ததையும் நமது மஹத்தான நாகரிகம் பார்த்துக் கொண்டிருந்தது. (அப்போது கூட நமது நாகரிகம் அளவிட முடியாத பழமை கொண்டதாக விளங்கிற்று.) அந்த நாளிலே பாரத மாதா தனக்கு அழிவில்லையென்ற தீராத பக்தியுடன் விளங்கினாள். இன்றும் யௌவனத்தோடிருக்கிறாள். இனி, எதிர்காலத்திலும் அழியமாட்டோமென்கிற தீராத பக்தியிலே உறுதிகொண்டு நிற்கிறாள்.'

இங்ஙனம், நவீன சாஸ்திரக் கல்வியாகிய குன்றத்தின்மேலே நெருப்புத் தூணைப்போல ஒளிவீசி நிற்கும் ஸ்ரீமான் வஸு கூறிய வார்த்தைகள் வெறுமே உபசாரமல்ல. நம்முடைய இடைக் காலத்து மடமைகளை யெல்லாம் மஹிமைகளென்று நினைத்து

வீண் பெருமை கொள்வோரின் பேச்சை நாம் உதறிவிடுதல் நியாயம். ஆனால், வஸு பண்டிதர் சொல்லியதை நாம் மதிப்புடன் ஏற்றுக்கொள்ளுதல் தகும். இடைக் காலத்திலே நமது ஜாதி பொய்களும் சோர்வுகளும் குவித்த குப்பையின் கீழே அழுந்திக் கிடந்தது. பாரத மாதா நித்திரையிலிருந்தாள். இப்போது, மறுபடியும் அந்தக் குப்பையிலிருந்து வெளிப்பட்டு, தைரியமென்னும் கங்கா நதியில் ஸ்நானம் செய்துவிட்டு, நமது பாரத ஜாதி தனது வானத்திலே தோன்றும் ஸூர்யோதயத்தை அன்புடன் அழைத்து வாழ்த்துக் கூறுகின்றது.

மரணமில்லாத இந்த ஹிந்து நாகரிகமாகிய கற்பக விருக்ஷத்துக்கு ஆதியிலே விதையூன்றியவர்கள் வேதரிஷிகள். அவர்கள் எக்காலத்திலே எத்தனை நூற்றாண்டுகளின் முன்னே—இருந்தார்களென்பதைக் கணக்கிட்டுச் சொல்ல, நவீன ஆராய்ச்சி யாதொரு கருவியு மில்லாதிருக்கிறது. ஹிமவத் பர்வதம் எப்போதுண்டாயிற்று? யாருக்குத் தெரியும்? வேத ரிஷிகள் எக் காலத்தில் வாழ்ந்தவர்? எப்படிச் சொல்வது?

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சொல்லுகிறார்:—

'நீங்கள் பிரார்த்தனை செய்யும்போது அது உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்பட வேண்டும். பிறகு சிறிது காலம் காத்துக் கொண்டிருந்தால், எனது தாயாகிய ஜகதம்பிகை உங்கள் பிரார்த்தனையை நிறைவேற்றிக் கொடுப்பாள்.'

நன்று சொல்லினர் ராமகிருஷ்ண முனி. உள்ளத்தின் அடியிலிருந்து வெளிப்படுகிற வேண்டுதலுக்கு 'மந்திரம்' என்று பெயர். அது பலிக்கும். ஆனால், அங்கிருந்து பிரார்த்தனை கொண்டுவருதல் எளிதன்று. அது பெரிய ஆழம். உள்ளத்தின் அடி! கடலடியை மானுடர் அளந்து பார்த்திருக்கிறார்கள். உள்ளத்தின் அடி காண்பது அதனிலும் பல மடங்கு கஷ்டம். இருந்தாலும் சோர்வு பெறவேண்டா. ஒவ்வொருவனும் உள்ளக் கடலில் இயன்றவரை மூழ்கி அங்கிருந்து பொருள் கொண்டு வரலாம். எத்தனைக் கெத்தனை ஆழத்திலே போகிறாயோ, அத்தனைக் கத்தனை நல்லமுத்துக் கிடைக்கும்.

ரிஷிகள் உள்ளத்தைத் தெளிவு செய்துகொண்டோர். ஆதலால், அடிவரை எளிதாகப் பாய்ந்து அங்கிருந்து மந்திரங் கொண்டு

வந்தனர். அம்மந்திரங்களுக்கு தேவர் வசப்படுவர். வெறும் 'சொல்'லுக்கு மஹிமையில்லை. அச்சொல் உள்ளத் துணிவை உணர்த்துமாயின், அதற்கு மஹிமையுண்டு. 'எதனை நினைக்கிருயோ அதுவே யாகிருய்' என்பது தவருத உண்மை. நினைப்பு நிஜ நினைப்பாக இருக்க வேண்டும். ஆழ்ந்த நினைப்பு, அசையாத நினைப்பு, வலிய நினைப்பு, மாருத நினைப்பு—அவ்வித நினைப்பு விரைவில் உலகம் அழியத்தக்க வெளியுண்மையாக மாறிவிடும். 'இந்திரன்' எனப்படும் விஞ்ஞான சக்தியை மதுச் சந்தரிஷி மேற்கூறப்பட்டபடி வலிமை கொண்ட மந்திரங்களால் ஸ்தாபனம் செய்கிருர். அம் மந்திரங்கள் கவிதையிடத்தில் திகழ்கின்றன.

ரிக் வேதத்திலே ரிஷிகளுடைய கவிதையைப் படிக்கும்போது நமது உள்ளத்திலே தேன் பாய்கிறது; அறிவு தெய்வவெறி கொள்ளுகின்றது.

# 12. தராசு என்ற கட்டுரையில் ஒரு பகுதி

சென்ற வாரம் சென்னப்பட்டணம் கந்தசாமிக் கோயில் வஸந்த மண்டபத்தில், சாது மஹா ஸங்கத்தாரின் ஏற்பாட்டிலே ஒரு கூட்டம் நடந்தது. அதிலே, ஸ்வாமி அத்புதாநந்தர் என்பவர் ஒரு நேர்த்தியான உபந்யாஸம் செய்ததாகத் தெரிகிறது.

ஸ்வாமி சொல்லியதன் சுருக்கம்:— "மத விஷயங்களில் நமது முன்னோர் மிகவும் உயர்ந்த ஆராய்ச்சிக்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இவற்றை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டு உலகத்தாருக்கெல்லாம் உபதேசம் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய வெளி தேசத்தார் நமது உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர்."

இனி, "மத விஷயங்கள்" என்பவை பாரமர்த்திக உண்மைகளாம்; அதாவது ஐம்புலன்களுக்கெட்டாத, சுத்த அறிவினால் காணுதற்குரிய தெய்வீக உண்மைகள்; இவை ஞானம், பக்தி, யோகம் என்னும் வழிகளிலே கிடைப்பனவாகும். இவற்றை நமது முன்னோர் பெரிய பாடுபட்டுத் தேடித் தம்முடைய நூல்களிலே திரட்டி வைத்திருக்கிறார்கள். இந்தச் செல்வத்தை நாம் திறமையுடன் கையாண்டு உலகத்தாருக்கெல்லாம் வாரிக் கொடுத்து இவ்வுலகத்தின் துன்பங்களையும், சிறுமைகளையும், அறியாமைகளையும் மாற்றி இதனை மேன்மைப்படுத்த வேண்டும்.

"நாம் இன்புறுவது உலகு இன்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்று திருவள்ளுவர் சொல்லியபடி, இஃதே ஸ்வாமி அத்புதாநந்தருடைய கருத்தாகும். இதை நான் பரிபூர்ணமாக அங்கீகாரம் செய்து கொள்ளுகிறேன். ஆனால் நமது ஆசையை இவ்வளவுடன் நிறுத்திவிடலாகாது. லௌகிக விஷயங்களிலும் நமது உதவியை உலகம் வேண்டித்தான் நிற்கிறது. இதை நாம் மறந்துவிடலாகாது. நமது முன்னோர் பாரமார்த்திகச் செய்திகளில் மாத்திரமே

நிகரற்ற மேன்மையடைந்திருந்ததாக நினைத்து விடலாகாது. இஹலோக அறிவிலும் ஆச்சரியமான உயர்வு பெற்றிருந்தார்கள். பல தேசங்களையும் அவற்றின் பலவித சாஸ்திரங்களையும் நன்முக அறிந்த எனது நண்பரொருவர் ஐரோப்பாவில் மஹா கீர்த்தி பெற்றிருக்கும் யவனத்துக் (கிரேக்க தேசத்துச்) சிற்பத்தைக் காட்டிலும் நமது புராதனச் சிற்பம் மேம்பட்டதென்று கருதுகிறார். இதை வெளியுலகத்தாருக்கு விளங்கச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன், ஸ்ரீ ஆனந்தகுமாரசாமி முதலிய வித்வான்கள் மிகவும் உழைத்து வருகிறார்கள். ஆனால் இதை இங்கு நமது தமிழ் நாட்டிலே வாழும் ஜனங்களுக்கு விளங்கக் காட்டுவார் யாரையும் காணவில்லை. பல தேசத்து ஸங்கீதங்களையும் நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கிறேன். நமது புராதன ஸங்கீதத்துக்கு நிகரானது இவ்வுலகத்தில் வேறெங்குமில்லை என்பது என்னுடைய முடிவு. கவிதை விஷயத்திலும் இப்படியே. இனி கணிதம், ரஸாயனம் முதலிய வேறு பல சாஸ்திரங்களும் நமது தேசத்திலேதான் முதலில் வளர்ச்சி பெற்றவையாகும்.

நாம் இஹலோகத்து அறிவிலும் மேம்பாடு பெறவேண்டும். தெரியாத சாஸ்திரங்களின் ஆரம்பங்களைப் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு அவற்றை நமது ஊக்கத்தாலும் உயர்மதியாலும் மேன்மேலும் வளர்த்து மீளவும் உலகத்தாருக்கு ஊட்டவேண்டும். இஹலோக வளர்ச்சியிலே நாம் தலைமை வகிக்க வேண்டும். அதற்கு நாமே தகுதியுடையோர்.

* * *

பம்பாயில் நடக்கப்போகிற காங்கிரஸ் ஸபைக்குப் பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகள் வருவதிலே சில மாதர்களும் பிரதிநிதிகளாக வரக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண் பிரதிநிதிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்யும் பொருட்டு தர்ம ஸேவகர்களாக (வாலண்டியர்களாக) ஆண் பிள்ளைகள் முற்பட்டு வந்திருப்பது போலவே, பெண் பிரதிநிதிகளுக்கு வேண்டிய உபகாரங்கள் செய்வதற்காகத் தர்ம ஸேவகப் பெண்கள் சிலர் முற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இந்தப் புதுமை நமது தேசத்துக்குப் பெரியதோர் நன்மைக்குறியென்பது என்னுடைய கொள்கை.

* * *

அடடா! விளையாட்டுப்பேச்சை மறந்தல்லவோ போய்விட்டோம். யுவான்ஷி—காய்— சீன தேசத்துக் குடியரசுத் தலைவர்—காயாக இருந்தவர் பழுத்துக் கொண்டு வருகிறார். பூர்வ ராஜ வம்சத்தை ஒழிப்பதற்குப் பகீரத ப்ரயத்தனங்கள் செய்து சீன தேசத்தார் குடியரசு நாட்டினார்கள். யுவான்-ஷி-காயின் பக்கம் ஸேனா பலம் இருந்தபடியால் அந்தக் குடியரசுக்கு இவர் தலைமை பெறுதல் சுலபமாயிற்று. நாட்பட நாட்பட, வெகு சீக்கிரத்தில், யுவான் மனதில் குடியரசைவிட ராஜாதிகாரமே சீனத்துக்குப் பொருந்திய ஏற்பாடாகுமென்று உதயமாயிற்று. உலகத்தாரெல்லாம் இவர் தாமே ராஜாவாகிவிட நினைப்பதாக நிச்சயித்தனர். இப்போது பழைய குமார ராஜாவுக்கு அவருடைய பெண்ணை மணஞ்செய்து கொடுப்பதாக வதந்தி ஏற்படுகிறது. எனவே சீனா தேசத்துக் குடியரசு இன்னும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்குமென்பதை நமது தேசத்து ஜோதிடர்கள் கண்டு பிடித்துச் சொல்லும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். அதன் ஜாதக விவரங்கள் சொல்லவேண்டுமானாலும் சொல்லுகிறேன்.

மேற்படி குடியரசுக்கு உச்சஸ்தானத்திலே ராகு இருக்கிறான். இரண்டாமிடத்திலே சனி. சனி சப்பாணியென்ற விஷயம் ஸகலருக்கும் தெரியும். மற்றக் கிரகங்களெல்லாம் வக்கிரந்தான். இதற்கு நானே தீர்மானம் சொல்லிவிடக் கூடும். ஆனால், எனக்கு ஜோதிடத்திலே அரிச்சுவடி கூடத் தெரியாது.

*　　　*　　　*

செய்யூரிலிருந்து ஸ்ரீ மாதவய்யா ஒரு கிழவருடைய விவாகத்தின் சம்பந்தமாக எழுதியிருந்த கடிதம் சில தினங்களின் முன்னே "சுதேசமித்திரனி"ல் பிரசுரஞ் செய்யப்பட்டிருந்தது.

கிழவருக்கு வயது 70; அவருடைய தாயார் இன்னும் உயிராடிருக்கிறாள். அந்தப் பாட்டிக்கு வயது 98. இந்தத் தாயாருக்கும் தமக்கும் உபசாரங்கள் செய்யும் பொருட்டுக் கிழவர் ஒரு பதினாறு வயதுக் குமரியை மணஞ் செய்து கொள்ளப் போகிறாராம். இதே கிழவரிடம் இதைத் தவிர இன்னும் 21 குமரிகளின் ஜாதகம் வந்திருப்பதாகத் தெரிகிறது. கடைசியாக ஒருவாறு தீர்மானஞ் செய்திருக்கிற பெண்ணினுடைய தகப்பனார்,

பணத்தையும், விதியையும் ஜோதிடத்தையும் நம்பி வேலை செய்கிருர். தெய்வத்தை நம்புவதாகத் தெரியவில்லை. ஒட்டகத்துக்கு ஓரிடத்திலா கோணல்? தமிழ் நாட்டிற்கு ஒரு வழியிலா துன்பம்?